# பனிமலை

எண்டமூரி வீரேந்திரநாத்





ண்டமூரி வீரேந்திரநாத்

ஒரு எழுத்தாளர், மொழிபெயர்ப்புகள் மூலமாக,
ிறரு மொழி வாசகர்கள் மனத்தில் இடம் பெறுவது
ும் அரிது. அந்த வரிசையில் எண்டமூரி
ந்திரநாத் குறிப்பிடத்தக்கவர்.

தொழில் முறையில் இவர் ஒரு சார்ட்டட்
கௌண்டண்ட். இவர் ஸ்டேட் ஃபைனான்ஸ்
பரேஷனில் ஐந்து வருடங்களும், ஆந்திரா
யில் உயர் அதிகாரியாக பத்து ஆண்டுகளும்
பாற்றி, எழுத்தின் மீதுள்ள ஆர்வத்தால் அதைத்
ு முழு நேர எழுத்தாளராக மாறி விட்டார்.

வர் நாடகம், நவீனங்கள் பல எழுதியுள்ளார்.
ா இயக்குனராகப் பணியாற்றியுள்ளார்.
டைய முதல் திரைப்பட வசனம் ஜனாதிபதி
ம், நான்கு தொலைக்காட்சி தொடர்கள் பல
களையும் மற்றும் தொலைக்காட்சி
ருக்கான 'கோல்டன் நந்தி' விருதையும்
ளார். இவருடைய எழுத்தை அங்கீகரித்து
ிய அகாடமி விருதும் வழங்கப்பட்டுள்ளது.

ிறனுடைய திறமையை வளர்த்து, சுய
ற்றமடையச் செய்வதில் தற்போது கவனம்
் வருகிறார். இவருடைய 'வெற்றிக்கு ஐந்து
ன்ற நூல் தெலுங்கில் ஒரு கோடி ரூபாய்க்கு
ிற்பனையாகி சாதனை புரிந்துள்ளது.

ந்திராவில் என்.டி. ராமாராவிற்குப் பிறகு,
வது பிரபலமானவராக - 1982 ஆம் ஆண்டு
ந்தெடுக்கப்பட்டார்.

ர் 55 நாவல்கள், 25

அல்லயன்ஸ்

எவ்வளவு ஆழமாக வேரோடிப் போய் விட்டது என்பது ஒவ்வொரு கதாபாத்திரத்தின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் மூலமாக வாசகர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

சொன்ன தேதியில் அவர்களால் சந்தித்துக் கொள்ள முடிந்ததா இல்லையா? இந்தப் புதிருக்கான விடை கடைசியில்தான் தெரியும்.

மொழிபெயர்ப்புக்கு அனுமதி தந்த திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத் தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

கௌரி கிருபானந்தன்
tkgowri @ Imail.com

# பனிமலை

பெண்கள் கல்லூரி வளாகத்திற்குள் இருந்த மகிழம்பூ மரத் தடியில் அந்த நால்வரும் கூடினார்கள்.

அன்று கல்லூரி முழுவதும் ஒரே பரபரப்பாக இருந்தது. அன்றுதான் கடைசி தேர்வு முடிந்தது. எல்லோரும் கும்பல் கும் பலாக உட்கார்ந்து, போக வேண்டிய சினிமாவைப் பற்றியும், கொடுக்கப்போகும் பார்ட்டி பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நால்வர் மட்டும் எப்போதும் போல் மகிழம்பூ மரத் தடியில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் கொஞ்சம் கூட தென்படவில்லை.

தேர்வுகளை நன்றாக எழுதவில்லை என்ற வருத்தமில்லை அது. பெயிலாகி விடுவோம் என்ற பயம் அவர்களில் யாருக்குமே இல்லை. இரண்டு ஆண்டுகளாக உயிருக்கும் மேலாக பழகியவர் களுக்குள் ஒருத்தி மட்டும் தொலை தூரத்திற்கு போய்விடப் போகிறாள் என்ற கவலைதான் இருந்தது.

அந்த நால்வரும் பிளஸ்டு பரீட்சைகளை எழுதியிருந்தார்கள். இளமை மலர்ந்து கொண்டிருந்த வயது. மனதளவில் முழுமை யாக வளர்ச்சி அடையாத பருவம். அதனால்தான் ஒருத்தி தொலைதூரத்திற்குப் போய்விடப் போகிறாள் என்று தெரிந்ததுமே உலகமே தலைகீழாகி விட்டாற்போல் வருத்தப்பட்டுக் கொண் டிருந்தார்கள். யாருக்குமே வாயிலிருந்து வார்த்தை வெளிவர வில்லை, கண்ணீரைத் தவிர. உலகத்தில் செண்டிமெண்டைத் தவிர வேறொன்றுமே இல்லை என்று நினைக்கும் சின்ன வயது.

அவர்களுள்...

வைஜெயந்தி வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். இரண்டாம் ரேங்க் வந்துவிட்டால் உணவையும், உறக்கத்தையும் விட்டுவிட்டு முதல் இடத்திற்காக முயற்சி செய்வாள். அவளுடைய தாய்தந்தை இருவருமே டாக்டர்கள். ஒரே மகள் என்பதால் எதற்கும் குறையில்லை. தம்மை போலவே அவளும் டாக்டராக வேண்டும் என்ற பெற்றோர்களின் ஆசை மட்டும் பலிக்கவில்லை. ஒருமுறை ஆஸ்பத்திரியில் ஆக்ஸிடெண்ட் ஆன ஒரு நபருக்கு தந்தை சிகிச்சை அளிப்பதைப் பார்த்தாள். அவ்வளவுதான். அன்று முதல் ரத்தத்தைப் பார்த்தாலே அவளுக்குப் பயம். இயல்பிலேயே கூச்ச சுபாவம் படைத்தவள்.

விசாலி தாய்தந்தையரின் ஆறு குழந்தைகளுக்குள் மூத்தவள். நடுத்தரக் குடும்பம். சாதாரண அறிவு இருந்த போதிலும் அவர்கள் குடும்பத்திலேயே அவ்வளவு கூட படிப்பும், அறிவும் இருக்கும் பெண்கள் அதுவரை இல்லாததால் அவளை புகழுபவர்கள்தான் அதிகம். அதனால் அவள் தன்னை அதி புத்திசாலி என்று நினைத்துக் கொள்வாள். பிளஸ்டு முடித்ததும் அத்தை மகனுடன் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று பெரியவர்கள் விரும்பினார்கள். ஆனால் பட்டப்படிப்பு முடிக்கும்வரையில் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று விசாலி சொல்லி வந்தாள்.

வீட்டிற்கு மூத்தவள் என்பதால் வீட்டு வேலைகளில் தாய்க்குக் கூடமாட ஒத்தாசையாக இருந்து வந்தாள் விசாலி. அதனால் அவளிடம் சில பிற்போக்கு எண்ணங்களும் மடி, ஆசாரம் போன்ற நியமங்களும் படிந்து விட்டிருந்தன. ஆனால் அதை யாராவது கட்டிக் காட்டிவிட்டால் மட்டும் ஒப்புக் கொள்ள மாட்டாள். வாய்த் துடுக்குக் கொஞ்சம் அதிகம்.

அனுராதா ஒரு புத்தகப் புழு. பாடப்புத்தகங்கள் மட்டுமே இல்லை. கையில் கிடைத்த புத்தகங்களை, கடைசியில் குப்பை காகிதமாக இருந்தாலும் சரி, படிக்காமல் விடமாட்டாள். இசையில் ஆர்வம் கொண்டவள். கர்நாடக இசையை கற்று வருகிறாள். புத்தகங்களோ அல்லது டேப்ரிகார்டோ சதா அவளுக்குத் துணையாக இருக்கும் நண்பர்கள். பெற்றோருக்கு ஒரே மகள் என்பதால் செல்லம் அதிகம். இந்த மூன்று சிநேகிதிகளைத் தவிர வேறு சிநேகிதிகள் கிடையாது. தனிமையை அவள் அதிகமாக விரும்பி வந்தாள்.

இனி பாக்கியிருப்பவள் பார்கவி. நன்றாக படிப்பாள். இலக்கியம் என்றால் விருப்பம் அதிகம். தமிழ் இலக்கியத்தில் பி.ஹெச்டி பட்டம் பெற வேண்டும் என்பது அவளுடைய லட்சியம். எல்லோரையும் விட தைரியசாலி. நட்பு கலந்த முறுவலும், இனிமையான குரலும் அவளுக்கே உரிய ஆபரணங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் துருவித் துருவி ஆராயும் குணம் கொண்டவள். தர்க்க ரீதியில் யோசித்து வாதாடுபவள். கவிதை உணர்ச்சி அதிகம்.

''புத்தகங்களைப் படித்துப் படித்துக் கெட்டு குட்டிச்சுவராக போய் விட்டாய்'' என்பாள் அவளுடைய தாய்.

அவள் புத்தகங்களை படித்து கெட்டுத்தான் போனாளோ அல்லது முன்னுக்கு வந்தாளோ காலம்தான் முடிவு செய்ய வேண்டும். தந்தைக்கு மாற்றலாகிவிட்டதால் தற்சமயம் ஹாஸ்டலில் இருந்து வந்தாள்.

பிளஸ்டுவில் சேர்ந்த முதல்நாள் எதிர்பாராமல் மகிழம்பூ மரத்தடியில் அந்த நால்வரும் சந்தித்துக் கொண்டார்கள். நான்கு பேரும் ஒரே குரூப், ஒரே செக்ஷன் என்று தெரிய வந்தது. அவர்களுக்கு இருந்த ஒரே பயம் சீனியர் மாணவிகள் செய்யும் ராக்கிங் பற்றித்தான்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுதே அங்கே ஒரு கும்பல் வந்து சேர்ந்தது.

''யார் நீங்க? துஷ்ட சதுஷ்டயமா?'' என்று கேட்டாள் ஒரு பெண்.

யாருமே வாயைத் திறக்கவில்லை.

''மௌனம் சம்மதத்திற்கு அடையாளம். உங்களில் துச்சாதனி யாரு? இப்படி வரச் சொல்லு'' கூப்பிட்டாள் ஒரு போக்கிரிப் பெண்.

அப்பொழுதும் யாரும் நகரவில்லை. பதில் சொல்லவும் இல்லை. பயந்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''திரௌபதியைக் காணவில்லையே என்று வரவில்லை போலிருக்கு. திரௌபதியைக் கூப்பிடுங்கள்'' – எவளோ ஒருத்தி சொன்னாள்.

''அதோ வருகிறாள்.'' பாவாடை தாவணி அணிந்துகொண்டு பயந்தவாறு நடந்து வந்துகொண்டிருந்த பெண்ணைப் பார்த்து இன்னொருத்தி சொன்னாள்.

''ஏய் திரௌபதி! இப்படி வா'' சத்தம்போட்டு கூப்பிட்டார்கள்.

பயந்துகொண்டே வந்தாள் அந்தப் பெண்.

''உன் பெயர்?''

''மாலினி'' என்றாள் தாழ்ந்த குரலில்.

''மாலினி என்றால் மாலிக்குப் பெண்பாலா? தோட்டவேலை செய்வாயா?''

''இல்லை.'' அவள் கண்களில் நீர் நிரம்பத் தொடங்கி விட்டது.

''இந்தக் கல்லூரியில் தண்ணீர் தாராளமாக கிடைக்கிறது. உன் கண்ணீரால் செடிகளுக்கு நீர் பாய்ச்ச தேவையில்லை.''

''மாலினி என்றால் தோட்டத்தில் வேலை செய்பவள் இல்லை. அஞ்ஞாத வாசத்தில் இருந்தபோது திரௌபதியின் பெயர் அது.'' சட்டென்று எடுத்துச் சொன்னாள் விசாலி. பார்கவி தடுத்ததை அவள் பொருட்படுத்தவில்லை.

''பார்த்தீர்களா! துச்சாதனி வெளிப்பட்டு விட்டாள். வா துச்சாதனி! வந்து வஸ்திராபஹரணத்தைத் தொடங்கு.'' ஆணையிட்டாள் குழுவின் தலைவி.

''என் பெயர் துச்சாதனி இல்லை, விசாலி.''

''இன்று ஒரு நாளைக்கு உன் பெயரை மாற்றியிருக்கிறோம். சொன்ன காரியத்தைச் செய். இல்லாவிட்டால் உன்னையே திரௌபதியாக்கிவிடுவோம்'' என்று மிரட்டினாள்.

அன்றைக்கு விசாலி பாவாடை சட்டை மட்டுமே உடுத்தியிருந்தாள். அந்தப் பெண் தாவணியாவது அணிந்திருந்தாள். வேறு வழியில்லாமல் அந்தப் பெண்ணின் தாவணியைப் பிடித்து இழுக்க வேண்டியிருந்தது.

அத்துடன் போய்ச் சேர்ந்தது அந்தக் கும்பல். அந்த நால்வரின் நட்பு மட்டும் அப்படியே நிலைத்து விட்டது. வேடிக்கைக்காக சிலசமயம் துர்யோதனி, கர்ணி, சகுனி என்று அவர்கள் தமக்குள் அழைத்துக் கொள்வார்கள்.

இரண்டாண்டுகள் வேகமாக கழிந்துவிட்டன. அவர்களுடைய நட்பு மேலும் வலுவடைந்தது. மூவரும் ஒரே கல்லூரியில் சேர வேண்டுமென்று எண்ணியிருந்தார்கள்.

ஆனால் எதிர்பாராதவாறு வைஜெயந்தியின் தந்தைக்கு மாற்றல் ஆகப் போவதாகவும், நான்கு நாட்களில் டில்லிக்குப் போய்விடப் போவதாகவும் முதல்நாள் தெரியவந்தது.

''எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கு வைஜு. இரண்டு ஆண்டுகள் எவ்வளவு சீக்கிரமாக ஓடிவிட்டன. இன்னும் மூன்று வருஷம் சேர்ந்து படிக்கலாம் என்று நினைத்தபோது இப்படி ஆகிவிட்டதே'' என்றாள் ராதா.

''ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு படித்தால் என்ன? அதான் பார்கவியும் இருக்கிறாளே? உங்க அம்மா அப்பா சம்மதிக்க மாட்டார்களா?'' விசாலி கேட்டாள்.

''அம்மாடியோவ்! அப்பா அம்மாவை விட்டுவிட்டு தனியாக இருக்கணும்னால் எனக்கு ரொம்ப பயம். அம்மாவும் சம்மதிக்க மாட்டாள்'' என்றாள் வைஜெயந்தி.

அவள் சுபாவத்தைத் தெரிந்த சிநேகிதிகள் மேற்கொண்டு அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவில்லை.

''அங்கே பி.ஏ.வில் சேருவாயா?'' விசாலி கேட்டாள்.

''ஆமாம். லேடி ஸ்ரீராம் கல்லூரியில் சீட் கிடைக்கும் என்று அப்பா சொன்னார்.''

''ரொம்ப நன்றாக இருக்குமாம் அந்தக் கல்லூரி. ஏதோ பத்திரிகையில் அதைப்பற்றி படித்திருக்கிறேன்'' என்றாள் அனுராதா.

''அதனால்தான் அங்கே படிக்க வைக்கணும்னு அப்பா பிடிவாதமாக இருக்கிறார். ஆனால் எனக்குத்தான் பயமாக இருக்கு. அங்கே இருக்கும் பெண்கள் எல்லோரும் பொல்லாதவர்களாம்.''

''நாலைந்து நாட்களில் எல்லாம் பழக்கப்பட்டுப் போய் விடும். இங்கே கூடத்தான் சேர்ந்த புதிதில் எவ்வளவு பயப்பட்டோம்?'' பார்கவி நினைவுபடுத்தினாள்.

''உண்மைதான். இருந்தாலும் உங்களை எல்லாம் மிஸ் பண்ண வேண்டியிருக்கும்.''

''மறுபடியும் எப்போ சந்தித்துக் கொள்வோமோ தெரியவில்லை. அசல் சந்திப்போமோ இல்லையோ அதுவும் தெரியவில்லை.'' பார்கவியின் குரலில் வேதனை வெளிப்பட்டது.

''நீங்கள் எல்லோரும் புரோகிராம் போட்டுக் கொண்டு டில்லிக்கு வரக்கூடாதா?''



''இந்த ஊரிலேயே இருந்தாலும் கிளாஸ்மேட்டுகளைக்கூட சந்திக்க விடமாட்டாங்க எங்க அம்மா. டில்லிக்கு அனுப்பப் போகிறாளா என்ன?'' விசாலி நொந்துகொண்டாள்.

''நீ எப்பொழுதாவது இந்தப் பக்கம் வர வாய்ப்பு இருக்குமா வைஜூ?'' கேட்டாள் அனுராதா.

''இந்த ஊரில் எங்களுக்கு உறவினர்கள் யாருமே இல்லை. வந்தால் மட்டும் உங்களைச் சந்திக்காமல் போகமாட்டேன்.''

''கடிதம் எழுது வைஜூ. அந்த விதமாகவாவது நம் நட்பைத் தொடருவோம்.'' பார்கவி விருப்பம் தெரிவித்தாள்.

''கடிதங்கள் எழுதுவதென்றாலே எனக்கு சோம்பேறித்தனம் வந்துவிடும். நீ மட்டும் மறக்காமல் எழுதிக் கொண்டே இரு பார்கவி! நானும் முயற்சி செய்கிறேன்.''

பார்கவியின் பேனா நட்பு பற்றி அவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

''எனக்கு ஒரு ஐடியா தோன்றுகிறது. இப்போ ஏதோ ஆவேசத்தில் இருக்கிறோம். அதனால் சில நாட்கள் கடிதங்களை தொடருவோம். அதற்குப் பிறகு நம்மை அறியாமலேயே பிரிந்து போய் விடுவோம். ஆனால் சில வருடங்கள் கழித்து எல்லோரும் எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வோம்? எப்படி பேசிக் கொள்வோம்? ஊகித்துப் பாருங்கள்.'' அனுராதா அப்பொழுதே அந்தக் காட்சியை கற்பனை செய்து பார்த்தாள்.

''வேறு என்ன பேசிக் கொள்ளப் போகிறோம்? குழந்தைகளைப் பற்றியும், கணவன்மார்களைப் பற்றியும்தான் பேசிக் கொள்வோம்.'' விசாலி சட்டென்று சொன்னாள்.

''ஆமாம் ஆமாம். உனக்கு அதைவிட வேறென்ன யோசனை வரும்? எப்பொழுது கல்யாணம் ஆகும்? எப்போ குழந்தைகளைப் பெறலாம்னு காத்துக்கிட்டு இருக்கிறாய். நான் சொன்னது அது

போன்ற விஷயத்தைப் பற்றியில்லை. இன்றைக்கு எதிர்காலத்தைப் பற்றி எவ்வளவு கனவுகள் கண்டு வருகிறோம்? இந்த வயதில் பலவிதமான ஆசைகளோடும், கற்பனைகளோடும், தொட்டதற்கெல்லாம் ஆவேசமடைந்து, சண்டை போட்டுக் கொண்டும் இருக்கிறோம். நம் நால்வரில் ஒருத்தரைப் பற்றி இன்னொருத்தருக்கு நன்றாகத் தெரியும் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். ஆனால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய உண்மை சொரூபம் வெளிப்படும் இல்லையா?''

''உன் ஐடியா ரொம்ப நன்றாகத்தான் இருக்கு அனுராதா! இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு மெச்சூரிட்டீ வந்துவிடும். வாழ்க்கையைப் பற்றி நன்றாகப் புரிந்துகொண்டு பேச முடியும். அப்படியே செய்வோம்'' என்றாள் பார்கவி சந்தோஷத்துடன்.

''அது நடக்குமா? யார் யார் எந்த மூலையில் இருப்போமா? விசாலி சந்தேகத்தை வெளியிட்டாள்.

''மனம் இருந்தால் வழி தானே பிறக்கும். இந்த ஐடியா பற்றி நினைக்கும்போதே ரொம்ப உற்சாகமாக இருக்கு. எல்லோரும் ஒரே ஊரில் இருந்துகொண்டு அவ்வப்பொழுது சந்தித்துக் கொண்டால் அது வேறு விஷயம். ஆனால் வைஜெயந்தி வேறு ஊருக்குப் போகிறாள். நாளை நானும் போகக்கூடும். ஒருக்கால் இந்த ஊரிலேயே இருந்தாலும் நாம் மூவருக்கும் ஒரே கல்லூரியில் இடம் கிடைக்காமல் போகலாம். இல்லையா பட்டப்படிப்பு முடிந்தபிறகு நாம் பிரிந்து போய்விடலாம். ஆனால் பத்து வருடங்களுக்கு அப்புறம் என்றால் பெரும்பாலும் வாழ்க்கையில் செட்டில் ஆகியிருப்போம். அப்பொழுது நம்மிடையே நிறைய மாற்றங்கள் வந்திருக்கும். அப்பொழுது சந்தித்துக் கொண்டால் தான் நன்றாக இருக்கும்'' என்றாள் பார்கவி.



''உண்மைதான் பார்கவி! நீ சொன்னதைக் கேட்டபிறகு எனக்கும் இந்த ஐடியா ரொம்பப் பிடித்துவிட்டது. கண்டிப்பாக சந்திப்போம்'' என்றாள் வைஜெயந்தி.

''அப்பொழுது யார் எங்கே இருப்பாங்களோ? எங்கே சந்தித்துக் கொள்வது என்று எப்படித் தெரியும்?'' – விசாலியின் சந்தேகம்.

''ஆமாம். ஒருவருக்கொருவர் ரெகுலராக கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தால் அது முடியும். ஆனால் அப்படி நடந்தால் அதற்குப் பிறகு நாம் புதிதாக பேசிக் கொள்வதற்கு என்ன இருக்கப் போகிறது?'' அனுராதா சொன்னாள்.

''அந்த மாதிரி கடிதங்களை எழுதிக் கொள்ள முடியாதுன்னு தானே இந்த புரோகிராமையே போட்டோம். இனி எப்படிச் சந்தித்துக் கொள்வது என்ற கேள்விக்கு பதில் ஒன்றுதான்'' என்றாள் வைஜெயந்தி.

''அதென்னது? சொல்லு'' எல்லோரும் ஒன்றாகக் கேட்டார்கள்.

''எங்கே எப்பொழுது சந்தித்துக் கொள்ளணுமோ இப்போதே நாம் முடிவு செய்துவிட்டால் பிரச்னை தீர்ந்தது.''

''இப்பொழுதேவா? அதுவரையில் ஞாபகம் இருக்குமா? ஒருக்கால் வரமுடியாத சூழ்நிலையில் இருந்தால்?''

''வரமுடியாத சூழ்நிலை'' என்றால் அது வேறு விஷயம். அது நம்பிக்கையில்தான் இருக்கும் அந்த சமயத்தில். இன்னிக்கு ஏப்ரல் இருபத்திஐந்து. சரியாக பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திப்போம். பத்து ஆண்டுகள் என்றால் சீக்கிரமாக முடிந்துவிடும். அதனால்தான் பதினைந்து என்று சொன்னேன். 1988 ஏப்ரல் 25ம் தேதி நாம் இதே கல்லூரியில் இதே மரத்தடியில் சந்திப்போம்'' வைஜெயந்தி சொல்லி முடித்தாள்.

''எனக்கு ஓ.கே. என் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளை உடனுக்குடன் எழுதி வைத்துக் கொண்டே இருப்பேன், உங்களுக்குத் தெரிவிப்பதற்காக.'' பார்கவி சொன்னாள்.

''நானும் அப்படியே செய்கிறேன்'' என்றாள் அனுராதா.

''நாம் எல்லோரும் 1988, ஏப்ரல் 25ம் தேதியை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளணும்'' விசாலி சொன்னாள்.

''ஆமாம். எதிலேயாவது எழுதி வைத்துக்கொள். அல்லது உனக்கு வரப்போகிற கணவன், அதான் உன் அத்தானிடம் இப்போதே சொல்லி வைத்துவிடு ஞாபகப்படுத்தச் சொல்லி. குழந்தைகளைப் பற்றிய நினைப்பில் மறந்தாலும் மறந்துவிடுவாய்.'' வைஜெயந்தி எச்சரித்தாள்.

''அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. அதுகூடவா நினைவு இருக்காது? இது வரையில் யாருமே நினைத்தும் பார்த்திராத புதிய தீர்மானத்தை ஃபேர்வெல் பார்ட்டியில் முடிவு செய்திருக்கிறோம்.''

''அப்படி என்றால், எல்லோரும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அன்னிக்கு நாம் இந்த இடத்தில்தான் சந்தித்துக் கொள்ளணும். ஒருக்கால் வரமுடியாமல் போனால் யார் மூலமாகவாவது செய்தியைச் சொல்லி அனுப்பணும். நேரம் காலை பத்து மணி, தேதி ஏப்ரல் 25. 88-ம் வருஷம். நம் அனுபவங்களை எல்லாம் மாலையாக கோர்த்துக்கொண்டு வரணும். குறைந்த பட்சம் ஒரு நாளாவது சேர்ந்து கழிக்க வேண்டும்.'' மகிழம்பூ மாலைகளை எல்லோருக்கும் பகிர்ந்துகொண்டே சொன்னாள் பார்கவி.

''ஓ.கே. டன்.'' எல்லோரின் கைகளும் இணைந்தன.

# வைஜெயந்தி

## 2

**1982**ம் ஆண்டு பிப்ரவரி மாதம். இடம் உத்தரப்பிரதேசத்தில் உள்ள இடாவா மாவட்டம்.

மாலை ஆறுமணி ஆகிவிட்டது. குளிர்காலம் என்பதால் அதற்குள் இருட்டிவிட்டது. ஓராய் என்ற இடத்திலிருந்து பைதாகஞ்ச் என்ற ஊரை நோக்கி பஸ் போய்க் கொண்டிருந்தது. ஹரீஷ் குப்தா உற்சாகத்துடன் பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தான். இன்னும் இரண்டு மணி நேரத்தில் பைதாகஞ்ச் போய் சேர்ந்துவிடலாம். டிப்போவில் பஸ்ஸை ஒப்படைத்துவிட்டால் பொறுப்பு முடிந்தது. பிறகு ஒரு மாதம் வரையில் விடுமுறை.

திருமண முகூர்த்தத்திற்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது. ஹரீஷ் பக்கத்தில் இருந்த பையைப் பார்த்துக் கொண்டான். மணமகளுக்காக காசியில் வாங்கிய சிவப்புப் பட்டுப்புடவையும் வெள்ளி கொலுஸும், தாய்க்காக வாங்கிய ஜரிகைப் புடவையும் அதில் இருந்தன. இரண்டு ஆண்டுகளாக சேமித்து வந்த பணம் இரண்டாயிரமும் இருந்தது. அம்மாவைப் பற்றிய நினைவு வந்தபொழுதெல்லாம் அவன் இதயம் நன்றியால் பொங்கி வழிந்தது.

அவன் ஒருவயது குழந்தையாக இருக்கும்போதே தந்தை இறந்துவிட்டார். அப்பொழுதிலிருந்து படாத கஷ்டங்களை எல்லாம் அனுபவித்துவிட்டாள் அவள். இன்று அவன் வாழ்க்கையில் காலூன்றிவிட்டான். நோய்வாய்ப்பட்டிருக்கும் அந்த

தாயின் கடைசி ஆசை மகனுடைய திருமணத்தைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்பதுதான். அம்மாவுக்குப் பிடித்த பெண்ணையே தேர்வு செய்தான். கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் செய்து வைத்து விட்டு அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். அவளுக்காக விலை உயர்ந்த புடவையும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்று தெரிந்தால் ஒருக்கால் அழுதாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

தொலைவில் குகர்காவ் பாலம் தென்பட்டது. அதுவரையில் சாலை குண்டும் குழியுமாக இருந்தது. பாலம் தாண்டிய பிறகு பிரதான சாலை நன்றாக இருக்கும். வேகமாக ஓட்டிக் கொண்டு போகலாம். ஹரீஷ் வேகத்தை குறைத்துவிட்டு ஓட்டினான். ஆனால் பஸ் பள்ளங்களில் விழுந்து குலுங்கிக் கொண்டிருந்தது.

ஹெட்லைட் வெளிச்சத்தில் தொலைவில் சாலைக்கு குறுக்கே ஏதோ உருவம் நின்று கொண்டிருப்பது தென்பட்டது. ஆனால் அது என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை. ஹாரனை அடித்துக்கொண்டே பஸ்ஸை மேலும் கொஞ்சதூரம் செலுத்தினான். ஆனால் அந்த உருவம் நகரவில்லை.

ஐம்பதடி தூரத்திற்கு வந்த பிறகுதான் அது என்னவென்று தெளிவாகத் தெரிந்தது. ஒன்றல்ல, இரண்டு மாட்டு வண்டிகள் சாலைக்குக் குறுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உள்ளே யாரும் இல்லை.

ஹாரனை அடித்துக்கொண்டே மேலும் அருகில் பஸ்ஸைக் கொண்டுபோய் பிரேக்கைப் போட்டான். ஹாண்டில்மீது வைத்த கை அப்படியே நின்றுவிட்டது. துப்பாக்கிக் குண்டு ஒன்று காதுக்கு பக்கத்திலிருந்து வேகமாக ஊடுருவிக் கொண்டு போயிற்று. தொடர்ந்து நாலா பக்கத்திலிருந்தும் துப்பாக்கி சுடும் ஓசை கேட்கத் தொடங்கியது.



பயணிகள் எல்லோரும் தலையைக் குனிந்து கொண்டு இருக்கைக்கு அடியில் பதுங்கினார்கள். அந்த எல்லையில் வசிப்பவர்களுக்கு அது புதிது இல்லை. நேரடியாக பார்க்காமல் போனாலும், பலர் வாய் மூலமாக எத்தனையோ கதைகளைக் கேட்டிருப்பார்கள். என்றாவது ஒருநாள் துப்பாக்கிக் குண்டை சந்திக்கும் அனுபவம் நேரிடலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த அந்த பன்னிரெண்டு மாவட்டங்களையும் கொள்ளைக்காரர்கள் தம் வசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கம் மத்தியப் பிரதேசத்தின் சம்பல் பள்ளத்தாக்கிலிருந்து இந்தப் பக்கம் ராஜஸ்தான் எல்லை வரையிலும் ஆட்சிப் புரிந்துவந்தது கொள்ளைக்காரர்களின் கும்பல்தான். ஏறக்குறைய இருநூறு கொள்ளைக்காரக் கும்பல்கள் இருந்தன. அவர்களுக்குள் பூலன்தேவி, குஸுமா, சீதா போன்ற பெண் தலைவிகளோடு மான்சிங், ராஜு பட்னாகர், மாதோமல்லா, களசியாம் மல்கான்சிங் போன்ற பெயர் பெற்ற தலைவர்களும் இருந்தார்கள். இவர்களைப் பற்றி பல கதைகள் எங்கும் பரவியிருந்தன.

சிலர் வெளிப்படையாகவே சுற்றிக் கொண்டு இருப்பார்கள். கிராமத்தில் இருப்பவர்கள் அவர்களக்கு விருந்து உபசாரங்களை தடபுடலாக செய்து அனுப்புவார்கள். போலீசார் வருவது தெரிந்தால் உடனே தகவல் தெரிவிப்பதற்கு உளவு ஆட்களும் இருந்தார்கள்.

மலைகள், நதிக்கரைகள், பள்ளத்தாக்குகள், வயல்வெளிகள் இவர்களுடைய ஓய்விடங்கள். பகல்முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்டு இரவு நேரங்களில் பயணத்தைத் தொடருவார்கள். சில சமயம் ஒரே இரவில் ஐம்பது மைல்கள் கூட நடப்பார்கள். அதனால் இவர்கள் எந்தச் சமயத்தில் எங்கே இருப்பார்கள் என்று யாராலுமே சொல்ல முடியாது.

அவர்களுக்குச் செய்தியை எட்டச் செய்யும் இன்ஃபார்மர்கள் சிலசமயம் பணத்திற்கு ஆசைப்பட்டு போலீஸாருக்கு அவர்களின் இருப்பிடத்தைப் பற்றிச் சொல்லிவிடுவார்கள்.

அதுபோன்ற சமயங்களில் போலீஸார் முற்றுகையிடுவதும், அந்தப் போராட்டத்தில் சிலர் இறந்துபோவதும் உண்டு. தப்பித்துக் கொண்டவர்களில் சிலர் வேறு கும்பலுடன் சேர்ந்து கொள்வதோ இல்லை தமக்குள்ளேயே ஒருவனை நாயகனாக தேர்ந்தெடுத்துக் கொண்டு புதிதாக ஒரு கும்பலை உருவாக்குவதோ நிகழும்.

கொள்ளையடித்த பணத்தில் ஒரு பங்கை தினசரி தேவைகளுக்கு, தான தர்மங்களுக்கு பயன்படுத்துவார்கள். பெரும்பாலும் ஆயுதங்களை வாங்க செலவு செய்வார்கள். மிக நவீனமான வெளிநாட்டு துப்பாக்கிகள் அவர்களிடம் இருக்கும்.

'கொள்ளையர்கள்' என்று அவர்களை வெறுத்து ஒதுக்கும் மக்கள், வெளிநாட்டுத் துப்பாக்கிகளை ரகசியமாக வரவழைத்து கொள்ளைக்காரர்களுக்கு அதிக லாபத்திற்கு விற்கும் பெரிய மனிதர்களை மதிப்புடன் நடத்துவார்கள். அரசாங்கம் கூட பத்து பேரை மிரட்டி பணம் பறிப்பவர்களை 'கொள்ளையர்கள்' என்று குறிப்பிடுமே தவிர பெரிய மனிதர்கள் என்ற போர்வையில் சமுதாயத்தில் நடமாடிக் கொண்டிருக்கும் உண்மையான கொள்ளைக்காரர்களுக்கு சுயமாக பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.

துப்பாக்கிகளின் சத்தம் நின்றுவிட்டது. இருக்கைகளுக்கு அடியில் பதுங்கியிருந்தவர்கள் எழுந்துகொள்ள முயற்சி செய்யவில்லை. படாரென்று பஸ்ஸின் கதவு திறந்து கொண்டது. நான்கு பேர் துப்பாக்கிகளுடன் உள்ளே நுழைந்தார்கள்.

''எல்லோரும் எழுந்து சீட்டில் உட்காருங்கள்.'' உத்தரவிட்டது ஒரு குரல்.



எல்லோரும் எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள். ஒரு சிறுவன் சீட்டிற்கு அடியில் கால் சிக்கிக் கொண்டதால் உரத்தக் குரலில் அழத் தொடங்கினான். அவன் தாய் பயத்தினால் வாயடைத்துப் போனவளாக மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லோரின் பார்வை தன்பக்கம் திரும்பியதும் அவள் மேலும் மிரண்டு விட்டாள். கட்டைமீசையுடன் தலைப்பாகை வைத்துக் கொண்டிருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் அந்தப் பக்கமாக நடந்தான்.

''வேண்டாம்... வேண்டாம்.'' பெரிதாக அழத் தொடங்கினாள் அந்தத் தாய். ஆனாலும் அவன் நிற்கவில்லை. பஸ்ஸில் இருந்த யாருமே இடத்தை விட்டு அசையவில்லை. எதிர்த்தால் என்ன நடக்கும் என்று எல்லோருக்குமே தெரியும். அவன் குனிந்து சீட்டிற்கு அடியில் சிக்கியிருந்த சிறுவனை லாவகமாக வெளியே இழுத்து அவன் தாயின் மடியில் போட்டான்.

''உங்களிடமுள்ள விலை உயர்ந்த பொருட்களையும், பணத்தையும் வெளியே எடுங்கள். மறைக்க முயன்றால், நாலு அடி கொடுத்து பறித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.'' ஹிந்தியில் சொன்னான்.

யாரிடமும் விலை உயர்ந்த பொருள் என்று எதுவுமே இல்லை. இருந்த கொஞ்ச நஞ்ச பணத்தையும் எடுத்துக் கொடுத்து விட்டார்கள். பெண்கள் கழுத்தில் இருந்த தாலியையும் குழந்தைகள் மேனியிலிருந்த நகைகளையும் அவர்கள் தொடவில்லை. ஹரீஷிடம் வந்தான் ஒரு ஆள்.

கஷ்டப்பட்டு சேர்த்து வைத்திருந்த பணத்தை அப்படியே எடுத்துக் கொடுக்க அவனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் ஒன்றுமே இல்லை என்று டபாய்க்கவும் முடியவில்லை அவனால். பையை எடுத்துக் கொடுத்துவிட்டான்.

"ஹூம்.பணம் நிறையவே இருக்கே? விலை உயர்ந்த புடவைகள் வேறு." அந்த ஆள் மகிழ்ச்சியோடு பையைத் தோளில் மாட்டிக் கொண்டான்.

கொள்ளையர் தலைவன் கதவிற்கருகில் வந்து நின்றான்.

"சாப்! "ஹரீஷ் அழைத்தான். அவன் திரும்பிப் பார்த்தான்.

"அந்த ஒரே ஒரு புடவை, எங்க அம்மாவுக்காக வாங்கியதைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்க." தீனமாக வேண்டிக் கொண்டான் ஹரீஷ்.

கொள்ளையர் தலைவனின் புருவம் உயர்ந்தது. "ஜானி! இவனிடமிருந்து புடவைகளை எடுத்துக் கொண்டாயா?" என்று கேட்டான். ஜானி ஓடிவந்து பையைக் கொடுத்தான். தலைவன் அதிலிருந்த எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்தான்.

"யாருக்காக இவை?" ஹரீஷைக் கேட்டான்.

"அந்த வெள்ளைப்புடவை எங்க அம்மாவுக்கு. அடுத்த வாரம் என் திருமணம்."

கொள்ளையர் தலைவன் பணத்தோடு சேர்த்து எல்லாவற்றையும் ஹரீஷின் கையில் வைத்தான்.

"இனி கிளம்புங்கள். வந்த அசல் காரியத்தை மறந்து விடாதீங்க." உத்தரவிட்டான் தலைவன். தவறான வாழ்க்கை முறை என்றாலும் உள்ளூற அவர்களுக்கு மனிதத் தன்மை இருந்தது.

"சாப்!" என்று அழைத்தான் ஹரீஷ். என்னவென்பது போல் திரும்பிப் பார்த்தான் தலைவன். ஹரீஷ் குனிந்து அவன் கால்களில் விழுந்து வணங்கினான்.

"நீங்கள் பபீராம்தானே. இப்பொழுதுதான் அடையாளம் புரிந்தது. பால்புராவில் என் திருமணம் நடக்கப் போகிறது. வந்தால் சந்தோஷப்படுவேன்."



கொள்ளையர் தலைவன் பபீராம் அவனை எழுப்பி தோளில் பரிவுடன் தட்டினான். பிறகு பயணிகள் பக்கம் திரும்பி, "பிர்ஜு அகர்வால்! எழுந்து எங்களோடு வா" என்றான்.

மூன்றாவது சீட்டில் ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிர்ஜு திடுக்கிட்டான். 'தன் பெயர் கொள்ளையர்களுக்கு எப்படித் தெரிந்தது?'

"உன்னைத்தான் பிர்ஜு! எங்களோடு வருகிறாய் இப்பொழுது." அவன் கண்களுக்குள் கூர்ந்து பார்த்தபடி கடினமாகச் சொன்னான் பபீராம்.

அப்பொழுதுதான் எல்லோருக்கும் புரிந்தது. அந்த முற்றுகையின் உள்நோக்கம். அவர்கள் பிர்ஜுவை கடத்திச் செல்லப் போகிறார்கள்.

அதிகாரப்பூர்வமாக வெளியிட்ட செய்தியின்படி 1980ல் ஐம்பத்தி இரண்டும், 1981ல் இருபத்திமூன்று ஆட்களையும் கடத்திச் சென்ற நிகழ்ச்சிகள் அந்த எல்லையில் நடந்திருக்கின்றன. ஆனால் பதிவு செய்யப்படாதவை இன்னும் எத்தனையோ. தம் குழந்தைகளை விடுவிப்பதற்கும் தம்மைத் தாம் காப்பாற்றிக் கொள்வதற்கும் பலபேர் லட்சக் கணக்கான ரூபாய்களை கொள்ளையர்களுக்குத் தந்திருக்கிறார்கள்.

பிர்ஜு ரகளை செய்யாமல் இறங்கி, அவர்களோடு சென்று விட்டான். மாட்டு வண்டிகள் வழிவிட்டு விலகிக் கொண்டன. பஸ் முன் நோக்கி நகர்ந்தது.

இருட்டிலிருந்து மேலும் நான்கு பேர் வெளியே வந்தார்கள்.

பிர்ஜுவுக்கு இருபத்தி இரண்டு வயது இருக்கும். சமீபத்தில் தான் பி.ஏ.பாஸ் செய்திருந்தான். அவன் தந்தைக்கு பைதாகஞ்சில் ஜவுளிக்கடைகள் இருந்தன. நிறையவே சம்பாதித்து வந்தார். தன்னைப் போலவே கொள்ளைக்காரர்களின் பிடியில் அகப்

பட்டுக் கொண்டவர்களைப் பற்றி பிர்ஜூ கேள்விப்பட்டிருக்கிறான். கௌரவமாகத்தான் நடத்துவார்கள். தந்தைகளிடம் பணம் கேட்பார்கள். கொடுத்துவிட்டால் பிரச்னையே இல்லை. மரியாதையாக அனுப்பி வைப்பார்கள். கொடுக்கவில்லை என்றால்தான் ஆபத்து.

பிர்ஜூவுக்கு தந்தையின் மீது நம்பிக்கை இருந்தது. அதனால் தான் தைரியமாக இருந்தான். அவனுக்கு முன்னால் யாரோ கான்வாஸ் ஷூக்களை கொண்டு வைத்தார்கள். ''மாற்றிக்கொள்.''

கால்களில் இருந்த ஷூக்களை கழற்றிவிட்டு அவற்றை அணிந்துகொண்டான். கண்களுக்குத் துணியைக் கட்டினார்கள்.

அன்று இரவு அவர்கள் ஏறத்தாழ இருபது கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்தார்கள். விடியற்காலையில் ஒரு கிராமத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள். ஒரு வீட்டில் அவர்களுக்கு புகலிடம் கிடைத்தது.

தன்னைப்போலவே கடத்தப்பட்ட மேலும் இரண்டு பேரைச் சந்தித்தான். அதில் ஒருவன் பிர்ஜூவின் இனத்தைச் சேர்ந்தவன்தான். இரவு நேரத்தில் நண்பர்களுடன் வீட்டிற்குத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தபோது வழியில் தாக்குதல் நடத்திக் கடத்தியிருக்கிறார்கள். ஐந்து லட்சம் தரச்சொல்லி அவனுடைய தந்தைக்கு மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. அவ்வளவு தரமுடியாது என்றும் ஒரு லட்சம் தருவதாகவும் பதில் அனுப்பியிருக்கிறார். இவர்களோ குறைந்தபட்சம் இரண்டு லட்சமாவது தரவேண்டுமென்று மற்றொரு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதற்கு இன்னும் பதில் வரவில்லை.

இரண்டாமவன் வினய்குமார். அவனுக்கும் ஜவுளி வியாபாரம்தான். மனைவியோடு சேர்ந்து சினிமாவுக்கு போய் விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது வழி மறித்துப் பிடித்துக் கொண்டார்கள். மனைவியை பத்திரமாக வீட்டில் கொண்டு



போய் சேர்த்துவிட்டு அவனை மட்டும் அழைத்துச் சென்றார்கள். அவனுடைய மாமனார் வசதி படைத்தவர். இரண்டு லட்சம் தரச் சொல்லி செய்தி அனுப்பப்பட்டது. பதில் இன்னும் வரவில்லை.

எல்லோருமாகச் சேர்ந்து மேலும் மூன்று நாட்கள் அதே போல் பயணத்தைத் தொடர்ந்தார்கள். பகல் முழுவதும் உறங்குவது, இரவு நேரத்தில் கால்நடையாகப் பயணம்.

நாளாவது நாள் பிர்ஜூ கைப்பட அவன் தந்தைக்குக் கடிதம் எழுத வைத்தான் பபிராம். அந்தக் கடிதம் பிர்ஜூவின் தந்தை கிருஷ்ண அகர்வாலின் வீட்டு போஸ்ட்பாக்ஸில் போடப்பட்டது. இன்னும் இரண்டு நாட்களில் பணத்தை எங்கே கொண்டு வந்து கொடுக்கணுமோ தெரியப்படுத்துவதாக அதில் எழுதப்பட்டிருந்தது.

* * *

**மை**னாபுரி மாவட்ட தலைமை காவல்நிலையம் சந்தடியாக இருந்தது. டெப்யூடி சூபரின்டெண்டெண்ட், அசிஸ்டெண்டுகள், நான்கு இன்ஸ்பெக்டர்கள் எல்லோரும் ஓய்வில்லாமல் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உத்திரப்பிரதேஷ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ரஜீந்தர் சிங்கின் ஜீப் வந்து நின்றது.

''எவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கு?'' ரஜீந்தர் சிங் கேட்டார்.

''எல்லாம் தயாராக இருக்கு சார். இருநூறு கானிஸ்டேபிள்கள் தயாராக இருக்கிறார்கள். அம்யூனிஷன் ரெடி. இன்னும் இரண்டு டிரக்குகள் வரவேண்டியிருக்கு. அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.''

''குட்! இரவு ஒன்பது மணிக்குள் நீங்கள் பால்புராவுக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும்.''

''சேர்ந்து விடுவோம் சார்.''

''நமக்குக் கிடைத்த செய்தி சரியானதுதானா?''

''முற்றிலும் சரியானது சார். அங்கே ஒரு கல்யாணத்திற்கு வரப்போவதாகத் தெரிந்தது.''

''சரி ஜாக்கிரதை. மூன்று ஆட்கள் அவன் பிடியில் இருக்கிறார்கள். நீங்கள் ரொம்ப கவனமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும். எவ்வளவு ரத்த ஆறு ஓடினாலும் சரி, விடாதீங்க. இந்தத் தடவை பபீராமை முழுவதுமாக ஒழித்துக் கட்டணும்.''

''அப்படியே நடக்கும் சார். கண்டிப்பாக நடக்கும். என் வாழ்க்கையில் நான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது இதுபோன்ற வாய்ப்பைத்தான். என் உயிரே போனாலும் சரி, பபீராம் மட்டும் உயிரோடு தப்பித்துக் கொள்ளமுடியாது.''

சர்க்கிள் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வந்த அவருடைய தம்பி ஒரு போராட்டத்தில் பபீராமின் கும்பலுக்கு பலியாகி விட்டான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் அப்பொழுதிலிருந்து சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார் கரம்வீர் சிங்.

''அப்படி என்றால் சரி. நான் போய் வருகிறேன். வெற்றியோடு திரும்பி வந்தபிறகு சந்திக்கிறேன். விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.''

''தாங்க்யூ சார். என் முயற்சியில் எந்தக் குறையும் இருக்காது.''

ரஜீம்தர் சிங் ஜீப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

''ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன் கரம்வீர்! பிந்த் நகரத்திலிருந்து போன் வந்தது. நான் வருவதற்கு சற்று முன்னால் அங்கே கொள்ளையர்களை பிடிப்பதற்காகவே புதிய எஸ்.பி.யை போட்டிருக்காங்க இல்லையா? அவர்களுக்கும் தகவல் வந்திருக்காம். நூறுபேருடன் புறப்பட்டு வருவதாக போன் வந்தது. ஷிங்கர் நதிக்கு அந்தப் பக்கம் காவல் இருக்கப் போறாங்களாம்.''

''அவங்க எதுக்கு சார் வரணும்?'' நெற்றியைச் சுளித்துக் கொண்டே கேட்டார் கரம்வீர் சிங்.



''பிந்த் நகரத்தில் பபீராம் மீது நிறைய கேஸ்கள் இருக்கு. கொலை மற்றும் கற்பழிப்பு கேஸுகளும் இருக்கு. நம்மைப் போலவே அவர்களும் ரொம்ப உறுதியாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வருவதற்குள் நீயே வேலையை முடித்துவிடுவாய். பபீராம் நம் கையில் சிக்கினால்தான் எனக்குச் சந்தோஷம்.'' தனக்குக் கிடைக்க வேண்டிய வெற்றி இன்னொரு எஸ்.பி.க்குக் கிடைத்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை இருந்தது அந்தக் குரலில்.

''கண்டிப்பாக முயற்சி செய்கிறேன் சார். ஆனாலும் வரப் போகிறவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? நம்மைப் போல் அவர்களிடம் தைரியம் இருக்காது சார்.''

இருவரும் அந்த புது எஸ்.பி.யை நினைத்து கேலியாக சிரித்துக் கொண்டார்கள்.

ஜீப் நகர்ந்தது.

* * *

ரஜீம்தரும், கரம்வீர் சிங்கும் பிந்த் நகர் எஸ்.பி.யைப் பற்றி ரொம்பக் குறைவான எடைபோட்டு விட்டார்கள். மத்தியப் பிரதேசத்தின் பிந்த் நகரத்திலிருந்து உத்தரப்பிரதேஷ எல்லையைத் தாண்டி இடாவாவுக்கு வந்துவிட்டது அந்த போலீஸ் பட்டாளம்.

எந்தச் சூழ்நிலையிலும் பபீராமைப் பிடித்தே ஆகவேண்டும் என்ற உறுதியோடு அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அந்த உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அவர்களுக்குள் தோற்றுவித்த எஸ்.பி. அந்த ஏரியாவுக்குப் புதுசு. வந்து ஒரு மாதம்தான் ஆகிறது.

வந்த முதல் நாள் யாருமே பொருட்படுத்தவில்லை. காரணம் அந்த எஸ்.பி. ஒரு பெண்ணாக இருந்ததால். அவள் பெயர் வைஜெயந்தி.

* * *

போலீஸ் இலாகாவில் அவ்வளவு உயர்ந்த பதவியில் ஒரு பெண்ணைப் பார்ப்பது அதுதான் அவர்களுக்கு முதல் தடவை.

இரண்டாவது நாள் வைஜெயந்தி எல்லோரையும் போல் சாதாரணப் பெண் இல்லை என்று அவர்களுக்குப் புரிந்து விட்டது. ட்யூட்டியில் இருந்தபோது தவறு செய்ததற்காக முதல்நாளே மூன்று போலீஸ்காரர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். மூன்றாவது நாள் அவளுடைய நல்ல சுபாவத்தையும், இரக்கம் நிறைந்த இதயத்தையும் உணர்ந்து கொண்டார்கள்.

நாலாவது நாள் அவள் எல்லோரையும் கூட்டம் கூட்டினாள்.

''பிரண்ட்ஸ்! இன்றிலிருந்து நான் முழுவதுமாக சார்ஜ் எடுத்துக் கொள்கிறேன். என்னை ஒரு தனிப்பட்ட வேலைக்காக அரசாங்கம் நியமித்துள்ளது. என் கடமையை நான் சரியாக நிறைவேற்ற வேண்டுமென்றால் உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. அதாவது உங்கள் ட்யூட்டியை நீங்கள் சரியாக செய்ய வேண்டும். தங்களுடைய கடமையைச் சரியாக செய்பவர்கள் எனக்கு நண்பர்கள். கடமையிலிருந்து தப்பித்துக் கொள்பவர்களை நான் எதிரியாக கருதுவேன். என் எதிரிகளை எப்படி வீழ்த்தணும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இன்னொரு விஷயம். நான் ஒரு போலீஸ் ஆபீசர் என்று மட்டும்தான் எனக்கு நினைவு இருக்கும். ஒரு பெண் என்ற விஷயத்தை நான் மறந்துவிடுவேன். அந்த விஷயத்தை எனக்கு நினைவுப் படுத்தணும்னு மட்டும் ஒருநாளும் முயற்சிக்காதீங்க. அப்பொழுது பெண்ணின் உண்மையான சக்தி என்னவென்று நான் உங்களுக்குக் காட்டவேண்டியிருக்கும்.''

அந்த சக்தியை ஒரு வாரத்திற்கெல்லாம் அவர்கள் சுயமாக பார்க்க நேர்ந்தது.

திடீரென்று ஐம்பது ஊழியர்களுடன் புறப்பட்டு சம்பல் பள்ளத்தாக்கிற்குப் போனாள் அவள். சியாராம் கொள்ளைக்கார கும்பல் அந்த எல்லையில் முகாம் போட்டிருப்பதாக அவளுக்கு



யார் சொன்னார்கள் என்று யாருக்குமே தெரியாது. எங்கே போகிறோம் என்று அவள் யாரிடமும் சொல்லவில்லை. காரணம் போலீஸ்காரர்களில் கூட சில உளவாளிகள் இருந்தார்கள். கொள்ளைக்காரர்களுக்கு போலீசாரின் நடவடிக்கைப் பற்றி தகவல் தெரிவிப்பதுதான் அவர்களுடைய வேலை.

பதினாலு மணி நேரம் ஒரே மூச்சாக பயணம் செய்தபிறகு வைஜெயந்தி எல்லோரையும் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னாள். இன்னும் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும் என்று யாருக்குமே தெரியாது. கேட்பதற்கும் பயமாக இருந்தது. ஆனால் அவர்கள் அதிக நேரம் பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏழு மைல் தொலைவிலேயே இருந்தது கொள்ளையர்கள் கும்பல்.

போலீசாரை குரூப்புகளாகப் பிரித்து, வழி சொல்லி அனுப்பினாள். ஒரு குரூப்புக்கு இன்னொரு குரூப் எந்தக் பக்கமாக போகிறது என்று தெரியாது. எவ்வளவு வேகமாக பயணம் செய்ய வேண்டும் என்று மட்டும் சொன்னாள். இருட்டியதுமே பயணத்தை மேற்கொண்டார்கள். வெவ்வேறு திசையை நோக்கி சென்று கொண்டிருந்தவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு நான்கு பக்கங்களிலிருந்து ஒரே சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். அவளுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு போலீசார் ஆச்சரியமடைந்தார்கள்.

அந்த இடம் பெரிய வயல்வெளி. உத்தரவு கொடுக்கும் வரையில் துப்பாக்கியால் சுடவேண்டாம் என்று வைஜெயந்தி முன்கூட்டியே சொல்லியிருந்தாள். முதலில் சியாராம் கும்பல்தான் சுடத் தொடங்கியது. ஆறுபேர் கொள்ளையர்களை உயிரோடு பிடிக்க முடிந்தது. நான்குபேர் குண்டடிபட்டு இறந்து போனார்கள். சியாராமும், அவன் காதலி குஸுமாவும் முன்கூட்டியே தப்பித்துக் கொண்டு போய் விட்ட விஷயம் வைஜெயந்திக்குத் தெரியாது. தங்களுக்குள்ளேயே மறைந்திருந்த எதிரியை கண்டுபிடித்து

விட்டாள். அவளுக்கு அந்தச் சந்தேகம் கொஞ்ச தாமதமாக வந்தது. அதற்குள் எதிரிகளுக்குச் செய்தி போய்ச் சேர்ந்துவிட்டது.

கொள்ளையர்கள் பறவை கூவுவது போல் ஒலியை எழுப்பி தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக இன்ஃபார்மருக்குத் தெரியப்படுத்துவார்கள். இன்ஃபார்மர் சரியான சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டு அந்த இடத்திற்குப் போய்ச் சேருவான்.

வைஜெயந்தி அதுபோன்ற ஒலியை தன்னுடைய முகாமிற்கு சற்று தொலைவில் எழுப்பச் செய்தாள். இன்ஃபார்மர் ரகசியமாக வந்தான். வைஜெயந்தி விரித்த வலையில் சிக்கிக் கொண்டான்.

அவன் ஒரு சப் இன்ஸ்பெக்டர். எல்லோரும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயம் பார்த்து சியாராமுக்கு செய்தி அனுப்பினான். சியாராம் தன்னுடைய கும்பலை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டான். இதுதான் நடந்தது. அந்த இன்ஸ்பெக்டரையும், மற்ற கொள்ளையர்களையும் கைது செய்து பிந்த் நகரத்திற்கு அழைத்து வந்தாள் வைஜெயந்தி. சியாராமும், குஸுமாவும் தப்பி ஓடிப் போய் விட்டதற்கு அவள் வருத்தப்படவில்லை.

கும்பலை விட்டு ஓடிப் போனதுதான் சியாராம் செய்த தவறு. அவனை ஒவ்வொரு நிமிஷமும் பூலன்தேவி வேட்டையாடிக் கொண்டிருந்தாள். கும்பலை விட்டு அவளோடு தனியாகப் போராடுவது சியாராமால் முடியாத காரியம்.

கொள்ளையர்களிடையே பந்தபாசங்கள் வேடிக்கையாக இருக்கும். கொள்ளைக்காரி பூலன்தேவிக்கு எதிரி குஸுமா. தானும் பூலன்தேவியைப் போலவே பெரிய கொள்ளைக்காரி என்று அழைக்கப்பட வேண்டுமென்று குஸுமா தவித்தாள்.

1981ம் ஆண்டு மே மாதம் 7ம் தேதி. உத்தரப்பிரதேஷில் உள்ள அஸ்த்தா என்ற கிராமம். அந்த ஊர் தலைவர் ராம்சிங்கின் மனைவியை பத்துபேருக்கு நடுவில் ஆடையின்றி நிற்கச் செய்த



குற்றத்திற்காக குஸுமாவின் பெயர் போலீஸ் ரிக்கார்டுகளில் பதிவு செய்யப்பட்டது. குஸுமாவின் காதலன் சியாராம்.

குஸுமாவின் தந்தை ஒரு பள்ளியில் ப்யூனாக வேலை பார்த்து வந்தார். சிறுவயதிலேயே அவளுடைய திருமணம் கேதாரநாத்துடன் நடந்தது. மாமியார் வீட்டில் ஒத்துப்போக முடியாமல் பிறந்த வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாள். அப்பொழுது அவளுக்கு வயது பதினேழு. அந்த பருவத்திலேயே அவளுக்கு பலபேருடன் தொடர்பு இருந்தது. மார்ச் எட்டாம் தேதி 1978ல் மாதோமல்லா என்ற கொள்ளைக்காரன் அவள் அழகில் மயங்கி தூக்கிக்கொண்டு போய்விட்டான். குஸுமா அவனுடைய வைப் பாட்டியாகச் சில நாட்கள் இருந்தாள்.

மாதோமல்லாவுக்கு எதிரி விக்ரம்மல்லா. அவனுடைய கும்பலில்தான் பூலன்தேவி இருந்து வந்தாள். ஒருதடவை இந்த இரு கும்பல்களுக்கிடையே பெரிய போராட்டம் நிகழ்ந்தது. அதில் குஸுமாவுக்கு குண்டடி பட்டுவிட்டது. சிகிச்சைக்காக அவளை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே அவளைப் போலீசார் கைது செய்தார்கள்.

அப்பொழுதுதான் விக்ரம்மல்லாவுக்கு குஸுமாவின் மீது காதல் அரும்பியது. அவளை ஜெயிலில் விடுவிப்பதற்காக லட்சக் கணக்கில் செலவு செய்தான். குஸுமா ஜெயிலை விட்டு வெளியே வந்ததும் விக்ரமிற்கு நெருக்கமானாள். அதே கும்பலில் இருந்த பூலன்தேவிக்கும் குஸுமாவுக்கும் ஒரு நிமிஷம்கூட ஒத்து வரவில்லை. பொறாமையால் ஒருவரை ஒருவர் வெறுத்து வந்தார்கள். சியாராமும் அதே கும்பலில் இருந்தான். அவன் குஸுமாவின் பழைய காதலன்.

கொஞ்ச நாட்களில் குஸுமாவுக்கு விக்ரமிடம் அலுப்பு ஏற்பட்டது. தன்னுடைய தாபத்தைத் தீர்க்கவல்ல ஆண்மகன் தன்னுடைய பழைய காதலன்தான் என்று நினைத்தாள். அதோடு விக்ரம்

பூலன்தேவியோடு இருப்பது அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதனால் சியாராமிடம் 'விக்ரம் உன்னைக் கொல்லத் திட்டம் போடுகிறான்' என்று சொல்லித் தூண்டிவிட்டாள். அன்றிரவே விக்ரமை கொன்றுவிட்டான் சியாராம்.

பூலன்தேவி தனியாக ஓடிப்போய் தனக்கென்று சொந்தமாக ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக்கொண்டாள். தன் காதலனின் கொலைக்குப் பழி வாங்குவதாக அக்னியின் முன்னால் சபதம் செய்தாள். பெரிய பெரிய சாம்ராஜ்ஜியங்கள் எல்லாம் பெண் காரணமாக பிரிந்து போனது போலவே சம்பல் பள்ளத்தாக்கிலிருந்த கொள்ளையர் கும்பல்களில்கூட பிரிவினை ஏற்பட்டது.

சியாராம் தலைவனாக இருந்த கும்பலில் அவன் தம்பி லாலாராமும், மனைவி குஸுமாவும் முக்கிய அங்கத்தினர்கள். குஸுமா எல்லோருக்குமே காதலிதான். அந்தக் கும்பல் செய்யாத அக்கிரமம் கிடையாது. எல்லாவற்றுக்கும் பின்னால் குஸுமா இருந்தாள்.

அப்படிப்பட்ட சியாராமின் கும்பலை அவ்வளவு சாமர்த்தியமாக வைஜெயந்தி எதிர்த்து நின்ற விதம் போலீஸ் வட்டாரத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தவில்லை. காரணம், ஒரு பெண்ணின் வெற்றியை அவ்வளவு சீக்கிரமாக யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனதுதான். மேலும் சியாராம் தப்பித்துச் சென்றதை அவளுடைய தோல்வியாக பிரசாரம் செய்தார்கள்.

ஆனால் தாக்குதலில் அவளுடன் பங்கெடுத்துக் கொண்ட சக ஊழியர்களுக்கு மட்டுமே அவளுடைய உண்மை சொரூபம் தெரியும். அவள் எவ்வளவு திறமைசாலியோ அத்தனைக்கத்தனை துணிச்சலும் கொண்டவள் என்றும், அவளுடைய இந்த துணிச்சல் கோழைகளைக் கூட தைரியசாலி ஆக்கிவிடும் என்று அவர்களுக்குப் புரிந்தது.



## 2

இன்று வைஜெயந்தி பபீராமின் மீது தாக்குதலை நடத்த முடிவு செய்தாள். அதனால்தான் எல்லோரும் உற்சாகத்துடன் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். ஷங்கர் நதிக்கரைக்கு வந்து சேரும்போது மாலை ஆறுமணி ஆகிவிட்டது. இரவு நேரத்தில் அங்கே தங்கிக்கொண்டு மறுநாள் காலையில் நதியைத் தாண்டி பயணத்தை மேற்கொள்ளலாம் என்று சொன்னாள் வைஜெயந்தி. நதிக்கு அந்தப்பக்கம் சாலைகள் எல்லாம் கரடுமுரடாக இருக்கும். ஜீப்புகள் இல்லாமல் இரவு நேரத்தில் பயணம் செய்வது கஷ்டம்.

அன்றிரவு அவள் உறங்கவில்லை. அங்கிருந்து இருபது கி.மீ. தொலைவில் ஹரீனா என்ற கிராமம் இருந்தது. பபீராமின் சொந்த ஊர் அது. இரண்டு இன்ஸ்பெக்டர்களுடன் சிவில் உடையில் ஹரீனா கிராமத்திற்கு போய்ச் சேர்ந்தாள். பபீராம் அந்த கிராமத்திற்கு வரக்கூடிய வாய்ப்பு ஏதாவது இருக்குமோ என்று தெரிந்து கொள்ள நினைத்தாள்.

ரொம்பவும் குக்கிராமமாக இல்லாமல் வளர்ந்து வரும் கிராமம் போல் காட்சி தந்தது. நிறைய மாடிவீடுகள் தென்பட்டன. நல்ல ஹோட்டல்கள் இருந்தன. முக்கியமாக எல்லோரின் முகத்திலும் உற்சாகம் தென்பட்டது.

அந்த ஊரிலேயே இருந்த தங்களுடைய உளவாளியைச் சந்தித்தார்கள். அவன் சொன்ன செய்தியைக் கேட்டபோது அவளுக்குத் திகைப்புதான் ஏற்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட கொள்ளைகளுக்கு தலைமை வகித்து இருபது போலீஸாரின் கொலைகளுக்குக் காரணகர்த்தாவான பபீராம் அந்த ஊர் மக்களுக்குக் கடவுள் போன்றவன். தம் உயிரை வேண்டுமானாலும் தருவார்களே தவிர பபீராம் பற்றி எந்த விஷயத்தையும் மூச்சுகூட விடமாட்டார்கள். அந்த ஊருக்கே அவன் ஒரு 'ராபின்ஹூட்'. ஏழைகளின் வயிற்றில் அடித்து மாடமாளிகை

களைக் கட்டியவர்களைச் சூறையாடி, கஷ்டப்பட்டு உழைக்கும் கூலிகளுக்கு அவன் பகிர்ந்து கொடுத்து வந்தான்.

அவன் நலனைப் பற்றி பயப்படுபவர்களுக்கு அவன் தரும் பதில், ''நெற்றி வியர்வை சிந்த பாடுபடும் தொழிலாளர்களைக் கொள்ளையடிப்பவர்கள் இருக்கும் வரையில் என்னைப்போன்ற பபிராம்கள் கண்டிப்பாக இருப்பார்கள். நான் போனால் இன்னொரு பபிராம் வருவான்'' என்பதுதான்.

அவன் வரப்போகிறான் என்றாலே பண்டிகையைப் போல் கொண்டாடுவார்கள். அவன் அங்கே இருக்கும் அந்த சொற்ப நேரத்தில் அவனை கண்ணின் இமையைப் போல் பாதுகாப்பார்கள். அதனால் அவன் கும்பல்மீது அந்த ஊரில் படையெடுத்துச் செல்வது விவேகமில்லை.

வைஜெயந்தி கேம்பிற்குத் திரும்பி வந்துவிட்டாள். ஏனோ மனம் கலங்குவதுபோல் இருந்தது. 'எது நியாயம்? எது தர்மம்? சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் அநியாயங்கள் எதுவுமே வெளிச்சத்திற்கு வராது. அப்படியே வந்தாலும் சம்பந்தப்பட்டவர்களின் செல்வாக்கிற்கு முன்னால் காணாமல் போய்விடும். கலப்பட வியாபாரம் செய்து மக்களை ஸ்லோ பாயிசன் மூலமாக கொலை செய்பவனுக்கு அரசியல்வாதியின் துணையிருக்கும். போலி மருந்துகள் மூலமாக அப்பாவி மக்களின் உயிரை எடுப்பவன் சட்டத்தின் பிடியிலிருந்து வெளியேறிவிடுகிறான். அதற்கான சாட்சியங்களும், ஆதாரங்களும் ரிகார்ட்டுகளிலிருந்து மாயமாகிவிடும். அவற்றை எதிர்த்ததால்தான் தன்னை இந்தப் பகுதிக்கு மாற்றிவிட்டார்கள். கொள்ளையர்கள் என்று முத்திரையிடப்பட்டிருப்பவர்களின் கேஸ்களைக்கூட விசாரணை செய்யாமல் அவர்களை கொன்றுவிட்டால் தனக்கு நல்ல பெயர் கிடைக்கும். அந்த விதமாக அரசியல்வாதிகளை பக்கபலமாக கொண்ட வியாபாரிகளுக்கு நன்மை ஏற்படும். எவ்வளவு சுயநலம் பிடித்த சமுதாயம் இது?'



யோசிக்க யோசிக்க அவளுள் ஆவேசம் கட்டுக்குள் அடங்காமல் போயிற்று. ஏதோ ஒன்று செய்யவேண்டும். என்கௌண்டர் என்ற பெயரில் நடக்கும் மாரணஹோமங்கள் தடுக்கப்பட வேண்டும். அவர்களை சட்டத்திற்குக் கட்டுப்பட்டு சரணடையக் கூடிய வழியை யோசிக்க வேண்டும். அது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. ஆனால் முயற்சி செய்யாமலேயே தோல்வியை என்றுமே ஒப்புக் கொள்ளமாட்டாள் வைஜெயந்தி. தன்னுடைய லட்சியத்தை மறுநாள் தாக்குதலின்போது அமுலாக்க வேண்டும் என்று எண்ணியிருந்தாள்.

* * *

ஷங்கர் நதிக்கு அந்தப் பக்கமிருந்த மைனபுரிக்கு பத்து கி.மீ. தொலைவில் முகாமிட்டிருந்தார்கள். வைஜெயந்தியும் வரப்போவதாகத் தெரிந்ததும் கரம்வீர்சிங் மேலும் ஒரு பட்டாளத்தையும்கூட அழைத்துக் கொண்டு வந்திருந்தார். பபீராம் தன் கையில்தான் சிக்க வேண்டும் என்ற தவிப்பு அவருக்கு.

காலையில் ஆறுமணிக்கு இரு பக்கங்களிலிருந்தும் பபிராமின் கும்பலை தாக்க வேண்டும் என்று கரம்வீர்சிங் பட்டாளத்திற்கு உத்தரவிட்டாள் வைஜெயந்தி. அரைமணிக்கு ஒருதடவை அவர்கள் பயணம் செய்துகொண்டிருக்கும் வழியைப் பற்றித் தெரியப்படுத்த வேண்டுமென்றும் சொன்னாள். எல்லா இன்ஸ்பெக்டர்களிடமும் வயர்லெஸ் செட்டுகள் இருந்தன.

''அவசரப்பட்டு சுட்டு விடாதீர்கள். முடிந்தவரையில் அவர்களை உயிருடன் பிடிக்கணும். தேவையான புகை வெடிகுண்டுகள் மற்றும் டியர்காஸ் ஷெல்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் இருக்கும் இடத்தைப் பற்றி யாருக்கு முன்னால் தெரிந்தாலும் அடுத்தவர்களுக்குத் தெரியப்படுத்தணும். நான்கு பக்கங்களிலிருந்தும் ஒரே சமயத்தில் சூழ்ந்து கொள்வோம்.'' வயர்லெஸ்ஸில் சொன்னாள்.

''சரி மேடம். ஒருக்கால் அவர்கள் முதலில் சுடத் தொடங்கி விட்டால்?'' கரம்வீர்சிங் மறுமுனையில் கேட்டார். வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தனக்கு உத்தரவு தருவது அவருக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவள் தன்னைவிட உயர்ந்த பதவியில் இருக்கிறாள். தன் மேலதிகாரியிடமிருந்து சம்மதம் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறாள். ஆனாலும் ஒரு பெண் தனக்கு உத்தரவு இடுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

''அவர்கள் சுடத் தொடங்கிவிட்டால் கையாலாகாதவர்களைப் போல் சும்மா இருக்கச் சொல்லவில்லை. முதலில் நாம் சுடக்கூடாது என்று சொல்ல வந்தேன். சிவில் லிபர்டீஸ் பற்றி நினைவு வைத்துக்கொள்ளுங்கள். நம்மேல் தவறு இருப்பது தென்பட்டால் போதும், கிழித்துக் குதறிவிடுவார்கள்.'' வைஜெயந்தி எச்சரித்தாள். தான் அவரைவிட பெரிய பதவியில் இருப்பதால் தன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்று அவளுக்கும் தெரியும்.

''சரி மேடம்! நீங்க சொன்னது போலவே செய்கிறோம்.'' உத்தரவாதம் கொடுத்தார் கரம்வீர் சிங். அன்றைக்கு சுமார் இருபத்தி ஐந்துமைல் தூரம் பிரயாணம் செய்தார்கள். ஜீப்புகளும், கார்களும் பயணம் செய்யக் கூடிய வழி அல்ல அது.

அது போல் மூன்று நாட்கள் கழிந்தன. அந்தப் பக்கம் உ.பி. பெடாலியனுக்கும், தங்களுக்கும் நடுவில் ஐம்பது மைல்தான் இடைவெளி இருந்தது. அதாவது நடுவில் ஏதோ ஒரு இடத்தில் கொள்ளைக்கூட்டத்தினர் இருக்கிறார்கள். ஒருக்கால் இதற்குள் தாங்கள் வரும் செய்தி தெரிந்திருந்தால் தப்பி ஓடிப்போக முயற்சி செய்வார்கள்.

அந்த இடத்தில் நதி ஒரு பக்கமாக திசை திரும்பி பிரவகித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் வயல்வெளியைத் தவிர



வேறெந்த இடமும் இல்லை. அவர்களால் நதியைத் தாண்ட முடியவில்லை என்றால் சுலபமாக அகப்பட்டுக் கொள்வார்கள். வைஜெயந்தி ஜவான்களை இரண்டு குழுவாக பிரித்து ஒரு குழுவோடு முன்னேறினாள்.

அந்த இடத்தில்தான் அவள் தவறு செய்துவிட்டாள். போலீஸ்காரர்களை விட கொள்ளையர்களுக்கு உயிருக்கும் அஞ்சாத துணிச்சல் இருக்கும். அவள் அனுபவத்திற்கு இன்னும் இந்த விஷயம் வரவில்லை. கொள்ளைக்காரர்கள் பகல் நேரத்திலேயே கிராமத்து ஆட்களை போல் மாறுவேடத்தில் நதியைத் தாண்டிவிட்டார்கள். ஒரு குழுவை கேம்பிலேயே விட்டு வைத்திருந்தது அவள் செய்த நல்ல காரியம். அவர்கள் நதியைத் தாண்டி விட்டார்கள் என்று தெரிந்ததும் பின்னால் திரும்பி விட்டாள்.

பக்கத்திலேயே இருந்த பள்ளத்தாக்கில் வயல்வெளியில் மறைந்திருந்தார்கள் பபீராம் கூட்டத்தினர். தங்கள் படையுடன் அவர்களை எதிர்த்து நிற்பது முடியாத காரியம். அதனால் அன்றிரவெல்லாம் அவள் அந்த வயலுக்கு பக்கத்திலேயே காவல்காத்துக் கொண்டிருந்தாள். விடியற்காலையில் கரம்வீர்சிங் போலீஸ் படையுடன் வந்து சேர்ந்தார்.

நானூறு ஜவான்கள் வயலை ஓரங்குலம்கூட விடாமல் சூழ்ந்து கொண்டார்கள். தாக்குதல் தொடங்கிவிட்டது. முதலில் ஒலிபெருக்கியில் சரணடையச் சொல்லி எச்சரித்தாள் வைஜெயந்தி. பபீராமிடமிருந்து பதில் இல்லை. அரைமணிநேரம் அவகாசம் கொடுத்து விட்டுப் பிறகு புகை வெடிகுண்டுகளை பயன்படுத்தினார்கள். அவர்கள் வெளியே வரவில்லை.

போலீஸார் வயலுக்குள் ஊடுருவிக் கொண்டு போகத் தொடங்கினார்கள். எல்லோரும் விழிப்போடு நகர்ந்து கொண்டிருந்தார்கள். எந்த நிமிடத்திலும் கொள்ளையர்கள் துப்பாக்கியைப் பிரயோகிக்கலாம்.

திடீரென்று மேலே எழும்பிக் கொண்டிருந்த ஒரு துப்பாக்கி யின் மீது வைஜெயந்தியின் பார்வை படிந்தது. இன்னொரு கை வெள்ளைக் கொடியைப் பிடித்தபடி மேலே உயர்ந்தது. சந் தோஷத்தில் அவள் இதயம் துள்ளிக் குதித்தது. ஆனால் அந்த சந் தோஷம் அடுத்தவினாடியே மாயமாகி விட்டது.

திடீரென்று ஒரு பக்கத்திலிருந்து துப்பாக்கி வெடிக்கும் சத்தம். அவ்வளவுதான்! துப்பாக்கியை உயர்த்திய கை உள்ளே போய் விட்டது. அதற்குப் பிறகு யார் யாரை சுட்டுக் கொண்டிருந்தார்கள் என்று புரியாத அளவுக்கு ஒரே குழப்பம். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் போராட்டம் தொடர்ந்தது.

நன்றாக விடிந்து விட்டது. வைஜெயந்தி வயல்வெளியி லிருந்து வெளியே வந்தாள். நான்கு போலீசாரின் இறந்த உடல் களை வெளியே கொண்டு வந்தார்கள். காயமடைந்தவர்களை உடனே கேம்பிற்கு அனுப்பி வைத்தார்கள்.

இருபத்தி இரண்டு கொள்ளைக்காரர்கள் கைது செய்யப்பட் டார்கள். இறந்து போனவர்கள் பன்னிரெண்டு பேர். அதில் வெள்ளைக் கொடியைப் பிடித்துக் கொண்டிருந்தவனின் கையில் இன்னும் கொடி அப்படியே இருந்தது. சுமார் ஐம்பது வயது இருக்கும் அவனுக்கு. அடையாளங்கள் சரியாக பொருந்தியிருந் தன. அவன்தான் பபீராம்.

கரம்வீர்சிங் வந்து சல்யூட் செய்தார். அவர் முகம் சந் தோஷத்தால் மலர்ந்திருந்தது. "மேடம்! பபீராமின் பிணம் கிடைத்து விட்டது."

அவருடைய சந்தோஷத்திற்குக் காரணம் அவளுக்குத் தெரியும். பபீராமை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வந்த வர்களுக்கு அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய் பரிசு அறிவித்திருந்தது. பிணம் கிடைத்தது. உ.பி.யில் என்பதால் அந்தப் பரிசும், புகழும் அவர்களுக்குத்தான் கிடைக்கும்.





பெயருக்காக அவள் என்றுமே தவித்ததில்லை. அதனால் அவளுக்கு எந்த வருத்தமும் இல்லை. அவளுடைய வருத்த மெல்லாம் ஒன்றுதான். பபீராமை உயிருடன் பிடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இத்தனை நாளும் நியாயம் வேறு சட்டம் வேறு என்றும் நினைத்து வந்தாள். இன்று நியாயம் வேறு தர்மம் வேறு என்று புரிந்து விட்டது.

"அவன்தான் வெள்ளைக்கொடியை உயர்த்திக் காண்பித் தானே? பின்னே எதற்காக சுடத் தொடங்கினீர்கள்?" கொஞ்சம் தீவிரமாகவே கேட்டாள்.

"உங்களுக்குத் தெரியாது மேடம். அதெல்லாம் பிளான். துப்பாக்கியை மேலே தூக்கி, சரணடைவதுபோல் காட்டிவிட்டு இன்னொரு பக்கம் சுடத் தொடங்கிவிட்டான். முதலில் சுட்டது அவர்கள்தான். எங்க கான்ஸ்டேபிள் அந்த இடத்திலேயே இறந்து விட்டான்."

அவர் சொல்வது உண்மையல்ல என்று அவளுக்குத் தெரியும். ஆனால் நிரூபிக்க முடியாது. அவர் இதழோரத்தில் இருந்த சிரிப் பிலேயே அந்த விஷயம் வெளிப்பட்டது.

வைஜெயந்தி தனக்காக போடப்பட்டிருந்த கூடாரத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். கொள்ளையர்களிடமிருந்து கிடைத்த ஆயுதங்களை போலீசார் உள்ளே கொண்டு வந்து வைத்தார்கள். பிணங்களை வரிசையாக படுக்க வைத்தார்கள். டிரக்குகளை வரச் சொல்லி கேம்பிற்கு உத்தரவு அனுப்பப்பட்டது.

வைஜெயந்தி நாற்காலியில் சாய்ந்தாள். நான்கு நாட்களாக சரியான உறக்கம் இல்லை. களைப்பாக இருந்தபோதிலும் தூக்கம் வருவதாக இல்லை. இதயத்தில் முள் ஏதோ குத்திவிட்டது போன்ற வேதனை. வெளியே பெரிதாக சந்தடி கேட்டதும் எழுந்து வெளியே வந்தாள்.

மக்கள் கும்பல் கும்பலாக வந்துகொண்டு இருந்தார்கள். உரத்தக் குரலில் முழக்கமிட்டுக் கொண்டே வந்தார்கள்.

"கேப்டன் வாழ்க! அக்கிரமம் செய்யும் போலீசார் ஒழிக!"

அரைமணிக்குள் அந்த இடம் முழுவதும் மக்களால் நிரம்பி விட்டது. சிறுவர்கள், பெரியவர்கள், பெண்கள், ஆண்கள் நடக்க முடியாதவர்கள் வண்டியில் வந்தார்கள். சிலர் வெளிப்படையாகவே அழுது கொண்டிருந்தார்கள். சிலர் போலீசாரைப் பார்த்து வசை பாடி கொண்டிருந்தார்கள்.

வைஜெயந்தி அவர்களையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். வண்டியிலிருந்து இறங்கி வந்தார்கள் புதுமணத் தம்பதிகள். கல்யாணப் பெண்ணின் தலையில் சூடியிருந்த பூச்சரம் கூட இன்னும் வாடவில்லை.

ஒருமுறை பபீராமின் கால்களைத் தொட்டு வணங்குவதற்கு அனுமதிக்கச் சொல்லி கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டிருந்தார்கள். போலீசார் அவர்களை முன்னால் போக அனுமதிக்கவில்லை.

வைஜெயந்தியால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியவில்லை. அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினாள்.

"அவன் உங்களுக்கு உறவா?" என்று கேட்டாள்.

"ஆமாம் மேடம். ஆத்மார்த்தமான உறவு. எங்களுக்குள் உறவு முறை இல்லையே ஒழிய எங்களுடைய கடவுளே அவன்தான். உங்க போலீஸ்காரர்களைப் போல் அவன் என்றுமே பெண்களை கற்பழித்ததில்லை. ரொம்ப மதிப்போடு நடத்துவான். இன்னிக்கு அவன் இறந்து போனதற்கு நான்தான் காரணம். என் கல்யாணத்திற்காகவே இந்த ஊருக்கு வந்தான்." அவள் கண்களிலிருந்து நீர் தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

"அவன் எத்தனை கொலைகள் செய்திருக்கிறான் என்றும், எவ்வளவு பேரை கிட்நாப் செய்திருக்கிறான் என்றும் உங்களுக்குத் தெரியுமா?"



"தெரியும். போனவாரம் கூட நான் ஓட்டிக் கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து ஒரு இளைஞனை கடத்திக் கொண்டு போனான். உங்களுக்குத் தெரியுமா மேடம்? அந்தப் பையனின் அப்பா வியாபாரத்தில் லட்சம் லட்சமாக சம்பாதித்தார். மாடிவீடுகளை கட்டினார். அதெல்லாம் ஜவுளி வியாபாரத்தில் சம்பாதித்தது தானா? வட்டி வியாபாரம் செய்து ஏழை மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக் கட்டியிருக்கிறார் அந்த கட்டிடங்களை. அவரிடம் அரை டஜனுக்குமேல் அடியாட்கள் இருக்கிறார்கள். வெறும் நூறு ரூபாய்க்காக கோபிநாத் என்ற ஏழை விவசாயியை நடுத் தெருவில் எலும்புகள் உடையுமாறு அடித்துப் போட்டார்கள். எந்தப் போலீசாவது அவர்களைப் பிடித்தார்களா? அப்படிப்பட்டவர்களுக்கு என்றாவது தண்டனை கொடுத்திருக்காங்களா? இல்லை மேடம். சட்டத்திற்கு கண்ணும் இல்லை. காதும் இல்லை." ஆவேசமாகச் சொன்னான் ஹரீஷ்.

கரம்வீர்சிங் கோபமாக முன்னால் வரப்போனார். வைஜெயந்தியின் பார்வைக்கு பின் வாங்கினார். ஹரீஷை அனுப்பி விட்டு கரம்வீர்சிங்கிடம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சொன்னாள். பிறகு ஜீப்பில் ஏறிக்கொண்டு பிந்த் நகரத்திற்குப் புறப்பட்டாள்.

எதையோ செய்ய வேண்டுமென்ற தவிப்போடு வந்துவிட்டு வேறு எதையோ செய்துவிட்டது போன்ற வருத்தம் அவள் மனதில். இந்த வெற்றிக்கு அரசாங்கத்திடமிருந்து பாராட்டுகள், மெடல்கள் கிடைக்கலாம். கடமையைச் சரியாகச் செய்ததற்காக தனக்குத் திருப்தியும் கிடைக்கலாம். ஆனால் மனசாட்சி கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பது சாத்தியமா?

டிரைனிங்கில் இருந்தபோது ரிடையர்ட் ஆர்மீ சீஃப் ஜெனரல் மானிக்ஷா செய்த பிரசங்கம் நினைவுக்கு வந்தது.

"போலீஸ் ஆபீசர் வேலை கத்தியின் மீது நடப்பது போன்றது. ஒரு ஆளை கொலை செய்தால் சட்டப்படி குற்றம். ஆனால் போர்

நடக்கும்போது எவ்வளவு பேரை கொலை செய்கிறோமோ அவ்வளவு பெருமை. நாட்டில் இப்பொழுதுள்ள அராஜக சூழ்நிலையில் போலீசார்கூட போர்புரிய வேண்டியுள்ளது. கடமையை நிறைவேற்றும் போது நியாயம் அநியாயம் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது. சில சமயம் உள்மனப்போராட்டம் தொடங்கிவிடும். அதை ஜெயிப்பதுதான் உண்மையான வெற்றி. ஒரு போலீஸ் ஆபீசருக்கு எப்போதும் நினைவில் இருக்க வேண்டிய விஷயம் கடமை! நியாயத்தைக் காப்பாற்றுவது என்ற இந்தக் கடமையில் அநியாயத்தை ஒழித்துக்கட்டுவது முக்கியம். இந்த முயற்சியில் சில சமயம் கொலை செய்யவும் நேரிடலாம். ஒரு நபரின் மரணத்தால் நூறுபேருக்கு நன்மை ஏற்படலாம் என்ற பட்சத்தில் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கொலை செய்யவும் பின் வாங்கக் கூடாது. இந்த விஷயத்தில் முக்கியமாக வேண்டியது மனஉறுதி. அதை ஒருநாளும் இழந்த விடாதீர்கள்.''

அந்த பேட்சில் லேடி ஆபீசர் அவள் ஒருத்திதான். பிரசங்கம் முடிந்ததும் அவர் அவள் பக்கம் பார்த்துவிட்டு முறுவலித்தார் 'இந்த வார்த்தைகள் முக்கியமாக உனக்காகத்தான்' என்பது போல்.

அவருடைய வார்த்தைகள் அன்று ரொம்பவும் பிடித்திருந்தன. இன்று அனுபவத்திற்கு வந்தன. கடமையை நிறைவேற்றுவதில் அவள் பின் வாங்கவில்லை. அந்த விஷயத்தில் திருப்தியாகத்தான் இருந்தது. ஆனாலும் ஏதோ வேதனை. உயிரை எடுப்பது சுலபம். உயிரைக் கொடுப்பது சாத்தியமில்லாத விஷயம். யோசிக்க யோசிக்க தலைவலி அதிகரித்தது.

அவள் வீட்டிற்கு வந்து சேரும்போது இரவு எட்டுமணியாகி விட்டது. சரத் முன் அறையிலேயே உட்கார்ந்திருந்தான்.

''ஹாய்! எப்போ வந்தீங்க?'' உற்சாகத்தோடு, தன்னைச் சேர்ந்த மனிதன் ஒருவன் மனம் விட்டுப் பேசிக் கொள்வதற்குக் கிடைத்து விட்டான் என்ற சந்தோஷத்தோடு கேட்டாள்.



''இரண்டு நாளாச்சு'' என்றான் அவன் முற்றுப்புள்ளி வைப்பதுபோல்.

தன் மனப்போராட்டத்தைப் புரிந்துகொண்டு ஆறுதல் சொல்லக்கூடிய ஆள் கிடைத்துவிட்டான் என்ற சந்தோஷம் அந்த ஒரே வார்த்தையில் காணாமல் போய்விட்டது. பதினைந்து நாட்களுக்குப் பிறகு கணவனைப் பார்த்த உற்சாகமும், உவக்கையும் வற்றி விட்டன.

''குளித்து விட்டு வருகிறேன்,'' எழுந்து உள்ளே போனாள்.

குளிர்ந்த நீர் ஷவரிலிருந்து மழைத்துளிகளாக விழ அப்படியே ஐந்து நிமிடங்கள் வரையில் நின்று கொண்டிருந்தாள்.

கணவன் ஊரிலிருந்து வந்து இரண்டு நாளாகிறது. அவன் வந்தபோது அவள் இல்லை. வந்ததுமே அவனிடம் இன்னும் கொஞ்சம் ஆதரவைக் காட்டியிருக்கவேண்டும். தான் காதலித்து திருமணம் செய்து கொண்ட நபர்! இதற்கு முன்னால் இரண்டு நாட்கள் ஊரில் இல்லாமல் மூன்றாவது நாள் திரும்பி வந்தால் ஓடிப்போய் கட்டிக் கொண்டு விடுவான். இதயம் வேகமாக துடிக்கும். அன்றிரவு மறுபடியும் முதலிரவாகிவிடும். முக்கியமாக அவள் டென்ஷன் அதிகமாகி வீட்டுக்கு வந்த அன்று கேட்கவே வேண்டாம். சிருங்காரத்தில் அவளை முழுவதுமாக திருப்திப் படுத்தக்கூடியவன் அவன். ஆனால் இப்பொழுதெல்லாம் ஏன் இப்படி நடக்கிறது?

தன்னுடைய அன்பு பரிபூர்ணமானது இல்லையா?

ஒருக்கால் இல்லையோ? இளமையின் வேகத்தில் ஒருவரை ஒருவர் முழுவதுமாக புரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டார்கள். அந்த வேகம் குறைந்ததும் ஆவேசம் தணிந்து விட்டது. வெறும் செக்ஸ் மட்டும் பாலமாக இருந்து விட்டது.

இரண்டு நிமிடம் பெண் பார்த்துவிட்டு திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கும், தமக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

ரத்தத்தோடு கலந்து போய் விட்ட இந்திய பண்பாடும் கலாச்சாரமும் கணவனை ஆதரிக்க வேண்டும் என்று எவ்வளவுக்கெவ்வளவு சொல்லுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவன் நடவடிக்கை எதிர்க்கச் செய்கிறது.

குளியலை முடித்துக்கொண்டு வெளியே வந்தாள் வைஜெயந்தி. சமையல்காரன் உணவு மேஜைமீது எல்லாவற்றையும் கொண்டு வந்து பரிமாறினான். இருவரும் மௌனமாகச் சாப்பிட்டார்கள்.

''மாற்றல் விஷயம் என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

''வந்துவிட்டது. பதினைந்து நாட்கள் லீவு போட்டுவிட்டு வந்துவிட்டேன். நீ எப்போ வருவாய் என்று தெரியாது. அதனால் லீவை கான்சல் செய்துவிட்டு ட்யூட்டியில் சேர்ந்துவிட்டேன்.''

''ஓ... ஐயாம் சாரி.''

''சாரி எதுக்கு? எனக்கு என் வேலை எவ்வளவு முக்கியமோ உனக்கு உன் வேலை அவ்வளவு முக்கியம்.'' அந்தக் குரலில் பழிப்பு தென்படவில்லை. அவன் முகத்தில் தென்பட்டது.

''அத்தையை அழைத்துக்கொண்டு வரவில்லையா?''

''அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை. அக்காவிடம் விட்டுட்டு வந்தேன்.''

இங்கே வேலையாட்கள் இருக்கிறார்கள். எல்லா வேலைகளையும் அவர்களே செய்து விடுவார்கள். ஆனால் அதை ஒப்புக் கொள்ளத் தயக்கம். எதையுமே வெளிப்படையாக, மனம் விட்டுப் பேசும் பழக்கம் இல்லை அவனுக்கு. 'ஹிப்போகிரடிக் வாழ்க்கை' என்று நினைத்துக் கொண்டாள்.

படுக்கை அறையிலும் அதேபோல்தான். அவனுடைய தொடுகைக்கும், சேட்டைகளுக்கும் உடல் மட்டுமே நெகிழும். அப்படியே பழக்கப்பட்டுவிட்டது. அந்தத் திருப்தியை மனதால் அல்லாமல் உடலால் அனுபவிக்கக் கற்றுக் கொண்டு விட்டாள்.



காரணம் அது ஒரு தேவை என்பதால். பதினைந்து நாட்களாக உடலுக்குத் தரமுடியாமல் போன சுகமும், நான்கு நாட்களாக பட்ட டென்ஷனும் அரைமணிக்குள் தீர்ந்து போய்விட்டன.

எல்லாம் முடிந்து விட்ட பிறகு மறுபடியும் கேள்வி எழுந்தது. எப்படி தன்னால் அந்த சுகத்தை அனுபவிக்க முடிந்தது? அந்த வேகத்தில் தம் இருவருக்கிடையே வற்றிப்போய்விட்ட அன்பைப் பற்றி நினைவுக்கு வரவில்லையே. ஏன்? விரும்பியே அனுபவித்து விட்டுப் பிறகு கற்பழிக்கப்பட்டுவிட்டதுபோல் உணருவானேன்?

உடல் அளவில் சுகத்தை அனுபவிப்பதற்கும், மனதில் இருக்கும் வருத்தத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லையோ? அதனால்தானோ ஒவ்வொரு நிமிடமும் சண்டை போட்டுக் கொண்டே இருக்கும் தம்பதிகள் கூட வரிசையாக குழந்தைகளை பெற்றுத் தள்ளுகிறார்கள்?

''அம்மா கேட்டுக் கொண்டே இருக்கிறாள். இன்னும் எத்தனை நாட்களுக்கு அவளுக்கு வேதனையைத் தருவது?''

சரத் வார்த்தைகளுக்கு இந்த உலகிற்குத் திரும்பினாள்.

''எதைப் பற்றி?''

''ஒன்றுமே தெரியாதது போல் கேட்கிறாயே. எங்க அம்மா அப்பாவுக்கு நான் ஒரே மகன். எனக்குப் பிறகு எங்கள் வம்சம் அஸ்தமித்துப் போய் விடுவதை அவர்களால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்?''

''இப்போதைக்கு முடியாதுன்னு சமீபத்தில்தானே சொன்னேன்?''

''அதான் ஏன் முடியாதுங்கறேன்? இன்னும் தாமதம் எதுக்கு?''

''இன்னும் இரண்டு வருடம் பொறுத்திருப்போம். இப்போ ஒன்றும் குடிமூழ்கிப் போய்விடவில்லை.''

''எனக்குக் குடிமூழ்கிப் போய்விடும் போலிருக்குது. அம்மாவின் உடல்நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. அவளுடைய ஆசையைத் தீர்க்க வேண்டும் என்ற கடமை கூட உனக்கு இல்லையா? உன் வேலையும், உன் எதிர்காலமும் தான் உனக்கு முக்கியமா? ரொம்ப சுயநலக்காரி நீ. குழந்தையைப் பெற்றுக்கொள்வதற்குத் தயங்குகிற பெண்ணை நான் எங்கேயும் பார்த்ததில்லை.''

''ஆமாம் பார்த்ததில்லை. நான் எல்லா பெண்களையும் போன்றவள் இல்லை. அவ்வளவு தூரம் உங்களுக்கு வேணும்னு இருந்தால் நாளைக்கே ஒன்றில்லை இரண்டு குழந்தைகளை தத்து எடுத்துக் கொள்வோம்.''

''அந்த தலையெழுத்து நமக்கு எதுக்கு? ஒரு டஜன் குழந்தைகளை பெற்றுக்கொள்வோம் என்று நீ சொல்லு. எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் யாருக்கோ பிறந்த குழந்தைகளை என் குழந்தைகள் என்று சொல்லிக் கொள்ள வேண்டிய தலையெழுத்து எனக்கு ஒன்றும் இல்லை. அந்தத் தேவையும் இல்லை.''

''தேவை இருக்கு. எனக்குக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் உத்தேசம் இல்லை. நாட்டில் அநாதைக் குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். குறைந்தபட்சம் இரண்டு பேருக்கு தாயாகி ஆதரவு தருகிறேன். நாம் குழந்தையைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் நாட்டிற்கு ஏற்படப்போகிற நஷ்டம் எதுவும் இல்லை. இரு அநாதை குழந்தைகளை வளர்த்த புண்ணியமாவது கிடைக்கும்.''

''அப்படி என்றால் உன் இஷ்டம்தான் உனக்கு முக்கியமா? என்னைப் பற்றி யோசிக்கவே மாட்டாயா? என் இரத்தத்தைப் பகிர்ந்து கொண்டு பிறக்கும் குழந்தைகள் எனக்கு வேணும்னு நான் விரும்புவது தவறா? நான் ஒன்றும் நடக்க முடியாத காரியத்திற்கு ஆசைப்படவில்லையே. கணவனின் விருப்பத்தை



நிறைவேற்ற முடியாத நீயும் ஒரு மனைவிதானா? நீயும் ஒரு பெண்தானா?'' கோபமாக கத்தினான் சரத்.

வைஜெயந்தி கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். கோபத்தில் அவள் முகம் சிவந்திருந்தது.

''என்ன சொல்றீங்க சரத்? உங்கள் இரத்தத்தைப் பகிர்ந்து கொண்டுபிறக்கும் குழந்தைகள் வேணுமா உங்களுக்கு? அவர்கள் மீது உங்களுக்கு அன்பு இருக்குமா? இதுவரையில் உங்கள் இரத்தத்தைப் பகிர்ந்துகொண்டு பிறந்த குழந்தைகள் எத்தனை பேர் இருக்காங்கன்னு உங்களுக்கு ஏதாவது தெரியுமா? ஆமாம். நான் ரொம்ப பிஸியானவள். என் வேலை அப்படிப்பட்டது. உங்களுக்குத் தேவைப்பட்ட பொழுதெல்லாம் கைக்கு எட்டிய தூரத்தில்நான் இருக்கமாட்டேன். உங்களுக்கு தினந்தோறும் செக்ஸ் வேண்டும். அதனால் பணத்தைக் கொடுத்து சுகத்தை விலைக்கு வாங்கிக்கிறீங்க. உங்கள் பார்வையில் அது தவறு இல்லை. உங்கள் தேவை உங்களுக்கு. ஆனால் அதே நேரத்தில் உங்கள் மூலமாக அவர்களில் எந்தப் பெண்ணாவது தாயாகி இருக்கலாம் இல்லையா? அப்படி பிறந்த குழந்தைகள் எத்தனை பேர் தெருவில் பிச்சை எடுத்துக்கிட்டு இருக்காங்களோ, எத்தனை பேர் ஆதரவு இன்றி அநாதை இல்லத்தில் வளர்ந்து வருகிறாங்களோ, உங்களுக்கு ஏதாவது தெரியுமா? சட்டப்படி திருமணம் செய்து கொண்ட மனைவிக்குப் பிறந்த குழந்தைகள்தான் உங்களுக்கு வாரிசு ஆகமுடியுமா? உங்க மூலமாக பிறந்த குழந்தைகள் யாரு யாருன்னு கூடத் தெரியாத நீங்களும் ஒரு தந்தைதானா? என்னோடு வாக்குவாதம் வைத்துக் கொள்ளாதீங்க. என்னுடைய லட்சியம் வேறு. அதை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. உங்கள் வழியில் நான் என்றுமே குறுக்கிட்டதில்லை. நீங்களும் என் வழியில் குறுக்கிடாமல் இருந்தால் நம்ப குடித்தனம் இந்த அளவிலாவது நிலைத்திருக்கும். இல்லை என்றால் இனி நான் சொல்லத் தேவையில்லை. குட் நைட்!''

அவளுக்கு துக்கம் பொங்கி வந்தது. சரத் என்ன வார்த்தை சொல்லி விட்டான்? தன்னிடம் தாயுள்ளம் கிடையாதா? அசல் தாயின் உள்ளம் என்றால் என்னவென்றாவது அவர்களுக்குத் தெரியுமா? கண்ணில்படும் ஒவ்வொரு குழந்தையையும் தன் குழந்தையாய் பாவிப்பது அல்லவா தாயுள்ளம் என்பது?

தன் குழந்தைக்கு அறுசுவை உணவைத் தந்துவிட்டு பசியால் துடிதுடிக்கும் அநாதைக்கு ஒரு பிடி சாப்பாடு கூட போடாத பெண்ணும் ஒரு தாய் ஆகிவிடுவாளா? குழந்தையைப் பெற்றால் தான் ஒரு பெண் தாய் ஆகமுடியுமா? திருமணமே செய்து கொள்ளாமல் குழந்தையைப் பெறாமல் ஆயிரமாயிரம் குழந்தைகளுக்குத் தாய் ஆன மதர்தெரஸா உண்மையான தாய் இல்லையா?

மாமியார்கூட தன் வயிற்றில் பிறந்த குழந்தையை மட்டும் தான் அன்புடன் பார்த்துக் கொள்வாள். அவர்களுக்காக தவிப்பாள். ஆனால் மருமகளை வேற்று மனுஷியைப் போலத்தான் நடத்துவாள். மாமியாரின் கண்ணோட்டத்தில் தான் ஒரு பெண் இல்லை. ஆண்பிள்ளைக்கணக்காக ஊர் சுற்றுபவள்.

அவர்கள் பார்வையில் பெண் என்றால் குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்பவள். அவ்வளவுதானே தவிர அவளுக்குத் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி அபிப்பிராயங்களோ மாற்று கருத்துகளோ இருக்கக்கூடாது. தன் தனித்தன்மையை நிரூபித்துக் கொள்வதற்காக வேறு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடாது. எவ்வளவு படித்திருந்தாலும், வேலை பார்த்து வந்தாலும் கல்யாணம் ஆகும் வரையில்தான். அதற்குப்பிறகு கணவனைவிட அதிகப் படியான திறமைகளை வெளிப்படுத்தக்கூடாது. அப்படியே திறமைகள் இருந்தாலும் அவற்றை உள்ளேயே புதைத்துவிடவேண்டும்.

ஆண் மட்டும் குடும்பத்தை விட்டுவிட்டு தன்னுடைய முன்னேற்றத்திற்காக வீட்டில் தங்காமல் எவ்வளவு சுற்றுகிறானோ



அவ்வளவு உசத்தி. அதே குணம் பெண்களிடம் இருந்தால் சகித்துக் கொள்ளமாட்டான். சமுதாயமும், உறவினர்களும்கூட அவன் கட்சியில்தான் இருப்பார்கள். அதுதான் அவனுக்குத் துணிச்சலைத் தருகிறது.

தலையணையில் தலையைச் சாய்த்ததுமே வந்துவிடும் என்று நினைத்திருந்த உறக்கம் கண்ணுக்கு எட்டாத தொலைவில் ஓடிமறைந்து விட்டது.

அவந்தி! ஏன் இவ்வளவு தொலைவில் இருக்கிறாய்? இந்தச் சமயத்தில் எனக்குத் தேவை உன்னைப்போன்ற சிநேகிதியின் துணைதான்.

ஆவேசத்தையும், துக்கத்தையும் மறப்பதற்கு மனதைக் கடந்த காலத்திற்குச் செலுத்தினாள் வைஜெயந்தி.

## 3

**நா**ன்கு சிநேகிதிகளும் பிரிந்து சென்று விட்டார்கள். விடுமுறை முடிந்து விட்டது. தேர்வின் முடிவுகள் வெளியாயின. வைஜெயந்திக்கு பேப்பரைப் பார்க்கும் தேவைகூட இல்லை. டில்லியில் உள்ள கல்லூரிக்கு பட்டப்படிப்பிற்கு அப்ளை செய்தாள்.

லிஸ்டில் முதல் பெயர் அவளுடையதுதான். கல்லூரிக்கு முதல் முதலாகக் கிளம்பியபோது, தாயும் தந்தையும் சேர்ந்து கேட் அருகில் நின்றபடி கையை அசைத்தார்கள். டிரைவர் கல்லூரி கேட் வாசலில் டிராப் செய்துவிட்டுப் போனான்.

வைஜெயந்தி மிரள மிரள விழித்தபடி கல்லூரிக்குள் அடியெடுத்துவைத்தாள். அவள் உடல் வியர்வையால் நனைந்து விட்டது. எதிரே பெரிய கட்டிடம். போய் வராண்டாவில் நின்று கொண்டாள். கல்லூரி மாணவிகள் பரபரப்போடு பின்னாலிருந்த கட்டிடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். சிலர் சைக்கிளில் வந்து இறங்கினார்கள். பெரும்பாலானவர்கள் நவீன

உடைகளில் இருந்தார்கள். எல்லோருடைய முகத்திலும் உற்சாகம் வெளிப்படையாக தென்பட்டது.

'இன்றுமுதல் நானும் இந்தக் கல்லூரி மாணவி' என்று பெருமையாக உணர்ந்தாள் வைஜெயந்தி. கல்லூரி திறந்து பத்து நாட்கள் ஆனபிறகும் சரியான சமயத்திற்கு அவளுடைய சான்றிதழ்கள் வராததால் தாமதமாகிவிட்டது. அதனால் ராக்கிங்கிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டாள்.

அவந்தி இன்னும் வரவில்லை. புதிய ஊர், புதிய கல்லூரி என்பதால் தனியாகப் போவதற்கு பயந்து கொண்டிருந்தபோது தன்னுடைய நண்பரின் மகள் அதே கல்லூரியில் பி.எஸ்.ஸி படிக்கிறாள் என்றும், வந்து சந்திக்கச் சொல்லியிருப்பதாகவும் தந்தை தெரிவித்தார். ஒன்பதரை மணிக்கெல்லாம் வராண்டாவில் காத்திருக்கும்படியும் சொன்னதாகச் சொன்னார். ஒன்பதே முக்கால் ஆயிற்று. அவந்தி வரவில்லை. இருவருக்கும் அறிமுகம் இல்லாததால் தானே வந்து விசாரிப்பாளாக இருக்கும் என்று எதிர்பார்த்தாள். வராண்டா முழுவதும் தேடினாள். யாருமே இல்லை. வந்தவர்கள் எல்லோரும் வகுப்பிற்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. பத்துமணிக்கு வகுப்பு தொடங்கிவிடும். வகுப்பு அறையைத் தேடிக்கொண்டு போவதற்குள் நேரமாகிவிடும். முதல் நாளே தாமதமாகப் போனால் நன்றாக இருக்காது. வைஜெயந்தியின் இதயம் வேகமாக படபடத்தது. இருந்தாலும் எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கிளம்பினாள். தொலைவில் சயின்ஸ், ஆர்ட்ஸ் கட்டிடங்கள் தென்பட்டன. ஆர்ட்ஸ் என்று எழுதியிருந்த கட்டிடத்தை நோக்கி வேகமாக நடந்தாள். ஜீன்ஸும் ஷர்ட்டும் போட்டுக் கொண்டிருந்த பெண் ஒருத்தி தன்னைத் தாண்டிக் கொண்டு போவதைப் பார்த்து விட்டு துணிந்து கேட்டுவிட்டாள். ''எக்ஸ்க்யூஸ்மீ. ஃபஸ்ட் இயர் கிளாஸெஸ் எங்கே என்று சொல்ல முடியுமா?''



லேசாக சிரித்தாள் அந்தப் பெண். வைஜெயந்தியை விட ஓரிரு வயது பெரியவளாக இருப்பாள் அவள். ஆனால் வயதுக்கு மீறிய ஏதோ ஒன்று தென்பட்டது அவளிடம்.

''காட்டறேன். கம்!'' தமிழும் ஆங்கிலமும் கலந்தபடி பேசினாள்.

''நீங்கள்?'' வியப்புடன் கேட்டாள் வைஜெயந்தி.

''நான்தான் அவந்தி. ரொம்ப நேரமாக உன்னையே கவனித்துக் கொண்டிருந்தேன். தைரியமாக வருவாயா இல்லையா பார்க்கலாம்னு இருந்தேன்.''

வைஜெயந்தி வாயடைத்துப் போய்விட்டாள் ஒரு வினாடி. உடனே தேறிக் கொண்டு சிரித்துவிட்டாள்.

''இது ஒரு ஜோக் என்று நினைத்துச் சிரிக்கிறாயா? சொல்கிறேன். நேற்று எங்க அப்பா சொன்னார் நீ இந்த ஊருக்குப் புதுசு கல்லூரிக்குப் புதுசு, பயப்படுகிறாய் என்று. கொஞ்சம் தைரியம் சொல்லிக் கொடுக்கச் சொன்னார். உண்மையைச் சொல்லணும் என்றால் கோழைகளைக் கண்டாலே எனக்கு எரிச்சல்தான் வரும். என்னதான் புது இடமாக இருந்தாலும் மூன்று வருடங்கள் படிக்க வேண்டிய இடம் இல்லையா. எதுக்காக பயப்படணும் என்று தோன்றியது. நீ வகுப்பில் முதலிடம் என்றும் சொன்னார். சரி, நான் வந்து விசாரிக்காமல் இருந்தால் வகுப்புக்குப் போகாமல் திரும்பிப் போய்விடப் போகிறாயா பார்ப்போம்னு இருந்தேன். அப்பா உன்னை அந்த அளவுக்கு கோழைன்னு சொன்னதால் அப்படிச் செய்தேன். தவறாக நினைத்துக் கொள்ளமாட்டாயே?''

''இதில் தவறாக நினைக்க என்ன இருக்கு? நீங்க நல்ல காரியம் தான் செய்தீங்க. கோழையாக இருப்பது நல்ல லட்சணம் இல்லையே?''

''எக்ஸாக்ட்லீ! நானும் அதையே தான் சொல்கிறேன். ஒரு முறை யோசித்துப் பாரு. புதிய கல்லூரிக்கு வந்தால் யாருக்கு நீ பயப்படணும்? லெக்சரர்களுக்கோ பிரின்ஸிபாலுக்கோ இல்லை,

சக மாணவிகளுக்கு! ஏதாவது ராக்கிங் பண்ணுவார்களோ என்று பயப்படணும். அதையும் வேடிக்கையாக எடுத்துக் கொண்டு விடலாம். மறுநாளே அவர்கள் சிநேகிதிகளாகி விடப்போகிறார்கள். நான் உன்னைக் குத்திக் காட்டணும்னு இப்படிச் சொல்லவில்லை. அறிமுகமான முதல்நாளே இப்படிப் பேசுகிறேனே என்று நினைக்காதே. யோசித்துப் பாரு, நான் சொன்னதில் தவறு ஏதாவது இருக்கா என்று. அதோ! வலது பக்கத்தில் இருப்பதுதான் உன் வகுப்பு. இனி நான் போய் வருகிறேன். ஒரு மணிக்கு லஞ்ச் டயம். அப்பொழுது வருகிறேன். கேண்டீனுக்குப் போய் சாப்பிடுவோம்.''

''சரி, நான் இதே இடத்தில் காத்துக் கொண்டு இருப்பேன்.''

அவந்தி சிரித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள். புதுமாணவியைப் பார்த்ததும் நான்கு பெண்கள் அருகில் வந்தார்கள். தனியாக அகப்பட்டுக் கொண்டதைப் பார்த்துவிட்டு ராக்கிங் செய்வார்களோ என்று பயந்தாள் வைஜெயந்தி.

''என் பெயர் சீதல். சீதல்குப்தா. கிளாஸ் லீடர்.'' அறிமுகம் செய்து கொண்டாள் ஒரு பெண்.

''என் பெயர் வைஜெயந்தி. சென்னையிலிருந்து வருகிறேன்'' பதிலளித்தாள் வைஜெயந்தி.

தன்னோடு அழைத்துக் கொண்டு போனாள் சீதல். வகுப்பில் அறுபது மாணவிகள் இருந்தார்கள். மிகப்பெரிய வகுப்பு அறை. அந்தக் கல்லூரியில் ராக்கிங் போன்ற எதுவுமே நடைபெறாதென்றும், மாணவிகள் மிகவும் ஒழுங்குக் கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்றும் அப்பொழுதுதான் புரிந்தது. அதனால்தான் அவந்தி அப்படிச் சொல்லியிருக்கிறாள்.

லெக்சரர்களும் பாடங்களை நன்றாகச் சொல்லித் தந்தார்கள். இரண்டாவது பீரியட் முடிந்ததும் பத்து நிமிடங்கள் ரீசெஸ் தந்தார்கள். வைஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தாள். அவந்தி வெளிப்படையாக பேசும் பெண் போல் தோன்றினாள். அவள்



சொன்னதெல்லாம் சரியானதுதான் என்று அவளுக்கும் தெரியும். எதற்காக அவளுக்கு இத்தனை பயம்? அவந்தி இந்தக் கல்லூரியில் இல்லாமல் போனால் என்ன செய்திருப்பாள்? அம்மா அப்பாவை துணைக்கு அழைத்துக்கொண்டு கல்லூரிக்கு வந்திருக்கப் போகிறாளா என்ன? அவ்வளவு தூரம் ஏன் யோசிக்காமல் போய் விட்டாள்?

இல்லை. தான் இனி மாற வேண்டும். அவந்தி போன்றவர்களிடமிருந்து தான் இன்னும் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியது இருக்கிறது. லஞ்ச் நேரத்தில் அவந்தி வரவில்லை என்றால் கேண்டீன் இருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு தானே போக வேண்டும். அவந்தியின் முன்னால் அவள் ஒரு கோழையாக காட்சி தரக்கூடாது.

லஞ்ச் பெல் அடித்த இரண்டு நிமிடத்திற்கெல்லாம் வந்து விட்டாள் அவந்தி. அதற்குள் ஓரிருவர் லஞ்சுக்கு அழைத்தார்கள். தன் சிநேகிதி வரப்போவதாக அவர்களிடம் சொல்லிவிட்டாள்.

''இங்கே எல்லாம் செல்ஃப் சர்வீஸ்தான். சொல்லு. என்ன சாப்பிடலாம்? ஊத்தப்பம், இட்லியும் கிடைக்கும். வெஜிடபிள் பிரியாணி, சோளே பட்டூராவும் கிடைக்கும்.''

''இரண்டு பேருமே சோளே பட்டூரா சாப்பிடுவோம்'' என்றாள் வைஜெயந்தி.

''குட்! அப்படித்தான் இருக்கணும் வா.''

இருவரும் டோக்கன்களை வாங்கிக்கொண்டு டிபன் தட்டுகளுடன் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள்.

''இப்போ சொல்லு. உன் ஹாபீஸ் என்னென்ன?'' அவந்தி கேட்டாள்.

''ஹாபி என்று ஸ்பெஷலாக எதுவும் இல்லை. எப்பொழுதாவது புத்தகம் படிப்பேன். தமிழ், இங்கிலீஷ் நாவல்கள். அவ்வளவுதான்.''

''அப்படி என்றால் உனக்கு எப்படி பொழுது போகும்?'' வியப்புடன் கேட்டாள் அவந்தி.

''கொஞ்சநேரம் ரேடியோ கேட்பேன். பாடப்புத்தகங்களைப் படிக்க வேண்டாமா? அதிகநேரம் படிப்பேன். எப்பொழுதாவது சினிமா பார்ப்பேன்.''

''அப்பா சொன்னார் நீ ரொம்ப கெட்டிக்காரி என்று. ப்ளஸ்டுவில் உங்க கல்லூரியில் முதல் இடம் வந்தாயாம். அப்படி என்றால் உனக்கு அறிவுக் கூர்மை அதிகம்னு அர்த்தம். அப்படி இருக்கும்போது தினந்தோறும் இரண்டு மணிநேரம் பாடப்புத்த கங்களைப் படித்தால் போறாதா?''

''உண்மைதான். ஆனால் செய்வதற்கு வேறு வேலை எதுவும் இல்லாததால் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டே இருப்பேன். இன்னொரு விஷயம். வகுப்பில் முதலிடம் கிடைக்காவிட்டால் எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கும். மனதில் எப்போதும் அதைப் பற்றிய பயம் இருந்துகொண்டே இருக்கும்.''

''அது ஒரு அப்செஷன். இதோ பாரு வைஜெயந்தி! அன்றாடம் நடக்கும் பாடங்களை அன்றே படித்துவிடும் போது, இரண்டு மணி நேரம் படிப்பிற்காக ஒதுக்கினால் போதுமானது. மீதி நேரத்தை அறிவை வளர்த்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளலாம் இல்லையா.''

''உண்மைதான். ஆனால் கதைகளை, நாவல்களை படிப்பது டைம்வேஸ்ட் என்று தோன்றுகிறது.''

''நல்ல புத்தகம் என்பது நல்ல சிநேகிதனைப் போன்றது. ஃபிக்ஷனோ, நான் ஃபிக்ஷனோ எந்தப் புத்தகமாக இருந்தாலும் சரி. படித்த பிறகு உன்னுள் ஒரு யோசனையைத் தோற்றுவிக்கச் செய்தது என்றால் அது ஒரு நல்ல புத்தகம். பாரதியாரிலிருந்து விவேகாநந்தரின் உபதேசங்கள் வரையில், காந்தி, நேரு, லிங்கன் போன்றவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படித்தால் நமக்குள்



ஒரு எழுச்சியைத் தோற்றுவிக்கும். சரத்சந்திரர், டால்ஸ்டாய் எழுதிய கதைகளைப் படித்துப் பாரு. வாழ்க்கை என்றால் என்ன வென்று புரியும். எல்லோருடைய கொள்கைகளும் நமக்குப் பிடித்திருக்கணும் என்று எதுவும் இல்லை. நம்மிடையே ஏதாவது ஒரு மாற்றம் வரணும். அப்பொழுதுதான் ஒவ்வொரு விஷயத்தை யும் பிரித்துப் பார்க்கக்கூடிய பக்குவம் ஏற்படும்.''

''இருக்கலாம். நான் என்றுமே முயற்சி செய்ததில்லை.'' ஒப்புக் கொண்டாள் வைஜெயந்தி.

''நான் ஏதோ சொற்பொழிவு ஆற்றுவதாக நினைத்து விடாதே. வகுப்பில் முதலிடம் பெறுவது ஒன்றுதான் நாம் சாதிக்கக்கூடிய லட்சியமாக ஆகிவிடக்கூடாது. அப்பொழுது நம் அறிவு பாடப் புத்தகங்களோடு நின்று விடும். நாம் இந்த வயதிலிருந்தே முக்கி யத்துவம் தரவேண்டிய விஷயங்கள் இரண்டு இருக்கு. ஒன்று உடற்பயிற்சி, இரண்டாவது மனப்பயிற்சி. எல்லா விதமான நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும்போதுதான் நம்மால் உண்மையான முன்னேற்றத்தைச் சாதிக்க முடியும். எப்பொழுதாவது என்.சி.சி.யில் சேர்ந்திருக்கிறாயா?''

''பள்ளியில் இருக்கும்போது கொஞ்சநாள் இருந்தேன். ஆனால் கேம்புகளுக்குப் போகணும்னால் பயமாக இருந்தது. அம்மாவும் அனுப்பமாட்டாள். அதுதான் விட்டுவிட்டேன்.''

''உனக்குப் பிடித்திருந்தால் மறுபடியும் சேரு. நான் அழைத்துக்கொண்டு போகிறேன். தினமும் காலையில் உடற் பயிற்சி செய்வது ரொம்ப முக்கியம்.''

''உண்மைதான் அவந்தி! இத்தனை நாளாக நான் இந்த மாதிரி யோசித்ததே இல்லை. இப்பொழுதுதான் தெரிகிறது. நான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்குன்னு. இத்தனை நாளாக நேரத்தை வீணாக்கி விட்டேன். புத்தகங்களைப் படிப்பதை இன்றிலிருந்தே தொடங்குகிறேன்.''

''இன்னொரு விஷயம் சொல்லட்டுமா? நடந்து போனதைப் பற்றி சும்மா வருத்தப்படாதே. காலையில் எத்தனை மணிக்கு எழுந்து கொள்வாய்?''

''இரவு பத்தரை பதினோரு மணி ஆகிவிடும் படுத்துக் கொள்வதற்கு. காலையில் ஆறுமணிக்கு எழுந்து கொள்வேன்.''

''காலை ஐந்தரை மணிக்கே எழுந்து கொள்ள பழக்கப் படுத்திக் கொள். ஒரு மணி நேரம் ஜாகிங் செய். ஒரு மணி நேரம் படிப்பிற்காக ஒதுக்கு. மாலையில் ஏதாவது விளையாட்டில் ஈடுபடு. உன் உடலுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய எந்த விளை யாட்டாக இருந்தாலும் சரி.''

''எனக்கு டேபிள் டென்னிஸ் பிடிக்கும். அப்பாவிடம் கேட் கிறேன். அருகில் ஏதாவது கிளப் இருக்கா என்று விசாரிக்கச் சொல்கிறேன்.''

''இதுதான் வேண்டாம் என்கிறேன். ஒவ்வொரு விஷயத்திற் கும் பெற்றோர் மீதோ, வேறு யார் மீதோ ஆதாரப்படாதே. அம்மா அப்பாவுக்கு நேரம் கிடைக்கவில்லை என்றால் உன் நிகழ்ச்சிகளை எல்லாம் விட்டுவிட மாட்டாய் இல்லையா. முதல் அறிமுகத்தி லேயே இப்படிப் பேசுகிறேன் என்று ஆச்சரியமாக இருக்கா? இரண்டு காரணங்கள் இருக்கு. ஒன்று நாளைக்கு இவ்வளவு நேரம் உன்னோடு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். இரண்டாவது, நேரத்தை வீணாக்குவது எனக்குப் பிடிக்காத விஷயம். சும்மா வம்பு பேசிக் கொண்டு பொழுதை போக்குவதில் எனக்கு விருப்பம் இல்லை. என் அபிப்பிரா யத்தை இன்றைக்கே உன்னிடம் சொல்லிவிட்டேன். உனக்குப் பிடித்திருந்தால் நம் நட்பு வளரட்டும். இல்லை என்றால் எல்லோரையும் போல் ஹலோ என்றால் ஹலோ என்று பரஸ் பரம் குசலம் விசாரித்துக் கொள்வதோடு நின்றுவிடும்.''

அவளுடைய வெளிப்படையான பேச்சைக் கேட்டு வைஜெயந்தி சிரித்தாள். ''நீ சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. நம்முடைய நட்பு நன்றாக வளரும் என்று நம்புகிறேன்.''



அவர்கள் தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது மணி அடித்தது. இருவரும் வெளியே வந்தார்கள்.

''சரி இனி எனக்கு கிளாஸ் இல்லை. வீட்டுக்குப் போகிறேன். அப்புறமாக சந்தித்துக் கொள்வோம்.'' அவந்தி சொன்னாள்.

''அப்படியே ஆகட்டும். என்னுடைய வகுப்புதான் இப்போ தெரியுமே. போய்க்கொள்கிறேன். விரைவிலேயே சந்திப்போம்.''

அவந்தி நாலு அடி எடுத்து வைத்தாள் கேட்டை நோக்கி.

''அவந்தீ!'' அழைத்தாள் வைஜெயந்தி.

''என்ன?'' அவந்தி திரும்பிப் பார்த்தாள்.

''உன்னைச் சந்தித்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு. ஐயாம் ரியலி ஹாப்பி.''

அவந்தி சிரித்துக்கொண்டே அவளுடைய கையை நட்புடன் அழுத்திவிட்டு நகர்ந்தாள்.

அன்று மாலையில் வீட்டுக்குப் போகும்போது வழியில் டைரி ஒன்றை வாங்கிக் கொண்டு போனாள் வைஜெயந்தி.

''வாழ்க்கையில் படிப்பு, வேலை, திருமணம் போன்றவை மட்டுமே மிக முக்கியமான திருப்பங்கள் என்று இத்தனை நாளும் நினைத்திருந்தேன். ஆனால் ஒரு நல்ல சிநேகிதியின் அறி முகம்கூட வாழ்க்கை முறையையே மாற்றிவிட வல்லது என்று தெரிந்து கொண்டேன். யோசித்துப் பார்க்கும்போது இவ்வளவு நாளாக வாழ்க்கையை வியர்த்தமாகக் கழித்து விட்டேனே என்று கவலை ஏற்படுகிறது. சென்னை வாழ்க்கை ரொம்ப சாதாரண மாகக் கழிந்துவிட்டது. டில்லி வாழ்க்கை ஒரு சவாலாக இருக்கும் என்று தோன்றுகிறது.

நான் என்ன செய்ய வேண்டும்? நான் என்னவாக வேண்டும் என்று விரும்புகிறேன்? இது போன்ற கேள்விகள் என்னுள்

முளைவிடுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு உறுதியான பதில் தரக்கூடிய நிலையை விரைவிலேயே அடைய வேண்டும்.''

முதல்நாளே டைரியில் எழுதிக் கொண்டாள். அதே விஷயத்தை சிநேகிதிகளுக்கும் கையோடு கடிதம் எழுதிவிட்டாள்.

அனுராதாவிடமிருந்து உடனே பதில் வந்துவிட்டது. அவளுக்கு அவந்தி போன்ற சிநேகிதி கிடைத்ததற்கு சந்தோஷமாக இருக்கிறது என்றும், அந்த நட்பைக் காப்பாற்றிக் கொள் என்றும் எழுதினாள். பார்கவி மதுரையில் படித்துக் கொண்டிருக்கிறாள் என்றும் எழுதினாள். விசாலிதான் பதிலே போடவில்லை. நான்கு வழிகளில் ஒரு தொடர்பு அறுந்து போய்விட்டது அப்பொழுதே.

அவந்தியை ஒரு வாரமாக சந்திக்கவில்லை. தான் சாதிக்க வேண்டியவைகளை எல்லாம் சாதித்த பிறகுதான் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். பணத்திற்குக் குறைச்சல் இல்லை. அவள் பெயரிலேயே வங்கியில் அகௌண்ட் இருந்தது. ஒரு வாரம் போவதற்குள் தன் அறையில் லைப்ரரி ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டாள். முதலில் என்ன படிக்க வேண்டும் என்ற கேள்வி எழும்பியது. சின்னச் சின்ன கதைகள் மற்றும் நாவல்களுடன் தன்னுடைய வாசிப்பைத் தொடங்கினால் சரியாக இருக்கும் என்று தோன்றியது. முதலில் தாகூர் நாவலை எடுத்துக் கொண்டாள். அவள் படித்த முதல் நாவல் ''கோரா.''

பார்ஸி குடும்பத்தில் பிறந்து அந்த விஷயம் தெரியாமல் பிராமணக் குடும்பத்தில் வளர்ந்து ஆசார விவகாரங்களை கடுமையாகப் பின்பற்றும் ஒருவன், கடைசியில் தன் பிறப்பைப் பற்றித் தெரியும்போது எவ்வளவு மனப்போராட்டத்தை அனுபவிப்பானோ விவரித்திருந்தார் தாகூர். அந்த நாவல் அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

பிறவியால் ஒருவனின் ஜாதியை நிர்ணயிக்க முடியாது. அவன் வளர்ந்த சூழ்நிலை, சுயமுன்னேற்றம் இவைதான் ஒரு



நபரின் ஜாதியை முடிவு செய்யும்'' என்று டைரியில் எழுதிக் கொண்டாள்.

அவள் படித்த இரண்டாவது நாவல் 'சதுரங்கா.' அதுவும் தாகூருடையதுதான். அந்த நாவல் அவளிடம் வேறு விதமான யோசனைகளை உண்டாக்கியது.

தன்னுடைய வகுப்பைத் தேடிக்கொண்டு வந்த வைஜெயந்தியை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் அவந்தி.

''மதியம் சேர்ந்து லஞ்ச் சாப்பிடுவோம். காண்டீனுக்கு வருகிறாயா?'' வைஜெயந்தி கேட்டாள்.

''கண்டிப்பாக. என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லை. நான் படித்த ஒரு நாவலைப் பற்றி உன்னுடன் டிஸ்கஸ் செய்யலாம்னுதான்.''

''ரொம்ப சந்தோஷம். இவ்வளவு குறுகிய காலத்திலேயே நீ புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்ததும், அதைப் பற்றி விவாதம் செய்ய நினைப்பதும் ரொம்ப சந்தோஷப்பட வேண்டிய விஷயம். இந்த சுபவேளையில் நான் பார்ட்டீ தருகிறேன்.'' முறுவலுடன் சொன்னாள் அவந்தி.

''என்னிடம் ஏற்பட்ட இந்த மாறுதலுக்குக் காரணம் நீதான். உனக்குத்தான் நான் பார்ட்டீ தரணும். மறுக்காதே.'' ஏனோ தெரியவில்லை. வைஜெயந்தியின் கண்களில் ஈரம் பளபளத்தது. சில சமயம் சின்னச்சின்ன காரணங்கள் கூட மனதை உத்வேகப்படுத்திவிடும்.

''சரி போகட்டும். இருவருமாக சேர்ந்து பார்ட்டீ கொடுத்துக் கொள்வோம். கேண்டீனில் சந்திக்கிறேன்.''

வைஜெயந்தி தன்னுடைய வகுப்பிற்குத் திரும்பி வந்தாள். அவந்தியிடம் எத்தனையோ விஷயங்களைப் பற்றி சொல்ல நினைத்தாள். தான் ஜாக்கிங் டிரஸ் வாங்கிக் கொண்டு காலையில்

காலனி தோட்டத்தில் ஓடத் தொடங்கியதைப் பார்த்துத் தாய் தந்தையர் எவ்வளவு ஆச்சரியப்பட்டுப் போனார்கள் என்று சொல்ல நினைத்தாள். டேபிள் டென்னிஸ் எந்தக் கிளப்பில் இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக இரண்டு நாள் தான் அலைந்த அலைச்சலைப் பற்றிச் சொல்ல நினைத்தாள். தான் எழுதிக் கொண்டிருக்கும் டைரியைக் காட்ட நினைத்தாள். ஆனால் சிறுபிள்ளைத்தனமாக இருக்குமோ என்று சும்மா இருந்துவிட்டாள்.

வகுப்பில் கூட அவளுக்கு நல்ல பெயர் கிடைத்தது. அவள் ரொம்ப புத்திசாலி என்றும் வகுப்பில் முதல் ரேங்கைத் தட்டிக் கொண்டு போய்விடக் கூடியவள் என்றும் எல்லோருக்கும் புரிந்து விட்டது.

அன்று வகுப்பில் ஒரு பீரியடை டிபேட்டுக்காக ஒதுக்கினார்கள். அந்த டிபேட் வைஜெயந்தி கல்லூரியில் சேருவதற்கு முன்பாகவே நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அதனால் அவளுக்கு அந்த விஷயம் தெரியாது. கொடுத்த தலைப்பு ''மனிதனின் முன்னேற்றத்திற்கு விண்வெளி பரிசோதனைகள் அவசியமா அவசியமில்லையா'' என்பது. பெயர் கொடுத்திருந்தவர்கள் நன்றாகத் தயார் செய்து கொண்டு வந்தார்கள்.

உலகம் முழுவதும் ஏழ்மை தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் அமெரிக்கா ரஷ்யா போன்ற பணக்கார நாடுகள் விண்வெளிப் பயணம் என்றும் பரிசோதனைகள் என்றும் கோடிக் கணக்கில் செலவு செய்வது நியாயமில்லை என்றும், அவர்கள் மனித நேயத்தோடு யோசித்துப் பார்த்துவிட்டு வசதிகள் இல்லாதவர்களுக்கு உதவும் காரியங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்றும், அவ்வளவு செலவு செய்தாலும் பலன் என்ன கிடைக்கும் என்று கூடச் சொல்ல முடியாது என்றும் சிலர் வாதாடினார்கள்.

வேறு சிலர் மனிதனின் முன்னேற்றத்திற்குப் பெருமை சேர்க்கும் விண்வெளி பரிசோதனைகள் ரொம்ப முக்கியம் என்றும்,



மனிதனின் மேதாவித்தனத்திற்கு அது பெரிய சவால் என்றும் வாதம் புரிந்தார்கள். வகுப்பு முடிய இன்னும் கொஞ்சம் நேரம் இருந்ததால் யாரோ வைஜெயந்தியின் பெயரைக் குறிப்பிட்டார்கள்.

ஒரு நிமிடம் பதட்டமடைந்துவிட்டாள் வைஜெயந்தி. கால்கள் நடுங்கின. தனக்கு முதலில் தெரியாது என்றும் அதனால் தயார்செய்து கொண்டு வரவில்லை என்றும் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் லெக்சரர் விடவில்லை. கொஞ்ச நேரமாவது பேசச் சொல்லி வற்புறுத்தினார்கள். வைஜெயந்திக்கு முன்னே பின்னே மேடையில் பேசிப் பழக்கம் இல்லை. எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுந்து போனாள்.

அப்பொழுதுதான் அவள் மனக்கதவு கொஞ்சம் கொஞ்சமாக திறந்து கொள்ளத் தொடங்கியது. எண்ணங்கள் மெதுவாக இறக்கைக் கட்டிக் கொண்டு பறக்கத் தொடங்கின. பேச்சைத் தொடங்கினாள்.

''ஆறுமாத பச்சைக் குழந்தையை நிலா வெளிச்சத்தில் படுக்க வைத்தால் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு அந்த நிலாவையும் நட்சத்திரங்களையும் பிடிக்க வேண்டுமென்று முயற்சி செய்யும். வளர்ந்த பிறகு விண்வெளியைப் பற்றி படிக்கத் தொடங்கியபோது சிறுவயதில் தான் கேட்ட பாட்டிக் கதைகள் எல்லாமே கட்டுக்கதைகள் என்று தெரிந்து போய்விடும். உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளும் வேட்கை ஆரம்ப மாகும்.''

வகுப்பில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம். அவளுடைய தைரியம் அதிகரித்தது.

''ஆதி காலத்திலிருந்தே மனிதனிடம் சோதித்துப் பார்க்கும் கண்ணோட்டம் இருந்து வந்தது. அதனால்தான் இன்று நாம் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். இல்லாவிட்டால் எந்த

காடுகளிலேயோ இலைதழைகளை உடலில் சுற்றிக் கொண்டு காலத்தைக் கழித்துக் கொண்டிருப்போம்.

''நம் முன்னோர்களுக்குக் கூட விண்வெளியை பரிசோதிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்ததாக ஆர்யபட்டா, பாஸ்கரம் போன்ற விஞ்ஞானிகள் மூலமாக தெரிந்து கொள்ள முடியும். விண்வெளியை வெற்றி கொள்வது வெறும் சந்தோஷத்திற்காக மட்டுமே அல்ல. அது ஒரு சவால். அதனால்தான் சில வருடங்களுக்கு முன்னால் யூரி ககாரின் நம் நாட்டுக்கு வந்தபோது மக்கள் பெரிய அளவில் வரவேற்பை அளித்தார்கள். மனிதனின் இந்த நிரந்தர ஆராய்ச்சியால்தான் இன்றைக்கு ஒருவரைப் பற்றி மற்றவர் தெரிந்துகொள்ள முடிந்தது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்து இருக்காவிட்டால் என்னவாகியிருக்கும்? வாஸ்கோடா காமா இந்தியாவுக்கு வராமல் இருந்தால் என்னவாகியிருக்கும்? இந்தப் பரந்த விண்வெளியில் நம் பூமி ஒரு சின்ன பகுதிதான் என்று தெரிந்துகொண்டோம். இனி மற்ற கிரகங்களையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது.

''இன்னொரு விஷயம். அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகள் கோடிக்கணக்கான பணத்தை விண்வெளி ஆராய்ச்சிக்காக செலவு செய்யாமல் நம் போன்ற ஏழை நாடுகளுக்கு உதவி செய்தால் நன்றாக இருக்கும் என்று சிலர் சுட்டிக் காட்டினார்கள்.

''ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். பதில் சொல்லுங்கள். நாம் எல்லோரும் பொருளாதார ரீதியில் நல்ல நிலையில்தான் இருக்கிறோம். குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைகளுக்கு, முன்பின் தெரியாதவர்களுக்கு நாமே போய் என்றாவது உதவி செய்திருக்கிறோமா? வாசலில் வந்த பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி அரிசி போட்டுவிட்டு கடமை தீர்ந்துவிட்டதாக சந்தோஷப்பட்டுக் கொள்வோம். நாம் சினிமாவுக்காகச் செலவழிக்கும் பணத்தில் ஒரு ஏழைக் குடும்பத்திற்கு ஒருவேளை உணவை



தாராளமாக கொடுக்க முடியும். ஆனால் சினிமாவைப் பார்ப்பதை விட்டுவிட்டு யாருக்காவது உதவமுடிகிறதா நம்மால்?

''நம் நாட்டில் பணக்காரர்கள் எல்லோரும் தம் தேவைக்கு வேண்டிய பணத்தை மட்டுமே வைத்துக் கொண்டு மீதியை இல்லாதவர்களுக்கு தானம் செய்தாலே மற்ற நாடுகளின் உதவி இல்லாமலேயே பாதி ஏழ்மையை குறைத்து விட முடியும். அடுத்தவருக்கு அறிவுரை சொல்வது சுலபம். நடைமுறையில் செயல்படுத்துவது கஷ்டம். நம்மால் செய்ய முடியாததை இன்னொருவர் செய்யவில்லை என்று விமரிசிப்பது பண்பு இல்லை.

''விண்வெளி பரிசோதனை மனிதனின் மேதாவிதனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு! ஒரு சவால்! அதை எதிர்த்து நிற்கக் கூடிய தைரியமோ, அவகாசமோ நமக்கு இல்லை. அவை யாரிடம் இருந்தாலும் அவர்களை உற்சாகப்படுத்துவது நம் குறைந்தபட்ச கடமை. இதுதான் என்னுடைய அபிப்பிராயம்'' என்று முடித்தாள் வைஜெயந்தி.

வகுப்பு அறைமுழுவதும் கைத்தட்டல்களால் எதிரொலித்தது. வைஜெயந்தி தன் சீட்டிற்கு வந்து அமர்ந்து கொண்டாள். அவள் முகமே வெற்றியைச் சாதித்த பெருமிதத்தால் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

நாலுபேருக்கு முன்னால் நின்று பேசுவதற்குக்கூட அவளுக்குப் பயம். வகுப்பில் டீச்சர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடத் தயங்குவாள். முன்பெல்லாம் பார்கவி அவளை எப்போதும் 'டிமிட் ஜீனியஸ்' என்று டீஸ் செய்து கொண்டே இருப்பாள். அப்படிப்பட்ட அவளா, இவ்வளவு தைரியமாக முன்கூட்டி தயார் செய்து கொள்ளாமலேயே கருத்தரங்கில் பேசினாள்? இடையிடையே பாயிண்டுகளை வரிசைப்படுத்தி கோர்வையாக சொல்ல முடியவில்லை. ஆனாலும் தடுமாறாமல் சொல்லி முடித்துவிட்டாள். இந்தத் தைரியம் எப்படி வந்தது? அவந்தியின் நட்புதான் காரணமா?

''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்றாள் அவந்தி. ''இப்பொழுது தான் உன் கிளாஸ்மேட் வனஜா தென்பட்டாள். வகுப்பில் நடந்த டிபேட்டில் நீ பேசியதைப் பற்றிச் சொன்னாள்.''

''அவந்தி! சரியாக பிரிபேர் கூட செய்யவில்லை. என்ன பேசினேன், எப்படிப் பேசினேன் என்றே தெரியவில்லை. முன்பே தெரிந்திருந்தால், புள்ளி விவரங்களை எல்லாம் சரிபார்த்து இருப்பேன் இல்லையா?''

''பிரிபேர் செய்யாமல் பேசியதால்தான் எல்லோரும் உன்னை பாராட்டுகிறார்கள். வைஜெயந்தி! வெற்றி தரும் சந்தோஷம் வேறு எந்த விஷயத்திலும் கிடைக்காது. இவ்வளவு நாளாக உன்னை நீயே கோழை என்று நினைத்துக் கொண்டு இருந்தாய். உன்னிடம் இருக்கும் தைரியத்தைப் பற்றி உனக்கே தெரியவில்லை. இன்றைக்கு வாய்ப்பு கிடைத்ததும் உன்னிடமுள்ள அந்த சக்தி வெளிப்பட்டு விட்டது. உனக்குள் மறைந்திருக்கும் திறமைகளை நீ தெரிந்து கொள்ள வேண்டும். உன்னை நீ அறிந்து கொள்வது என்றால் அதுதான்'' என்றாள் அவந்தி.

தன்னைத்தான் அறிந்து கொள்வது அந்த வினாடியிலிருந்தே வைஜெயந்தியிடம் தொடங்கிவிட்டது.

## 4

**அ**ன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. காலையில் உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு காபி குடிப்பதற்காக டைனிங் ஹாலுக்கு வந்தாள் வைஜெயந்தி. அதற்குள் சாரதி தேநீர் குடித்துக் கொண்டே பேப்பரை படித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு மருத்துவர்.

''குட்மார்னிங் டாடீ.'' சோபாவில் அமர்ந்து கொண்டே விஷ் செய்தாள்.

''குட்மார்னிங் பேபி! கல்லூரி வாழ்க்கை எப்படி இருக்கு? இங்கே சென்னையைப் போல் இருக்காது. போட்டி அதிகம். நன்றாகப் படிக்கணும். முதல் ரேங்கைக் காப்பாற்றிக் கொள்ளணும்.''

''கட்டாயம் டாடீ. என்னுடைய ரேங்க் எங்கேயும் போகாது. கல்லூரி மட்டும் ரொம்ப நன்றாக இருக்கு. லெக்சரர்கள் கூட ரொம்ப நன்றாகச் சொல்லித் தருகிறார்கள்.''

''குட்! அப்படி என்றால் ஹெல்தி காம்பிடீஷன் இருக்கும்னு சொல்லு. எல்லோருமே நன்றாகப் படிக்கிறவர்களாகத்தான் இருப்பார்கள். நீ இன்னும் கஷ்டப்பட்டு படிக்கணும். இப்பொழுதெல்லாம் விளையாட்டு என்றும் உடற்பயிற்சி என்றும் நேரத்தை வீணாக்குகிறாய் போலிருக்கே.''

அப்பொழுதுதான் உள்ளே வந்த தாய் காபி டம்ளரை வைஜெயந்தியிடம் தந்துவிட்டு, ''அழகாகத்தான் இருக்கு. அதெல்லாம் வீண் என்றா சொல்றீங்க? அவளை மற்ற நிகழ்ச்சிகளில் கூட பங்கெடுத்துக் கொள்ளச் சொல்லணும் என்று நினைத்தேன். இதுபோல் பேசி அவளை டிஸ்கரேஜ் செய்யாதீங்க. நீங்களே ஒரு டாக்டராக இருந்துகொண்டு இப்படியெல்லாம் சொல்லக்கூடாது'' என்றாள்.

சாரதி சிரித்தார். ''நான் ஒரு டாக்டர் மட்டுமே இல்ல. தந்தையும் வட. ஜாக்கிங் என்று அவள் இருட்டில் ஓடுவதைப் பார்த்தால் உனக்குப் பயம் இல்லையா? ஏற்கனவே புது இடம் வேறு.''

''எனக்கு எந்த பயமும் இல்லை. இவ்வளவு நாளாக அவள் இன்னும் சின்னப் பெண்தான் என்றும், நம் பாதுகாப்பு அவளுக்கு சதாசர்வகாலமும் தேவை என்றும் நினைத்து தப்புக் கணக்குப் போட்டுவிட்டோம். இன்னிக்கு அவளே சுயமாக தைரியத்தை பெற்றுவிட்டாள். அதுதான் எனக்குச் சந்தோஷமாக இருக்கு.''

''இப்படிச் சண்டை போடுகிறாயே. நான் என்ன சொல்லி விட்டேன்? பெண் பிள்ளை, புது இடம். அதனால் கவனமாக இருக்கணும்னு சொன்னேன். அவ்வளவுதான்.''

''பெண்பிள்ளை என்றும், ஒரே மகள் என்றும் முத லிலிருந்தே நாம் அவளுக்குக் கோழைத்தனத்தையே புகட்டி வந் தோம். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, தம்மை உருவாக்கிக் கொள்வதற்காக கஷ்டப்படணும். அதற்குத் தேவையான தைரியத்தை, ஊக்கத்தை நாம் அவர்களுக்குத் தர வேண்டும். நேற்று அவளுடைய லெக்சரர் ஒருத்தி சிகிச்சைக்காக என்னிடம் வந்தாள். பேச்சுவாக்கில் வைஜெயந்தி என்னுடைய மகள் என்று தெரிந்தது. வைஜு பற்றி கல்லூரியில் ரொம்பப் பெருமையாக பேசிக் கொள்கிறார்களாம். எது நல்லது எது கெட்டது என்று சுயமாக முடிவு செய்யக்கூடிய நிலைக்கு உயர்ந்து விட்டாள் என்று அப்பொழுதே நினைத்துக் கொண்டேன். வைஜு! ஸெமினாரில் நன்றாகப் பேசினாயாமே. கீப் இட் அப்.''

''சரி மம்மி.''

''பேச்சில் ஈடுபட்டு சொல்ல வேண்டிய விஷயத்தை மறந்து விட்டேன். என் பிரண்ட் கேசவன் இன்னிக்கு நம்மை டின்னருக்கு அழைத்திருக்கிறான். வர முடிந்தால் போன் செய் கிறேன் என்று சொன்னேன். உங்க இருவருக்கும் மாலையில் வேறு வேலை ஏதாவது இருக்கிறதா?'' சாரதி கேட்டார்.

''ரொம்ப டைம் வேஸ்ட் ஆகிவிடும் டாடீ. எனக்குப் படிக்க வேண்டியது நிறைய இருக்கு.'' வைஜெயந்தி சொன்னாள்.

''கேசவன் என்றால் டாக்டர் கேசவமூர்த்திதானே. போக வில்லை என்றால் நன்றாக இருக்காது'' என்றாள் ரஜனி, வைஜெயந்தியின் தாய்.

''ஆமாம். அவர்தான். அவருடைய மகளைத்தான் உனக்குத் தெரியுமே. அவளுடைய பெயர் அவந்திதானே. மாலையில்தான் போகப்போகிறோம். மதியம் முழுவதும் படித்துவிடு.'' நயமாகச் சொன்னார் சாரதி.

''அவந்தியின் வீட்டுக்கா? அப்படி என்றால் நான் ரெடி. வருகிறோம் என்று சொல்லிவிடுங்கள் டாடி.'' மகிழ்ச்சி பொங்கும் குரலில் சொன்னாள் வைஜெயந்தி.

அவந்தியின் தந்தை கேசவமூர்த்தி சாரதியின் அசிஸ்டெண்ட். அவருக்கு ரிங் ரோட்டில் சொந்த வீடு இருந்தது.

மாலையில் வைஜெயந்தி பெற்றோர்களுடன் கேசவமூர்த்தி யின் வீட்டுக்கு போனபோது அவர்கள் எல்லோரும் லானில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பங்களா போன்ற வீடு, சுற்றிலும் பெரிய தோட்டம்.

எல்லோரும் தேநீர் குடித்தார்கள்.

''வா... என்னுடைய அறையைக் காட்டுகிறேன்.'' அவந்தி அழைத்துக் கொண்டு போனாள்.

வீட்டிற்குள்ளே ரொம்ப நவீனமாக இருந்தது. விலை உயர்ந்த ஃபர்னிச்சர், சாண்டிலியர் விளக்குகளுடன் அரச மாளிகையைப் போல் தோற்றமளித்தது.

வைஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தாள். அவந்தி ரொம்ப எளிமையாக இருப்பாள். கழுத்தில் மெலிதான சங்கிலியைத் தவிர வேறெந்த நகையையும் அணிந்து கொள்ள மாட்டாள். உடைகள் கூட அவ்வளவு விலை உயர்ந்தவை என்று சொல்ல முடியாது. கல்லூரிக்கு பஸ்ஸில்தான் வருவாள். அதைப் பார்த்து விட்டு அவந்தி ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்று வைஜெயந்தி எண்ணியிருந்தாள். இப்பொழுது அந்த எண்ணத்தை முற்றிலும் மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

அவந்தியின் தாய்தந்தை இருவருமே பணக்காரர்களைப் போல்தான் தோற்றமளித்தார்கள். பேச்சிலும் அந்த தோரணை

வெளிப்பட்டது. வைஜெயந்தியின் தந்தை அவருக்கு மேலதிகாரி என்பதால் மரியாதை கொடுக்கிறார்களே தவிர இல்லை என்றால் பேசிக்கூட இருக்கமாட்டார்கள்.

"இந்தப் பக்கத்து அறை அண்ணாவுடையது. அண்ணா பிலானியில் இன்ஜினியரிங் படித்து வருகிறான். கடைசி வருஷம். விடுமுறையில் வீட்டுக்கு வருவான். இது என்னுடைய அறை." கதவைத் திறந்தாள் அவந்தி.

மிகப் பெரிய அறை. ஒரு பக்கம் புத்தக அலமாரியும், பக்கத்திலேயே மேஜை நாற்காலியும் இருந்தன. இன்னொரு பக்கம் டபிள் காட். சிறிய டிரெஸ்ஸிங் ரூம் இருந்தன.

அறையை ஒட்டினாற்போல் பால்கனி இருந்தது. பால்கனியில் ஸ்டாண்ட் போட்ட ஊஞ்சலும், பூந்தொட்டிகளும் இருந்தன.

"இதுதான் என்னுடைய சாம்ராஜ்ஜியம் வைஜெயந்தி! இங்கே யாரும் என்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள்."

இருவரும் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டார்கள்.

"அவந்தி! உங்கள் வீடு ரொம்ப நன்றாக இருக்கு. ரொம்பவும் அமைதியாக, ஹோம்லியாக இருக்கு." வைஜெயந்தி சொன்னாள்.

"ஆமாம். அமைதியாகத்தான் இருக்கும். எனக்குத் தனிமை என்றால் பிடிக்கும். அதனால் பெரும்பாலான நேரத்தை இங்கேதான் கழிப்பேன். இந்த பூஞ்செடிகள்தான் எனக்கு சிநேகிதிகள். சாப்பிடுவதற்குத் தவிர எதற்குமே கீழே போக மாட்டேன். ஏன் என்றால் நீ சொன்ன அந்த ஹோம்லினெஸ் இங்கே இல்லாததால்."

"அப்படி என்றால்? எனக்குப் புரியவில்லை."

அவந்தி கொஞ்சநேரம் பேசவில்லை. ஏதோ யோசனையில் இருப்பவள்போல் மௌனமாக இருந்துவிட்டு பிறகு "வைஜெயந்தி! நான் ஒரு கேள்வியைக் கேட்கட்டுமா?" என்றாள்.



"கேளேன். தயக்கம் எதுக்கு?"

"உங்க அப்பாவும், அம்மாவும் பெயர்பெற்ற டாக்டர்கள். இந்த ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் அவர்களை இங்கே ஸ்பெஷலாக வரவழைத்தார்கள் என்பதிலிருந்தே அவர்களுடைய மதிப்பு என்னவென்று புரிந்து கொள்ள முடியும். எங்க வீட்டில் அப்பா மட்டும்தான் சம்பாதிக்கிறார். அம்மா அதிகம் படிக்கவில்லை. தாத்தாவுக்கு நிறைய சொத்து இருப்பதாக அம்மா அப்பா எல்லோரிடமும் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் எனக்குத் தெரிந்தவரை அவர்களுக்கு இருக்கும் சொத்து எல்லாம் அப்பா வாங்கித் தந்ததுதான். உங்களுக்கு இல்லாத சொத்து எங்களுக்கு எப்படி வந்திருக்கும் என்று நினைக்கிறாய்?"

வைஜெயந்திக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

"பெற்றோர்களைப் பற்றி அபாண்டமாகப் பேசுவதாக எண்ணிவிடாதே. உள்ளதை உள்ளபடி சொல்கிறேன். அம்மாவும், அப்பாவும் என்மீது அன்பாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான். நான் எது கேட்டாலும் மறுக்க மாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் ஸ்டேட்டஸ்க்கு ஏற்றாற்போல் இன்னும் அதிகம் செலவழிக்கச் சொல்லுவார்கள். அண்ணன் செய்யும் செலவுகளுக்கு கணக்கே இல்லை. அம்மா வீட்டில்தான் இருக்கிறாள். அன்பாகத்தான் பார்த்துக் கொள்வாள். எங்களுக்குக் கொஞ்சம் உடல்நிலை சரியில்லை என்றாலும் தவித்துப் போய் விடுவாள். ஆனாலும் எனக்கு ஏனோ வேற்று மனிதர்கள் வீட்டில் தங்கியிருப்பது போல்தான் தோன்றும். காரணம் என்னவென்று ரொம்பநாள் வரையில் எனக்குப் புரியவில்லை. ஆராய்ந்து பார்த்த போது தெரிந்தது, எனக்கு இந்த அதிருப்தி ஏன் என்று."

"ஏன்?" வைஜெயந்தி கேட்டாள்.

"இந்த செல்வம்தான் அதற்குக் காரணம். அப்பா இருபது வருடங்களாக வேலை பார்க்கிறார். உண்மைதான். ஆனால்

இருபது வருட சர்வீஸில் குடும்பத்தை இவ்வளவு பெரிய லெவலில் மெயின்டெயின் செய்து கொண்டே இவ்வளவு சொத்துக்களை எப்படிச் சம்பாதிக்க முடிந்தது? ஊரில் வேறு நிலம், வீடு என்று ஏகப்பட்ட சொத்துக்களை வாங்கியிருக்கிறார் அதையெல்லாம் பாட்டி தாத்தாவின் பெயரில் வாங்க வேண்டிய அவசியம் என்ன?இந்தப் பணம் அவர் நியாயமாக சம்பாதித்தது இல்லையோ என்று தோன்றியது. அப்பாவைத் தொடர்ந்து கவனித்தேன். உங்க அப்பா வருவதற்கு முன்னால் அப்பாதான் ஆஸ்பத்திரியில் பெரிய சர்ஜன். வீட்டிலேயும் கன்சல்டேஷன் உண்டு. ஃபீஸ் நூறுரூபாய். தினமும் சராசரி இருபது பேராவது நோயாளிகள் வருவார்கள். அப்படி என்றால் வீட்டிலேயே நாள் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வசூலாகிறது என்று அர்த்தம். போகட்டும். அவர் பெரிய டாக்டர் என்று எண்ணி பணக்காரர்கள் கொடுத்தாலும் பரவாயில்லை. சாதாரண மக்களுக்கும் அதே ஃபீஸ். முதலில் பணம் கையில் வைத்தால் தவிர நோயாளிகளைப் பார்க்கமாட்டார். அவருக்குத் தரவேண்டிய லஞ்சத்தை வீட்டில் கொண்டு வந்து தந்தால் தவிர ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் சரியாக நடக்காது. வீட்டிற்கு வரும் பரிசுப் பொருட்களுக்கு கணக்கே இல்லை.

"நாங்கள் ஒருவேளை வெளியே சாப்பிடப்போனால் ஆகும் செலவு ஆயிரம் ரூபாய். ஆனால் எங்கள் வீட்டுச் சமையல்காரனுக்கு நாங்கள் தரும் சம்பளம் ஐநூறு ரூபாய்தான். நாங்கள் சாப்பிடும் உணவை அவன் சாப்பிடக்கூடாது. சாதமும், குழம்பும் மட்டும்தான். உணவுமீந்து போனாலும் சரி, வேலைக்காரிக்கு மட்டும் தரக்கூடாது. வேலைக்காரிக்கு ஜுரம் வந்து நான்கு நாட்கள் வேலைக்கு வரவில்லை என்றால் அம்மா சம்பளத்தில் கட் செய்து விடுவாள்.

"வீட்டில் வேலைக்காரர்கள் மீது எப்போதும் சந்தேகந்தான். எதற்காக இவ்வளவு சம்பாத்தியம்? எத்தனை தலைமுறைக்கு



சேர்த்து வைக்கப் போகிறார்கள்? கேட்டால் எங்களுக்காக என்பார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு அநியாயமாக எங்களுக்காக சம்பாதிக்கத் தேவையில்லை என்பேன். அதனால்தான் என்னைக் கண்டாலே கோபம். ஆழமாக ஆராய்ந்து பார்க்கும்போது மனம் புண்பட்டுப் போகிறது."

"சில பேரின் சுபாவமே அப்படித்தான் அவந்தி! ஒருக்கால் நமக்குத்தான் பணத்தின் அருமை தெரியாமல் அப்படி நினைக்கிறோமோ என்னவோ. நீங்கள் எல்லோரும் சுகமாக, சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றுதானே அவர் அப்படி சிரமப்படுகிறார்?" ஆறுதல் சொல்வது போல் சொன்னாள் வைஜெயந்தி.

"சுகத்திற்கு எல்லை எது? பணம் சம்பாதிப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் மனிதத்தன்மையை மறந்துவிட்டால் எப்படி? நாலுபேரை வருத்தப்படுத்தி சம்பாதிக்கும் பணத்தில் என்னால் சந்தோஷமாக வாழமுடியாது. எனக்கு அப்படிப்பட்ட சந்தோஷமும் வேண்டாம். ஸ்டேடஸூம் வேண்டாம். நாலுபேரை ஆதரிக்கணும். அவர்களுடைய ஆதரவைப் பெறணும். அதுதான் என்னுடைய பாலிஸி."

'உன் வருத்தம் எனக்குப் புரிகிறது அவந்தி!' வைஜெயந்தி நினைத்துக் கொண்டாள். அந்த மாலைப்பொழுது வேதனை நிரம்பியதாக மாறிவிட்டது. சில உண்மைகளை ஜீரணித்துக் கொள்வது கஷ்டம்.

"உங்க அண்ணன் கூட உன்னைப் போலவே எண்ணுவானோ?"

"அப்படி எல்லாம் இல்லை. அவர்களுக்கு ஏற்ற மகன். அப்பா அம்மா என்றால் பிரியம் அதிகம். அந்த பாசத்தில் அவர்கள் செய்யும் தவறுகள் அவன் கண்ணுக்குத் தெரியாது."

"நிறைய பேரிடம் இந்த குணம்தான் தென்படும் அவந்தி! நம்மைச் சேர்ந்தவர்கள் எது செய்தாலும் தவறாக நினைக்கத் தோன்றாது."

''உன்னைக் கல்லூரியில் சந்திக்கச் சொல்லி எங்க அப்பா சொன்னபோது நீங்களும் எங்களைப் போன்றவர்கள்தான் என்று நினைத்து விட்டேன். ஸ்டேடஸ் இருந்தால் தவிர அப்படி சொல்லியிருக்க மாட்டார். அதனால்தான் உன்னை அழவைக்க நினைத்தேன். ஆனால் உன் அப்பாவித்தனத்தைப் பார்த்தபிறகு தவறு செய்து விட்டேன் என்று தோன்றியது. அதனால்தான் அவ்வளவு நேரம் உன்னுடன் பேசினேன்.''

வைஜெயந்தி கலகலவென்று சிரித்தாள்.

அவந்தியும் சிரித்துவிட்டு ''சாரி. உன் மனதை நோகடித்து விட்டேன். என் வாழ்க்கைப் பற்றிய சில உண்மைகளை உன்னிடம் சொல்லணும் என்று ஏனோ எனக்குத் தோன்றியது. சரி, இந்த டாபிக்கை விட்டுவிட்டு வேறு ஏதாவது பேசுவோம். வா... என் புத்தகங்களைக் காட்டுகிறேன்'' என்றாள்.

* * *

இரவு வீடு திரும்பும்போது மணி பதினொன்று அடித்து விட்டது. ஆனாலும் வைஜெயந்தி டைரி எழுதுவதை விட வில்லை.

''இன்று அவந்தியிடமிருந்து எத்தனையோ விஷயங்கள் கற்றுக் கொண்டேன். அவர்கள் வீட்டில் டின்னர் ரொம்ப நன்றாக இருந்தது. என் தாய் சமையல்காரனைப் பாராட்டியபோது கூட அவந்தியின் தாய் 'அதெல்லாம் அவந்திதான் செய்தாள்' என்று சொல்லவில்லை. நானும் அவந்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டோம். அவந்தி என்னிடம் முன்னாடியே அந்த ரகசியத்தைச் சொல்லிவிட்டாள். அன்று சமையற்காரன் வராததால் உணவை அவள்தான் தயாரித்து இருந்தாள். எந்த விஷயத்திலும் யார் மீதும் சார்ந்திருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் அவள் சமையலைக் கற்றுக் கொண்டாளாம்.



எனக்கு டீ கூடப் போடத் தெரியாது என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கமாக இருந்தது. அந்தத் தேவையே ஏற்பட வில்லை. வரவும் வராது என்ற எண்ணத்தில் இவ்வளவு நாளாக இருந்துவிட்டேன். ஆனால் அது எவ்வளவு தவறு என்று இப்போது தோன்றுகிறது. ஒருநாள் சமையல்காரனுக்கு உடம்புக்கு முடியாமல் வரவில்லை என்றால், அம்மாவும் வீட்டில் இல்லாவிட்டால் காபி போட்டுக் குடிக்கக் கூட துப்பு இல்லை எனக்கு. தினமும் எனக்குக் காபி கலந்துதரும் சமையல் காரனுக்கு, தேவைப்பட்டால் ஒரு கப் காபி கலந்து தரக்கூடத் தெரியாதவளாக இருக்கிறேன். இந்தப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். கூடிய சீக்கிரமே சமையலைக் கற்றுக் கொள்ளணும். அவந்தி சாதாரணப் பெண் இல்லை. அவள் என் சிநேகிதியானது, என்னுடைய எழுச்சிக்கு அஸ்திவாரம்.

அதுவரை நத்தையாக ஊர்ந்து சென்று கொண்டிருந்த நாட்கள், தான் படிக்கும் புத்தகத்தின் பக்கங்களைத் திருப்புவதுபோல வேகமாக பறந்துவிட்டாற்போல் தோன்றியது வைஜெயந்திக்கு. பார்த்துக் கொண்டிருந்தபோதே பி.ஏ. பட்டப்படிப்பு முடியும் நாளும் நெருங்கி விட்டது.

* * *

இரவு பதினோரு மணி. நோட்ஸ் எழுதி முடித்துவிட்டு அறையிலிருந்து வெளியே வந்தாள் வைஜெயந்தி. தாய் தந்தையரின் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

''மம்மீ!'' வெளியிலிருந்தே அழைத்தாள்.

''என்னம்மா? உள்ளே வா.'' படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்து கொண்டாள் டாக்டர் ரஜனி. ஏதாவது முக்கியமான விஷயம் பேச வேண்டியிருந்தால் தவிர அந்த நேரத்தில் வைஜெயந்தி பெற்றோரின் அறைக்கு வர மாட்டாள்.

வைஜெயந்தி உள்ளே வந்து கட்டில்மீது உட்கார்ந்து கொண்டாள்.

''மம்மீ! இந்த லீவில் சிம்லா, குலூ போகலாம்னு இருக்கிறேன். நீங்க சம்மதித்தால் கல்லூரியில் பெயரைக் கொடுத்து விடுகிறேன்.''

''இந்த லீவில் கண்டிப்பாக வரச்சொல்லி மாமா கடிதம் போட்டிருக்கிறார் இல்லையா? அங்கேயிருந்து நாம் மூவருமாக எங்கேயாவது போய்விட்டு வருவோம்.''

''அதில்லை மம்மி! நாங்க டிரெக்கிங் பண்ணலாம்னு நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ளணும்.''

''டிரெக்கிங்கா? இரண்டு மாதமாக பரீட்சை அது இது என்று ஓய்வில்லாமல் படித்துக் கொண்டே இருந்தாய். எவ்வளவு இளைத்துப் போய் விட்டாய் தெரியுமா? இந்த முறை லீவில் நம் ஊருக்குப் போனால் உனக்கும் ஒரு மாறுதலாக இருக்கும், ஓய்வும் கிடைக்கும்னு நினைத்தோம்.''

''இப்போ அவ்வளவு தூரம் என்ன கஷ்டப்பட்டுவிட்டேன் மம்மீ? தினமும் ஏழுமணி நேரம் தூங்குகிறேன். என் வயதிற்கும், உயரத்திற்கும் ஏற்ற பருமன்தான் இருக்கிறேன். இந்த வருஷம் தான் எனக்கு வாய்ப்பு இருக்கு மம்மீ. யூனிவர்சிடியில் சேர்ந்து விட்டால் பிறகு முடியாமல் போகலாம். இப்போ போய்விட்டு வருகிறேன்.'' கெஞ்சுவதுபோல் சொன்னாள் வைஜெயந்தி.

''போக வேண்டாம்னு உன்னைக் கட்டுப்படுத்த மாட்டேன் வைஜு! ஆனால் எனக்கே கில்டியாக இருக்கு, எங்களுடைய வேலைகளில் ஆழ்ந்து போய் உன்னுடன் நேரத்தைக் கழிப்பதே இல்லை என்று. அதனால்தான் நீ இதுபோல் ஓய்வில்லாமல் வேறு வேலைகளில் ஈடுபடுகிறாயோ? உன் சுயமுன்னேற்றத்திற்காக



பாடுபடுகிறாய் என்று நினைத்துத்தான் அப்பாவுடன் சண்டை போட்டாவது உன்னை சப்போர்ட் செய்கிறேன். ஆனால் எனக்கே சந்தேகமாக இருக்கு, உன்னை ரொம்பவும் கஷ்டப்படுத்துகிறேனோ என்று.''

''என்ன மம்மீ? நான் இன்னும் சின்னப் பெண்ணா என்ன? என் சக்திக்கு மீறிய காரியம் எதுவும் நான் செய்யவில்லையே? நீங்களோ லீவில் முடிந்தபோதெல்லாம் புரோகிராம் போட்டுக் கொண்டே இருக்கீங்க. சேர்ந்து வெளியில் போய்க் கொண்டுதான் இருக்கிறோம். உண்மையைச் சொல்லப் போனால் என் சிநேகிதிகள் வீடுகளில் இருப்பதை விட நாம் எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறோம் மம்மீ. எல்லாம் இருந்தும் வீட்டாரின் ஒத்துழைப்பும், ஊக்கமும் கிடைக்காமல் என் சிநேகிதிகள் ரொம்ப கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் நீங்க எனக்குக் கொடுத்த சுதந்திரத்திற்கு ரொம்பவும் பெருமைப்படுகிறேன்.''

''எதுக்காக பெருமைப்படுகிறாளாம்?'' டாக்டர் சாரதி உள்ளே வந்து கொண்டே கேட்டார்.

''வைஜு இந்த லீவில் சிம்லா டிரெக்கிங் போகிறேன் என்கிறாள். நாம் ஊருக்குப் போகலாம்னு பிளான் போட்டிருந்தோம் இல்லையா. அந்த விஷயம்தான் பேசிக் கொண்டிருந்தோம்'' என்றாள் ரஜனி.

''நாமும் போவோம் குலூவுக்கு. ஒரு வாரம் இருந்துவிட்டு நாம் மட்டும் திரும்பி வந்துவிடலாம்'' என்றார் சாரதி.

''நல்ல ஐடியா. பிரச்னைக்கு தீர்வு கிடைத்துவிட்டது'' ரஜனி சொன்னாள்.

வைஜெயந்தி நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டாள்.

எழுந்து கொள்ளப் போனவளை ''ஒருநிமிடம் உட்காரும்மா'' என்றார் சாரதி. தானும் உட்கார்ந்து கொண்டார்.

''என்ன விஷயம் டாடீ?''

''இந்த வருஷத்தோடு உன் படிப்பு முடிந்துவிடும். நாம் ஊருக்குப் போனதுமே மாமா வீட்டில் கேட்பார்கள் உன் திருமணத்தைப் பற்றி. முதலில் உன் அபிப்பிராயம் தெரிந்து கொண்டால் அவர்களுக்கு பதில் சொல்ல வசதியாக இருக்கும். எனக்கென்னவோ நல்ல வரனாக வந்தால் முடித்துவிடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. ஆனால் உன் விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்யமாட்டேன். உன் எண்ணம் என்னவென்று சொல்லு.''

''எனக்கு இதற்குள் கல்யாணம் வேண்டாம் டாடீ. இன்னும் படிக்கணும். அப்புறம் ஏதாவது வேலையில் சேரணும். நீங்க மாமாவிடம் ஸ்ட்ரிக்ட் ஆக சொல்லி விடுங்கள். நல்ல வரன் அது இதுன்னு என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று.''

''அப்படி என்றால் தொடர்ந்து என்ன படிக்கப் போகிறாய்?''

''எம்.ஏ.வில் சேர விரும்புகிறேன். அப்படியே I.A.S. க்குத் தயார் செய்கிறேன்.'' உறுதியான குரலில் சொன்னாள் வைஜெயந்தி.

''குட்! அப்படி என்றால் சரி. போய்ப்படுத்துக் கொள்.'' தோளில் தட்டிக் கொடுத்து அன்பாகச் சொன்னார் சாரதி. மகள் தனக்கு வேண்டியதை தைரியமாகச் சொன்னது அவருக்குச் சந்தோஷமாக இருந்தது.

ஒரு பெண்ணும் ஒரு ஆணும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் சமயத்தில் மன்மதன் மலர் அம்பை எய்கிறான் என்பது கவியின் மனதில் தோன்றிய கற்பனையாகவே இருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு நபரைப் பார்க்கும்போது மனதில் நெகிழ்ச்சி ஏற்படும் என்றும், அந்தக் காதல் எனும் உணர்ச்சி அருவமாகத் தன்னை அம்பால் துளைக்கப் போகிறதென்றும், அதுவும் சீக்கிரத்திலேயே நிகழப்போகிறதென்றும் அவள்



அப்பொழுது அறிந்திருக்கவில்லை. அதனால்தான் எந்தக் கனவும் காணாமல், நிம்மதியாக உறங்கிவிட்டாள்.

★ ★ ★

இறுதிப் பரீட்சையை எழுதி முடித்துவிட்டு காரில் வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள் வைஜெயந்தி. மறுநாளே ஊருக்குப் பயணம். திட்டம் போட்டது போல் அவந்தியை அழைத்துக் கொண்டு போக முடியவில்லை. அவந்திக்கு இரண்டு பிராக்டிகல் பரீட்சைகள் பாக்கியிருந்தன.

''பரீட்சைகள் முடிந்து போயிருந்தால் கட்டாயம் வந்திருப்பேன். போகட்டும் சிம்லாவில் சந்தித்துக் கொள்வோம். அதற்குள் உங்க அம்மா அப்பாவுடன் ஒரு வாரம் சந்தோஷமாக இருந்து விட்டு வா'' என்றாள் அவந்தி.

'உலகமே உன்னை வெறுத்து ஒதுக்கிய போதும் உன்னை விட்டு விலகாதவன்தான் உண்மையான நண்பன்' என்று எங்கேயோ படித்தது நினைவுக்கு வந்தது. அவந்தி வருத்தத்தில் மூழ்கியிருப்பது அவளுக்குத் தெரியும். பக்கத்திலேயே இருந்தும் எந்த உதவியும் செய்ய முடியாத நிலைமை தன்னுடையது. ஆனால் அவளை விட்டு தொலைவாக போகணும் என்றாலே ஏதோ தவறிவிட்டாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவள் போகவில்லை என்றால் தாயும் தந்தையும் வருத்தப்படுவார்கள். இனி போகாமல் இருக்க முடியாது.

கார் சடன் பிரேக் போட்டு நின்றபோதுதான் யோசனையிலிருந்து மீண்டாள் வைஜெயந்தி. பெண் ஒருத்தி திடீரென்று சாலைக்குக் குறுக்காக வந்து விட்டாள். பிரேக் போட்டதால் துள்ளிக் குதித்து கார் பானெட்டின் மீது விழுந்தாள். வைஜெயந்தி கலவரமடைந்து காரைவிட்டு இறங்கினாள். அப்பொழுதுதான் பார்த்தாள். பின்னாலேயே துரத்தியபடி வந்து கொண்டிருந்த போலீஸ்காரரை.

அருகில் வந்ததுமே முரட்டுத்தனமாக அவளைத் தூக்கி நிறுத்தினார் அந்தப் போலீஸ்காரர். "தப்பித்துக் கொண்டு ஓடிப் போகலாம் என்று நினைத்தாயா? நட ஸ்டேஷனுக்கு" என்று இழுத்தார். அந்த இழுப்பில் அவள் நிலை தடுமாறி அவர் மேல் விழுந்தாள்.

"வேண்டும் என்றே மேலே விழுகிறாயா? உன் வேஷமெல்லாம் என்னிடம் பலிக்காது" என்று வாய்க்கு வந்தபடி ஹிந்தியில் திட்டிக்கொண்டே அவளை லாட்டியால் அடித்தார். மக்கள் கும்பலாக நின்று அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வைஜெயந்திக்குக் கோபம் கட்டுக்கு மீறிப் போய்விட்டது. "கான்ஸ்டேபிள்! எதுக்கு அவ்வளவு முரட்டுத்தனமாக திட்டறீங்க? அப்படி என்னதான் செய்துவிட்டாள் அவள்?" என்று கேட்டாள் கோபமாக.

"உங்களுக்குத் தெரியாது மேடம். திருட்டுக் கழுதை! பர்ஸைத் திருடிவிட்டாள். இது ஒன்றும் முதல் தடவை இல்லை. ஜெயிலில் தள்ளிக்கூட புத்தி வரவில்லை."

வைஜெயந்தி காரிலிருந்து இறங்கியதால் அந்த மட்டுமாவது பதில் சொன்னார்.

"அதற்காக இப்படி அடித்துக் கொண்டே இழுத்துக் கொண்டு போகணுமா? ஏன் இந்த மாதிரி வாய்க்கு வந்தபடி திட்டணும்?"

"வாய்க்கு வந்தபடி திட்டுவது மட்டுமா? இவ்வளவு பேர் இங்கே இருக்கும்போதே இப்படி நடத்துகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் எங்கள் கதி என்னவென்று உங்களுக்குத் தெரியாதும்மா. எங்களை நியாயமாக வாழவிட மாட்டாங்க. பிழைக்க வேறு வழியும் இல்லை. இவங்க கையில் பெண் கைதிகள் எவ்வளவு துன்பங்கள் அனுபவிப்பாங்களோ உங்களுக்குத்



தெரியாதும்மா. அதனால்தான் காருக்குக் கீழே விழுந்து செத்துப் போய்விடலாம்னு நினைத்தேன்" என்றாள் அந்தப் பெண்மணி.

"ஸ்டேஷனுக்கு நட. ரொம்ப ஒழுக்கமானவள் போல் பேச்சைப் பாரு" என்றபடி அவளை இழுத்துக் கொண்டு போய் விட்டார் போலீஸ்காரர்.

வைஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தபடி காரில் வந்து உட்கார்ந்து கொண்டாள். என்றும் இல்லாதபடி புதிய கேள்விகள் முளைவிட்டன அவளுக்குள்.

'நம் நாட்டில் பெண் போலீஸார் ஏன் இல்லை? அந்த வேலைக்கு யாருமே முன் வராததாலா? அல்லது பெண்களுக்கு அந்த வாய்ப்பு தரப்படுவதில்லையா?'

அவளுக்குத் தெரிந்தவரையில் போலீஸ் ஆபீசராக சமீபத்தில் ஒரே ஒரு பெண்தான் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அதுவும் அந்த வருடம்தான். அவள் கிரண்பேடி. இந்தியாவில் முதல் பெண் I.P.S. ஆபீசர். காவல்துறையிலும், விமானம் ஓட்டுவதற்கும் பெண்கள் முன் வராததற்குக் காரணம் என்ன? உடல் அளவில் பலவீனமானவர்கள் என்பதுதானா?

கார் வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டதால் அவள் யோசனைகளுக்கு அணை போடப்பட்டது. பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொள்வதில் மும்முரமாகி விட்டதால் அந்த விஷயத்தையே மறந்து போய்விட்டாள்.

* * *

முதல்வகுப்புப் பெட்டியில் நான்காவது ஆள் அறுபது வயதான ரிடையர்ட் மேஜர். அவரும் டாக்டர்தான். பெயர் கிருஷ்ண ஷர்மா. அம்மூவரும் மருத்தவத் துறைக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். வைஜெயந்தி மேல் பர்த்தில் ஏறிக் கொண்டாள், தன் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு. முதலில் டைரியைத் திறந்தாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையிலிருந்து டில்லிக்குப் போன பொழுது மனதில் ஏதோ சொல்லத் தெரியாத பயம், கலவரம். இந்த மூன்று ஆண்டுகளில்தான் எவ்வளவு மாற்றங்கள்? வயதாலும், கல்வியாலேயும் ஏற்பட்ட அறிவு மட்டுமே அல்லாமல் அவளிடம் குறிப்பிட்ட இரண்டு குணங் களும் இருந்தன. ஒன்று தன்னம்பிக்கை. இரண்டாவது எதையும் கூர்ந்து கவனித்து ஆழமாக யோசிப்பது.

ஒரு சிறிய வெற்றியைச் சாதித்த அனுபவமே தன்னம்பிக் கைக்கு அஸ்திவாரமாகிறது. அந்த அஸ்திவாரத்தின் மீது கட்ட டத்தை கட்ட வேண்டுமென்று ஆசை ஏற்படுகிறது. அது ஒரு வெறியாகவே இருக்கலாம். மனமுதிர்ச்சி மட்டுமேயின்றி உடற் பயிற்சி கூட தன்னம்பிக்கையை வளர்க்கும் என்ற உண்மை அவந்தி சொல்லும் வரையிலும் அவளுக்குத் தெரியாது. முதலா வது ஆண்டு N.C.C.யில் சேர்ந்தாள். தொடர்ந்து கேம்புகளுக்கும் போய் வந்தாள். காலையில் உடற்பயிற்சி செய்வது பழக்கமாகி விட்டிருந்ததால் அவளுக்கு N.C.C.பயிற்சி சிரமமாகத் தோன்ற வில்லை. துப்பாக்கி சுடும் போட்டியில் பரிசு பெற்றாள். கல்லூரி சார்பில் அந்த வருடம் சுதந்திர தினவிழாவில் பங்கெடுத்துக் கொண்டு சிறந்த மாணவியாகத் தங்கப் பதக்கம் பெற்றது மறக்க முடியாத சாதனை. ஒரே வருடத்தில் அந்த அளவிற்கு முன்னேறி யது மிகப் பெரிய விஷயம் என்று அவந்தி பாராட்டினாள்.

நன்றாகப் படிப்பதும், முதல் ரேங்க் பெறுவது மட்டுமே போதும் என்று எண்ணிக் கொண்டிருந்த அறியாமையிலிருந்து ஒரு பெண் என்ற அளவோடு மட்டுமின்றி பரிபூரணமான மனுஷி யாக முன்னுக்கு வரவேண்டும் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டது அவந்தியிடமிருந்துதான்.

தான் யார்? தன்னுடைய எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று யோசிக்கத் தொடங்கினாள். புத்தகங் களைப் படிப்பதும் அவந்தியோடு அவற்றைப் பற்றி வாதாடுவதும்



பொழுது போக்காக மாறியது. புத்தகங்களையே படிக்காத நிலை யிலிருந்து மாறி, தான் படித்த புத்தகங்களைப் பற்றி யோசிப்பதும், தனக்குப் பிடித்த புத்தகம் இதுதான் என்று சொல்லக்கூடிய நிலையை அடைந்ததும் உண்மையிலேயே பாராட்டத்தக்க விஷயம்தான்.

முதல் வருடத்தில் ஹிந்தியில் தவிர மற்ற எல்லாப் பாடங் களிலும் முதல் மதிப்பெண்கள் வந்தன.

வைஜெயந்தி இரண்டாவது டைரியைத் திறந்தாள். அவந்தி யூனிவர்சிடியில் முதலாவதாக வந்தாள். அதே யூனிவர்சிடியில் எம்.எஸ்.ஸி.யில் சேர்ந்தாள். இரண்டாவது ஆண்டில் வைஜெயந்தி யின் மனதிற்கு கஷ்டம் தரக்கூடிய சம்பவங்கள் சிலது நிகழ்ந்தன.

ஸ்டூடெண்ட் யூனியன் தேர்தலில் ஜெனரல் செகரெட்ரியாகப் போட்டியிடச் சொல்லி சகமாணவிகள் வற்புறுத்தினார்கள். வகுப்பு மாணவிகள் மட்டுமே அல்லாமல் இறுதி ஆண்டு மாணவிகளும் கேட்டுக் கொண்டதால் வைஜெயந்தி சம்மதித்தாள். அவந்தியைக்கூட கலந்தாலோசிக்காமல் ஒப்புக் கொண்டு விட்டாள்.

ஆனால் பணம் எவ்வளவு அகம்பாவத்தைத் தோற்றுவிக்கும் என்றும், அதிகாரத்திற்காக மனிதர்கள் எந்த அளவுக்கு தவிப்பார் கள் என்றும் சுயமாக அனுபவத்திற்கு வந்தது. அவ்வளவு கட்டுப் பாடு இருக்கும் கல்லூரியில் தேர்தலுக்காக இந்த அளவிற்கு ரகளை ஏற்படும் என்று வைஜெயந்தி கனவிலும் நினைக்கவில்லை.

வெளிப்படையாக காட்டிக் கொள்ளாவிட்டாலும் சில பெண்கள் தேர்தலை போருக்குச் சமமாக எடுத்துக் கொண்டார்கள். ஒரு கட்டத்தில் போட்டியிலிருந்து வெளியேறிவிடலாமா என்று கூட நினைத்தாள். மறுபடியும் மனதில் போராட்டம்.

இவ்வளவு சீக்கிரத்தில் தோல்வியை எதற்காக ஒப்புக் கொள்ள வேண்டும்? வென்றாலும் தோற்றாலும் ஸ்போர்டிவ் ஆக

எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தாள். ஆனால் சொற்ப மெஜாரிட்டியுடன் வைஜெயந்தி ஜெனரல் செகரெட்ரியாக வெற்றி பெற்றாள். பிரசிடெண்ட் ஆகவும் கல்சுரல் செகரெட்ரி யாகவும் அதிகாரத்திற்குத் தவிக்கும் மாணவிகளே வெற்றி பெற்றது துரதிர்ஷ்டமான விஷயம்.

ஜெனரல் செகரெட்ரி என்ற முறையில் நிறைய சாதிக்க வேண்டும் என்று வைஜெயந்தி நினைத்தாள். ஆனால் ஒவ்வொரு கட்டத்திலும் முட்டுக்கட்டைகள் எதிர்பட்டன. மற்ற கல்லூரி களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அது வரை அந்த கல்லூரிதான் படிப்பில் முதலாவதாக இருந்து வந்தது. மற்ற போட்டிகளில் அதிகமாக பங்கெடுத்துக் கொண்டதில்லை. வைஜெயந்தி அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று நினைத்தாள்.

விளையாட்டுகளிலும், மற்ற கலைகளிலும் திறமை இருப் பவர்களை ஊக்குவித்து இண்டர்காலேஜ் போட்டிகளில் பங் கெடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு அப்படிப்பட்ட திறமை இருப்பவர்களை அழைத்துப் பேசினாள்.

'வீட்டிற்குத் தாமதமாக போனால் அம்மா அப்பா கோபித்துக் கொள்வார்கள்' என்று சிலரும், 'எங்கள் வீடு ரொம்ப தொலைவில் இருக்கு. இருட்டி விட்டால் போவது கஷ்டம்' என்று சிலரும் மறுப்பு தெரிவித்தார்கள். எங்கள் வீட்டில் இது போன்றவற்றுக்கு சம்மதிக்க மாட்டார்கள் என்று சாக்குபோக்கு சொல்லி தப்பித்துக் கொள்ள முயன்றார்கள்.

கல்லூரி நிபந்தனைகளின்படி வகுப்பு நடக்கும் நேரத்தில் பிராக்டீஸுக்கு போகக்கூடாது. வைஜெயந்தி மற்ற யூனியன் மெம்பர்களைக் கலந்தாலோசித்தாள்.

''உங்க அம்மா அப்பா உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார் கள். ஆனால் எங்கள் வீட்டில் அப்படி இல்லை. ஐந்து நிமிடம் தாமதமாகி விட்டால் கூட கோபித்துக் கொள்வார்கள்'' என்றார்கள்.



'உனக்கென்ன வந்தது? இஷ்டம் வந்ததுபோல் ஊர் சுற்று வாய். நாங்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லை' என்ற தோரணை யில் பேசினார்கள். அவர்களிடையே சாதிக்க வேண்டும் என்ற தவிப்பு இல்லை. அதைத் தோற்றுவிப்பதற்காக அவள் செய்த முயற்சி எதுவுமே பலிக்கவில்லை. எதிர்பார்த்தது போல் அந்த கல்லூரி எல்லா போட்டிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் பல வருடங்களுக்குப்பிறகு சிலவற்றிலாவது பங்கெடுத் துக் கொண்டதும், முதல் பரிசு கிடைக்காவிட்டாலும் இரண்டாவது மூன்றாவது பரிசுகளாவது கிடைத்ததும் நிகழ்ந்தது.

வைஜெயந்தி மனம் தளர்ந்து போகவில்லை. விதையை விதைத்து விட்டாள். அது முளைவிடாமல் போகாது என்ற நம் பிக்கை ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து இன்னொரு விஷயத்திலும் அவர்களோடு பிரச்னை வந்தது. வைஜெயந்தியின் வகுப்புத்தோழி நீரஜா ஒரு நாடகத்தை எழுதியிருந்தாள். அந்த நாடகத்தின் கருத்து வைஜெ யந்திக்கு ரொம்பப் பிடித்து விட்டது.

திருமணம் என்பது ஆண், பெண் இருவருக்குமே தேவை யானது என்றும், அப்படி இருக்கும்போது பெண்கள் ஆண்களுக்கு வரதட்சணை தரும் பேச்சே இருக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி இருந்தாள். வரதட்சணை தந்து திருமணம் செய்து கொள்வதைவிட கன்னியாகவே இருந்துவிடுவது நல்லது என்றும் அதற்குத் தகுந்த பொருளாதார சுதந்திரத்தைப் பெண்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை வெளிப்படுத்தும் விதமாக வும் சரளமான மொழியில் விறுவிறுப்பான நடையில் நாடகம் எழுதப் பட்டு இருந்தது.

இண்டர் காலேஜ் போட்டியில் அந்த நாடகத்தைப் போடலாம் என்றாள் வைஜெயந்தி. அதற்கு கல்சுரல் செகரெட்ரி சொன்ன பதிலைக் கேட்டு வாயடைத்துப் போய்விட்டாள்.

''வரதட்சணை எவ்வளவு அதிகம் தருகிறோமோ அதற்கு ஏற்றாற்போல் நல்ல கணவன் வருவான். அதோடு சொத்தில் பங்கு இல்லாதபோது வரதட்சணை ரூபத்தில் பெற்றுக்கொண்டால் என்ன தவறு? திருமணம், குழந்தைகள் இல்லாவிட்டால் ஒரு பெண்ணின் வாழ்க்கை முழுமை அடையாது'' என்றாள் அவள். மற்றவர்களும் அவளையே சப்போர்ட் செய்தார்கள்.

''பார்வையாளர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வரச் செய்யும் நாடகங்களுக்குத்தான் பரிசுகள் கிடைக்கும். இப்படிப்பட்ட புரட்சிகரமான நாடகங்களைப் போட்டால் கல்லூரியின் பெயர் கெட்டு விடும்'' என்று லெக்சரர்கள் ஏகமனதாக சொல்லிவிட்டார்கள்.

இவ்வளவு புதுமையாக தோற்றமளிக்கும் இந்தப் பெண்களிடம் இவ்வளவு பழங்காலத்து எண்ணங்களா? மாறுதல் வந்தது வெளி தோற்றத்தில் மட்டும்தானா? உள்மனதில் இல்லையா?

கல்சரல் செகரெட்ரி வேறொரு நாடகத்தைத் தேர்ந்தெடுத்தாள். ஒரு பெண்ணின் உருக்கமான கதை அது. நாடகம் தொடங்கியது முதல் கடைசி வரையில் அவள் கஷ்டப்பட்டுக் கொண்டே இருப்பாள். கண்ணீர் வடித்துக்கொண்டே இருப்பாள். இந்த சமுதாயமும், ஆண்களும் ஒரு பெண்ணை எவ்வளவு துன்புறுத்துகிறார்கள் என்பதை விலாவாரியாக காட்டினார்கள். கடைசியில் அவள் தற்கொலை செய்துகொள்வதுடன் கதை முடிகிறது.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அந்த நாடகத்திற்கும் அதில் கதாநாயகியாக நடித்த மாணவிக்கும் முதல் பரிசுகள் கிடைத்தன. கல்லூரியில் எல்லோருக்கும் ஒரே சந்தோஷம், வைஜெயந்தி ஒருத்தியைத் தவிர.

மனநிலை சரியாக இல்லாததால் வைஜெயந்தி அவந்தியைத் தேடிப் போனாள். நடந்ததை எல்லாம் கேட்டுவிட்டுச் சிரித்து விட்டாள் அவந்தி.

''மாறுதல் வருவது அவ்வளவு சுலபம் இல்லை. எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு ஸ்டேஜ் ஆக வருமே தவிர திடீரென்று ஒரே நாளில் வந்துவிடாது. எப்போதும் இனிப்பு சாப்பிட்டுப் பழக்கப்பட்டுப் போனவர்களை கசப்பைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினால் நடக்குமா சொல்லு'' என்றாள் அவந்தி.

''அப்படி என்றால் நான் சொல்லுகிற விஷயம் கசப்பானது என்று சொல்கிறாயா?''

''உன் கண்ணோட்டத்தில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய பார்வையில் அப்படித்தானே. காலங்காலமாக இரத்தத்துடன் கலந்து போய்விட்ட பத்தாம்பசலி கொள்கைகளும், நம்பிக்கைகளும் அவ்வளவு சுலபமாக நீங்கி விடாது. ஒரே நாளில் பணக்காரர்கள் ஆவதற்கு ஒரு யோசனையைச் சொல்லு. உடனே பின்பற்றுவார்கள். 'ஆடம்பரமாக கல்யாணத்தை நடத்த வேண்டாம். எளிமையாக பதிவுத்திருமணம் செய்து கொண்டு அந்தப் பணத்தை உபயோகமுள்ள பொருட்கள் வாங்குவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று சொல்லிப்பாரு. உன்னை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள். சில பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்கள் அவ்வளவு சுலபத்தில் மாறிவிட மாட்டார்கள்.''

''மாறித்தான் ஆகணும் அவந்தி. ஒரு ஆணை ஜெயிக்க வேண்டும் என்றால் பணமும், கண்ணீரும் மட்டும் போறாதே. நெகடிவ் அப்ரோச்லிருந்து தன் தனித்தன்மையால் ஜெயித்துவிட முடியும் என்ற பாசிடிவ் அப்ரோச் பெண்களிடம் வரவேண்டும், குறைந்தது படித்த பெண்களிடமாவது.''

* * *

**வை**ஜெயந்தி டைரியின் பக்கங்களை புரட்டிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தாள்.

தன் சிநேகிதிகள் எப்படி இருக்கிறார்களோ? தான் வருவதாக அவர்களுக்குக் கடிதம் போடவில்லை. அவர்களிடமிருந்து ரொம்ப நாட்களாக கடிதங்கள் இல்லை. அனுராதா மட்டும் நடுவில் ஒரு தடவை கடிதம் போட்டிருந்தாள். முடிந்தால் அவளை ஒரு தடவை சந்திக்க வேண்டும். அவர்களுடைய முன்னேற்றம் எப்படி இருக்கிறதோ தெரிந்துகொள்ள வேண்டும். சென்னையில் இருக்கப் போவதோ இரண்டே நாட்கள்தான். அதில் ஒருநாள் சிநேகிதிகளோடு சேர்ந்து கல்லூரிக்குப் போய், அந்த மகிழம்பூ மரத்தடியில் உட்கார்ந்து கடந்த காலத்தை ஒருமுறை அசைப் போட்டுப் பார்த்துக் கொண்டால்...

கீழே உரையாடல் வாக்குவாதத்தில் கொண்டுபோய்விடவே வைஜெயந்தியின் கவனம் அந்தப் பக்கமாக திரும்பியது.

''நீங்க என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நாட்டில் அனாச்சாரம் ரொம்ப முற்றிப் போய்விட்டது. சம்பிரதாயங்கள் மீது மக்களுக்கு மதிப்பு மிகவும் குறைந்து விட்டது. பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரத் தொடங்கிய பிறகு நிலைமை மேலும் மோசமாகிவிட்டது.'' கிருஷ்ண சர்மா சொன்னார்.

''இந்த வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படிப் பேசிப் பேசித்தான் பெண்களை இதுநாள் வரையில் அடக்கி வைத்தீங்க. நாங்களும் உங்களைப்போல் வெளியே வந்து எல்லாத் துறைகளிலும் உங்களுக்குச் சமமாக செயல்படுவதைப் பார்த்து சகித்துக் கொள்ளமுடியாமல் இப்படிப் பேசுறீங்க'' என்றாள் ரஜனி.

''ஆண்களுக்கு அந்த பலவீனம் இருப்பது உண்மைதான். அதனால்தான் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்கணும். ஏன் என்றால் நஷ்டமடையப் போவது அவர்கள்தானே?'' கிருஷ்ணசர்மா வாதத்தை மேலும் நீடித்தார்.

''என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? நீங்க குறிப்பிடுவது கற்பைத்தானே? பெண்களுக்கு மட்டும்தானா முக்கியம் அந்தக்



கற்பு? ஆண்களுக்குத் தேவையில்லையா? ஒரு பெண்ணை பல வந்தமாக கற்பழித்தால் அது மானபங்கம். அதைவிட மிஞ்சியது அபிமான பங்கம். மாற்றம் வரவேண்டியது இந்த நாட்டு ஆண்களிடம்தான்.''

''சும்மா இரு ரஜனி. மகளுக்கு முன்னால் இதென்ன பேச்சு?'' பார்த்தசாரதி எச்சரிப்பதுபோல் சொன்னார்.

''அவள் ஒன்றும் சின்னப் பெண் இல்லை. அவளிடமிருந்து நாம் மறைக்க வேண்டிய விஷயம் எதுவும் இல்லை. இந்தக் காலத்துப் பெண்களிடம் இதுபோன்ற கருத்துக்கள் நிறையவே இருக்கு. நம்மிடம் வெளிப்படையாக பேசாமல் இருக்கலாம். நீங்களும் எல்லா ஆண்களைப் போல நடந்துக்கிறீங்க. நான் மட்டும் குறிக்கிடாமல் இருந்தால் மகளுக்கு பதினாறு வயதிலேயே கல்யாணம் செய்து அனுப்பிவிட்டு பொறுப்பு விட்டதுன்னு நிம்மதியாக இருந்திருப்பீங்க'' என்றாள் ரஜனி.

அதன்பிறகு உரையாடலை அரசியலுக்குத் திருப்பிவிட்டார் கிருஷ்ண சர்மா.

வைஜெயந்திக்கு வியப்பாக இருந்தது. தாய் இதுபோல் வாதம்புரிந்து என்றுமே பார்த்ததில்லை. அவளிடம் இவ்வளவு புதுமையான கருத்துக்கள் இருப்பது கூட இதுவரை தெரியாது. அதைப்பற்றி யோசித்தவாறு அப்படியே உறங்கிவிட்டாள். மறு நாள் காலையில் வழக்கம்போல் ஐந்தரை மணிக்கே விழிப்பு வந்துவிட்டது. கீழே இறங்கினால் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்குமே என்று எண்ணி கொஞ்சநேரம் அப்படியே படுத்திருந்தாள். பிறகு சந்தடி செய்யாமல் கீழே இறங்கி பாத்ரூமை நோக்கிப் போனாள்.

கதவிற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கிருஷ்ணசர்மா அவளைப் பார்த்ததும் ''குட் மார்னிங் பேபி'' என்றார் முறுவலுடன்.

''குட் மார்னிங்.'' முற்றுப் புள்ளி வைத்தாற்போல் சொல்லி விட்டு பாத்ரூமுக்குள் நுழைந்தாள். அவள் மறுபடியும் இருக்கைக்கு வந்தபோது பொலபொலவென்று விடிந்து கொண்டிருந்தது. கிருஷ்ணசர்மா காபியை அவளுக்காக தயாராக வைத்திருந்தார். ஜன்னல் வழியாக குளிர்ந்த காற்று வந்து வீசிக் கொண்டிருக்க சூடாக காபியைக் குடிப்பது இதமாக இருந்தது. அதற்குள் ஏதோ ஸ்டேஷன் வந்தது. சர்மா கீழே இறங்கி நியூஸ் பேப்பர்களை வாங்கிக் கொண்டு வந்தார்.

வைஜெயந்தி பேப்பரைப் புரட்டிக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். அதற்குள் தாய் தந்தை இருவரும் எழுந்து வெளியே போனார்கள். வைஜெயந்தி பேப்பரை மூடி வைத்து விட்டுச் சோர்வுடன் சோம்பல் முறித்துக் கொண்டாள். உடற் பயிற்சி இல்லாதது என்னவோ போல் இருந்தது.

''பேப்பரில் என்ன முக்கிய விசேஷம்?'' என்று கேட்டார் கிருஷ்ணசர்மா.

'நீங்களும்தானே பேப்பரைப் பார்த்தீங்க. என்னை ஏன் கேட்கிறீங்க?' என்று கேட்க நினைத்து ''வேறென்ன இருக்கும்? பிரதமர் எங்கே என்ன சொன்னார்? எதையெல்லாம் தொடங்கி வைத்தார்? பாகிஸ்தானில் எத்தனை பேர் இறந்து போனார்கள்? இவைதானே தினந்தோறும் இருக்கிற செய்திகள்'' என்றாள் சலித்துக்கொள்வது போல்.

''அது இல்லை. உகாண்டாவில் இடிஅமீன் பிரசிடெண்ட் ஒபோட்டோவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு அதிகாரத்தை கைப்பற்றினார். சோவியட் ரஷ்யா அனுப்பிய வாலைலூட் – 1 வானத்தில் சோயஜ் – 10 உடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு விட்டது. இவையெல்லாம் நீ தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். ஐ.ஏ.எஸ்ஸ'க்கு தயாராவது என்றால் இப்படிப் பட்ட தகவல் எல்லாம் தெரிந்து வைத்திருக்கணும். பேப்பரைப் படிப்பதும், முக்கியமான பாயிண்டுகளை எல்லாம் எழுதி வைத்துக் கொள்வதும் ரொம்ப முக்கியம் உனக்கு'' என்றார் ரொம்ப சீரியஸாக.



வைஜெயந்தி வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

'ஒரு நபர் எப்படிப்பட்டவனாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவருடைய கருத்துக்களும், குணமும் எப்படிப்பட்டதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் ஏதோ ஒன்று இருக்கலாம். அதனால் எல்லோருடனும் பேசு. அவர்கள் பேச்சில் உனக்குத் தேவையான பாயிண்ட் ஏதாவது கிடைக்காமல் போகாது.' அன்றுஇரவு வைஜெயந்தி டைரியில் எழுதிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு பயணம் சலிப்பாக இருக்கவில்லை. நாள் முழுவதும் கிருஷ்ண சர்மாவுடன் பேச்சும் வாதமும்தான். அவரிடமிருந்து கற்றுக் கொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன.

''என்னைப் போன்ற கிழவன் சகப்பயணியாக அமைந்து விட்டானே என்று சலித்துக் கொள்கிறாயோ என்னவோ. யாராவது இளைஞனாக இருந்தால் கம்பெனி நன்றாக இருந்திருக்கும்.'' கிண்டல் செய்வது போல் சொன்னார் கிருஷ்ணசர்மா.

''உண்மைதான். நல்ல அழகான பையனாக இருந்தால் வம்புப் பேசிக் கொண்டு இரண்டு நாள் ஜாலியாக கழிந்திருக்கும்'' என்றாள் அவள் சிரித்துக்கொண்டே.

''ரொம்ப அழுத்தக்காரிதான்'' என்றார் அவர்.

''அப்படி இல்லை என்றால் உங்களைப் போன்றவர்களைச் சமாளிக்க முடியாதே.''

இரவு பத்துமணிக்கு அவர் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வரவேண்டும். ரயில் இரண்டு மணி நேரம் தாமதமாக போய்க் கொண்டிருந்தது. வைஜெயந்தி படுக்கப்போன பொழுது

கிருஷ்ணசர்மா சொன்னார். "நள்ளிரவில் நான் இறங்கிவிடுவேன். மறுபடியும் எப்பொழுதாவது சந்தித்துக் கொண்டால் பேச்சை தொடருவோம். என் சீட்டிற்கு ஒரு அழகான ராஜகுமாரன் வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்துக்கொண்டே உறங்கு. குட் நைட்."

"தாங்க்யூ அங்கிள் அண்ட் குட்நைட்." முறுவலுடன் சொன்னாள்.

அவர் இறங்கும்போது விழிப்பு வரும் என்று நினைத்திருந்தாள். ஆனால் வரவில்லை. வழக்கத்தை விட சீக்கிரமாகவே எழுந்து கொண்டு விட்டாள். மெதுவாக கீழே இறங்கப் போனவள் அப்படியே நின்றுவிட்டாள். கீழ் பெர்த்தில் அவர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தார். அப்படி என்றால் ஸ்டேஷன் வந்தபோது அவருக்கு விழிப்பு வரவில்லையா? இப்பொழுது என்ன செய்வது? மெதுவாக இறங்கி ஒன்றும் புரியாதவளாய் கொஞ்சநேரம் அப்படியே நின்று கொண்டிருந்தாள். பிறகு கோடியில் ஒரு பக்கமாக இருந்த விடிவிளக்கைப் போட்டாள்.

அந்த வெளிச்சத்தில் பார்த்தாள். அந்த நபர் கிருஷ்ண சர்மா இல்லை. இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க அழகான இளைஞன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான். கரிய கேசங்கள் மின் விசிறியின் காற்றிற்கு நெற்றியில் அலைபாய்ந்து கொண்டிருந்தன.

மன்மதன்தான் மலர் அம்பை எய்தானோ தெரியாது. அவனைப் பார்த்து அப்படியே நின்று விட்டாள். கிருஷ்ண சர்மா சொன்னது போல் ராஜகுமாரனே இறங்கி வந்திருக்கிறானோ என்று நினைத்து உள்ளூர சிரித்துக் கொண்டாள்.

யாரோ தன்னை உற்றுப் பார்ப்பதுபோல் தோன்றவே அவன் கண்களைத் திறந்துப் பார்த்தான். இருவரின் பார்வையும் ஒரு வினாடி சந்தித்தன. வைஜெயந்தி கலவரமடைந்து சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.



தான் எங்கே இருக்கிறோம் என்று நினைவுக்கு வந்ததுமே எழுந்து உட்கார்ந்து கொண்டான். அவளுடைய சந்தேகம் புரிந்து விட்டதுபோல லேசாகச் சிரித்தான்.

"சாரி. நேற்று இரவு நான் வந்து படுத்துக்கொண்டபோது நீங்க நல்ல தூக்கத்தில் இருந்தீங்கன்னு நினைக்கிறேன். என் பெயர் சரத்... சரத் சந்திரன்" என்றான்.

## 5

சரியாக ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்களுடைய திருமணம் நடந்தது. அதற்குள் வைஜெயந்தி எம்.ஏ. முதலாண்டு தேர்வுகள் முடிவடைந்து விட்டன. சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

தன் வாழ்க்கையில் அந்த ஒரு வருடம் எப்படித்தான் கழிந்ததோ நினைத்துப் பார்க்கும்போது வைஜெயந்திக்கு வியப்பாகத் தான் தோன்றும்.

ரயிலில் சந்தித்த சரத்சந்திரனை மறுபடியும் எதிர்பாராமல் சிம்லாவில் சந்தித்தது, அவந்தியும் அவனை ஓ.கே. சொல்லி விட்டது, தாம் டிரெக்கிங் முடித்துக்கொண்டு திரும்பி டில்லிக்கு வந்து சேருவதற்குள் அவன் தன் பெற்றோரைச் சந்தித்து தன்னுடன் நட்பு கொள்வதற்கு சம்மதம் வாங்கிக் கொண்டது...எல்லாம் கண்மூடி திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டாற் போல் தோன்றியது. குஜராத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த சரத்திற்கு வாரம் தவறாமல் கடிதம் எழுதுவாள். அவனிடமிருந்தும் ரெகுலர் ஆக கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் முழுமையாக புரிந்துகொண்டு விட்டாற்போல் திருப்தியடைந்தார்கள்.

தன்னுடைய இலட்சியம் முடிவடையும் வரையில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற உறுதியை மட்டும் அவள்

தளர்த்திக் கொள்ள வேண்டியிருந்தது. சரத்தின் தந்தைக்கு உடல் நலம் மோசமாகி விட்டதால் மகனுடைய திருமணத்தைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். திருமணம் ஆனாலும் அவள் டில்லியிலேயே இருந்து கொண்டு படிக்கலாம் என்றும், சிவில் சர்வீஸ் தேர்வுக்குத் தயார் செய்து கொள்ளலாம் என்றும் சரத் வாக்குத் தந்தான். அந்த வாக்கையும் காப்பாற்றினான்.

அவள் எம்.ஏ. இறுதியாண்டு தேர்வுகளையும், தொடர்ந்து சிவில் சர்வீஸ் தேர்வுகளையும் நல்ல முறையில் எழுதினாள். தேர்வு முடிந்து வீடு திரும்பியபோது, கணவனுக்கு டில்லியிலேயே அரசாங்க வேலைகிடைத்துவிட்டதாக நல்லச் செய்தி வந்திருந்தது.

சரத் குஜராத்திலிருந்து வந்த விட்டான். சிறிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தனிக்குடித்தனம் தொடங்கினார்கள். நாட்கள் வேகமாக கழிந்து கொண்டிருந்தன. அவள் தினமும் அதிகாலையிலேயே எழுந்துகொண்டு உடற்பயிற்சி செய்வதைப் பார்த்துவிட்டு சரத் கேலி செய்வதை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

காலை வேளையில் உடற்பயிற்சி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி அவனுக்கு எடுத்துச் சொல்ல அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஏழுமணிக்கு முன்னால் அவன் எழுந்து கொள்ள மாட்டான். இதுபோன்ற சின்னச் சின்ன கருத்து வேறுபாடுகளை இனிமையான நிகழ்ச்சிகளாக மாற்றிக் கொண்டு சந்தோஷமாக இருந்து வந்தார்கள்.

அவள் எம்.ஏ. யூனிவர்சிடியில் முதலாவதாக தேர்ச்சிபெற்ற போது, சரத் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எல்லோரையும் அழைத்து பெரிய பார்ட்டி கொடுத்தான். இரண்டு மாதங்களுக்குப் பிறகு சிவில் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. டாப் ரேங்கில் இருந்தாள் வைஜெயந்தி. சரத் அந்த விஷயத்தில் பெரிதாக மகிழ்ச்சி அடையாமல் இருந்தது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் நேர்முகத் தேர்வுக்கு தயாராவதில் மும்முரமாக இருந்ததால் அந்த விஷயத்திற்கு அவ்வளவாக முக்கியத்துவம் தரவில்லை. உலகத்தில் யாருமே அவளுக்கு இரட்டை மனப்பான்மை பற்றியோ, தாழ்வு மனப்பான்மை பற்றியோ இதுவரையில் சொன்னதில்லை.



அந்த நேரத்தில்தான் சரத்திடம் பொறுமையின்மை தொடங்கிற்று. நேர்முகத் தேர்வு என்றால் சின்ன விஷயம் இல்லை. உலகத்தில் எந்த மூலையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று தூக்கத்தில் எழுப்பிக் கேட்டால் கூட சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி, கடந்தகால வரலாற்றைப் பற்றி கரைத்துக் குடித்திருக்க வேண்டும். ஒரு வேள்வியை நடத்துவதுபோல் மனதை ஒருமுகப் படுத்தி படிக்க வேண்டும்.

''எப்போ பார்த்தாலும் படிப்பு படிப்பு என்கிறாய். நேர்முகத் தேர்வுக்குக் கூடவா இவ்வளவு கஷ்டப்படணும்? ஆனாலும் நீ செலக்ட் ஆகிவிடுவாய் என்றாலே எனக்கு பயமாக இருக்கு வைஜு'' என்றான் சரத் கவலை நிரம்பிய குரலில்.

''என்ன சொல்றீங்க நீங்க? நான் பாஸாவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' வியப்புடன் கேட்டாள் வைஜெயந்தி.

''அது இல்லை வைஜு! இரண்டு வருஷம் உனக்கு பயிற்சி காலம் இல்லையா. இரண்டு வருஷம் என்னை விட்டு எங்கேயோ இருக்க வேண்டும். என்னால் இருக்க முடியாது. உன்னால் மட்டும் என்னைப் பிரிந்து இருக்க முடியுமா சொல்லு? நினைத்துப் பார்த்தாலே உனக்கு வருத்தமாக இல்லையா?'' கேட்டான் சரத்.

''இல்லை.'' பதில் சொன்னாள் வைஜெயந்தி. ''இதோ பாருங்க சரத். நீங்க சம்பாதிக்கிற பணம் நமக்குப் போதுமானதாக இருக்கு. அம்மா, அப்பா எனக்கு வேண்டிய சொத்துக்களை

எழுதி வைத்திருக்காங்க. பொழுது போவதற்காக நான் ஏதாவது சாதாரண வேலையைத் தேடிக் கொள்ளலாம். ஆனால் நான் இந்த பரீட்சையில் தேர்வு பெற நினைப்பது பணத்திற்காகவோ, ஹோதாவுக்காகவோ இல்லை. என் திருப்திக்காகவும், என் திறமையை நிரூபித்துக் கொள்வதற்காகவும்தான். ஒரு மனுஷியாக அது என் கடமை. வாழ்க்கையில் முன்னேறணும் எனும்போது அதில் சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாதது எதுவும் இல்லை. ஆனாலும் இப்படிப்பட்ட கேள்விகள் எழக்கூடாது என்றுதான் என் லட்சியம் நிறைவேறும் வரை கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன் என்று சொன்னேன். உங்கள் ஒத்துழைப்பு முழுவதுமாக இருக்கும் என்று அப்பொழுது வாக்குறுதியும் தந்தீங்க. இப்போ நீங்க பேச்சை மாற்றுவது நன்றாக இல்லை.''

''முடிந்து விட்டதா உன் சொற்பொழிவு? இவ்வளவு கோபம் எதுக்கு? உன்னைப் பிரிந்து இருக்கணுமே என்ற வருத்தத்தில் அப்படிச் சொன்னேனே தவிர உனக்கு இடையூறாக இருப்பேன் என்று எப்படி நினைத்தாய்? அப்படிப்பட்டவனாக இருந்தால் உன்னை ஃபைனல்ஸ் எழுத விட்டிருப்பேனா? என் மனைவி கலெக்டர் என்று சொல்லிக் கொள்ள எனக்கு மட்டும் பெருமை இல்லையா? இரவும் பகலுமாக நீ கஷ்டப்படுவதைப் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியாமல் ஏதோ சொல்லிவிட்டேன். சாரி.'' சிறுத்துப் போன முகத்துடன் எழுந்து பக்கத்து அறைக்குப் போய் விட்டான்.

வைஜெயந்தி பெருமூச்சு விட்டாள். குடித்தனம் செய்யத் தொடங்கி ஆறுமாதங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் சின்னச் சின்ன கருத்து வேற்றுமைகள் தொடங்கிவிட்டன. இருவரும் படித்தவர்கள். நாகரீகம் தெரிந்தவர்கள். எந்தப் பிரச்னை வந்தாலும் நன்றாக சிந்தித்துப் பார்த்து, யோசித்து ஒரு முடிவுக்கு வரமுடியும் என்ற நினைப்பு இருவருக்குமே இருந்தது. ஆனால் சரத்திடம்



அகம்பாவம் ஒருபடி தூக்கலாக இருந்தது. அவ்வப்பொழுது அவள் கண்ணீர் வடித்து கெஞ்சினால்தான் அவனுக்குத் திருப்தியாக இருக்கும். வைஜெயந்திக்கு இதெல்லாம் சிறுப்பிள்ளைத்தனமாகத் தோன்றும். தனக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் சிலசமயம் அவள் அவனுடைய விருப்பம்போலவே நடந்து வந்தாள். இப்பொழுதும் அதே காரியத்தைச் செய்தாள். எழுந்து அவனிடம் சென்றாள்.

''சாரி சரத்! உங்கள் மனம் வருத்தப்படும் விதமாக பேசி விட்டேன். வெரி சாரி'' என்று சொல்லிக் கொண்டே அவனைத் தழுவிக் கொண்டாள்.

அன்று முதல் தினமும் இரண்டு மணி நேரமாவது கணவனோடு கழித்துவிட்டு இரவில் அவன் உறங்கியபிறகு படிக்கத் தொடங்கினாள். நேர்முகத் தேர்வும், கலந்துரையாடலும் முடியும் வரையில் ஒரே பதட்டம்தான்.

''இவ்வளவு சீக்கிரமாக கல்யாணம் ஏன் செய்து கொண்டீங்க? உங்க கேரீருக்கு அது இடைஞ்சல் இல்லையா?'' நேர்முகத் தேர்வில் கேட்டார் ஒருவர்.

''இல்லை. திருமணம் என் கேரீருக்கு எந்த விதத்திலேயும் இடைஞ்சலாக இருந்தது இல்லை. ப்ரிலிம்ஸ்கூட நான் கல்யாணம் ஆன பிறகுதான் பாஸ் செய்தேன். அதனால்தான் இன்றைக்கு உங்களுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறேன்'' என்றாள் திடமான குரலில்.

அவர் அவளை முறுவலுடன் பார்த்தார். ''நீங்க திட்டமிட்ட உங்கள் எதிர்காலத்திற்கு இந்தத் திருமணமும் குழந்தைகளும் தடையாக இருக்கக் கூடும் என்று நான் நினைக்கிறேன். உங்கள் கருத்து?''

தன்னை ஆழமாக பரிசோதிப்பதற்காகத்தான் அவர் இப்படிக் கேட்கிறார் என்று வைஜெயந்தி புரிந்து கொண்டாள்.

''இருக்காது என்றுதான் நான் நம்புகிறேன். ஒரு ஆண் எப்படி குடும்பப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டே வேலையையும் திறம்பட செய்கிறானோ அதேபோல் ஒரு பெண்ணாலும் செய்ய முடியும். இது அவரவர் தனித்தன்மையைப் பொறுத்து மாறு படும். இந்த இரண்டு கடமைகளையும் சரியாக செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.'' வைஜெயந்தியின் குரலில் கடுகளவு கூடத் தடுமாற்றம் இருக்கவில்லை.

பிறகு சப்ஜெக்ட் பற்றி வரிசையாக கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள். எதற்குமே தயக்கமில்லாமல் பதில் அளித்தாள். அவள் வெளியே வரும்போது ''வி விஷ்யூ ஆல் சக்ஸெஸ் மேடம்'' என்றார் அவர்.

அவளுக்குப் புரிந்து விட்டது. தான் இனி தேர்வு பெற்று விட்டாற்போல்தான். சந்தோஷமாக வெளியே வந்தாள். அவந்தி அருகில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத் தாள். வேடிக்கை என்னவென்றால் அவளுக்கு அந்த சமயத்தில் கணவனின் நினைப்பே வரவில்லை. அவந்திதான் நினைவுக்கு வந்தாள். அவந்தி பி.ஹெச்.டி. முடித்துவிட்டு பம்பாயில் ஸ்பேஸ் ரிஸெர்ச் நிறுவனத்தில் ஜூனியர் சயிண்டிஸ்டாக வேலையில் சேர்ந்து விட்டாள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு முடிவுகள் வெளிவந்தன. எதிர் பார்த்ததைவிட அவளுடைய பெயர் முன்னால் இருந்தது. டாப்பர்ஸ் லிஸ்டில் நான்காவது இடத்திலும், பெண்களில் முதலாவது இடத்திலும் இருந்தாள் அவள்.

அந்த விஷயத்தை அவளுடைய தந்தை முதலில் போன் செய்து அவளிடம் சொன்னார். சரத் வீடு திரும்பியதுமே ஓடிப்போய் அவனைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சியுடன் அந்த விஷயத்தைச் சொன்னாள். அந்த உற்சாகத்தில் அவன் முகத்தில் தோன்றிய மாறு தலை அவள் கவனிக்கவில்லை.



''அப்படி என்றால் கலெக்டர் ஆகிவிடப் போகிறாய் என்று சொல்லு. என்னை மறந்து போய் விட மாட்டாயே'' என்றான் ஒரு மாதிரியான குரலில்.

அதை அன்பின் வெளிப்பாடாக எடுத்துக் கொண்டு கலகல வென்று சிரித்தாள். ''நான் கலெக்டர் ஆக மாட்டேன். போலீஸ் ஆபீசர் ஆவேன். உங்களை சதா சர்வகாலமும் காப்பாற்றிக் கொண்டே இருக்கப் போகிறேன்'' பரிகாசமாகச் சொன்னாள்.

''போலீஸ் ஆபீசரா?'' ஆச்சரியமடைந்தவன் போல் கேட்டான்.

''ஆமாம். நான் I.P.S.ல் சேரப் போகிறேன். இதுவரை நம் நாட்டில் இரண்டு பெண் போலீஸ் ஆபீசர்கள் தான் இருக்கிறார் கள். நான் மூன்றாவது...'' என்று சொல்லிக் கொண்டே போனவள் அவன் முகத்தில் தென்பட்ட தீவிரத்தைப் பார்த்துவிட்டு பாதி யிலேயே நிறுத்திக் கொண்டாள்.

''ஐ.பி.எஸ். எதுக்கு? உனக்கு ஐ.ஏ.எஸ்.லேயே செலக்ஷன் ஆகிவிடுமே?''

''வராது என்று இல்லை. எனக்குத் துணிச்சல் மிகுந்த வேலை என்றால் ரொம்பப் பிடிக்கும். அதுவும் லேடி போலீஸ் ஆபீசர்களின் தேவை நமக்கு ரொம்ப இருக்கு. எனக்குப் பிடித்த வேலை அதுதான்.''

''எல்லாமே உன் இஷ்டம்தானா? என்னைக் கேட்க வேண்டிய தேவையில்லையா?''

''நான் எதை விரும்பினாலும் உங்களுக்கு ஆட்சேபணை இருக்கும்னு நான் நினைக்கவில்லை. அதனால்தான் கேட்க வில்லை. அது தவறா?''

''அதில் இருக்கும் சாதக பாதகங்களைப் பற்றி யோசித்துப் பாரு. I.A.S.ஆபீசர் என்றால் ஏதோ செக்ரடேரியட்டில் செக

ரெட்டரியாக உன் வேலையை நீ செய்து கொண்டிருக்கலாம் பத்து பேருக்கு முன்னால் போக வேண்டிய அவசியமும் இருக்காது. ஆனால் I.P.S. என்றால்....

''அதனால்தான் I.A.S. வேண்டாம்னு நினைக்கிறேன். பெண்களை எதுக்கும் பயன்படாதவங்களாக எந்த செக்ரடேரியட்டிலேயாவது மேஜைக்கு முன்னால் உட்கார வைத்து விடுவார்கள். ஆண்களுக்குப் பெண்கள் எந்த விதத்திலேயும் குறைந்தவங்க இல்லைன்னு நிரூபிக்க எனக்கு இந்த வேலை ஒரு வாய்ப்பாக இருக்கும்.'' உறுதியான குரலில் பதிலளித்தாள் அவள்.

''நடைமுறைக்கு ஒத்து வருமா என்று யோசித்துப் பாரு வைஜு. பெண்கள் காவல் துறையில் முன்னுக்கு வருவது ரொம்பக் கஷ்டம். அடிக்கடி மாற்றல் ஆகும். ரவுடிகளுடனும், குற்றவாளிகளுடனும் சம்பந்தப்பட்ட வாழ்க்கை. எனக்கு ஏனோ இது பிடிக்கவில்லை.''

''நான் ரொம்ப யோசித்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்.'' அதுதான் தன் இறுதியான தீர்மானம் என்பதுபோல் பதிலளித்தாள் வைஜெயந்தி. ''இந்த முடிவு இப்பொழுது எடுத்துக் கொண்டதில்லை. நமக்குள் அறிமுகம் ஏற்படுவதற்கு முன்பே எடுத்துக் கொண்டது.''

''நானும் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன். நீ வேலைக்குப் போவதே எனக்கு விருப்பம் இல்லை. அதுவும் காவல்துறையில் சேருவது கொஞ்சமும் பிடிக்கவில்லை. இதுக்கு மேல் உன் விருப்பம்'' என்று சொல்லிவிட்டு சரத் வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினான்.

வைஜெயந்தி சிலையாக நின்று விட்டாள். தன்னுடைய அபிப்பிராயங்களுக்கு மதிப்பளித்து, ஒத்துழைப்புத் தருவான் என்று எண்ணிக் கொண்டிருந்த சரத்தானா இவன்? இளமையின் துடிப்பில், அந்தக் கவர்ச்சியில் அவனுடைய உண்மையான சொரூபத்தைத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டோமா?



அவளுக்கு முன்பு ஒருசமயம் அவந்தி சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

''இப்பொழுது நீ எந்த வேலைக்கும் போகவில்லை. உனக்கு என்று ஒரு தனித்துவம் இல்லை. உன் லட்சியப்படி நீ ஒரு கலெக்டராகவும், அவன் ஒரு சாதாரண இன்ஜினியராகவும் இருக்கும்போது அவனிடமுள்ள ஆணாதிக்க மனப்பான்மை வெளிப்படக்கூடும். சாதாரணமான ஒரு ஆணின் குணம் அது. ஒருவேளை அப்பொழுதுகூட அவன் உனக்கு இப்படிப்பட்ட ஒத்துழைப்பைத் தந்தால் அவனை உண்மையிலேயே பாராட்டுவேன்.'' பேச்சுவாக்கில் அவந்தி சொல்லியிருந்தாள்.

தன்னைவிட அவந்தி சரத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாளா?

சரத்திற்கு அவள்மீது அன்பு இருப்பது உண்மைதான். அவன் கொள்கைகளை இவ்வளவு நாளாக வாயால் சொல்லிக் கொண்டிருந்தானே தவிர செயல்படுத்த வேண்டிய சமயம் வந்தபோது அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எந்த செக்ரடேரியட்டிலேயோ அவள் அசிஸ்டெண்ட் செகரெட்டரியாக எந்தச் சிறப்பும் இல்லாத சாதாரண வேலை செய்து கொண்டிருந்தால் அவனுக்கு எந்த வருத்தமும் இருந்திருக்காது. ஆனால் ஒரு போலீஸ் ஆபீசராக பெயரும் புகழும் பெற்று, பேப்பர்களில் செய்திகள் வரக்கூடும் என்ற யோசனையைக் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதற்குள் தந்தையிடமிருந்து போன் வந்தது. ''வைஜு! வீட்டில் தனியாக என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இங்கே வாயேன்.''

வைஜெயந்தியின் கை ரிசீவரைப் பலமாக பற்றிக் கொண்டது. அப்படி என்றால் சரத் அதற்குள் தன் பெற்றோர்களிடம் போய் தன்னைப் பற்றி புகார் செய்திருக்கிறான் போலும்.

''எதுக்கு டாடீ? நாளைக்கு வருகிறேன்'' என்றாள் தன் கோபத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல்.

''இல்லம்மா. சரத் ரொம்ப வருத்தப்படுகிறான். காவல் துறையில் வேலை செய்வது பெண்களுக்கு உண்மையிலேயே கஷ்டமாக இருக்கும்னு நானும் நினைக்கிறேன். உன் முடிவை மாற்றிக் கொண்டால் நல்லது என்று தோன்றுகிறது.''

''என் முடிவு மாறாது டாடீ.''

''அது ரொம்ப கஷ்டமான வேலை வைஜு.''

''அவ்வளவு தூரம் என்னால் பண்ணமுடியாமல் போனால் அன்றைக்கே ராஜினாமா கொடுத்துவிட்டு வீட்டில் சமையல் வேலையைப் பார்த்துக் கொள்கிறேன் டாடீ.'' போனை வைத்து விட்டாள்.

சரத் கொஞ்சம் மென்மையாகவே பேசியிருந்தால் தன் முடிவை மாற்றிக் கொண்டிருப்பாளோ என்னவோ. ஆனால் எல்லோருமாக சேர்ந்து, ''நீ ஒரு பெண். உனக்கு இந்த வேலை பொருந்தாது. உன்னால் செய்ய முடியாது'' என்று சொன்னதும் அவளுடைய பிடிவாதம் மேலும் அதிகரித்தது. எப்படியாவது அவர்களுடைய அபிப்பிராயம் தவறானது என்று நிரூபித்து விடணும் என்று திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டாள்.

திருமணம் ஆனபிறகு இதுவரை எந்த விஷயத்திலேயும் பெற்றோரின் உதவியையோ, யோசனையையோ கேட்டதில்லை. இன்றைக்கு சரத் அவளிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் நேராக அவர்களிடமே போனது அவளுக்குக் கசப்பை விழுங்கினாற்போல் இருந்தது. அதற்குள் போன் ஒலித்தது. சலிப்புடன் ரிசீவரை எடுத்தாள்.

''வாழ்த்துக்கள் எதிர்கால கலெக்டர் அவர்களே.'' மறுமுனையிலிருந்து அவந்தியின் குரல் கேட்டது.



வைஜெயந்திக்கு பழைய உற்சாகம் திரும்பி வந்தது. உத்வேத்தை அடக்கிக் கொண்டாள். ''தாங்க்யூ அவந்தி! ஆனால் ஒரு சின்ன திருத்தம். தற்சமயம் S.P.என்று அழைக்கலாமே'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''அப்படி என்றால் ஐ.பி.எஸ்ஸை தேர்ந்தெடுத்திருக்கிறாயா?''

''ஆமாம். சரத்திற்கும், அப்பாவுக்கும் இதில் விருப்பம் இல்லை. என்னை பயமுறுத்துகிறார்கள். நான் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை என்று கோபமாக இருக்கிறார்கள்.''

''அவர்களுடைய பயத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நம் நாட்டில் அரசியல் தில்லுமுல்லுகள் அதிகம். ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால் கவலைப்படவேண்டாம். எல்லாவற்றையும் எதிர்த்து உன்னால் நிற்க முடியும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.''

''தாங்க்யூ அவந்தி! நான் இவ்வளவு தூரம் முன்னேறியதற்குக் காரணம் நீதான். இந்தப் பாராட்டுக்கள் எல்லாம் உனக்குத் தான் சேரணும். ''அவளறியாமல் கண்களில் நீர் கசிந்தது.

''நான் என்ன செய்து விட்டேன்? எல்லாம் உன் கஷ்டத்தின் பலன். நானும் உனக்கு ஒரு விஷயம் சொல்லணும். சீக்கிரத்திலேயே எனக்கு வெளிநாடு போக வாய்ப்பு இருக்கும் போலிருக்கு. இரண்டு மூன்று மாதங்களுக்குள் போக வேண்டியிருக்கும்.''

''கங்கிராட்ஸ்! ஆனால் ரொம்ப தொலைவிற்குப் போய் விடப் போகிறாய்'' என்றாள் கவலையுடன்.

''தொலை தூரத்தையும் இணைக்கும் சாதனங்களுக்குக் குறைவில்லை வைஜு.''

போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள் வைஜெயந்தி. இவ்வளவு சீக்கிரத்தில் தனக்கும், சரத்திற்கும் கருத்து வேற்றுமைகள் வந்தது துரதிர்ஷ்டம்தான். தன்னுடைய லட்சியத்

தில் வெற்றி பெற்றுக் கொண்டே அவனிடம் மாறுதல் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இரவு பத்து மணிக்கு வந்தான் சரத். அங்கே அவன் தன் பெற்றோருடன் என்ன பேசினானோ தெரியாது. எதுவுமே நடக்காதது போல் நடந்து கொண்டான். அவளுக்கு பயிற்சி உத்தரவு வந்து சேரும் வரையில் மறுபடியும் அதைப் பற்றிய பேச்சையே அவன் எடுக்கவில்லை.

முதல் கட்டத்தில் சுமார் ஒன்பது மாதங்கள் நேஷனல் போலீஸ் அகாடமியில் பயிற்சி பெற்றாள். பிறகு ஒவ்வொரு மாநிலமாக அனுப்பி பயிற்சி தந்தார்கள். அந்தக் குழுவில் பெண் கேண்டிடேட் அவள் ஒருத்தி மட்டும்தான். எல்லோரும் அவளை மரியாதையுடன் நடத்தினார்கள். டாப் ரேங்கில் வந்து காவல் துறையைத் தேர்ந்தெடுத்தது அவர்களுக்கு அவளிடம் மதிப்பை அதிகரித்தது.

பிரதமரிடமிருந்து மெடல் பெற்றுக்கொண்டு முதல் போஸ்டிங்கிற்காக டில்லிக்கு வந்தாள். வேலையில் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொண்டாளோ அதே போல் குடும்பப் பொறுப்புகளையும் அனுசரித்து நடந்து வந்தாள். மாமியாரை தன்னுடன் வைத்துக் கொண்டாள். ஆனால் எவ்வளவு அன்பாக பார்த்துக் கொண்டாலும் மாமியார் மட்டும் 'தாய் வேறு மாமியார் வேறு' என்பது போல் நடந்து கொண்டாள்.

அரசாங்கம் அவளுக்கு நல்ல வீடு, ஜீப், வேலையாட்கள் போன்ற வசதிகளை அளித்தது. சரத்தின் ஆணாதிக்கத்தை மேலும் தூண்டிவிட்டது. 'இது உன்னுடைய வீடு' என்பதுபோல் நடந்து கொண்டான். சில சமயம் அவள் இரவில் கூட வெளியே போக வேண்டியிருக்கும். மாமியாருக்கு அது பிடிக்கவில்லை.

''இதென்ன கன்றாவி வேலையோ? ஆம்பிளைக் கணக்கா அந்த யூனிஃபார்ம் வேறு. இரவு இல்ல பகல் இல்லைன்னு



சுற்றுகிறாள். டாக்டராக இருந்தாலும் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்திருக்கும்.'' மருமகளின் காதில் விழவேண்டும் என்று உரத்தக் குரலில் சொல்லுவாள்.

மாமியாரின் வார்த்தைகளுக்கு வைஜெயந்தி வருத்தப்பட்டதில்லை. தன்னுடைய வேலை எவ்வளவு பொறுப்பு மிகுந்தது என்பதைப் பற்றி கல்வி அறிவு இல்லாத மாமியாருக்குப் புரியாது என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்வாள். ஆனால் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் சரத் ஏதாவது சொல்லும்போது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவனிடம் இன்னொரு கெட்ட குணம் இருந்தது. அவனுக்குக் கோபம் வந்தால் அவள் கண்ணீர் மல்கக் கெஞ்ச வேண்டும் என்று எதிர்பார்ப்பான். அவளுக்கு அது அருவருப்பாக இருக்கும். தவறு செய்யாதபோது எதற்காக அவனைக் கெஞ்சவேண்டும் என்பது அவளுடைய எண்ணம். சரத் நல்ல சந்தர்ப்பவாதி. அவள் எதிர்த்து நிற்கத் தொடங்கிவிட்டாள் என்று தெரிந்ததுமே ஒன்றுமே நடக்காதது போலவும், அவள்மீது அன்பின் காரணமாகத்தான் அவ்வாறு நடந்து கொள்வது போலவும் ப்ளேட்டை திருப்பிவிடுவான். இந்த அவகாச வாதம்தான் அவர்களுடைய குடித்தனத்தை கடைசிவரைக்கும் காப்பாற்றிக் கொண்டிருந்தது.

வேலையிலும் அவள் நிறைய பிரச்னைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு விஷயத்திலேயும் உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் குறிக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்த்து நிற்கவேண்டுமென்றால் மிகவும் தைரியம் வேண்டும். சொல்லப் போனால் காவல்துறையிலேயே நேர்மை, ஒழுக்கம் குறைவாக இருந்தன. லஞ்சம் வாங்கி பழக்கப்பட்ட அதிகாரியால் தனக்குக் கீழே இருப்பவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று அவளுக்குத் தெரியும்.

எங்கே போனாலும் முதலில் தனக்குக் கீழே இருப்பவர்களில் ஊழல் செய்பவர்களுக்குத் தண்டனை கொடுத்து வந்தாள். மேலதி

காரிகள் யாராவது போன் செய்து குற்றவாளிகளை விடுவிக்க சொன்னால், கேஸின் முழு விவரங்களை அவர்களையே ப சிலிக்கச் சொல்லுவாள். எந்த விதத்தில் அவர்களை விடுதலை செய்ய முடியும் என்று அவர்களிடமே யோசனை கேட்பாள். இந்த தொல்லையைத் தாங்க முடியாமல் மேலதிகாரிகள் அவளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொள்வார் கள். ஆனால் அவள் அதற்காக என்றுமே சோர்வு அடைந்ததில்லை சென்ற ஒவ்வொரு இடத்திலேயும் தன் நேர்மையை யாரும் குறை சொல்ல முடியாதபடிக்குக் கவனமாக இருந்து வந்தாள்.

இன்று அவள் அவர்களுடைய வேலைகளில் குறுக்கிடாமல் இருப்பதற்காக சம்பல் பள்ளத்தாக்கில் உள்ள கொள்ளையர்களை ஒடுக்குவதற்கு ஸ்பெஷல் சூபரின்டென்டெண்டாக அனுப்பப் பட்டிருந்தாள். இங்கே பிரச்னைகள் வேறு விதமாக இருந்தன.

* * *

**தோ**ளில் கைப்பட்டதும் யோசனையிலிருந்து மீண்டாள் வைஜெயந்தி.

''சாரி வைஜு! உன்னை வருத்தப்பட வைக்கணும் என்ப தில்லை என் உத்தேசம். நமக்கும் வயது ஏறிக் கொண்டே போகிறது. குழந்தைகள் வேண்டுமே என்ற எண்ணத்தில் அப்படிப் பேசிவிட்டேன். உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் கட்டாயப் படுத்துவேனா?'' என்றான் சரத்.

திரும்பவும் அதே சந்தர்ப்பவாதம். லேசாக பெருமூச்சு விட்ட வைஜெயந்தி அவனுக்கு நெருக்கமாக படுத்துக் கொண்டாள். வெளியே லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது.

* * *

**அ**ந்த எல்லையில் கொள்ளையர்களின் கும்பல் எங்கெங்கு இருக்கிறது என்று தெரிந்து கொண்டு அவர்களைச் சந்திக்க



வேண்டும் என்ற தன் விருப்பத்தை அவர்களுக்குத் தெரியும்படி செய்தாள் வைஜெயந்தி. அவள் என்னதான் சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் அவர்களும் அதற்கு சம்மதித் தார்கள். ஒரு காவல் அதிகாரி என்ற முறையில் அல்லாமல் சமமான நிலையில் குழுவின் தலைவர்களோடு தனித்தனியாகப் பேசினாள்.

என்கௌண்டர் என்ற பெயரில் உயிரை இழக்க வேண்டாம் என்றும், அவர்களாக விரும்பி சரணடைந்துவிட்டால் அவர் களுக்கு அதிக தண்டனை கொடுக்காமல் பார்த்துக் கொள்வது தன்னுடைய பொறுப்பு என்றும் விளக்கினாள். அதற்கும் அவர்கள் பணியவில்லை என்றால் தான் கைப்பற்றப் போகும் புதிய திட்டத்தின்படி அவர்களுடன் போர் தொடுக்கப் போவதாக கச்சிதமாகச் சொல்லி விட்டாள்.

அவர்கள் அவளை மிகுந்த மரியாதையுடன் நடத்தினார்கள். அவள் சொன்ன யோசனையை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாமல் போனாலும் அவள் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டு மரியாதையுடன் அனுப்பி வைத்தார்கள். சுமார் மூன்று மாதங்கள் அவள் ஓய்வில்லாமல் அலைந்தாள். அவளிடமிருந்த உறுதிக்கும், அவள் வாதத்தில் இருந்த உண்மைக்கும், முக்கியமாக அவளுடைய தைரியத்திற்கும் அவர் கள் தலை வணங்க வேண்டியதாயிற்று.

சட்டம் என்றால் அவள் ஒருத்தி மட்டுமே இல்லை என்றும், அவளுக்கு மேலே இருக்கும் அதிகாரிகளும் முக்கியமாக அர சாங்கமும் தமக்குப் பாதுகாப்புத் தரும் என்ற நம்பிக்கை தந்தால் சரெண்டர் ஆவதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக சிலர் தெளி வாகச் சொல்லிவிட்டார்கள்.

அவள் உடனே ஹோம்மினிஸ்டரையும், முதலமைச்சரையும் சந்தித்துப் பேசினாள். கொள்ளையர்கள் நேராக அமைச்சர்களிடமே

வந்து சரெண்டர் ஆகிவிடுவார்கள் என்றும், அந்தப் பெருமை அவர்களுக்கே வந்து சேரும் என்றும் ஆசை காட்டினாள். இதனை தங்கள் கட்சிக்கு பெயர் கிடைக்கும் என்று அவர்களும் சந்தோஷமாக ஒப்புக் கொண்டார்கள்.

பொதுக்கூட்டத்தில் கொள்ளைக்காரர்கள் ஆயுதங்களோடு வந்து முதலமைச்சரிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்துவிட்டார்கள். பத்திரிகைகள் இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. நேர்மையான கொள்ளைக்காரர்கள் வைஜெயந்தியின் தைரியத்தை வெளிப்படையாகவே புகழ்ந்தார்கள்.

எஞ்சிய கொள்ளைக் கூட்டத்தினர் விஷயத்தில் அவள் தயவு தாட்சிண்யமில்லாமல் நடந்து கொண்டாள். இரவும் பகலும் தாக்குதல் நடத்தி அவர்களை அடக்கினாள். அவள் பெயரைக் கேட்டாலே கொள்ளையர்கள் நடுநடுங்கும் நிலைமை ஏற்பட்டது. அதுதான் அதிகாரிகளுக்குப் பிடிக்காத விஷயம். சம்பல் பள்ளத்தாக்கில் சில கொள்ளையர்களுக்கு அரசியல்வாதிகளின் பக்கபலம் இருந்து வந்தது. அவளை ஜப்பல்பூருக்கு மாற்றி விட்டார்கள். சரத் இந்த முறை தன்னுடைய மாற்றலுக்கு முயற்சி செய்யவில்லை. வைஜெயந்தியும் அவனை வற்புறுத்தவில்லை.

ஜப்பல்பூரில் அவள் புதுவிதமான பிரச்னையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவளுக்கு சமமான ஸ்தாயில் இருந்து கொண்டு, அவள் நிராகரித்த கலெக்டர் பதவிகளில் இருந்தவர்கள் அவளோடு விரோதம் பாராட்டியது ஆச்சரியமான விஷயம்.

அங்கே போன உடனே சில கான்ஸ்டேபிள்களை ஒழுங்கு நடவடிக்கையின் கீழே மாற்ற வேண்டியிருந்தது. உடனே அமைச்சர்களிடமிருந்து போன்கள் வந்தன. அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.



மற்றொருமுறை இன்னொரு விவகாரத்தில் சந்தேகத்தின் பெயரில் ஒரு ஆளை அரெஸ்ட் செய்தார்கள். அவனை காவல் நிலையத்தில் குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தபோது மாவட்ட கலெக்டர் அவனை விட்டுவிடச் சொன்னதாக பி.ஏ. விடமிருந்து போன் வந்தது. அவள் நேரிடையாக கலெக்டரிடம் தொடர்பு கொள்ளும்படி சொல்லப்பட்டது. வைஜெயந்தி கண்டு கொள்ளவில்லை. இரவு பத்து மணிக்கு கலெக்டரிடமிருந்து அவளுக்கு போன் வந்தது. அவள் மரியாதையோடு அவருடைய வேண்டுகோளைப் புறக்கணித்தாள். கலெக்டருக்குக் கோபம் வந்து விட்டது. இரவோடு இரவாக அந்த எல்லையில் இருந்த டிபுடி கலெக்டர்கள் எல்லோரையும் ஒன்றாகக் கூட்டி, போலீஸ் சூபரின்டென்டெண்ட் காரணமாக அந்த எல்லையில் அமைதி இல்லாமல் போய் விட்டதென்று தீர்மானம் செய்து பேப்பர்களுக்குச் செய்தியைத் தந்து விட்டார்.

வைஜெயந்தி தளர்ந்து விடவில்லை. அதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, நகரத்தில் உள்ள கடைகளையெல்லாம் இரவு எட்டு மணிக்கெல்லாம் மூடிவிடவேண்டுமென்று உத்தரவு போட்டாள். இரவில் காரணமில்லாமல் ஊர் சுற்றுபவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தொடங்கினாள். அவள் வருவதற்கு முன்னால் அந்த எல்லையில் ரவுடிக்கள் ஆசிட் பாட்டில்களுடன் சுற்றிக் கொண்டு மக்களை பயமுறுத்தி வந்தார்கள். அந்த ரவுடிக் கும்பலைக் கட்டுப்படுத்தினாள் அவள். எந்தத் தலைவர்களாலும் அவர்களுக்கு பெயில் கூட வாங்கித் தரமுடியவில்லை.

ஒரு எஸ்.பி., அதுவும் ஒரு பெண் இவ்வளவு சக்தி வாய்ந்தவளாக இருந்தது ஆண்களின் அகம்பாவத்தைத் தூண்டிவிட்டது. அதுவரையிலும் எந்தக் களங்கமும் இல்லாமலிருந்த அவள் பர்சனல் ரிகார்ட்டைக் கெடுக்க எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்து சேர்ந்தது.

பதினெட்டு வயது பெண் ஒருத்தி, தான் முதல்நாள் இர கற்பழிக்கப்பட்டு விட்டதாகவும், நான்கு இளைஞர்கள் அதற்கு காரணகர்த்தாக்கள் என்றும் புகார் கொடுத்தார்கள். போலீசா அந்த நால்வரையும் அரெஸ்ட் செய்தார்கள். அதில் வைஜெயந் திக்குத் தெரிந்தவரின் மகன்கூட இருந்தான். அந்தப் பெண் ஒரு விபச்சாரி என்றும், கொடுப்பதாகச் சொன்ன தொகையை விட குறைவாகத் தந்ததால் இதுபோல் புகார் கொடுத்திருக்கிறா என்றும் ருசுவாயிற்று.

வைஜெயந்தி சுயமாக கேஸைப் பரிசோதித்து விசாரணை நடத்தினாள். அந்த நான்கு இளைஞர்களையும் விடுதலை செய் விட்டார்கள். அதைத் தொடர்ந்து நகரத்தில் கலவரம் தொடங் விட்டது. பெண்ணின் கற்பை மதிக்க வேண்டுமென்று கடை யடைப்பு செய்தார்கள். மறுவிசாரணை நடத்தப்பட்டது. இது ஒரு சோதனை என்று நினைத்த வைஜெயந்தி தைரியமாக எதி கொண்டாள்.

சரத் அவளிடம் வந்தான். ''நேர்மை நேர்மைன்னு அதையே பிடித்துக் கொண்டு உட்கார்ந்தால் அதன் பலன் இப்படித்தான் இருக்கும். சிலசமயம் விட்டுக் கொடுக்கவும் தெரிந்திருக்கணும். நீ ஊம் என்றால் நான் அவர்களோடு பேசுகிறேன். இந்த ரகளை எதுவுமே இல்லாமல் செய்து விடுகிறேன்'' என்றான். தான் ஒன்றும் குறைந்தவன் இல்லை என்பதை அவ்விதமாக நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று அவன் தவிப்பதைப் பார்க்கும்போது இரக்கம்தான் தோன்றியது அவளுக்கு.

''சாரி சரத்! உங்க ட்யூட்டியைப் பற்றி நான் என்றுமே கேள்விகள் கேட்டதில்லை. குறுக்கிட்டதும் இல்லை. நீங்களும் அதேபோல் இருந்தால்தான் உங்களுக்கும் எனக்கும் நல்லது'' என்றாள்.

''சரி உன் விருப்பம். சொல்ல வேண்டியதை சொல்லிவிட் டேன். நீ என் பேச்சைக் கேட்க மாட்டாய் என்று தெரிந்தும் அவர்களிடம் அதைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் வந்தேன். கணவனாக என்றுதான் நீ என்னை மதித்திருக்கிறாய்?''

''அப்படியென்றால் நீங்க அவர்களால் அனுப்பப்பட்ட ஆள் என்று சொல்லுங்க. உங்க மூலமாக என்னை ஜெயித்துவிட வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருப்பதும், அதை நிறை வேற்ற நீங்க வந்ததும்... சரத்! நீங்க இந்த அளவுக்கு தாழ்ந்து போய்விடுவீங்கன்னு நான் நினைக்கவில்லை'' என்றாள் கோபமாக.

''உன் நன்மைக்காகத்தான் இப்படிச் செய்தேன். பேப்பர்களில் உன்னைப் பற்றி எழுதுவதைப் படித்துவிட்டு தலைநிமிர்ந்து நடக்கமுடியாமல் போனதால் உன்னிடம் பேச வந்தேன்.''

''நீங்க தலை குனிந்து கொள்ளும் அளவுக்கு இழிவான காரியம் எதையும் நான் செய்யவில்லை. இல்லாததை கற்பனை செய்து எழுதுவதுதான் பேப்பர்காரர்களின் வேலை. என் மீது தவறு இல்லை என்பதால் தைரியமாக இருக்கிறேன். இறுதி வெற்றி எனக்குத்தான்'' என்றாள் திடமாக.

அவள் எண்ணியது போலவே விசாரணைக்குழு அவள் நிரபராதி என்று தீர்ப்பளித்தது. இம்முறை தலைகுனிந்து கொள்வது சரத்தின் பங்காயிற்று.

ஆனால் இந்த தடவை அவளுக்கு சென்னைக்கு மாற்றல் உத்தரவு வந்தது. ஸ்டேட்ஸில் இருந்த அவந்திக்கு எல்லா விஷயங் களையும் எழுதினாள் வைஜெயந்தி. தன் வெற்றியை வேறு யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியாது என்று அவளுக்குத் தெரியும். அவந்தியிடமிருந்து உடனே பதில் வந்தது.

வைஜெயந்தி,

வெறும் கங்கிராட்ஸ் மட்டும் சொல்லிவிட்டு சும்மா இருந்து விடத் தோன்றவில்லை எனக்கு. நீ விசாவுக்கு அப்ளை பண்ணு. விசா கிடைத்ததுமே உனக்கு இங்கிருந்து டிக்கெட் அனுப்புகிறேன். இரண்டு மூன்று மாதங்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு இங்கே

வா. ஊழல் நிறைந்த அந்த சமுதாயத்தை விட்டுக் கொஞ்ச நாளா வது தொலைவில் சுதந்திரமாக இருக்கலாம். எனக்கும் சந்தோஷ மாக இருக்கும். 'அங்கேயே செட்டில் ஆகி விடப் போகிறாயா? இந்தியாவுக்குத் திரும்பி வரமாட்டாயா?'' என்று கேட்டிருந்தாய் வரமாட்டேன். என்னால் வரமுடியாது வைஜெயந்தி!

இங்கே காலையில் நான் எழரை மணிக்கெல்லாம் வீட்டை விட்டு புறப்பட்டு விடவேண்டும். திரும்பி வீட்டிற்கு வந்து சேரும்போது இரவு எழுமணியாகி விடும். வாரத்தில் ஐந்துநாட் களும் அதேபோல்தான். ஒழுங்குக் கட்டுப்பாட்டை இங்கே எல்லோரும் பின்பற்றுகிறார்கள். அப்படிப்பட்ட ஒழுங்குக் கட்டுப் பாட்டிற்குப் பழக்கப்பட்டுப் போன என்னால் அங்கே உள்ள சூழ்நிலையில் நிம்மதியாக இருக்க முடியாது.

பத்து மணிக்கு ஆபீஸ் என்றால் பத்தரை மணிக்குமேலே வந்துவிட்டு அரைமணி நேரத்தில் காபி, டீ குடிப்பதற்காக வெளி யேறும் சோம்பேறிகளுக்கிடையே என்னால் வாழமுடியாது. மேலும் இங்கே ரிசெர்ச் ஸ்காலர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தருகிறார்கள். என் திறமைக்கு சரியான அங்கிகாரமும் கிடைக்கிறது. அங்கே எத்தனை விஞ்ஞானிகள் மன உளைச்சல் தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று உனக்கும் தெரியும். எல்லாம் தெரிந்தபிறகும் அங்கே திரும்பிவருவது விவேகமற்ற செயல். என் ஆராய்ச்சி இதேபோல் தொடர்ந்தால் சில ஆண்டுகளில் உலகத்திற்குப் பயன்படும் புதிய கருவியை கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்னுடைய முன்னேற்றத்தை சுயமாகக் காண்பதற்கும், எனக்காக நானே உருவாக்கிக் கொண்டுள்ள சிறுகுடிலைப் பார்ப்பதற்கும் நீ அவசியம் வரவேண்டும். உடனே பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொள்.''

உன்
அவந்தி.



வைஜெயந்தி போவதற்குத் தீர்மானித்துக் கொண்டாள். மூன்றுமாத விடுமுறைக்கு அப்ளை செய்தாள். பாஸ்போர்ட் வந்தபிறகு சரத்திடம் பயணத்தைப் பற்றிச் சொன்னாள்.

''உன் சிநேகிதி உன்னை மட்டுமே வரச்சொல்லி எழுதுவதா வது. அதென்ன பண்பாடு? அதோடு நமக்கென்ன குறைச்சல்னு அவள் உனக்கு டிக்கெட் வாங்கி அனுப்புவதாக சொல்கிறாள்? நாம் தனியாக போய்வரலாம் உலகச் சுற்றுப் பயணத்திற்கு'' என்றான் சினத்துடன்.

''நமக்கு உலகமெல்லாம் சுற்றிவிட்டு வருவதற்கு வேண்டிய வசதி இருக்கிறது, உண்மைதான். ஆனால் நாங்க இருவரும் சேர்ந்து இருக்கும் நேரத்தின் மதிப்பை ஒப்பிட்டால் அதெல்லாம் எந்த மூலைக்கு?''

''ஆமாம் அப்படித்தான் இருக்கும். என்னுடன் கழிக்கும் நேரத்தைத் தவிர வேறு யாரோடு இருந்தாலும் உனக்குச் சந் தோஷம்தான்.''

''வேறு யாரோடும் இல்லை சரத்! அவந்தியோடு மட்டும் தான். இதுவரை எத்தனை தடவை நமக்குள் இது போன்ற சச்சரவுகள் நடந்திருக்கு. எனக்கு எல்லாவற்றையும் விட முக்கியம் 'நான்'. அதற்குப் பிறகு அவந்தி. அதற்கு அப்புறம்தான் நீங்களோ, அம்மாவோ, அப்பாவோ, யாராக இருந்தாலும் சரி. எங்களுடைய பந்தத்தைப் பற்றி உங்களால் புரிந்து கொள்ள முடியாது.''

''குறைந்த பட்சம் உனக்கு உன்மீது தவிர வேறு யார்மீதும் அன்பு இல்லைன்னு ஒப்புக்கொண்டாய். ரொம்ப சந்தோஷம். யு ஆர் எ செல்ஃப் செண்டர்ட் வுமன்.''

''ஒவ்வொரு மனுஷனும் முதலில் தன்னைத் தானே நேசிக் காமல் இருக்கமுடியாது. அதை மறுக்கிறவர்கள் எல்லோரும் பொய்முகம் காட்டுபவர்கள். நான் சாப்பிடுவது உனக்காக, மூச்சு

விடுவது உனக்காக என்ற ஹிப்போகிரஸி என்னிடம் கிடையாது. அதனால்தான் தைரியமாக ஒப்புக் கொள்கிறேன்.''

சரத்திற்குக் கோபம் வந்துவிட்டது. பேசாமல் வெளியேறினான்.

★ ★ ★

அவந்தியின் வீடு சிறியதாக இருந்தாலும் வைஜெயந்திக்கு மிகவும் பிடித்திருந்தது.

''அவந்தி! ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் இதுபோன்ற தனிமை வேண்டுமென்று விரும்புவான். எவ்வளவு அமைதியாக இருக்கிறது இங்கே? நீ உனக்காக மட்டுமே வாழமுடிகிறது. ஒருத்தரையும் சார்ந்து இருக்காத வாழ்க்கை. எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.''

''நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்ற விஷயத்தை உன்னையும் என்னையும் தவிர வேறு யாரும் ஒப்புக் கொள்ள மாட்டேங்கிறாங்க. எல்லோரும் எனக்குக் கல்யாணம் ஆகவில்லை என்றும், தனிமையில் தவிக்கிறேன் என்றும் ரொம்பத்தான் இரக்கப்படுகிறார்கள். அவர்களைப் பார்த்தால் எனக்கு இரக்கமாக இருக்கும்.''

''இதற்குப் பெயர்தான் ஹிப்போகிரஸி. ஒரு பெண் எழுத்தாளர் எழுதியது போல் 'கணவனை விட்டுப் போவது பாவம் இல்லை' என்று எந்த சாமியாராவது சொன்னால் நம் நாட்டில் நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பதுபேர் இல்லத்தரசிகள் வீட்டை விட்டுப் போய் விடுவார்களாம். என் விஷயத்தையே எடுத்துக் கொள். நானும் சரத்தும் ரொம்ப ஆழமாக காதலித்தோம். அந்த காதலா கவர்ச்சியா என்று தெரிந்து கொள்ளாமலேயே திருமணம் செய்து கொண்டோம். இன்று சுயநலத்திற்காக சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.



''நம் சமுதாயத்தில் அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், சினிமா நடிகர்கள், பெரிய பதவியில் இருக்கும் அதிகாரிகள் எல்லோரும் அப்படித்தான் வாழ்ந்து வருகிறார்கள். முக்கியமாக பெண்கள் தவறு செய்தால் உடனே பேப்பர்களில் வந்துவிடும். என்னை நான் நிரூபித்துக் கொள்ள ஒரு முயற்சி எடுத்திருக்கிறேன். கவனமாக செயல்படவில்லை என்றால் சறுக்கல் நிச்சயம். பத்து பேர் என்னைப் புகழும்போது என் கணவர் அந்தப் பெருமையை உணருகிறார். தனிமையில் மட்டும் என்மீது தன் அதிகாரத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று தவிப்பார். சரத்தும் எல்லோரையும் போல் ஒரு சராசரி ஆண்மகன்தான். அவர்மேல் இரக்கப்படுகிறேன். அவ்வளவுதான்'' என்றாள் வைஜெயந்தி.

''எல்லா ஆண்களும் அதேபோல் இருப்பார்கள் என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். உன் அனுபவம் உனக்குக் கற்றுக் கொடுத்துள்ள பாடம் இது. இந்தத் தனிமையை என் சந்தோஷத்திற்காக தேர்ந்தெடுத்துக் கொண்டேன். இதே தனிமையில் ஒவ்வொரு நிமிஷமும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் இருக்கலாம். யோசித்துப் பார்த்தால் திருமணம் என்பது நல்ல அமைப்புதான். ஆனால் பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாமல் போவதும், சுயநலமும் அதைப் பாழாக்கிக் கொண்டிருக்கின்றன.'' அவந்தி சொன்னாள்.

வைஜெயந்தியால் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

★ ★ ★

மூன்று மாதங்கள் அமெரிக்கா முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து ட்யூட்டியில் சேர்ந்தாள் வைஜெயந்தி. அன்றுதான் பிள்ளையார் சதுர்த்தி. ஜாதிக் கலவரம் தூண்டப்பட்டதால் நிலைமை ரொம்ப தீவிரமாக இருந்தது. வைஜெயந்தி ஓய்வில்லாமல் பிரச்னையை சமாளிப்பதில் ஆழ்ந்துவிட்டாள்.

எவ்வளவு பிஸியாக இருந்தபோதிலும் அவள் தன் சிநேகி களை சந்திக்க வேண்டுமென்பதை மட்டும் மறக்கவில்லை. ஒ காலத்தில் ''டிமிட் ஜீனியஸ்'' என்று அவர்களிடம் பட்டப் பெய வாங்கியிருந்த அவள் இன்று ட்ரபுள் ஷுட்டராக எவ்வள சிறந்த பெயரை எடுத்திருக்கிறாள் என்பதை அவர்களுக்குத் தெ விக்க வேண்டும். அந்த நாளுக்காக, 1988 ஏப்ரல் மாதத்திற்கா ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

# விசாலி

## 1

**ப்**ளஸ்டு முடிவுகள் வெளிவந்தன. வைஜெயந்தி, பார்கவி, அனுராதா முதல் வகுப்பில் பாஸாகியிருந்தார்கள். விசாலி மட்டும் இரண்டாவது வகுப்பில் பாஸ் செய்திருந்தாள். தனக்கு மட்டும் குறைவான மதிப்பெண்கள் வந்தது, அவளுக்கு மிகவும் வருத்தத்தை அளித்தது.

எங்கேயோ தவறு நேர்ந்து விட்டதென்றும், தான் பரீட்சை களை நன்றாக எழுதியிருந்ததாகவும் குறைபட்டுக் கொண்டு இரண்டு நாட்கள் அழுது தீர்த்தாள். அவள் வீட்டார் தேர்வுகளில் நடக்கும் தில்லுமுல்லுகளை திட்டித் தீர்த்துவிட்டு அவளைத் தேற்றினார்கள். வேடிக்கை என்னவென்றால் அவர்கள் கூட மதிப்பெண்களைக் கூட்டியவர்கள் சரியாக கூட்டியிருக்க மாட் டார்கள் என்று மனப்பூர்வமாக நம்பினார்கள்.

விசாலி பி.எஸ்.ஸி.யில் சேர்ந்தாள். பார்கவி மதுரைக்குப் போய்விட்டதாலும், அனுராதா வேறு கல்லூரியில் சேர்ந்து விட்டதாலும் மூன்று சிநேகிதிகளுமே பிரிந்து விட்டார்கள். ஒரே ஊரில் இருந்தாலும் அனுராதாவை விசாலி அடிக்கடி சந்தித்த தில்லை.

விசாலி கொஞ்சம் வித்தியாசமான குணம் கொண்டவள். அவளுக்கும் அவளுடைய அத்தான் விஸ்வநாதனுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று சிறுவயதிலிருந்தே பெரியவர்கள் முடிவு செய்திருந்தார்கள். அவளுக்கு விஸ்வம் என்றால் பிரியம்

தான். ஆனால் மேலுக்கு மட்டும் ''நான் இப்பொழுதே திரும செய்து கொள்ளப் போவதில்லை'' என்று சொல்லிக் கொ டிருந்தாள். கல்லூரியில் சேர்ந்த சில நாட்களுக்குள் அவளுக் ஒரு விஷயம் அரசல் புரசலாக காதில் விழுந்தது.

விஸ்வநாதனின் ஒன்றுவிட்ட அக்காவின் மகளான ஜெயாவு அவனைக் காதலிப்பதாகவும், அவனும் அவள் மீது ஆர்வம் காட்டு வதாகவும் தெரிந்தபோது விசாலிக்குப் பகீரென்றது. தன்னுடை யவன் என்று நினைத்திருந்த விஸ்வம் வேற்று மனுஷனாகிவிட போகிறான் என்ற எண்ணத்தையே அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. உடனே தன்னை ரொம்பவும் செல்லம் கொஞ் டாடும் பாட்டியிடம் போய் முறையிட்டுக் கொண்டாள். கல் யாணம் செய்து கொண்டால் விஸ்வம் அத்தானைத்தான் பண்ணி பேன் என்றும் இல்லாவிட்டால் கிணற்றில் விழுந்து செத்துப் போவதாகவும் பயமுறுத்தினாள். அந்தப் பாட்டி பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஒரு நாள் இரவில் அந்த முயற்சியும் செய்தாள்.

அவ்வளவுதான்! அவள் விரும்பியது போல அந்த வைகாசி மாதத்திலேயே அவள் திருமணம் விஸ்வநாதனுடன் நடந்து விட்டது.

காதலை வாய் வார்த்தையால் வெளிப்படுத்துவதைவிட அதை நிரூபிப்பது போல் செய்யும் ஒரு முயற்சி அதிக பாதிப்பை ஏற்படுத்த வல்லது. விஸ்வம் சாதாரண மனிதன். விசாலிதான் தனக்கு வரப்போகும் மனைவி என்று சிறு வயதிலிருந்தே தெரிந் தாலும், அவள் தன்னிடம் அப்படிப்பட்ட உணர்வோடு பழகாத தாலும், ஜெயா தன் பார்வையாலும், செயல்களாலும் தன் அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததாலும் அவனுக்கு அந்தப் பக்கம் ஈர்ப்பு ஏற்பட்டது. ஆனால் விசாலி உயிர்த்தியாகம் செய்ய முயற் சித்த செய்தி தெரிந்ததுமே ஜெயாவின் காதல் கண்ணுக்குத் தென் படாமல் போய்விட்டது.



கல்யாணம் ஆனதுமே படிப்பை விட்டுவிட்டு நிம்மதியாக வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு அத்தானுடன் சேர்ந்து சினிமாவில் வருவதுபோல் டூயட் பாடிக் கொண்டு ஜாலியாக இருக்கலாம் என்று நினைத்திருந்த விசாலிக்கு ஏமாற்றம்தான் கிட்டியது.

கல்யாணப் பந்தலிலேயே மாமனார் ''எங்க மருமகள் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குப் போகணும் என்று ரொம்ப ஆசைப்பட்டாள். அதனால்தான் இப்போதே திருமணம் என்று ரகளை செய்தாள். நன்றாகப் படிக்கிற பெண்ணின் படிப்பை பாதியில் நிறுத்துவானேன்? மேற்கொண்டு படிக்கட்டும்'' என்று சொன்னதைக் கேட்டாள்.

முதலிரவு அறையில் கணவன் அவளிடம் முதல்முதலாக பேசிய வார்த்தைகள் கூட அதுதான்.

''என்மீது உனக்குள்ள அளவற்ற காதல் உன் எதிர்காலத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது விசாலி! படித்த பெண்கள் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எது வரையில் படிக்கணும் என்று நினைக்கிறாயோ தாராளமாக படி. வேலைக்குப் போகணும் என்று நினைத்தாலும் நல்லதுதான். நான் வற்புறுத்தமாட்டேன். ஆனால் இந்தக் காலத்தில் பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் இருப்பது நல்லது என்று நினைப்பவர்களில் நானும் ஒருத்தன்.'' அவள் விருப்பத்தைத் தான் எந்த அளவுக்கு மதிக்கிறோம் என்பதை காட்டிக் கொள்வதுபோல் விஸ்வம் சொன்னான்.

விசாலிக்கு இடி விழுந்தாற்போல் இருந்தது. உண்மையி லேயே தனக்கு படிப்பில் அவ்வளவு ஆர்வம் இல்லை என்று சொல்லக்கூடிய தைரியம் அவளுக்கு இருக்கவில்லை. ஒரு வாரம் போவதற்குள் மறுபடியும் அவள் கல்லூரிக்குப் போகத் தொடங் கினாள். சொந்த அத்தையே மாமியாராக இருந்ததால் அவள் படிப்பிற்கு எந்த குந்தகமும் வரக்கூடாது என்று அவளை எந்த

வேலையையும் செய்யவிடவில்லை. மாலை ஆகி விட்டா விஸ்வம் நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றப் போய்விடுவான் விசாலி ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டாள். சொன்னா அவர்கள் கண்ணோட்டத்தில் தன் மதிப்பு குறைந்து விடும் என்ற பயம். திருமணம் ஆன மூன்றாம் மாதமே அவள் கரு வுற்றாள்.

'அப்பாடா! இனி மேலாவது படிப்பை விட்டுவிடச் சொ வார்கள்' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டாள் விசாலி. ஆனா அது கூட பலிக்கவில்லை. மாமியார் அருகில் அழைத்து அன்புடன் ''கவலைப்படாதே விசாலி! பிரசவம் எப்படியும் கோடைவி முறையில்தான் ஆகும். உன் படிப்புக்கு எந்தத் தடையும் இரு காது. பிறந்த குழந்தையைப் பார்த்துக் கொள்ள நான்தான் இரு கேனே?'' என்று தைரியம் சொன்னாள்.

கல்லூரி படிப்பு மற்றும் மசக்கையினால் விசாலி நலிந்த போய் விடாமல் மாமியார் அவளை கண்ணின் இமைபோ பார்த்துக் கொண்டாள். குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்றால் கூட தானே கொண்டுவந்து கையில் கொடுத்தாள்.

விசாலிக்குப் பெண் குழந்தை பிறந்தது. 'ஸ்ருஜனா' என்று பெயர் வைத்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் குழந் தைகள் பிறக்காமல் ஜாக்கிரதையை மேற்கொண்டான் விஸ்வம்.

விசாலி பி.எஸ்.ஸி. மூன்றாவது வகுப்பில் தேறினாள். ''கல் யாணம், குழந்தை என்று ஆனபிறகு முதல் வகுப்பில் எப்படி பாஸ் ஆக முடியும்? பாஸ் ஆனதே பெரிய விஷயம்'' என்று விசாலியை தலைக்குமேல் வைத்துக் கொண்டாடினார்கள் எல் லோரும்.

அந்த ஆண்டே மாமனார் ரிடையராகிவிட்டார். தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக அவளுக்கு அதே டிபார்ட்மெண்டில் வேலை வாங்கித் தந்தார். மறுத்துச் சொல்லவும் அவளுக்கு



துணிச்சல் இல்லை. ''உன்னால் தப்பித்துக் கொள்ள முடியாத வற்றை பழக்கப்படுத்திக் கொள்வது நல்லது'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அப்படியிருக்கும் போது விருப்பமில்லை என்று சொல்லி கெட்ட பெயர் வாங்குவதை விட அதைத் தன் பெருமையாகக் காட்டிக் கொள்வது நல்லது என்று அவளுக்குத் தெரியும்.

மாமனார் இந்தச் செய்தியைச் சொன்னதுமே முகத்தில் சந் தோஷத்தை நிரப்பிக் கொண்டு, துள்ளிக் குதிக்காத குறையாக அவருக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

படிக்க வேண்டிய தேவை குறைந்து விட்டதால் விசாலி மெல்ல மெல்ல லீவு நாட்களில் விஸ்வத்தோடு சேர்ந்து வெளியே சுற்றத் தொடங்கினாள். தன் நண்பர்களுடன் விசாலி கலந்து பழகியது விஸ்வத்திற்குத் திருப்தியைத் தந்தது. போகப் போக சாதாரண நாட்களில் கூட அவளை வெளியே அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

அடுத்த ஆண்டு ''வருண்'' பிறந்தான். மாமனார் மாமியாரின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. தங்கள் வம்சத்திற்குக் குலக்கொழுந்தைப் பெற்றுத் தந்த விசாலியை தலைமேல் வைத்துக் கொண்டாடினார்கள்.

பகலில் வேலை, மாலையில் சினிமா டிராமா என்று ஊர் சுற்றுவதில் விசாலிக்கு நாட்கள் வேகமாக பறந்தோடிக் கொண் டிருந்தன. அவளுக்கு எந்தக் குறையும் இல்லை. குழந்தைகளின் பொறுப்பை மாமனார் மாமியார் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். வேண்டிய அளவுக்கு ஓய்வு. பணத்திற்கும் குறைவில்லை. வாழ்க்கையில் வேண்டியதெல்லாம் சாதித்து விட்டாற்போல் இருந்தது விசாலிக்கு.

வீட்டில் வேலைக்காரி வேலைக்கு வராமல் போவதும், சமயத்திற்கு பஸ் கிடைக்காமல் போவதும், வரலட்சுமி நோன்பிற்கு

ஆபீசர் பர்மிஷன் கொடுக்காததும், தனக்குப் பிடித்த கதாநாய
நடித்த சினிமாவுக்கு முதல் ஆட்டத்தில் டிக்கெட் கிடைக்காம
போவதும்தான் அவளுக்குக் குறிப்பிடத்தக்க பிரச்னைகள்.

மகளுக்கு முதல் ரேங்க் வந்ததும், மகன் அப்பாவை
போலவே கிரிக்கெட் என்றால் விரும்புவதும், திருமண நாள் அன்
கணவன் தன்னிடம் முன்கூட்டி சொல்லாமலேயே பட்டுப்புடவை
வாங்கி வந்ததும் அவள் பெருமையாக சொல்லிக் கொள்ளும்
விஷயங்கள்.

''வாழ்க்கையில் இதுவரையிலும் நீ சாதித்தவை என்ன?''
என்று அவளை யாராவது கேட்டால் ஒருக்கால் கணவன் குழந்
தைகள், வங்கியின் சேமிப்பு, வாங்கிக் கொண்ட முப்பது பவுன்
நகைகளைக் காட்டுவாளாக இருக்கும். இந்த நாட்டிலுள்ள
நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பது பேர் இல்லத்தரசிகளைப்
போலவே தான் மிக அதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொள்வாள்.

குழந்தைகள் கொஞ்சம் பெரியவர்கள் ஆனார்கள். ஒருவருட
இடைவெளிக்குள் விசாலியின் மாமனார் மாமியார் இருவருமே
ஒருவரையடுத்து இன்னொருவராக அதிகமாக நோய்வாய்ப்படா
மலேயே போய்ச் சேர்ந்தார்கள்.

தனக்குப் பிடித்த, தன்னை மிகவும் விரும்பும் பாட்டியைக்
கூப்பிட்டுத் தன்னோடு வைத்துக் கொண்டாள் விசாலி. பாட்டி
முதலிலிருந்தே அவளுக்கு குருவைப் போல். மாமியார் வீட்டிற்கு
அனுப்பி வைப்பதற்கு முன்னாடியும், பிற்பாடும் அவகாசம்
கிடைத்த பொழுதெல்லாம் பாட்டி அவளுக்கு நிறைய அறிவுரை
கள் சொல்லிக் கொடுத்தாள். கணவனைக் கவருவது எப்படி?
கணவனை முந்தானையில் முடித்து வைத்துக் கொள்ளும் வழிகள்
என்ன? இதுபோன்ற சுளிவு நெளிவுகளை எல்லாம் விவரமாக
எடுத்துச் சொல்லுவாள். அவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல்
அமுலாக்கிக் கொண்டே வந்தாள் விசாலி. அந்தப் பாட்டியே



இப்பொழுது தன்னிடம் வந்து இருப்பது விசாலிக்கு ரொம்ப சந்
தோஷமாக இருந்தது.

இவ்வளவு நாளாக பெற்றோருக்குப் பயந்து நண்பர்களுடன்
வெளியே பொழுதை போக்கி வந்த விஸ்வம், இப்பொழுது தன்
புரோகிராமை எல்லாம் வீட்டிற்கே மாற்றிக் கொண்டு விட்டான்.
லீவு நாட்கள் என்று வந்துவிட்டால் அவர்கள் வீடு கல்யாணச்
சத்திரம் போல் மாறிவிடும். விசாலிக்குக் கோபம் வருவதைப்
பார்த்துவிட்டு பாட்டி அவளைக் கடிந்து கொண்டாள்.

''சும்மா இரு பைத்தியக்காரி! இப்படியாவது அவன் கண்
முன்னாலேயே இருப்பான். ஆண்களின் புத்தி எந்தச் சமயத்தில்
எப்படி மாறுமோ தெரியாது. ஏற்கனவே அந்த ஜெயா பின்னாடி
சுற்றியவன்தானே. குழந்தைகளும் பெரியவர்களாகிக் கொண்டு
வருகிறார்கள். முன்னைப்போல் இனி நீ அவனோடு வெளியில்
சுற்றுவதெல்லாம் முடியாது. நண்பர்கள் வீட்டிற்கே வரட்டும்.
அதுதான் நல்லது'' என்று கிதோபதேசம் செய்தாள். விசாலிக்கும்
அதுதான் சரி என்று பட்டது.

இன்றும் அந்த ஜெயா திருமணமே செய்து கொள்ளாமல்
முதிற் கன்னியாக இருந்து வருகிறாள். விசாலிக்கு அந்த பயமும்
இருந்தது. சீட்டாட உட்கார்ந்திருப்பவர்களுக்கு டிபன் காபி என்று
சப்ளை செய்துகொண்டே கணவனின் ஆதரவை மேலும் அதிக
மாக பெற்று வந்தாள்.

சிலர் வாழ்க்கையை ஒரு கோணத்திலிருந்து மட்டுமே
பார்ப்பார்கள். தாம் செய்வதெல்லாம் சரி என்றும், எதிராளியிடம்
தான் குறை இருக்கிறது என்றும் திடமாக நம்புவார்கள். விசாலி
யும் அந்த வகையைச் சேர்ந்தவள்தான்.

வாழ்க்கையை எல்லாக் கோணங்களிலிருந்தும் பரிசீலித்துப்
பார்க்கும் ஒரு நபர் அந்தக் குடும்பத்திற்குள் அடியெடுத்து வைத்
தால், அந்தக் குடும்பத்தை எப்படி அனலைஸ் செய்வான்? எதிர்

பாராமல் அந்த வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள் ஒரு பெண். அவள் பெயர் சுநீதா.

## 2

சுநீதா விஸ்வநாதனின் பெரியப்பா மகள். தந்தைக்கு அடிக்கடி மாற்றலாகும் வேலை என்பதால் அவள் சித்தப்பாவின் வீட்டில் தங்கிக் கொண்டு படித்து வந்தாள். சொந்த அண்ணன்கள் இருவர் இருந்தபோதிலும் அவர்களுடன் சேர்ந்து இருக்கும் அவகாசம் குறைந்து விட்டதால் அவளுக்கு விஸ்வத்திடம்தான் பழக்கம் ஏற்பட்டது.

சுநீதா முதல்முதலாக அந்த வீட்டிற்கு வந்தபோது அவளுக்கு வயது பத்து. தங்கையில்லாத விஸ்வத்திற்கு அவள் மீது உயிர். இருவரும் பள்ளிப் பாடங்கள் மட்டுமே இன்றி எப்போதும் கதைகளைப் பற்றியும், பொது அறிவு சம்பந்தப்பட்ட விஷயங்களையும் பேசிக் கொண்டிருப்பார்கள். அவன் காட்டிய அன்பும், ஆதரவும் அவளுக்கு பெற்றோர் அருகில் இல்லாத குறையைப் போக்கிவிட்டன. நடுவில் தந்தைக்கு சென்னைக்கே மாற்றலாகி மூன்றாண்டுகள் தந்தை வீட்டில் இருந்து வந்த சமயத்தில் அவள் விஸ்வத்திடமிருந்து பிரிந்து இருந்தாள். மறுபடியும் பதினைந்து வயதில் அவள் அந்த வீட்டில் அடியெடுத்து வைத்தாள். அப்பொழுது தான் மலர்ந்துகொண்டிருந்த அவளுடைய மனதிற்கு ஒரு ரோல் மாடலாக இருந்தது விஸ்வம்தான். அடாலஸெண்ட் வயதில் பதிந்து போன உணர்வுகள் வாழ்நாள் முழுவதும் மனதை விட்டுப் போகாது. சுயமாகவே புத்திசாலியும், கூர்ந்து கவனிக்கும் தன்மையும் கொண்ட சுநீதாவின் தனித்தன்மையை செதுக்குவதில் விஸ்வத்திற்கு பெரும் பங்கு இருந்தது.

அவளுக்குத் தெரிந்த விஸ்வம் சகலகலைகளிலும் வல்லவன். பழங்கால நவீன இலக்கியத்தை, வரலாற்றை, சாஸ்திர சம்பிரதாயங்களை நன்றாக பரிசோதிப்பவன். சிறந்த விமரிசகன். இலக்



யத்தை அவளுக்கு அறிமுகப்படுத்தியவன் அவன்தான். தங்கள் வீட்டிலும் உறவினர் வீடுகளிலும் நடக்கும் பூஜைபுனஸ்காரங்கள், பண்டிகைகள், சம்பிரதாயங்கள் முதலியவற்றைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்லி அவளோடு வாதாடுவான்.

''இன்றைக்கு தாத்தாவின் சிராத்தம். அவருக்குப் பிடித்தமான பதார்த்தங்கள் மட்டுமேயின்றி எல்லா வகை பட்சணங்களையும் பண்ணியிருக்கிறோம், அவருடைய ஆன்மாவைத் திருப்திப்படுத்துவதற்காக. நாமும் மூக்குப் பிடிக்க சாப்பிடுவோம். ஆனால் தாத்தா காந்திஜியின் சீடர். இறக்கும் வரையில் தினமும் நூல் நூற்பார். நாம் இன்றைக்கு அவருக்குப் பிடித்த உணவுவகைகளை பண்ணிச் சாப்பிட்டால் அவர் ஆன்மாவுக்கு அமைதி கிடைக்கும் என்றும், அவருக்கு சுவர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்றும் நம்புகிறோம் இல்லையா? அதேபோல் அவருக்குப் பிடித்த நூல் நூற்கும் வேலையைச் செய்தால் அவருடைய ஆன்மாவுக்கு நிச்சயமாக அமைதி கிடைக்கும். ஆனால் நாம் அந்தக் காரியத்தைச் செய்ய மாட்டோம். காரணம் அந்த வேலையைச் செய்வது நமக்கு சலிப்புத் தரும் என்பதுதான்.'' விஸ்வம் சொல்லிக் கொண்டே போவான்.

இது ஒரு எடுத்துக்காட்டுதான். இதுபோன்ற விஷயங்களை சுநீதா டைரியில் கவனமாக குறித்துக் கொள்வாள். அவள் வாயிலிருந்து எப்போதும் விஸ்வம் அண்ணனைப் பற்றிய பேச்சுதான் வரும். படிப்பு முடிந்து திருமணமாகி வெளியூருக்குப் போன பிறகு கூட அவள் மீது விஸ்வத்தின் பாதிப்பு இருந்து வந்தது. இப்போது கணவன் வேலை நிமித்தமாக துபாய்க்கு போய் விட்டதால் தனியாக இருக்க வேண்டாம் என்று மாற்றல் வாங்கிக் கொண்டு சென்னைக்கு வந்துவிட்டாள்.

சுநீதா இந்த இடைவெளியில் நிறைய புத்தகங்களைப் படித்து வாழ்க்கையிலும் ஓரளவுக்கு அனுபவம் பெற்று இருந்தாள். மனதளவிலும் வளர்ந்து விட்டோம் என்றும் அண்ணனுடன்

எல்லா விஷயங்களையும் சமமாக வாதாட முடியும் என்றும் தைரியம் ஏற்பட்டது. அதனால்தான் பெற்றோரையும், அண்ணன் களையும் விட்டுவிட்டு விஸ்வத்திடம் வந்தாள். அதோடு ஜெயா வும் சென்னையிலேயே இருந்தாள். ஜெயா என்றால் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். தூரத்து உறவுதான் என்றாலும் சிறுவயதில் அவர்கள் வீட்டிற்கு அண்மையில் இருந்து வந்ததால் இருவருக் கும் இடையே நல்ல நட்பு ஏற்பட்டது.

விஸ்வம் அண்ணா ஜெயாவைத் திருமணம் செய்து கொண் டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சில சமயம் நினைத் தாலும் விஸ்வம் விசாலியின் தாம்பத்தியத்தைப் பற்றி உறவினர் கள் எல்லோரும் பாராட்டிப் பேசியதைக் கேட்டுவிட்டு, அண்ண னுக்கு அனுகூலமான மனைவிதான் கிடைத்திருக்கிறாள் என்று மகிழ்ச்சி அடைந்தாள்.

இப்பொழுது அவர்களோடு அவள் சுமார் இரண்டு வருடங் கள் ஒன்றாக இருக்கப் போகிறாள். அந்த வீடு ஒரு நந்தவனமாக மாறியிருக்கும். குழந்தைகள் வைரக்கற்களைப் போல் ஜொலித் துக் கொண்டிருப்பார்கள். நல்ல பண்போடும், ஒழுக்கத்தோடும் வளர்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுடன் சில நாட்கள் சேர்ந்து இருக்கப் போவது தன்னுடைய அதிர்ஷ்டம்தான் என்று எண்ணிக் கொண்டாள் சுந்தா.

வந்த முதல்நாளே அவளுக்குச் சின்ன ஏமாற்றம் ஏற்பட்டது. விஸ்வம் ரயில் நிலையத்திலிருந்து அவளை அழைத்து வந்து வீட்டில் கொண்டு விட்டுவிட்டு உடனே வேலையிருப்பதாகச் சொல்லி ஆபீசுக்குப் போய் விட்டான். விசாலியும் ஆபீசுக்குப் போய்விடுவாள் என்பதால் தானும் ட்யூட்டியில் சேருவதற்காக சுந்தா கிளம்பினாள்.

''என்னது? இன்னிக்கே போய் ஆபீசில் சேரப் போகிறாயா? இன்னிக்கு அஷ்டமி, செவ்வாய்க்கிழமை வேறு. நல்லது இல்லை. நாளைக்குப் போகலாம்.'' தடை சொன்னாள் விசாலி.



சுந்தாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ''எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை அண்ணி. வீட்டில் தனியாக உட்கார்ந்து என்ன செய்வது, போகிறேனே?'' என்றாள் கெஞ்சுவது போல்.

''உனக்கு இல்லாவிட்டால் எனக்கு இருக்கு. ஏதாவது ஆகி விட்டால் நன்றாக இருக்காது. வீட்டில் இருக்கும்போது கொஞ்சம் என் பேச்சைக் கேளு. இன்றைக்கு நீ போவது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் விசாலி கொஞ்சம் தீவிரமாகவே.

வந்த முதல் நாளே அண்ணியுடன் தகராறு வேண்டாம் என்று நினைத்த சுந்தா தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். ஆனால் எல்லாவற்றையும் காரணகாரியத்தோடு வாதம் புரியும் விஸ்வம் அண்ணன் வீட்டில் இப்படிப்பட்ட நிலைமையை அவள் எதிர்பார்க்கவில்லை.

விசாலி ஆபீசுக்குப் போனபிறகு ஒன்றும் செய்யத் தோன்றா ததால் ஜெயாவின் வீட்டிற்குக் கிளம்பினாள். ஜெயாவின் உடல் நிலை கொஞ்சம் சரியில்லாததால் அவள் வீட்டிலேயே இருந்தாள். இரண்டு வருடங்களில் நன்றாக இளைத்து விட்டிருந்தாள். கண் களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்பட்டிருந்தன. பத்து வயது கூடி விட்டாற்போல் தென்பட்டாள்.

''என்ன இப்படி ஆகிவிட்டாயே? உடம்புக்கு என்ன?'' கல வரப்பட்டுக் கொண்டே கேட்டாள் சுந்தா.

''இது சாதாரண மருத்துவர்களால் சரி செய்ய முடியாத நோய். இப்போ பரவாயில்லை. கொஞ்சம் தேறிக் கொண்டு வரு கிறேன். உன் விஷயம் என்ன? திடீரென்று வந்திருக்கிறாயே? எப்பொழுது வந்தாய்? என்ன விசேஷம்?''

கணவனின் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றியும், தன்னு டைய வேலையைப் பற்றியும் சொன்னாள் சுந்தா.

"அப்படியென்றால் இரண்டு வருஷம் இங்கேயே இருக்கப் போகிறாய் என்று சொல்லு. எங்கே தங்குவதாக உத்தேசம்?"

"விஸ்வம் அண்ணா வீட்டில்தான். வேறெங்கேயாவது தங்க விடுவாரா அண்ணா என்னை?" முறுவலுடன் சொன்னாள் சுந்தா.

விஸ்வத்தைப் பற்றிய பேச்சு வந்ததுமே ஜெயாவின் முகம் களை இழந்தது.

"என்ன சுந்தா? விஸ்வம் எப்படி இருக்கிறான்? ரொம்ப நாளாச்சு பார்த்து. வருவதையே விட்டுவிட்டான். நாங்க போக லாம் என்றாலும் விசாலிக்கும், அவன் பாட்டிக்கும் பிடிக்கவே பிடிக்காது. எங்களைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவார்கள்" என்றாள் ஜெயாவின் தாய்.

"அதெல்லாம் இப்போ எதுக்கும்மா? அத்தானின் வேலை யைப் பற்றி நமக்குத்தான் தெரியுமே. நம் வீட்டுக்கு வர ஒழிய வில்லையோ என்னவோ? எதுக்காக அவர்களைப் பற்றி கெடுத லாகப் பேசணும்?" ஜெயா சொன்னாள்.

'அண்ணன் வராதது ஜெயாவின் மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது போலும். அண்ணாவிடம் இதைப் பற்றிக் கேட்க வேண்டும்.' சுந்தா நினைத்துக் கொண்டாள். அதற்கு மேல் அந்த விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை அப் பொழுது. மாலை வரையிலும் அங்கேயே கழித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தாள். காலையில் அண்ணாவுடன் சரியாக பேசவே முடியவில்லை. மாலையில் திரும்பி வந்ததுமே உட்கார்ந்து நிறைய பேசவேண்டும்.

விஸ்வம் வரும்போது கூடவே இரண்டு நண்பர்களையும் அழைத்து வந்தான். "சுந்தா! உனக்காக தமிழ் சினிமா கேஸட் கொண்டு வந்திருக்கிறேன், வந்து உட்காரு." ஆர்வத்தோடு கூப் பிட்டான்.



வீடியோவில் சினிமா பார்ப்பதில் எல்லோரும் ஆழ்ந்து போய்விட்டார்கள். விசாலி சமையலறையில் வேலை செய்து கொண்டே நடுநடுவில் வந்து உட்கார்ந்து கொஞ்சநேரம் பார்த்து விட்டு மறுபடியும் உள்ளே போய்க் கொண்டிருந்தாள்.

சினிமா முடிந்து நண்பர்கள் கிளம்பும்போது இரவு எட்டரை மணியாகிவிட்டது. உடனே எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார் கள். சாப்பாடு முடிந்ததும் மறுபடியும் டி.வி. நிகழ்ச்சிகளைப் பற்றி ஜோக்குகள், அதில் வருபவர்களைப் பற்றி கிண்டல் செய்து கொண்டும் அதைவிட வேறு சந்தோஷம் கிடையாது என்பது போல் நடந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு தூக்கம் வருகிறது என்று சொல்லிவிட்டு விஸ்வம் உள்ளே போய்விட்டான்.

படுத்துக் கொள்வதற்கு முன்னால் டைரி எழுத வேண்டு மென்று உட்கார்ந்தாள் சுந்தா. பேனா நகரவில்லை. மனதில் மாற்றம் சூழ்ந்து கொண்டது. 'டெலிவிஷன் பெரிய மாஸ் மீடியா அல்லவா. இருபத்தி நான்கு மணி நேரமும் அழுது கொண்டிருக் கும் பெண்களைக் காட்டி அவர்களுடைய கதி இவ்வளவுதான் என்றும், அதிலேயே அவர்கள் சந்தோஷத்தை அனுபவிப்பார்கள் என்றும் கருத்தைக் கொண்ட அந்த சீரியல்களையெல்லாம் அண்ணன் அண்ணி போன்ற படித்தவர்கள்கூட எப்படிப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள்?' என்று டைரியில் எழுதிக் கொண்டாள்.

* * *

ஒரு வாரம் போவதற்குள் அவளுக்கு அந்த வீட்டின் நிலைமை கொஞ்சம் பிடிபட்டது. விஸ்வம் எப்போதும் பிஸியாக இருந்தான். செக்யூரிடி கார்ட்டுகளைப் போல் நண்பர்களோ அல்லது விசாலியோ சதா அவன் பக்கத்திலேயே இருந்து வந்தார்கள். சாவகாசமாக உட்கார்ந்து பேசும் அளவுக்கு நேரமே இருக்க வில்லை. குழந்தைகள் விஷயத்தில் கூட அந்தத் தம்பதிகள் அதிகமாக அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

படிப்பு விஷயத்தை டியூஷன் வாத்தியாரிடமே விட்டு விட்டா கள். அவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கித் தந்துவிட்டு த னுடைய பொறுப்புத் தீர்ந்து விட்டதாக எண்ணிக் கொண்டா விசாலி. விஸ்வம் குழந்தைகள் விஷயத்தையே லட்சியப்படுத் மாட்டான். அவ்விருவரும் நாள் முழுவதும் பிஸியாக இருப்பது போல் தோன்றுவார்கள். ஆனால் செய்யும் காரியம் என்னவென் யாருக்குமே புரியாது.

''அண்ணா! ஸ்ருஜனா சயின்ஸ் பாடத்தில் ரொம்ப வீக்கா இருக்கிறாள். டியூஷன் மாஸ்டர் சொல்லித் தருவதை உருப்போடு கிறாளே தவிர அர்த்தம் புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை.''

விஸ்வம் பேப்பர் படித்துக் கொண்டிருந்த சமயம் பார்த்துச் சொன்னாள் சுநீதா.

''உங்க அண்ணாவுக்கு அதையெல்லாம் பார்த்துக் கொள்ள நேரம் ஏது சுநீதா? காலையில் போனால் மாலையில் வருகிறா வீட்டுக்கு. அதற்குள் ரொம்ப களைத்துப் போய் விடுவார். அத காகத்தானே ட்யூஷன் ஏற்பாடு செய்தேன். மாஸ்டரும் நன்றாகச் சொல்லித் தருகிறார். எப்பொழுதாவது நேரம் கிடைத்தால் நானும் சொல்லித் தருகிறேன். அதோடு அவளுக்கு சயின்ஸ் என்றாலே பிடிக்காது. 'போர்' என்பாள்'' காபி கொண்டு வந்த விசாலி நடுவில் புகுந்து சொன்னாள்.

விஸ்வம் சுநீதாவைப் பார்த்துப் பெருமையுடன் சிரித்தான். ''உங்க அண்ணி என்னை எப்படி கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்கிறாளோ பார்த்தியா?''

'உன்னைப் பார்த்துக் கொள்வது இருக்கட்டும். ஸ்ருஜனா வின் படிப்பு விஷயம் கடுகளவுக்குக் கூட முக்கியமாக உங்களுக்குப் படவில்லையே?' உள்ளூர நொந்து கொண்டாள் சுநீதா.

''ஸ்ருஜனாவுக்குப் பிடிக்காத சப்ஜெக்ட்டைப் படிக்கச் சொல்லி வற்புறுத்துவது நல்லதில்லை சுநீதா! அவளைப் பற்றி



எனக்கு நன்றாகத் தெரியும். நாம் கோபித்துக் கொண்டால் இன்னும் எதிர்த்துப் பிடிவாதம் பிடிப்பாள்'' என்றான் விஸ்வம்.

''அண்ணா! உனக்கு நினைவு இருக்கா? என் சிறுவயதில் கணக்குப் பாடம் என்றாலே பிடிக்காது. நீதான் என்னைச் சமாதானப்படுத்திச் சொல்லித் தருவாய். பிறகு அதுவே எனக்குப் பிடித்த சப்ஜெக்ட் ஆக மாறிவிட்டது. பசங்களுக்கு சப்ஜெக்ட் மீது ஆர்வத்தை உண்டாக்குவது அதைச் சொல்லித் தருபவர்களை பொறுத்துதான் இருக்கும் என்று நீகூட அடிக்கடி சொல்லுவாய்.''

விஸ்வம் புன்முறுவல் செய்து விட்டு பேசாமல் இருந்தான். தான் படிப்பைப் பற்றி பேசும் வரையில் விசாலி அங்கிருந்து நகர மாட்டாள் என்று புரிந்து விட்டது சுநீதாவுக்கு.

''பிடிவாதம் என்றதுமே நினைவுக்கு வருகிறது அண்ணா. 'Gone with the wind' நாவல் சமீபத்தில் படித்தேன். ஸ்கார்லெட் ஒஹாராவின் பாத்திரம் ஒருவாரம் வரையில் என் மனதை விட்டு நீங்கவே இல்லை. அவ்வளவு பிடிவாதக்காரி. அவளை நினைத்தால் இரக்கம்தான் வருகிறதே தவிர கோபம் வரவில்லை. ஒரே ஒரு நாவல் எழுதினாலும் மார்கரெட் மிசெல் எவ்வளவு நன்றாக எழுதியிருக்கிறாள்!''

''ஆமாம் நானும் கேள்விப்பட்டேன். புத்தகத்தை வாங்கி வைத்தேனே தவிர படிக்கத்தான் நேரமே கிடைக்கவில்லை.''

நினைத்தது போலவே புத்தகத்தைப் பற்றிய பேச்சு எழுந்ததுமே விசாலி சமையலறைக்குப் போய்விட்டாள்.

''நீ தான் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே. வாழ்க்கை எவ்வளவு பிஸியாகி விட்டது பார்'' என்றான் விஸ்வம்.

'சினிமா பார்ப்பதை விட்டுவிட்டால் நிறைய நேரம் கிடைக்கும்' என்று சொல்லப் போனவள், அதைச் சொல்ல இது தருணமில்லை என்று நினைத்து சும்மாயிருந்தாள். ஆனாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிட மனமில்லை.

''அண்ணா! ஜெயாவைச் சந்தித்தேன். ரொம்பவும் இளை துப் போய்விட்டாள். உடல்நிலை சரியாக இல்லாமல் இருந் தாம். நீ அந்தப் பக்கமே வருவதில்லையாமே. அத்தை கூட உன்னைப் பற்றி விசாரித்தாள்.''

விஸ்வத்தின் முகத்தில் சட்டென்று மாறுதல் தோன்றியது உடனே சுதாரித்துக் கொண்டான். ''நான் என்ன செய்யட்டும்? நான் ஜெயா வீட்டுக்குப் போவது அவளுக்கு இல்லாத பொல்லாப்பு களை எல்லாம் கொண்டு வருகிறது. அவளுக்குக் கஷ்டத்தை உண்டாக்கக் கூடாதுன்னுதான் நான் அங்கே போவதை விட்டு விட்டேன். அடிக்கடி நீயாவது போய் பார்த்துவிட்டு வா. எதற்கும் நல்லது. உன் அண்ணியிடம் அவர்களைப் பற்றிப் பேச்செடு காதே. போக வேண்டாம்னு கண்டிக்கமாட்டாள். ஆனால் மனதில் கஷ்டப்படுவாள்.''

அண்ணிக்கு மனக்கஷ்டம் ஏற்படும் அளவுக்கு ஜெயா செய்த காரியம்தான் என்ன என்று கேட்க நினைத்தாள்.

''சுநீதா! தண்ணீர் கொதித்து விட்டது. வந்து வருணை குளிப்பாட்டி விடு.'' சமையலறையிலிருந்து கத்தினாள் விசாலி.

'ஒரு நிமிடம் தான் அண்ணாவுடன் தனியாகப் பேசினாலே சகித்துக் கொள்ள முடியாத அண்ணி ஜெயா விஷயத்தில் அவ்வாறு நடந்து கொண்டதில் ஆச்சரியம் என்ன இருக்கு?' நினைத்துக் கொண்டே எழுந்து உள்ளே போனாள் சுநீதா.

* * *

'அண்ணிக்குக் கொஞ்சம் கூட மூளையே இல்லை.' பத்தா வது தடவையாக நினைத்துக் கொண்டாள் சுநீதா.

விசாலியின் ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவர் இறந்துவிட்டார். அன்று பத்தாவது நாள். விசாலி காலையில் சீக்கிரமாக எழுந்து கொண்டு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் பொறுப்பை சுநீதாவிடம் ஒப்படைத்துவிட்டு அரக்கப் பரக்கத் தயாரானாள்.



''சுநீதா! உங்க அண்ணாவை எழுப்பிவிடேன். காபி கலந்து கொடு. எனக்கு லேட்டாகிறது. நான் கிளம்புகிறேன்.'' என்று சொல்லிவிட்டு அவசரமாகப் போய்விட்டாள்.

சுநீதாவுக்கு அண்ணியின் போக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. காலையில் விஸ்வம் விழித்துக் கொள்ளும் நேரத்தில் யாரையும் அந்த அறைக்குள் இருக்க விடமாட்டாள். எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும் சரி. காலையில் எழுந்து கொள்ளும் நேரத்தில் கணவன் வேறு யாருடைய முகத்தையும் பார்த்துவிடக்கூடாது என்பது அவளுடைய உத்தேசம் போலும். விஸ்வம் முகம் கழுவிக் கொண்டு ஹாலில் உட்கார்ந்து கொள்வான். விசாலி காபியுடன் பேப்பரையும் கொண்டு போய் கொடுப்பாள்.

''என் மனைவி காபி ரொம்ப நன்றாகக் கலப்பாள். காலையில் எழுந்ததும் அவள் கையால் கலந்த காபியைக் குடிக்காவிட்டால் எனக்கு அன்று முழுவதும் எதையோ இழந்து விட்டாற்போல் தோன்றும்'' என்பான் விஸ்வம் சமயம் கிடைக்கும் பொழு தெல்லாம்.

''காபி நான் கலந்து கொடுத்தால் தவிர அவருக்கு ருசிக்காது'' என்று சொல்லிக் கொண்டு உடல்நலம் சரியாக இல்லாவிட்டா லும் தானே கலந்து கொடுப்பாள் விசாலி.

மனைவி கலந்து தரும் காபியை பத்து பேருக்கு முன்னால் புகழ்ந்து பேசி அவளுடைய மனதைத் திருப்திப்படுத்துவான் விஸ்வம். அந்த விதமாக அவனுக்குக் காபி கலந்து கொள்ள வேண்டிய தேவை இதுவரையில் வந்ததே இல்லை. குடிக்க தண்ணீர் உள்பட சகலத்தையும் கையில் எடுத்துத் தருகிற மனை விக்கு ஒருநாள், ஒருவேளை தன் கையால் சாப்பாடு போட முடி யாத நிலை இருப்பதைக்கூடப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் தம்பதிகள் இவர்கள்.

சுந்தா தந்த காபியைப் பருகிக் கொண்டே திருப்தியாக தலையை அசைத்தான் விஸ்வம். ''காபி ரொம்ப நன்றாக இருக்கு. அப்படியே அம்மா போட்டுத் தரும் காபி போலவே இருக்கு.''

''ஆச்சரியமாக இருக்கு அண்ணா! அண்ணி கையால் போடும் காபியைத் தவிர வேறெதுவுமே உனக்கு ருசிக்காது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் சுந்தா.

''அதுவா!'' சிரித்து விட்டான் விஸ்வம். ''உண்மையில் எனக்கு இதுபோல் ஸ்ட்ராங்காவும், சக்கரை குறைவாகவும் இருக்கிற காபிதான் பிடிக்கும். உடம்புக்கு நல்லதில்லைன்று உங்க அண்ணி லைட் காபிதான் கொடுப்பாள்.''

''அப்படி என்றால் அந்த விஷயத்தைச் சொல்லி உனக்குப் பிடித்த விதமாக காபி கலந்து தரச் சொல்லலாம் இல்லையா?''

''அம்மாடியோவ்! உங்க அண்ணி செத்தாலும் ஒப்புக் கொள்ளமாட்டாள். அவள் சொல்வதிலும் தவறு இல்லையே. ஸ்டராங் காபி உடம்புக்கு நல்லதில்லை. என் நல்லதுக்காகவே அப்படிச் செய்கிறாள் என்று நான் மறுத்துச் சொல்லமாட்டேன். என்ன இருந்தாலும் சயின்ஸ் படித்தவள் இல்லையா?''

''ஆமாம் அண்ணா! சயின்ஸ் படித்து பாஸாகியிருக்கிறாள். ஆனால் குழந்தைகளுக்கு சயின்ஸ் பாடங்களைச் சொல்லித் தரு வதற்கு நேரமில்லை. ஆர்வமும் இல்லை. இன்றைக்குக் காலை யிலேயே எழுந்து கொண்டு எல்லா வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு அவங்க அண்ணியின் முகத்தைப் பார்ப்பதற்கு ஓடியிருக்கிறாள். ஏன் தெரியுமா? கணவனை இழந்த துக்கத்தில் இருக்கும் அவளுடைய நெற்றிக்குங்குமத்தை அழித்துவிட்டு, வெள்ளைப் புடவையை உடுத்தச் செய்து அவள் முகத்தைப் பார்த்துத் தன்னுடைய தாலிபாக்கியம் நிலைத்திருக்கணும் என்று வேண்டிக் கொள்வதற்காக போயிருக்கிறாள். உன் மனைவி



சயின்ஸ் படித்திருக்கிறாளே தவிர புரிந்து கொள்ளவில்லை'' என்றாள் சுந்தா ஆவேசமாக.

விஸ்வம் கொஞ்சநேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு தாழ்ந்த குரலில் சொன்னான். ''ஆவேசத்தை அடக்கிக் கொண்டு நான் சொல்வதைப் பொறுமையாக கேட்பாயா சுந்தா!''

''ஆவேசம் இல்லை அண்ணா! உள்ளக்குமுறல்! பட்டப் படிப்பு படித்திருக்கும் ஒரு பெண் இன்னொரு பெண்ணை விதவைக் கோலத்தில் பார்க்காவிட்டால் எதிர்காலத்தில் தனக்குக் கெடுதல் நடக்கும் என்ற மூடநம்பிக்கையில் போய்த்தான் ஆகணும் என்று பிடிவாதமாக கிளம்பிப் போனதைப் பார்த்தால் எனக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது.''

''அம்மா, பாட்டியின் வளர்ப்பின் பாதிப்பு விசாலிமீது நிறையவே இருக்கு. பத்தாம் பசலித்தனம் கொஞ்சம் அதிகம்தான். அதனால் வேறு யாருக்கும் எந்த கெடுதலும் இல்லையே?''

''இது யாருக்குமே தீங்கு செய்யாத சம்பிரதாயம் என்று நீ நினைக்கிறாயா அண்ணா?'' வியப்புடன் கேட்டாள் சுந்தா.

''விசாலியின் அண்ணி 'எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. இதையெல்லாம் நான் பண்ணிக் கொள்ளமாட்டேன்' என்று திட மாகச் சொல்லியிருந்தால் நான் மனப்பூர்வமாக அவளுக்கு ஆதரவு கொடுத்திருப்பேன். ஆனால் அவர்களே அதை மனப்பூர்வமாக நம்புகிறபோது நம்மால் என்ன செய்ய முடியும் சொல்லு?''

''எந்தப் பெண்ணாலேயும் தன் நெற்றிக் குங்குமம் அழிக்கப் படுவதையோ, அதைப் பத்துபேர் நின்று வேடிக்கைப் பார்ப் பதையோ சகித்துக் கொள்ள முடியாது அண்ணா! அவள் பயப் படுவது சுற்றிலும் உள்ள நாலு பேருக்காகத்தான். அந்த நாலு பேரில் குறைந்த பட்சம் ஒருத்தராவது தனக்குப் பக்கபலமாக இருப்பார்கள் என்று தெரிந்தால், இந்தத் தீய சம்பிரதாயத்தை

எதிர்க்கிற துணிச்சல் அவளுக்கு வந்து விடும். குறைந்தது ப
பெண்களாவது இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை கண்டிக்க
தவிர நம்மிடையே மாறுதல் வராதுன்னு எப்போதும் சொ
வாய். இப்போ இப்படிப் பேசுவதைப் பார்த்தால் ஆச்சரி
இருக்கு. உன்னிடம் இவ்வளவு மாறுதல் எப்படி வந்தது?"

"என்னிடம் மாறுபாடு தோன்றியிருப்பதாக நீ நினை
தவறு. நான் இப்போ கூட சொல்கிறேன். படித்த பெண்க
தான் சமுதாயத்தில் மாற்றங்களை கொண்டு வரமுடியும் என்
ஆனால் அவர்கள் மனப்பூர்வமாக நம்பினால்தான் அதைச் செ
படுத்த முடியும்."

"அண்ணியிடம் மாற்றத்தை ஏற்படுத்த நீ முயற்சி செ
வில்லையா?"

"அப்படிச் செய்தால் ஆண் என்ற அகம்பாவத்தினால் ந
உத்தரவிடுவதாக நினைத்துக் கொள்ளப் போகிறாளே என்
என் பயம். அப்படி வலுக்கட்டாயமாக அவள் மனதைக் கஷ்
படுத்தி என்னால் எதைச் சாதிக்க முடியும்? சுயமாக அவளி
மாற்றம் வந்தால் சந்தோஷப்படுவேன். ஆனால் மனதில் ஒன்
வைத்துக் கொண்டு மேலுக்கு எனக்காக மாறிவிட்டாற்போ
நடித்தால் என்னால் சந்தோஷப்பட முடியாது" என்றான் வி
அந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பது போல்.

சுந்தா மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. யோசனையி
ஆழ்ந்தாள். அண்ணன் சொல்வதிலும் உண்மை இருப்பது போ
தோன்றியது. ஏனோ தெரியவில்லை. அவளுக்குத் துக்கம் வந்த

* * *

ஸ்ருஜனாவையும், வருணையும் அருகில் உட்கார வை
துக் கொண்டு ஸ்க்ரேபுள் கேம் ஆடிக் கொண்டிருந்தாள் சுந்தா. கு
தைகளின் மனவளர்ச்சி விஷயத்தில் அண்ணன் தகுந்த அக்கறை
எடுத்துக் கொள்ளாததைக் கவனித்துவிட்டு தானே பாடங்களை

சொல்லிக் கொடுக்கத் தொடங்கினாள். அதோடு சில விளையாட்டுப் பொருட்களையும், பொது அறிவுப் புத்தகங்களையும் வாங்கி வைத்தாள்.

தினமும் ஒரு மணி நேரமாவது அவர்களோடு உட்கார்ந்து விளையாடச் சொல்லித் தந்தாள். ஸ்ருஜனாவுக்குப் படிப்பை விட விளையாட்டில்தான் அதிக அக்கறை இருந்தது. கேரம் மற்றும் செஸ் நன்றாக ஆடுவாள். தகுந்த ஊக்கமளித்தால் அந்த இரு விளையாட்டுகளிலும் நல்ல தேர்ச்சி பெற்று விடுவாள் என்று தோன்றியது.

வருண் படிப்பில் கெட்டிக்காரன். புத்திசாலி. ஸ்க்ரேபுள் விளையாட்டில் அவனுக்குத்தான் அதிகமாக பாயிண்டுகள் வரும். அதனால்தான் உற்சாகத்துடன் ஆடிக் கொண்டிருந்தான்.

"வருண்! கொஞ்சம் இங்கே வந்துவிட்டுப் போ." விசாலி சமையலறையிலிருந்தே குரல் கொடுத்தாள்.

"இரும்மா, வருகிறேன்." தன்னிடமிருந்த எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகளை அமைப்பதில் தீவிரமாக மூழ்கியிருந்த வருண் எரிச்சலுடன் சொன்னான்.

விசாலி அந்த இடத்திற்கே வந்துவிட்டாள்.

"அண்ணா இல்லையா அண்ணி? வருண் சீரியஸாக கேம் ஆடிக் கொண்டிருக்கிறான். அவனை எதுக்காக டிஸ்டர்ப் செய்யணும்?" என்று கேட்டாள் சுந்தா.

"அவர் டி.வி.யில் நியூஸ் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி அனுப்புவேன் அவரை? ஒரு மணி நேரமாக சமையலறையில் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். சீக்கிரமாக சமையலை முடித்துவிட்டு கொஞ்ச நேரமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்றால் ஒருத்தர் கூட சொன்ன பேச்சை கேட்க மாட்டேங்கிறாங்க. ரசத்திற்கு கொத்தமல்லி வேணும்."

"நான் போய் வாங்கி வருகிறேன். அவங்க விளையாடிக் கொண்டிருக்கட்டும்" எழுந்து போய் செருப்பை மாட்டிக் கொண்டாள் சுந்தா.

அண்ணன் நியூஸ் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்று சாக்கு சொல்கிறாள். உண்மையில் டி.வி.யில் நிகழ்ச்சிகள் தொடங்கியது முதல் முடியும் வரை ஓடிக் கொண்டே இருக்கும். செய்திகளை விட செய்தி வாசிப்பாளர் கட்டிக் கொண்டிருந்த புடவையைப் பற்றியும், அணிந்து கொண்டிருந்த நகைகளைப் பற்றியும்தான் பேசிக் கொண்டிருப்பார்கள். சிலருக்கு பட்டப்பெயர் சூட்டி எள்ளி நகையாடுவார்கள். அப்படி எவ்வளவு நேரமானாலும் விமர்சித்து பொழுதைக் கழிப்பார்களே தவிர குழந்தைகளுடன் பொழுதுபோக்க கொஞ்ச நேரத்தைச் செலவழிக்க மாட்டார்கள்.

கொத்தமல்லிக் கட்டை விசாலியிடம் தந்துவிட்டு ஹாலுக்கு வந்தாள் சுந்தா. டி.வி.யில் கர்நாடக இசை நிகழ்ச்சி தொடங்கியதும் சோபாவில் கண்களை மூடிச் சாய்ந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான் வில்வம்.

"அண்ணா! வீட்டு வேலைகளையும், கடைத் தெருவுக்குப் போய் சின்னச் சின்ன சாமான்களை வாங்கி வரும் வேலைகளையாவது நீ செய்யக் கூடாதா?" சுந்தா கேட்டுவிட்டாள்.

வில்வம் சிரித்தான். "நாற்பது வருஷமாக இல்லாத பழக்கத்தை இப்போ பண்ணிக் கொள்ளணுமா?"

"ஏன் கூடாது? [illegible] சின்ன வயதிலிருந்தே ஏற்பட்ட பழக்கமா என்ன?"

"பாரு சுந்தா! வீட்டு வேலைகளை செய்யாதது என் தவறு இல்லை. நான் எந்த வேலை செய்தாலும் அவளுக்குப் பிடிக்காது. அப்படியே நான் மார்க்கெட்டுக்குப் போனால், என் மூஞ்சியைப் பார்த்தாலே அழுகல் கத்தரிக்காய்களையும் வாடிப்போன கீரைக் கட்டையும் கொடுப்பான் காய்கறிக்காரன். என்ன பிரயோஜனம் சொல்லு?"

"காய்கறிகளைப் பொறுக்கி வாங்குவது பிரம்மவித்தை ஒன்றுமில்லை."

"என்ன? அண்ணன் தங்கை இருவரும் சண்டை போட்டுக்கறீங்க. என்ன விஷயம்?" விசாலி ஹாலுக்கு வந்து விட்டாள்.

"ஒன்றுமில்லை. உன்னை ரொம்ப கஷ்டப்படுத்துகிறேன் என்றும், வீட்டு வேலைகளில் உதவி செய்வதில்லை என்றும் சுந்தா என்னைக் கண்டிக்கிறாள்."

"இதில் கண்டிப்பதற்கு என்ன இருக்கு? அத்தை சிறுவயதிலிருந்தே அப்படி வளர்த்து விட்டாள். இப்போ நான் வேலை வாங்க முடியுமா? ஆனாலும் எங்களுக்கு இல்லாத வருத்தம் உனக்கெதுக்கு? உன்னிடம் சின்ன வேலையை ஒப்படைத்ததற்கா? இனி ஒருபோதும் வேலை செய்யச் சொல்ல மாட்டேன். சரி தானே" என்றாள் கடுமையாக.

தான் சொன்னதை விசாலி அந்த விதமாக தவறாகப் புரிந்து கொள்வாள் என்று சுந்தா எதிர்பார்க்கவில்லை. உடனே வில்வம் பக்கம் பார்த்தாள். தலைகுனிந்தபடி உள்ளூர சிரித்துக் கொண்டிருந்தான் அவன்.

"நான் அந்த உத்தேசத்தில் சொல்லவில்லை. ஏதாவது வேலை இருந்தால் என்னிடம் சொல்லு. படித்துக் கொண்டிருக்கிற பசங்களை கடைக்கு அனுப்பாதே." சுந்தா எழுந்து உள்ளே போய் விட்டாள். அவளுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. அண்ணி அப்படிச் சொன்னதற்காக இல்லை. வில்வம் இப்படி சந்தர்ப்பவாதியாக மாறிப்போய் விட்டதற்கு. தவறு அவன் மீது இல்லை. அவனை அவ்வாறு உருவாக்கிய விசாலியின் மீதுதான். அவள் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாள்? கணவன் மீதுள்ள அன்புதான் காரணமா? பாட்டி அவளுக்குக் கற்றுக் கொடுத்த பதி பக்தியா? அந்தக் கேள்விகளுக்குப் பதில் சில நாட்களுக்குப் பிறகு தெரிந்தது அவளுக்கு.

## 3

ரம்ஜான் காரணமாக அன்று விடுமுறை. சாதாரணமாக விடு முறை நாட்களில் இரண்டு மூன்று சினிமா கேஸெட்டுகளை வாங்கி வந்து நண்பர்களுடன் சேர்ந்து சினிமா பார்ப்பார்கள். எதிர்பாராத விதமாக விஸ்வம் ஆபீஸ் வேலையாக வெளியூருக்குப் போய்விட்டதால் வீடு அமைதியாக இருந்தது.

சாப்பாடு முடிந்து ஒய்வாக உட்கார்ந்தபோது விசாலி நல்ல மூடில் இருப்பதைக் கவனித்து சுநீதா கேட்டாள். "அண்ணி! கோபித்துக் கொள்ளாமல் இருந்தால் நான் ஒன்று கேட்கட்டுமா?"

"கோபம் எதுக்கு? எனக்கு முன்கோபம் அதிகம்தான் என்றாலும் அது கொஞ்ச நேரம்தான். அப்புறமாக எல்லாவற்றை யும் மறந்துவிடுவேன். என்ன விஷயம்?"

"இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான பிறகும் அண்ணா விடம் வீட்டுப் பொறுப்புகளை ஒப்படைக்காமல் எல்லா வேலைகளையும் நீயே செய்கிறாயே. ஏன்? நான் நினைக்கிறேன் உனக்கு அண்ணாவிடம் அளவுகடந்த அன்பு என்று. அப்படித் தானே?"

"வாழ்ந்தது போ. ஒவ்வொரு பெண்ணிற்கும் தன் கணவன் மீது கொஞ்சமாவது அன்பு இல்லாமல் போகாது. ஆனால் கணவனை நம் கைக்குள் வைத்துக் கொள்ளணும் என்றால் அவன் முற்றிலும் நம்மீது ஆதாரப்பட்டுக் கொண்டு இருக்கும்படி செய்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எந்தச் சூழ்நிலையிலும் அவன் நம்மை விட்டுப் போக மாட்டான். என்ன இருந்தாலும் ஆண் கள் இல்லையா? அவர்களுடைய மனம் அலைபாய்ந்து கொண்டு தான் இருக்கும். நாம்தான் கவனமாக இருக்கணும். இந்த சூட்சு மத்தை பாட்டிதான் எனக்குச் சொல்லித் தந்தாள். என் அனுபவத் தில் அது நூற்றுக்கு நூறு உண்மையாகிவிட்டது."



"கணவன் மனைவியின் பந்தம் அவ்வளவு பலவீனமானது என்கிறாயா? வீட்டுவேலை செய்யச் சொன்னாலே பிரிந்து போய் விடுவார்கள் என்று நீ சொல்வதை என்னால நம்ப முடியவில்லை. அதுவும் அண்ணா நன்றாகப் படித்தவன், தர்க்கரீதியில் யோசிப் பவன். அவன் அவ்வளவு பலவீனமாகிவிடுவான் என்று சொன்னால் என்னால் நம்பமுடியாது."

"என்ன இருந்தாலும் ஆண்கள் ஆண்கள்தான். அவர்களுடைய புத்தியும் அப்படிப்பட்டதுதான். அதனால்தான் நம் ஜாக்கிரதையில் நாம் இருக்கணும். நீ உன் கணவனைத் தனியாக வெளிநாட்டிற்கு அனுப்பியது கூட எனக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது நடந்தால் அப்புறமாக வருத்தப்பட வேண்டியது நீதான். நான் இப்படிச் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதே. உண்மையைச் சொல்கிறேன். நீ எதுக்காக அவருடன் போகவில்லை?"

"அவர் போயிருப்பது அரபு நாட்டுக்கு. பெண்கள் வெளியே வருவதற்குக் கூட சுதந்திரம் இல்லை அங்கே. நான்கு சுவர்களுக் குள் மக்கிப் போக வேண்டியதுதான். வெளியே போக வேண்டு மென்றால் பர்தா அணிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னால் இருக்க முடியாது."

"அப்படி நினைத்தால் எப்படி? நானாக இருந்தால் செத்தா லும் என் கணவனை விட்டுவிட்டு அதிகநாள் இருக்கமாட்டேன். ஏதோ கொஞ்சநாள் என்றால் பரவாயில்லை. அதுவும் வேறு வழியில்லாத பட்சத்தில்தான். விசாலி மேலும் ஏதோ சொல்லப் போனபோது எதிரே கதவிற்கு அருகில் அவளுடைய பாட்டி தென்பட்டாள். தன் வயதைக் கூட மறந்துபோய் வேகமாக ஓடிப் போய் "பாட்டி!" என்று கட்டிக் கொண்டாள் விசாலி.

சுநீதா ஒப்பிற்கு அவர்களோடு உட்கார்ந்துவிட்டு அவர்கள் ஊர்வம்பு பேசத் தொடங்கியதும் எழுந்து தன் அறைக்குள் சென்று விட்டாள். அவள் மனதில் ஏமாற்றமும், வருத்தமும் பரவியிருந்தன.

பாட்டி வந்த பிறகு அந்த வீட்டின் நிலைமை இன்னும் மோசமாக தென்பட்டது சுநீதாவுக்கு.

''என்னடி பெண்ணே? உன் புருஷனை தனியாக வெளி நாட்டுக்கு அனுப்பி விட்டாயாமே? எவளாவது வலையில் போட்டுக் கொண்டு விட்டால். என்ன செய்வாய்? மனைவி என்றால் புருஷனைக் கவர்ந்து வைத்திருக்கணும். இல்லாவிட்டால் தறிக்கெட்டுப் போய்விடுவான். எங்க விசாலியைப் பாரு. ஒருநாள் அவள் இல்லை என்றால் கூட விஸ்வம் தவித்துப் போய்விடுவான். அவள் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான். அப்படி முந்தானையில் முடித்து வைத்துக் கொள்ளணுமே ஒழிய தனியாக அனுப்பி வைப்பார்களா?''

''விட்டுத் தள்ளுங்க பாட்டி. தும்மினால் கழன்று விடும் மூக்கு எவ்வளவு நாளைக்குத்தான் இருக்கும். சட்டத்தின் படி மனைவி என்ற ஸ்தானம் எங்கேயும் போய்விடாது. அப்படி அவர் வேறு யாரையாவது அழைத்து வந்து விட்டால் என்னால் என்ன செய்ய முடியும்? என் வாழ்க்கையை நான் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.'' சுநீதாவுக்கு உடல் எரிவது போல் பற்றிக் கொண்டு வந்தது.

''அதெல்லாம் விதண்டாவாதம். இந்தத் திமிர்ப் பேச்சுதான் கூடாது. ஆண் துணையில்லாமல் இந்த சமுதாயத்தில் ஒரு பெண் தனியாக வாழமுடியாது. எதாவது குளமோ குட்டையோ பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.'' பாட்டி நீட்டி முழக்கினாள்.

'உங்களைப் போன்ற பெண்கள் இருக்கும் சமுதாயத்தில் அதைவிட வேறென்ன பரிகாரம் இருக்க முடியும்?' என்று சொல்லப் போனவள் நிறுத்திக் கொண்டாள், விஸ்வம் வருவதைப் பார்த்துவிட்டு. அவன் தனக்கு சப்போர்ட் செய்து பேசுவான் என்ற நம்பிக்கை இப்போ போய்விட்டது.

* * *



''அண்ணி! நான் நான்கு நாட்கள் ஜெயா வீட்டில் தங்கி விட்டு வரலாம்னு இருக்கேன்.'' சுநீதா சொன்னாள்.

''எதுக்கு?'' விசாலி நெற்றியைச் சுளித்தாள்.

''ஒன்றுமில்லை. போனமாதம் உனக்கு விஷயத்தைச் சொல்லவில்லைன்னு வீட்டையெல்லாம் கழுவி மஞ்சள் தண்ணீரைத் தெளித்தாய். அந்தக் கஷ்டத்தை உனக்குக் கொடுக்க வேண்டாமே என்றுதான்.''

விசாலி அந்த விஷயத்தில் ரொம்பவும் ஆசாரம் பார்ப்பாள். அதனால் மறுத்துச் சொல்லவும் முடியவில்லை. கொஞ்ச நேரம் யோசித்து விட்டு பிறகு சொன்னாள். ''உனக்குத் தெரியாது சுநீதா! அந்த ஜெயா நல்லவள் இல்லை. அதனால்தான் யோசித்தேன். அவள் உங்க அண்ணனை வலையில் போட்டுக் கொள்ள முயன்றாள். கல்யாணம் கார்த்திஎதுவும் இல்லை. என் குடித்தனத்தைக் குலைக்க கங்கணம் கட்டிக் கொண்டாள்.''

''ஜெயாவா அப்படிச் செய்தாள்?'' வியப்புடன் கேட்டாள் சுநீதா. விஸ்வம் அண்ணாவின் பெயரை எடுத்ததுமே ஜெயாவின் முகம் வாடிவிட்டதும், அத்தை சொன்ன வார்த்தைகளும் நினைவுக்கு வந்தன.

''ஆமாம். உங்க ஜெயாவேதான். எங்கள் கல்யாணம் ஆன புதிதில் யாருடனோ சுற்றிக் கொண்டிருந்தாள் என்று கேள்விப் பட்டேன். பிறகு என்ன நடந்ததென்று தெரியவில்லை. அவன் டிமிக்கி கொடுத்துவிட்டு போய்விட்டான் போலிருக்கு. உங்க அண்ணன்தான் அப்பாவி ஆச்சே. அவரை தன் பக்கம் இழுத்துக் கொள்ளப் பார்த்தாள்.''

''ஜெயாவுக்கு அண்ணாவின் மேல் ரொம்ப இஷ்டம் என்று எனக்கும் தெரியும். அதற்காக இப்படி கீழ்த்தரமாக நடந்து கொள்வாள் என்றால் என்னால் நம்பமுடியவில்லை. நீ தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய் அண்ணி!''

''அவள் எழுதிய காதல் கடிதங்களைக் காண்பிக்கட்டுமா? உங்க அண்ணாவின் கைபட்டுவிட்டால் பரவசமுண்டாகிறதாம். அவருடைய அணைப்பில் கரைந்து போய்விடணும்னு தவிப்பாக இருக்கிறதாம். எவ்வளவு அசிங்கமாக எழுதியிருக்கிறாள் தெரியுமா? தினமும் உங்க அண்ணன் வீட்டுக்குத் தாமதமாக வருவதைப் பார்த்துவிட்டு என்னவோ ஏதோன்னு இருந்தேன். அப்புறமாகத்தான் தெரிந்தது. போனில் கூப்பிட்டு ஒருதடவை வந்து போகச் சொல்லி ஒரே அழுகையாம்.''

''அப்படி என்றால் அண்ணாவின் ஒத்துழைப்புக் கூட இருக்குன்னு சொல்லு. அண்ணா என்ன சொல்கிறார்?''

''அவர் என்ன சொல்லுவார்? பண்ணினதெல்லாம் அவள் தானே. கல்யாணம் செய்து கொள்ள வேறு ஆணே கிடைக்காதது போல் கல்யாணம் ஆன ஆணின் பின்னாடியே சுற்றிச் சுற்றி அலைகிறாள். ஒருநாள் நேரில் போய் நன்றாக உலுக்கி எடுத்து விட்டேன். அதற்குப் பிறகு விட்டுவிட்டாள். அதனால்தான் நீ அங்கே போவது எனக்குப் பிடிக்கவில்லை. சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்ததால் சொல்லிவிட்டேன். அதற்குப்பிறகு உன் விருப்பம். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் இன்னொன்றைப் பேசும் ஆள் இல்லை நான். அதனால்தான் வெளிப்படையாகச் சொல்கிறேன்.''

சுநீதாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. மனதில் இருப்பதை அப்படியே வெளியில் கொட்டுவதை சிலர் உயர்ந்த குணமாக நினைத்துக் கொள்வார்கள். விசாலியும் அந்தப் பிரிவைச் சேர்ந்தவள்தான்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது அண்ணி! அண்ணாவிடம் கேட்டபோது உன்னைக் கேட்டுக் கொண்டு போகச் சொன்னார். இப்போ நான் போகாமல் இருந்தால் நீ தான் வேண்டாம்னு சொன்னதாக நினைத்துக் கொள்வாரோ என்னவோ'' என்றாள் சாமர்த்தியமாக.



''அப்படியென்றால் சரி. போயிட்டு வா. ஆனால் நீ எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும்.''

''என்ன?''

''ஜெயாவைப் பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. அதனால் சொன்னேன். உங்க அண்ணாவிடம் மட்டும் நான் இதுபோல் சொன்னதாக சொல்லி விடாதே. வருத்தப்படுவார் என்று நான் கூட அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே மாட்டேன்.''

''சரி அண்ணி! எனக்கும் தெரியும். இதெல்லாம் ரொம்பவும் நுட்பமான விஷயங்கள்.''

விசாலி உள்ளே போனபிறகு யோசனையில் ஆழ்ந்தாள் சுநீதா. ஜெயாவைப் பற்றி அவளுக்கு சிறுவயது முதல் நன்றாகத் தெரியும். விஸ்வம் அண்ணன் மேல் அவளுக்கு அன்பு இருந்தது உண்மை தான். ஆனால் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்துகொள்ள எப்படி முனைந்தாள்? இதில் அண்ணனின் ஒத்துழைப்பு எந்த அளவுக்கு இருந்தது? விசாலி ஒரு கோணத்திலிருந்து மட்டுமே பார்த்து ஜெயாவை குறை சொன்னாள். உண்மையில் நடந்தது என்ன வென்று ஜெயாவிடமே கேட்க வேண்டுமென்று சுநீதா தீர்மானித்துக் கொண்டாள்.

* * *

''விசாலி உன்னிடம் இதைப் பற்றிப் பேச்செடுப்பாள் என்றும், என்றாவது ஒருநாள் நீ இந்தக் கேள்வியைக் கேட்பாய் என்றும் எனக்குத் தெரியும். நீ கேட்காமலேயே சொல்லணும் என்று நினைத்திருந்தேன். ஆனால் உனக்கு விஸ்வம் அண்ணன் மேல் மலையத்தனை நம்பிக்கை. அவர்களுடைய தாம்பத்தியத்தை யாருமே குறை சொல்ல முடியாது என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறாய். என் பேச்சைக் கேட்பாயோ மாட்டாயோன்னு சந்தேகப்பட்டேன்.'' சுநீதா கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னாள் ஜெயா.

சுந்தா சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

''நான் செய்ததில் என் தவறு என்ன இருந்ததுன்னு எனக்கே புரியவில்லை சுந்தா! எல்லாவற்றையும் கேட்டுவிட்டு 'ஏன் இவ்வளவு முன்யோசனை இல்லாமல் நடந்து கொண்டாய்? அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்' என்று நீ சொன்னால் அதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. இதில் என் பொறுப்பைவிட விஸ்வம் அத்தானின் பொறுப்புதான் அதிகமாக இருக்கு. நான் ஒரு பெண் என்பதால் தவறு முழுவதும் என்னுடையதுதான் என்று விசாலியைப் போல் நீயும் என்னைக் குற்றம் சாட்டினால் என்னால் எந்த விளக்கமும் தரமுடியாது'' என்று தொடங்கி நடந்ததையெல்லாம் சொன்னாள் ஜெயா.

## 4

ஜெயா சிறு வயது முதல் விஸ்வத்திடம் மனதைப் பறிகொடுத்தாள். அதற்குக் காரணமும் விஸ்வம்தான். அவளைத் திருமணம் செய்து கொள்வதாக அடிக்கடி அவளிடம் சொல்லி வந்தான். அதைப் பெரியவர்களிடம் சொல்ல எண்ணியிருந்த சமயத்தில் விசாலி செய்த ரகளையும் அதைத் தொடர்ந்து அவர்கள் திருமணமும் நடந்து முடிந்து விட்டன.

சிறு வயது முதல் பேசி வந்த விஷயம் என்றும், பெரியவர்களின் வற்புறுத்தலுக்குப் பணிய வேண்டி வந்தது என்றும் விஸ்வம் கண்ணீர் மல்க சொன்னபோது ஜெயா நம்பி விட்டாள். பெண்கள் கண்ணீர் விட்டால் ஆண்கள் உருகி விடுவார்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் ஒரு ஆண் கண்ணீர் வடித்தால் உருகாத பெண்தான் யார்? அதற்கு முன்பே அவ்விருவரும் உடலளவில் நெருங்கிவிட்டிருந்தார்கள். ஆனாலும் தான் மனப்பூர்வமாக நேசித்த விஸ்வம் அத்தான் இக்கட்டில் ஆழ்ந்துவிடாமல் இருப்பதற்காக ஜெயா விலகிக் கொண்டாள். விசாலி மட்டும் ஜெயா எப்போது



கண்ணில் பட்டாலும் மறைமுகமாக குத்திக் காட்டிப்பேசுவாள். விஸ்வத்தை மனப்பூர்வமாக காதலித்த ஜெயா வேறு யாரையுமே மணந்து கொள்ளாமல் இருந்து விட்டாள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் விஸ்வம் கடைத்தெருவில் தென்பட்டபோது காபி குடிப்போம் என்று சொல்லி அவளை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். அவள் மீதுள்ள காதல் வற்றிவிடவில்லை என்றும், பெரியவர்களின் வார்த்தையை மீற முடியாமல் விசாலியை மணந்து கொண்டாலும் அவளால் தனக்கு எந்த சுகமும் இல்லை என்றும் சொன்னான். ஜெயா அவன் சொன்னதை அப்படியே நம்பிவிட்டாள். விசாலி தன் பத்தாம் பசலித்தனமான நடத்தையால் அவனுடைய கொள்கைகளை நசுக்கி விடுகிறாள் என்றும், ஏதாவது சொல்லிவிட்டால் ரகளை செய்கிறாள் என்றும், அதனால் கூடியவரையிலும் அவன் வெளியே நண்பர்களுடனேயே கழித்து விட்டு வருவதாகவும் சொன்னான். தொடர்ந்து ஜெயா வீட்டிற்கு அடிக்கடி வரப்போகத் தொடங்கினான். அவளுடன் இருக்கும் அந்த கொஞ்ச நேரம்தான் மனதிற்கு அமைதி கிடைப்பதாகச் சொன்னான். அப்படிச் சொன்ன பிறகு அவன் வருகையைத் தடை செய்ய முடியவில்லை அவளால்.

இதயத்தின் ஆழத்தில் புதைந்து வைத்திருந்த அவள் அன்பை பேசிப் பேசி மயக்கி மறுபடியும் வெளியே கொண்டு வந்து விட்டான் விஸ்வம். அவனுடைய நிம்மதியை வேண்டித்தான் ஒருகாலத்தில் அவனிடமிருந்து விலகினாள் அவள். அவனுக்கு சுகம் தருவதற்காகவே மறுபடியும் இப்பொழுது நெருக்கமாகிவிட்டாள்.

''விசாலியும் என்னைக் காதலிக்கிறாள் உண்மைதான். நான் அவளுடைய கணவன் என்பதால் அவளுக்கு என் மீது அன்பு. நான் அவளைத் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லியிருந்தால் வேறு யாரையாவது மணந்து கொண்டு அவனைக்கூட இதே அளவிற்கு நேசித்திருப்பாள். அதாவது அவள் கணவன்

ஸ்தானத்தில் உள்ள ஆணை காதலிக்க வேண்டும் என்ற சம்பி
தாயத்தை கடைபிடிக்கிறாள். அவ்வளவுதான். ஆனால் எந்
உறவும் அல்லாத எனக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்து
கொண்ட உனக்கு முன்னால் அவள் அன்பு கால் தூசுக்குச் சம
காது. நான் மிகவும் அதிர்ஷ்டசாலி.'' இதுபோன்ற வசனங்க
நிறைய சொல்லுவான் விஸ்வம்.

தன் காதலையும், தியாகத்தையும் அவன் உணர்ந்து கொண்ட
தற்கு ஜெயா பூரித்துப் போய் விட்டாள். தன்னையே அவனிடம்
ஒப்படைத்து விட்டாள். வீட்டில் தான் தனியாக இருக்கும்
போதெல்லாம் போன் செய்து அவனை வரச்சொல்லுவாள்
அவளுடைய தாய் ஊருக்குப் போன போதெல்லாம் விஸ்வம்
கேம்பிற்குப் போவதாக வீட்டில் பொய் சொல்லிவிட்டு ஜெயா
விடம் வந்து விடுவான். இரண்டு மூன்று நாட்கள் அவளுடன்
உல்லாசமாக கழிப்பான். யாருக்கும் சந்தேகம் வராதபடி ஒரு
வருடம் ஓடிவிட்டது.

ஒரு நாள் ஜெயாவின் தாய் வீட்டில் இல்லை. அன்றைக்கு
விஸ்வம் வருவதாகச் சொல்லியிருந்தான். அவன் சொன்ன நேரத்
திற்குத் தயாராக வீட்டிலேயே காத்திருந்தாள் ஜெயா. கதவைத்
தட்டிய சத்தம் கேட்டு அரக்கப் பரக்கப்போய்த் திறந்தாள். எதிரே
விசாலி நின்று கொண்டிருந்தாள். ஜெயா பயந்து விட்டாள்.
விஸ்வம் எந்த நேரத்திலும் வரக்கூடும். விசாலி நேராக விஷயத்
திற்கு வந்தாள். ஜெயா எழுதிய கடிதங்களைக் காட்டிவிட்டு ஏன்
எழுதினாய் என்று உலுக்கி எடுத்தாள். சிறு வயதிலிருந்தே
அவனைக் கைப்பற்ற திட்டம் போட்டு, அது சாத்தியமாகாததால்
பழி தீர்த்துக் கொள்வதற்காக இப்படிச் செய்கிறாய் என்று குற்றம்
சாட்டினாள். ''ஏதாவது மருந்து மாயம் வைத்திருப்பாய். இல்லா
விட்டால் அவர் இவ்வாறு நடந்து கொள்ளக்கூடியவர் இல்லை''
என்றாள். விஸ்வம் போன்ற உயர்ந்த பண்பு கொண்டவனை
கெடுத்ததற்காக வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தாள்.



ஜெயா எதற்குமே பதில் சொல்லவில்லை. தன் கணவனுடன்
சம்பந்தத்தைத் துண்டித்துக் கொள்ளாவிட்டால் உறவினர்களை
எல்லாம் கூப்பிட்டு ஜெயா எழுதிய கடிதங்களை வெளிப்படுத்து
வதாக மிரட்டினாள். விஸ்வம் ஊரிலிருந்து வந்ததுமே அவனிடம்
இந்த விஷயத்தைக் கேட்டு உண்டு இல்லை என்று முடிவு
கட்டப் போவதாக கத்திவிட்டுப் போய்விட்டாள்.

விசாலி அந்தப் பக்கமாகப் போனதுமே விஸ்வம் இந்தப்
பக்கமாக வந்தான். ''விசாலி எதுக்காக இங்கே வந்தாள்? ஏன்
அவ்வளவு கோபமாகப் போகிறாள்?'' என்று கேட்டான். விசாலி
அவனைப் பார்க்கவில்லை என்று தெரிந்ததும் ஜெயா நிம்மதியாக
மூச்சு விட்டுக் கொண்டாள். இப்படிப்பட்ட சூழ்நிலை வரக்
கூடும் என்று அவள் முன்பே ஊகித்துத்தான் இருந்தாள். விஸ்
வத்தை ஆழமாக நேசித்த ஜெயா எந்தச் சூழ்நிலை வந்தாலும்
எதிர்த்து நிற்கத் தயாராகத்தான் இருந்தாள்.

விசாலி சொன்ன விஷயங்களையெல்லாம் விஸ்வத்திடம்
தெரிவித்தாள் ஜெயா. தனக்குத்தான் வேறு வழியில்லை. ஆனால்
விசாலி விஸ்வத்தை எந்த பாடு படுத்துவாளோ என்று பயந்தாள்.
கொஞ்ச நேரம் கழித்து வீட்டிற்குப் போவதாகச் சொல்லிவிட்டு
கிளம்பினான் விஸ்வம். அன்றிரவு அங்கே தங்கவில்லை. மூட்
சரியாக இல்லாதபோது தங்குவதால் என்ன பிரயோஜனம்?

நான்கு நாட்களாக அவனிடமிருந்து எந்தப் பதிலுமே
இல்லை. ஜெயா ரொம்ப கவலைப்பட்டாள். அங்கே என்ன
நடந்து கொண்டிருக்கிறதோ என்ற கவலையில் அவளுக்கு ஜுரம்
கூட வந்துவிட்டது. போன் செய்தபோது விஸ்வம் ஆபீசுக்கும்
வரவில்லை என்று தெரிந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு கண்ணில் பட்டான் அவன்.
விசாலி தன்னை ஒரு வார்த்தைக் கூடச் சொல்லவில்லை என்றும்
அதைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை என்றும் சந்தோஷ

மாகச் சொன்னான். தன் மனைவி ஜெயாவை அப்படி வாய்க்கு வந்தபடி பேசியதற்கு அவன் வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. தன் மேல் மனைவிக்கு அளவுகடந்த அன்பு என்பதால் தன்னை ஒன்றுமே சொல்லவில்லை என்று சந்தோஷமடைந்தான். மனைவி காட்டிய உதாரகுணம் அவனை அவள் பக்கமாக ஈர்த்துக் கொண்டுவிட்டது. மெல்ல மெல்ல ஜெயா வீட்டிற்கு வருவதைக் குறைத்துக் கொண்டான். ஏதாவது நொண்டிச் சாக்குகளைச் சொல்ல ஆரம்பித்தான்.

அதுவரையில் சொல்லிவிட்டு ஜெயா கடைசியில் சொன்னாள். "அத்தான் என்னிடம் வந்து தன் கஷ்டத்தைச் சொல்லியிருந்தால் நானே சந்தோஷமாக அவரை விட்டு விலகியிருப்பேன். அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து சந்தோஷமாகவே இருக்கிறார்கள். என்னை மட்டும் குற்றவாளியாக நிற்க வைத்துவிட்டார்கள். என்னைப் பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அது தான் என் மனதை மிகவும் பாதித்துவிட்டது. உடல்நலம் முற்றிலும் பாழாகி விட்டது. தேறிக் கொள்வதற்கு இவ்வளவு நாளாகி விட்டது."

"விஸ்வம் அண்ணன் மீது எனக்கு மிகவும் உயர்ந்த அபிப்பிராயம் இருந்து வந்தது. அவர் இப்படி மாறுவார் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை" என்றாள் சுநீதா.

"விசாலியை குறை சொல்லி பிரயோஜனம் இல்லை சுநீதா! உங்க அண்ணா ஒன்றும் சின்னப் பையன் இல்லை. அப்பாவியும் இல்லை. அவரிடமுள்ள குறை என்ன தெரியுமா? கோழைத்தனம்! அதுதான் அவரைக் கொஞ்சம் கொஞ்சமாக கொன்றுவிடுகிறது."

விஸ்வத்திடமிருந்து அந்தக் கோழைத்தனத்தைச் சில நாட்களிலேயே கண்கூடாக கண்டாள் சுநீதா.

ஒருநாள் ஆபீஸிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாள் அவள். வழியில் விஸ்வம், விசாலி உட்கார்ந்திருந்த ஸ்கூட்டர் அவளைத் தாண்டிச் சென்றது. அவள் பார்த்துக் கொண்டிருந்தபோதே பக்கத்து சந்திலிருந்து வேகமாக வந்த சைக்கிள்காரன் ஸ்கூட்டரில் மோதி கீழே விழுந்து விட்டான். சுநீதா அந்த இடத்தைப் போய்ச் சேருவதற்குள் பெரிய கும்பல் சேர்ந்து விட்டிருந்தது. சைக்கிள்காரன் தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. தவறு அவனுடையதாக இருந்தாலும் மக்கள் வழக்கம்போல் விஸ்வத்தைத்தான் திட்டிக் கொண்டிருந்தார்கள். விஸ்வம் பொம்மை போல் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே இருந்த அத்தனை ஆண்களையும் எதிர்த்து நின்று உரத்தக் குரலில் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள் விசாலி. அவள் மட்டும் இல்லை என்றால் அத்தனைபேரும் சேர்ந்து விஸ்வத்தை அடித்துப் போட்டிருப்பார்கள். அவனுடைய கோழைத்தனத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் மேலும் குரலை உயர்த்தினார்கள். ஒருவன் வந்து சட்டையின் காலரைப் பிடித்தான். அப்பொழுதும் விஸ்வம் வாயைத் திறக்கவில்லை. பயந்து போனவனாக தலை குனிந்து கொண்டிருந்தான்.

ஆண்களில் கோழைத்தனம் அரிது ஒன்றுமில்லை. ஆனால் இவ்வளவு கையாலாகாதவனாக மிரள மிரள விழிக்கும் ஆண் மகனை சுநீதா எங்கேயும் பார்த்ததில்லை. கடைசியில் எப்படியோ அவர்களோடு சமாதானம் பண்ணிக் கொண்டு ஐம்பது ரூபாயை சைக்கிள்காரனின் கையில் வைத்துவிட்டு அந்த ஆபத்திலிருந்து விஸ்வத்தை மீட்டுவிட்டாள் விசாலி.

"அண்ணா! தவறு முழுவதும் அந்த சைக்கிள்க்காரன் மேல் தான். ராங் சைடில் வந்தான் அவன். அங்கே இருந்த மக்கள் எல்லோரும் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். போலீஸில் புகார் கொடுப்பதாக சொல்லியிருந்தால் விஷயம் முடிந்திருக்குமே. ஏன் அப்படி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் நின்று கொண்டிருந்தாய்?" வீட்டிற்கு வந்ததுமே அண்ணாவிடம் கேட்டாள் சுநீதா. அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

விஸ்வம் தர்மசங்கடத்துடன் பார்த்தான். உடனே சுதாரித்துக் கொண்டு "எனக்காகவும் சேர்த்து உங்க அண்ணிதான் பேசிவிட்டாளே. அவள் பக்கத்தில் இருந்தால் நான் வாயைத் திறக்க வேண்டிய அவசியமே இருக்காது." சிரித்துக் கொண்டே சொன்னான்.

"அப்படிப்பட்ட குப்பத்து ஆட்களிடம் உங்க அண்ணாவால் என்ன பேசமுடியும்? ஏற்கனவே மென்மையான மனம் அவருக்கு. நானாக இருக்கக் கொண்டு ஐம்பது ரூபாயோடு போச்சு. அவராக இருந்தால் அவனை டாக்டரிடம் அழைத்துச் சென்று கட்டுப்போட வைத்து, சைக்கிளையும் ரிப்பேர் செய்ய வைத்து நூறோ இருநூறோ கையில் தந்து எந்த நள்ளிரவிலோ வீட்டிற்கு வந்து சேர்ந்திருப்பார்" என்றாள் விசாலி, தன் கணவன் எவ்வளவு கையாலாகாதவனோ என்று அவனுக்கு முன்னாடியே ஹாஸ்யமாக சொல்லிக் கொண்டே.

"பக்கத்தில் அண்ணி இல்லை என்றால் அப்படித்தான் செய்திருப்பாயா அண்ணா?" சுந்தாவும் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"ஏதோ ஒன்றைச் செய்திருப்பான். இப்போ இந்த பேச்செல்லாம் எதுக்கு? ஏற்கனவே களைத்துப் போய் வீட்டிற்கு வந்திருக்கிற ஆளைப் பிடித்துக் கொண்டு இப்படியெல்லாம் கேட்கிறாயே" அங்கேயே இருந்த பாட்டி சலித்துக் கொண்டாள். விசாலியின் முகம் ஏற்கனவே கடுகடுவென்று மாறிவிட்டிருந்தது.

சுந்தா விஸ்வத்தின் பக்கம் பார்த்தாள். அந்த உரையாடலில் பங்கேற்றுக் கொள்ள விருப்பம் இல்லாதவன் போல் பேப்பருக்குள் தலையைப் புதைத்துக் கொண்டிருந்தான். சுந்தா அங்கே உட்காரப் பிடிக்காமல் உள்ளே போய் விட்டாள்.

ஒரு ஆணின் தனித்தன்மையை சகுனி போன்ற சாமர்த்தியம் கொண்ட மனைவி கொஞ்சம் கொஞ்சமாக எப்படி அழித்து விடுவாள் என்பது சுந்தாவுக்கு அந்த நிமிடமே புரிந்து விட்டது.

★ ★ ★



உலகம் முழுவதும் திருமணம் என்ற அமைப்பு ஏறக்குறைய ஒரே சமயத்தில் தோன்றியிருந்தாலும் ஆசியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் அது இன்னும் நீடித்து இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில் மதத்திற்கு சம்பந்தப்பட்ட நம்பிக்கைகள் அஸ்திவாரமாக அமைந்து விட்டன.

"திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. யாருக்கு யார் என்ற முடிச்சு அங்கேயே போடப்படுகிறது. நம் கையில் எதுவும் இல்லை" இது ஒரு நம்பிக்கை.

விஸ்வம் ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கோ, அபிப்பிராயத்திற்கோ கட்டுப்பட்டு வளர்த்தவன் இல்லை. அவனிடம் புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொண்ட அறிவு இருந்தது. அனுபவத்தால் ஏற்பட்ட உலக ஞானம் இருந்தது. எல்லா விதத்திலும் அறிவாளியான அவனிடம் கோழைத்தனம் என்ற பலவீனம் இருந்தது. நடைமுறைக்கு அனுகூலமாக தன் வாதத்தை மாற்றிக் கொள்ளக் கூடிய சாமர்த்தியமும்(?) இருந்தது.

அன்றும் இன்றும் அவனிடம் மாறாத குணம் ஏதாவது இருக்கிறது என்றால் அது அவனுடைய சாமர்த்தியமான பேச்சுதான். தன்னிடம் இருக்கும் அறிவை வெளிப்படுத்தி எதிராளியைக் கவர்ந்திழுக்கக் கூடிய அவன் குணம் பலபேரை அவன் பக்கம் சேர்க்கச் செய்தது. ஆனால் அது வெறும் வாய் வார்த்தை ஜாலம்தான். யாரும் தன்னை குறை சொல்ல முடியாத அளவுக்கு சாமர்த்தியமாக செயல்படுவான். அந்த விஷயத்தை விசாலி திருமணமான புதிதில் உணர்ந்து கொண்டு விட்டாள்.

தன்னை மேற்கொண்டு படிக்கச் சொல்லி ஊக்குவித்த கணவன் அந்த விஷயத்தைத் தாய் தந்தையின் அனுமதியின் பெயரில்தான் சொன்னான். ஒருக்கால் அவர்களுக்கு விருப்பமில்லை என்று சந்தேகம் ஏற்பட்டிருந்தால் "உன் விருப்பம்.

அம்மாவைக் கேட்டுக் கொள். அவர்கள் சரி என்று சொன்ன
எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை''என்று சொல்லிவி
பான். பெற்றோர் இருந்தவரையில் அவர்களுடைய நிழலி
வளர்ந்த விஸ்வத்தை, அவர்கள் போனபிறகு தன் புடவை
தலைப்பில் முடிந்துக் கொண்டு விட்டாள் விசாலி. இவ்வ
நாளாக ''அப்படிச் செய்யணும்னு எனக்கு விருப்பம்தான். ஆன
அம்மா அப்பா வருத்தப்படுவார்கள் என்பதால் செய்யவில்லை
என்று சொல்லிக் கொண்டிருந்தவன் இப்பொழுது ''எனக்
இஷ்டம்தான். நான் அப்படிச் செய்தால் விசாலி வருத்தப்படுவா
வேண்டாத பிரச்னை எதுக்கு? அட்ஜெஸ்ட் செய்து கொண்
போனால் பிரச்னையே இல்லை'' என்று சொல்லத் தொட
ஙினான். அவனுடைய கோழைத்தனத்தை மேலும் ஊக்குவித்
அவன் முழுவதுமாக தன் மீதே ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கு
விதமாக செய்து கொண்டாள் விசாலி. இருபத்தி நான்கு மணி
நேரமும் கணவனைக் காப்பாற்றிக் கொள்ளும் யோசனையில்
ஆழ்ந்து போய்க் குழந்தைகளை அலட்சியம் செய்து விட்டாள்.

விஸ்வத்திற்குத் தலைக்கு எண்ணெய் தடவிக் கொள்ளவே
பிடிக்காது. ஆனால் விசாலி சொன்னதுமே மணையில் உட்கார்ந்
கொண்டு அவள் கையால் எண்ணெயை வைத்துக் கொள்வான்
குளிப்பதற்கு வெந்நீரை விளாவிக் கொள்ளத் தெரியாததால்
தான் விரும்பியபோது அவனால் குளிக்க முடியாது. வீட்டிற்
சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் சுயமாக முடிவு எடுக்க
தெரியாது. சம்பளத்தை அப்படியே மனைவி கையில் கொடுத்
விடுவான். நெருங்கிய நண்பனுக்கு நூறுரூபாய் அவசரமாக
தேவைப்பட்டால்கூட மனைவியிடம் கேட்பதற்கு தயங்குவான்.
தனக்கு வரும் எக்ஸ்ட்ரா பணத்தை மனைவிக்குத் தெரியாமல்
வைத்துக் கொண்டு நண்பர்களுக்காக செலவழிப்பான். அவன்
தேவைக்கு அதிகமாகவே சம்பாதித்து வந்தான். சொத்தும் இரு
ந்தது. ஆனாலும் பொருளாதார ரீதியாக அவனால் சுதந்திரமாக



செயல்பட முடியாது. ''இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே''
என்று ஆணையிடுபவர்கள் யாருமே இல்லை. இருந்தாலும்
தனிப்பட்ட சுதந்திரம் இல்லை. அதுதான் விசாலிக்குச் சாதகமாகி
விட்டது.

தான் தன் கணவனை நேசிப்பதுபோல் உலகில் வேறெந்த
மனைவியுமே தன் கணவனை நேசிக்கமாட்டாள் என்பது அவளு
டைய ஆழ்ந்த நம்பிக்கை. அவள் கண்ணோட்டத்தில் கணவனை
நேசிப்பது என்றால் எந்த வேலையையும் அவனிடம் சொல்லாமல்
இருப்பது. அவன் சம்பந்தப்பட்ட வேலைகளைத் தானே செய்வது.

விசாலியிடம் மற்றொரு விதமான குணமும் இருந்தது. ஐஸ்
வரியமும், சந்தோஷமும் நிறைந்த தன் குடும்பத்தைப் பார்த்து
ஊரில் எல்லோரும் பொறாமையால் வெந்து கொண்டிருக்கிறார்
கள் என்பது அவளுடைய அபிப்பிராயம். தன் வீட்டில் நடக்கக்
கூடாத ஏதாவது சம்பவம் நடந்தால் உடனே அந்தப் பழியை
எதிராளியின் மீது சுமத்தி விடுவாள்.

''காலையில் புதுப்புடவையை உடுத்திக் கொண்டு ஆபீசுக்குப்
புறப்பட்டுக் கொண்டிருந்தபோது எதிர்த்த வீட்டு காமாட்சி
வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.
அவ்வளவுதான்! ஆபீஸில் நாற்காலியிலிருந்த ஆணி மாட்டி
புதுப்புடவை கிழிந்துவிட்டது.''

''என் வீட்டுக்காரருக்கு ஒரே தலைவலி, வாந்தி. ஆபீசுக்கு
சாம்பார், கறி, கூட்டு என்றுவகை வகையாக செய்து கேரியரை
அனுப்புகிறேன் இல்லையா? சாப்பாட்டுக்கு வக்கில்லாத
பன்னாடைகள் எல்லாம் அவர் சாப்பிடுவதையே கண்கொட்டாமல்
பார்த்திருப்பாங்க போலும்.''

''பக்கத்து வீட்டு விசாலாட்சி காலையில் குழந்தையைத்
தூக்கிக் கொஞ்சிய போதே நினைத்தேன், இன்னிக்கு அவனுக்கு
ஜுரம் வரும்னு. அவளுக்கு ஒரே கொள்ளிக் கண்ணு.''

ஆபிசில் அந்த நாற்காலியின் ஆணிபட்டு இதுவரை ஒரு டஜன் புடவைகளாவது கிழிந்திருக்கும். விஸ்வம் தினமும் விசாலி அனுப்பி வைத்த சாப்பாட்டையே சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் அன்றைக்கு மட்டும் அவனுக்கு சாப்பாடு ஜீரணமாகாததற்குக் காரணம் கேரியரைப் ப்யூனிடம் தந்துவிட்டு பக்கத்து ஹோட்டலுக்குப் போய் பிரியாணி சாப்பிட்டதுதான். விசாலாட்சி தினமும் விசாலியின் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவது வழக்கம். ஆனால் அன்று வாசலில் வந்த குச்சி ஐஸ்காரனிடம் குச்சி ஐஸை சாப்பிட்டதால்தான் ஜுரம் வந்தது.

இந்தக் காரணங்கள் எல்லாம் விஸ்வத்திற்குத் தெரியாதவை அல்ல. ஆனால் அதைப் பற்றி யோசிக்க மாட்டான். எந்த விஷயத்தையும் காரணகாரியத்தோடு வாதம் புரிபவன் பாட்டி திருஷ்டி கழிக்க கூப்பிட்டால் வந்து பலகை மீது உட்கார்ந்து கொண்டு திருஷ்டி கழித்துக் கொள்வான். ஏதாவது ஒரு காரணத்திற்காக யாருக்காவது ஒருத்தருக்கு அந்த வீட்டில் தினமுமே திருஷ்டி கழிக்கப்படும். 'மற்றவர்களுக்கு நாம் செய்வது மகிழ்ச்சியைத் தரும்போது அவற்றைச் செய்வதில் தவறென்ன இருக்கு?' என்பது வாதம். அதை யாராலும் மறுக்கவும் முடியாது.

விஸ்வம் ஜெயாவின் விவகாரம் வெளிப்பட்ட போது விசாலி கொஞ்சநேரம் அப்படியே சிலையாக உட்கார்ந்து விட்டாள். விஸ்வம் தன்னைத் தவிர வேறொருத்தியுடன் உறவு வைத்துக்கொள்வான் என்றும், அவனிடம் அவ்வளவு துணிச்சல் இருக்கும் என்றும் அவள் கனவிலும் நினைக்கவில்லை. அவன் ஊருக்குப் போயிருந்த நேரத்தில் புத்தகங்களை அடுக்கிவைத்துக் கொண்டிருந்தபோது அந்தக் கடிதங்கள் கண்ணில் பட்டன. கொஞ்ச நேரத்திலேயே விசாலி தேறிக் கொண்டு விட்டாள். பாட்டியுடன் கலந்து யோசித்தாள். இதெல்லாம் ஜெயா செய்த சதி என்று இருவரும் ஏக மனதாக முடிவு செய்து விட்டார்கள். விஸ்வம் ஊரிலிருந்து திரும்புவதற்கு முன்பே அவனுக்குப் பாடம் கற்பிக்க



வேண்டும் என்று தீர்மானித்து நேராக ஜெயாவை தேடிக் கொண்டு போனாள் விசாலி. அந்தக் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பி வந்தாள்.

இந்த விஷயம் விஸ்வத்திற்குத் தெரிந்தால் ஏதாவது சொல்லக்கூடும் என்ற பயம் அவளுக்கு இல்லை. மனைவி அதைப்பற்றி தன்னிடம் கேட்டுவிடப் போகிறாளே என்று அவனே பயந்து கொண்டிருப்பான் என்று அவளுக்குத் தெரியும்.

"படுக்கையில் அவனுக்கு தேவையான அளவுக்கு சுகத்தை நீ தருவதில்லையோ என்னவோ? அதனால்தான் அவன் இன்னொருத்தியைத் தேடிக் கொண்டு போயிருக்கிறான்." பாட்டி விசாலியைக் கண்டித்தாள்.

கணவனைத் தன் கைப்பிடிக்குள் வைத்துக் கொள்வதற்கு சரியான ஆயுதம் செக்ஸ் ஒன்றுதான் என்று அந்தப் பாட்டி தொடக்கத்திலிருந்தே விசாலிக்கு பாடம் கற்பித்து வந்தாள். பாட்டி சொல்லிக் கொடுத்தபடி விசாலி எதுவுமே நடக்காதது போல் கணவனை வரவேற்றாள். மூச்சு முட்டும் அளவுக்கு அன்பு காட்டி அவனை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினாள்.

என்னென்ன கேள்விகள் கேட்டு உலுக்கி எடுப்பாளோ என்று பயந்து கொண்டே வீடு திரும்பிய விஸ்வம் மனைவி நடந்து கொண்ட முறையைப் பார்த்து மெய்மறந்து விட்டான். தன் சௌகரியத்திற்காக ஜெயாவை விட்டு விலகினான்.

விசாலியின் பாட்டிக்கு வீட்டிற்கு யாராவது உறவினர்கள் வந்து தங்கினாலே பிடிக்காது. கணவன் மனைவியின் சந்தோஷத்திற்குத் தடையாக இருப்பார்கள் என்று நினைப்பாள். விசாலியின் எண்ணமும் அதுதான். ஆனால் சுநீதா வரப்போவதுதெரிந்ததுமே விஸ்வத்திடம் தென்பட்ட ஆர்வத்தைப் பார்த்த பிறகு அவர்களால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. சுநீதா விஸ்வத்திற்கு கூடப்பிறக்காத தங்கை என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்

தான் அவளைச் சந்தோஷமாக வரவேற்றார்கள். ஆனால் சுந்
எல்லா விஷயத்திலேயும் தலையிடுவதும், விஸ்வத்தை விமரி
பதும் விசாலிக்கு எரிச்சலாக இருந்தது. தன் விருப்பமின்மை
மறைமுகமாக காட்டத் தொடங்கினாள் விசாலி.

தான் அங்கே இருப்பது விசாலிக்குப் பிடிக்கவில்லையோ
என்ற சந்தேகம் சுநீதாவுக்கு வந்தாலும், விஸ்வத்திடம் அவளுக்
இருந்த பாசம் அவளைத் தனியாக போகவிடாமல் தடுத்தது. அந்
வீட்டில் இருக்க வேண்டும் என்ற உற்சாகம் கூட அவளிடம்
குறைந்து விட்டிருந்தது. ஆனால் அந்த வீட்டை விட்டுப் போ
வேண்டிய தேவை அவளுக்கு சீக்கிரமாகவே வந்து சேர்ந்தது.

## 5

**பா**ட்டிக்கு கடந்த ஒரு வாரமாக உடம்பு சரியாக இல்லை.
விசாலிக்கு அன்று காலையிலிருந்தே மிகவும் எரிச்சலாக இருந்தது.
அன்று கார்த்திகை, திங்கட்கிழமை. காலையிலேயே எழுந்
கொண்டு குளித்துவிட்டு பூஜையை முடிப்பதற்குள் தாமதமாகி
விட்டது. சுநீதாவின் உதவியோடு எப்படியோ சமையலை முடித்
விட்டு குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். விஸ்வ
திற்காக கேரியரை ரெடி செய்து பாட்டிக்குத் தேவையானவற்றை
எடுத்துத் தந்துவிட்டு ஆபீசுக்குக் கிளம்பும்போது தாமதமாகி
விட்டது. ஆட்டோ பிடித்துக் கொண்டு போனாலும் அரைமணி
நேரம் லேட்டாகிவிட்டது. செக்ஷன் ஆபீசராக இருப்பவர் மிகவும்
நல்லவர். அவளுக்குத் தூரத்துச் சொந்தம். அதனால் தாமதமாக
வந்தாலும், சீக்கிரமாக கிளம்பிப் போனாலும் ஒன்றும் சொல்ல
மாட்டார். அவருடைய பக்கபலம் இருந்ததால் விசாலி வீட்டுக்கு
வேண்டிய சாமான்களை ஆபீஸ் நேரத்திலேயே கடைத்தெருவுக்
குப் போய் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போவாள். அன்று
அவர் எதற்காகவோ லீவ் போட்டிருந்தார். அந்த சீட்டில் உட்
கார்ந்திருந்த ஆபீசர் விசாலி தாமதமாக வந்ததற்கே நெற்றியைச்
சுளித்தார். நான்கு பைல்களை அனுப்பி வைத்துவிட்டு அன்றே



வேலையை முடித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்.

விசாலி அன்றைக்கு வீட்டுக்கு சீக்கிரமாக போகணும்னு நினைத்திருந்தாள். கேம்பிற்கு வெளியூருக்குப் போயிருந்த விஸ்வம் அன்று மதியம் வந்து விடுவதாகச் சொல்லியிருந்தான். கணவன் வீட்டில் இருக்கும் நேரத்தில் தான் இல்லாவிட்டால் அவளுக்கு என்னவோ போல் இருக்கும். அதான் சீக்கிரமாக வீட்டுக்குப் போய்விட வேண்டுமென்று தவித்தாள். ஆனால் வேலையை முடிக்காமல் கிளம்ப முடியாது. அவள் சீரியஸாக வேலை பார்க்கத் தொடங்கினாள். ஏற்கனவே உபவாசம் இருந்ததால் சோர்வாக இருந்தது. மதியம் ஆகும்போதே தலைவலியும் சேர்ந்து கொண்டது. அவ்வளவு வேதனையிலும் அவள் யோசித்த முதல் விஷயம் காலையில் எழுந்ததுமே யார் முகத்தில் விழித்தோம் என்றுதான்.

படுக்கையறையில் சுவாமி படங்களை மாட்டியிருந்தாள். தானோ கணவரோ காலையில் எழுந்து கொண்டதுமே அவற்றைத் தான் பார்க்க வேண்டும். "பெட்ரூமில் கடவுள் படம் மாட்டுவார்களா?" என்று யாரோ கிண்டல் செய்தபோது விசாலிக்குத் தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது.

"கடவுள் எங்கும் இருப்பவர். அவருக்குத் தெரியாத தனிமையான இடம் நமக்கு எதுவுமே இல்லை. கடவுளிடம் நாம் எதற்காக வெட்கப்பட வேண்டும்?" என்று வாதம் புரிந்தாள்.

"அப்படி என்றால் நீ கண்களைத் திறந்ததுமே தென்படக் கூடியவர் கடவுள்தானே. தனியாக படம் மாட்டி வைக்க வேண்டிய அவசியம் என்ன?"

"அது என் திருப்திக்காக. காலையில் எழுந்ததுமே சுவாமி படங்களைப் பார்த்தால் அன்று முழுவதும் என் மனம் நிம்மதியாக இருக்கும். எந்த தீங்கும் வராது என்பது என் நம்பிக்கை."

"இத்தனை வருடங்களில் உன் வாழ்க்கையில் எந்த மாற்றமும் வந்ததே இல்லையா? எந்தக் கெடுதலும் நேரவில்லையா? உன் கணவருக்கு பத்து தடவை ஸ்கூட்டர் விபத்து நடந்திருக்கு. பிள்ளைகள் எப்போ பார்த்தாலும் ஒருவர் மாற்றி ஒருவர் கட்டுப் போடும் அளவுக்கு காயம் பட்டுக் கொண்டு வருவார்கள். அவ்வளவு ஏன்? நீயே ஒரு தடவை கால் இடறி விழுந்தாயே? அதெல்லாம் மட்டும் ஏன் நடந்ததாம்?"

"நானும் அதைத்தான் சொல்கிறேன். காலையில் கடவுளின் படங்களைப் பார்ப்பதால்தான் இவ்வளவு தடவை இத்தனை விபத்துகள் நடந்தாலும் பெரிய ஆபத்து எதுவும் வரவில்லை. எத்தனைபேர் இடறி விழுந்து கைகால்களை உடைத்துக் கொள்கிறார்கள்? சாலை விபத்துகளில் எத்தனை பேர் உயிரை இழக்கிறார்கள்?" என்று எதிர்க்கேள்வி கேட்பாள், மறுபடியும் அவர்கள் வாயைத் திறக்காதபடி.

அன்று காலையில் எழுந்ததுமே கடவுள் படங்களை வணங்கி விட்டு வெளியே வந்ததும் ஹாலில் தென்பட்டாள் சுநீதா. அவள் தன்னைப் பார்த்து 'குட்மார்னிங்' என்று சொன்னதால்தான் தனக்குத் தலைவலி வந்து விட்டது என்ற முடிவுக்கு வந்து விட்டாள் விசாலி.

அன்று சுநீதாவுக்கும் ஆபீஸில் வேலையே ஓடவில்லை. காலையில் வரும்போதே பாட்டி மிகவும் சோர்வாகத் தென்பட்டாள். சுபாவத்தில் எப்படிப்பட்டவளாக இருந்தாலும் வீட்டில் எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து செய்யும் மனுஷி. அதனால் சுநீதா லீவ் போட்டு விடுவதாகச் சொன்னாள். ஆனால் விசாலி போடவேண்டாம் என்று சொல்லிவிட்டாள். தானே சீக்கிரம் வர முயற்சி செய்வதாகச் சொன்னாள். ஒருக்கால் அவளால் வரமுடியவில்லை என்றால்? குழந்தைகள் பள்ளியிலிருந்து வந்ததுமே ரொம்ப ரகளை செய்வார்கள். பாட்டியால் அவர்களைச் சமாளிக்க முடியாது. இதையெல்லாம் யோசித்து விட்டு சுநீதா மதியம்



அரைநாள் லீவ் போட்டுவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள். இரண்டு பஸ் மாறி வீட்டிற்கு வந்து சேரும்போது மாலை நான்கு மணி ஆகிவிட்டது. வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவள் அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து விட்டாள்.

பள்ளியிலிருந்து ரிக்ஷாவில் வந்து கொண்டிருந்த ஸ்ருஜனா கூட இருக்கும் பெண்ணுடன் சண்டை போட்டிருக்கிறாள். இருவரும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில் ஸ்ருஜனா ரிக்ஷாவிலிருந்து கீழே விழுந்து விட்டாள். நெற்றிப் பொட்டிற்கு மேலே பலமாக அடிபட்டு விட்டது. ரத்தம் தாரையாகப் பெருகியதைப் பார்த்துப் பயந்துவிட்ட ரிக்ஷாக்காரன் உடனே அவளை வீட்டில் கொண்டு விட்டான். பாட்டி கண்ணைக்கூட திறக்க முடியாதபடி ஜுரத்தில் படுத்திருந்தாள். அதிர்ஷ்டவசமாக விஸ்வம் அப்பொழுதுதான் ஊரிலிருந்து திரும்பி வந்தான். ரத்தத்தால் முகமும், உடைகளும் நனைந்து விட்டிருந்த ஸ்ருஜனாவை விஸ்வத்தின் கையில் ஒப்படைத்து விட்டு ரிக்ஷாக்காரன் போய் விட்டான்.

விஸ்வத்திற்கு கையும் காலும் ஓடவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. பாட்டியை எழுப்புவதற்கு முயன்றான். ஜுரம் அதிகமாக இருந்தால் அவளால் எழுந்து உட்காரக்கூட முடியவில்லை. ஸ்ருஜனாவின் நெற்றிக் காயத்திலிருந்த ரத்தம் வருவது நிற்கவில்லை. டவலை எடுத்து தண்ணீரில் நனைத்து முகத்தைத் துடைத்தான். டவலை சரியாகப் பிழியாததால் ஸ்ருஜனாவின் உடைகளும் நனைந்துவிட்டன.

சமையலறைக்குப் போய் மஞ்சள்தூளைத் தேடினான். அதிகமாக சமையலறைப் பக்கம் வந்ததில்லை என்பதால் எல்லா டப்பாக்களையும் திறந்துப் பார்த்தான். அவசரப்பட்டு தேடியதில் பொருட்கள் கீழே விழுந்து களேபரமாகி விட்டது. அவன்

நில் மஞ்சள்தூள் பொட்டலத்தில் இருந்தது நினைவுக்கு வந்தது. உடனே அங்கே ஓடினான். விசாலி சுவாமி இடத்தில் கோலம் போடுவதற்கு அதைப் பயன்படுத்தி வந்தாள். அதில் கோலப் பொடியும், குங்குமமும் கலந்திருந்தன. விஸ்வம் எதையும் கவனிக்காமல் அந்த மஞ்சள்தூளை எடுத்து வந்து காயத்தின் மீது அப்பினான். அவன் கையில் மிளகாய் பொடியும் பட்டிருந்ததால் ஸ்ருஜனா வலியால் துடிதுடித்தாள். அதைப் பார்த்ததும் அவன் மேலும் கலவரமடைந்தான். கண்களில் நீர் வரத் தொடங்கியது.

அந்த நேரத்தில் எந்த டாக்டர்தான் இருப்பார்? அப்படியே இருந்தாலும் மகளை ஸ்கூட்டரில் உட்கார வைத்துக்கொண்டு போக முடியுமா? இந்தக் கேள்விகளுக்கு பதில் தெரியாமல் விஸ்வம் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தான்.

சுநீதாவுக்கு அங்குள்ள நிலைமையைப் புரிந்து கொள்ள ஒரு நிமிடம் கூட ஆகவில்லை. உடனே பஞ்சை எடுத்து வந்து ஸ்ருஜனாவின் முகத்தை நன்றாகத் துடைத்து விட்டாள். டெட்டால் வீட்டில் இல்லாததால் ஆஃப்டர் ஷேவ் லோஷனை உபயோகித்து காயம்பட்ட இடத்தை சுத்தம் செய்தாள். பழைய வேஷ்டியைக் கிழித்து காயத்திற்கு கட்டுப் போட்டாள். வாசலில் வந்த ரிக்ஷாவை நிறுத்தி அதில் ஸ்ருஜனாவையும் உட்கார வைத்து டாக்டரைத் தேடிக்கொண்டு போனாள்.

எல்லாவற்றையும் பார்த்துவிட்டு விஸ்வம் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான். சுநீதா பொறுப்பை ஏற்றுக் கொண்டது அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

ஆபீஸில் வேலையை முடித்துவிட்டு ஆபீசரிடம் சொல்லிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்த விசாலி கணவன் முகத்தில் தென்பட்ட கலவரத்தைப் பார்த்துவிட்டு அவனுக்குத்தான் உடம்பு சரியாக இல்லையோ என்று பயந்தாள். நடந்த விஷயத்தை கேட்ட பிறகு பெரிய ஆபத்து எதுவும் நேரவில்லை என்று தெரிந்து கொண்டு நிம்மதியடைந்தாள்.



வீடு முழுவதும் சிந்தியிருந்த இரத்தக் கறைகளை எல்லாம் பார்க்கும்போது எரிச்சலாக இருந்தது. ஈரத்துணியால் வீட்டைத் துடைத்துக் கொண்டே ஸ்ருஜனவைத் திட்டத் தொடங்கினாள்.

''பத்து வயதாகிறது. இன்னும் சின்னக் குழந்தையா என்ன? ரிக்ஷாவில் வரும்போது சண்டை போடுவானேன்? வரட்டும். முதுகில் இரண்டு கொடுத்தால்தான் புத்தி வரும்.'' முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்.

பக்கத்துத் தெருவில் டாக்டரின் பெயர்ப்பலகையைப் பார்த்தது நினைவுக்கு வரவே சுநீதா ஸ்ருஜனாவை அழைத்துக் கொண்டு அங்கே சென்றாள். நல்ல வேளையாக டாக்டர் வீட்டில்தான் இருந்தார். காயத்திற்கு தையல் போட்டு மருந்து மாத்திரை எழுதிக் கொடுத்தார். சுநீதா கையோடு மருந்துகளையும், பிரெட், பழங்களையும் வாங்கிக் கொண்டு வந்தாள். அவள் வீடு திரும்பிய போது மணி ஆறு ஆகிவிட்டது.

தலையில் கட்டுடன், உடைகளில் ரத்தக் கறையுடன் தென்பட்ட மகளைப் பார்த்ததுமே விசாலியின் கோபம் கட்டுக்கு அடங்காமல் போய் விட்டது.

''பெண் குழந்தையாக இருந்துகொண்டு அதென்ன துடுக்குத்தனம்? வாயை மூடிக் கொண்டு இருக்க முடியாமல் ஏதாவது வில்லங்கம் செய்வதே உனக்கு வேலையாகி விட்டது'' என்று கத்திக் கொண்டே மகளை அடிக்கக் கையை ஓங்கினாள்.

விசாலியின் கத்தலைக் கேட்டு சிலையாக நின்றுவிட்ட சுநீதா சட்டென்று ஓரடி முன் வைத்து விசாலியின் கையைப் பிடித்துத் தடுத்திருக்காவிட்டால் ஸ்ருஜனாவின் முதுகில் அடி விழுந்திருக்கும். சுநீதா பதில் சொல்லாமல் ஸ்ருஜனாவை உள்ளே அழைத்துப் போய் உடைகளை மாற்றி படுக்க வைத்தாள். சாத்துக்குடி சாறு எடுத்து குடிக்கச் செய்து தூங்க வைத்து விட்டு வெளியே வந்தாள். விஸ்வம் ஹாலில்தான் உட்கார்ந்திருந்தான் எதுவுமே நடக்காதது போல்.

''அண்ணா! உன் போக்கு எதுவுமே எனக்குப் பிடிக்க
வில்லை. காயம் பட்ட குழந்தைக்கு முதலுதவி அளித்து டா
டரிடம் அழைத்துப் போகக் கூடத் தெரியவில்லை என்றா
எப்படி?'' கண்டிப்பதுபோல் சொன்னாள் சுநீதா.

அவள் எதிர்பார்த்தது போலவே சமையலறையிலிருந்
வேகமாக பாய்ந்துவந்தாள் விசாலி. ''அவளுக்கு அடிபட்டதற்
நீ ஒருத்திதான் வருத்தப்படுவதுபோல் பேசாதே. எங்களுக்
மட்டும் வேதனை இல்லையா? நான் வரும்போது உங்
அண்ணன் கண்கலங்கியபடி உட்கார்ந்திருந்தார் தெரியுமா?''

''தெரியும். அதைத்தவிர வேறு என்ன செய்யணும் என்
அவருக்குத் தெரியாது. ஒரு பக்கம் குழந்தையின் தலையில் அடி
பட்டு ரத்தம் வருகிறபோது அவர் கண்களிலிருந்து பொலபொல
வென்று கண்ணீர் உதிர்வது எத்தனை உயர்வான காட்சி?'' சுநீதா
கோபமாக சொன்னாள்.

''அதான் மஞ்சள் தூளைப் போட்டேனே. அதுவும் ஆன்டி
செப்டிக்தானே?'' அப்பாவியாக கேட்டான் விஸ்வம்.

''ஆமாம் போட்டாய். அதில் கொஞ்சம் சுண்ணாம்பையும்,
மிளகாய்த்தூளையும் கூட கலந்தாய். வீட்டில் சின்னக் குழந்தைகள்
இருக்கும்போது முதலுதவிக்குத் தேவையான மருந்துகளை வாங்கி
வைத்துக் கொள்ளாமல் இருக்கலாமா? அந்த டாக்டர் என்னைப்
பிடித்துத் திட்டினார், காயத்திற்கு மஞ்சள்தூளைப் போட்டதற்கு.''

''அவருக்கு எப்படி தெரியும்? என்றாவது டாக்டரிடம்
போக வேண்டிய தேவை வந்தால்தானே?'' விசாலி சொன்னாள்.

''தெரியாமல் இருப்பதற்கு அவர் என்ன சின்னக் குழந்தையா?
அல்லது வெளிநாட்டிலிருந்து இன்றைக்குத்தான் வந்து இறங்கி
யிருக்கிறாரா? இதெல்லாம் தெரிந்து கொள்வது பிரம்ம வித்தை
ஒன்றுமில்லையே?'' சுநீதாவும் குரலை உயர்த்தினாள்.



விசாலியின் முகம் சட்டென்று கடுமையாக மாறியது.
''தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உங்க அண்ணாவுக்கு
நான் ஏற்படுத்த மாட்டேன். சுநீதா! நான் செய்த பூஜாபலமோ
இல்லை முன் ஜென்மத்தில் செய்த புண்ணியமோ தெரியாது.
என் குழந்தைகளுக்கு இதுவரையில் பெரிய நோய் எதுவுமே வந்த
தில்லை. இனிமேலும் வராது. ஒருக்கால் வருமோ என்று
நினைப்பது கூட எனக்குப் பெரிய பாவமாகத் தோன்றுகிறது.
இன்னிக்கு நீ சமயத்திற்கு வீட்டுக்கு வந்து சேர்ந்ததையே எடுத்துக்
கொள். கடவுள் எனக்கு இதுபோல் உதவி செய்து கொண்டுதான்
இருக்கிறார். ஆனால் இன்னிக்கு காலையில் எழுந்து யாருடைய
முகத்தைப் பார்த்தேனோ தெரியவில்லை. மதியத்திலிருந்து ஒரே
தலைவலி எனக்கு. குழந்தைக்கு அடிபட்டு விட்டது. என்றுமே
இல்லாதவிதமாக உங்க அண்ணன் கூட அழுதிருக்கிறார்.''
புடவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டே சொன்னாள்
விசாலி, தன் கணவன் கண்ணீர்விட்டது உலகத்தின் எட்டாவது
அதிசயம் என்பது போல்.

''முதலில் சுவாமி படத்தையும், அப்புறமாக என் முகத்தை
யும்தான் பார்த்தாய். கடவுளை விட பிசாசு போன்ற நான்தான்
சக்தி வாய்ந்தவள் என்பதால் உனக்குத் தீங்கு நேர்ந்திருக்கிறது''
என்றாள் சுநீதா கோபமாக.

''யாருக்குத் தெரியும்? காலையில் எழுந்ததுமே மலடியின்
முகத்தைப் பார்க்காதே, உன் குழந்தைகளுக்கு ஏதாவது ஆபத்து
நேர்ந்துவிடும் என்று பாட்டி பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.
நான்தான் லட்சியப்படுத்தாமல் இருந்துவிட்டேன். இத்தனை
நாளாக'' என்று சொல்லிவிட்டு விசாலி உள்ளே போய்விட்டாள்.

சுநீதா அடியுண்டவளாக பார்த்தாள். விசாலி அவ்வளவு
கடுமையாகப் பேசுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.
அருகில் இருந்த விஸ்வம் ஆறுதல் சொல்வது போல் ''வருத்தப்
பட்டுக் கொள்ளாதே சுநீதா! உங்க அண்ணிக்கு வாய்த்துடுக்கு

அதிகம். அவசரப்புத்தி. ஆனால் மனம் மட்டும் ரொம்பவும் மென்மையானது. சற்று நேரத்தில் திரும்பி வந்து 'சாரி' என்று சொல்லுவாள். பார்த்துக் கொண்டே இரு'' என்றான்.

''குழந்தையைப் பெறாதது தவறு இல்லை அண்ணா! பெற்ற குழந்தைகளைச் சரியாகப் பார்த்துக் கொள்ளத் தெரியாதது தான் உண்மையான தவறு. நான் வருத்தப்படுவது உண்மைதான். ஆனால் அண்ணி என்னை சொன்ன வார்த்தைகளுக்காக இல்லை. ஏற்கனவே காயம்பட்டு அழுதுகொண்டிருக்கும் குழந்தையை அடிப்பதற்காக ஓங்கிய அண்ணியின் கையை, குறைந்த பட்சம் நீ தடுக்கக் கூட முயற்சி செய்யவில்லையே என்றுதான் வருத்தப் படுகிறேன்'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் போய் விட்டாள் சுந்தா. இந்த உரையாடல் உள்ளேயிருந்த விசாலியின் காதிலும் விழுந்தது.

துக்கம் பரவியிருந்த மனம் கனமாகி விட்டது. கண்ணீரால் மட்டுமே அதை லேசாக்க முடியும். இதயம் இறுகி விட்டதில் கண்களில் நீர்கூட வராமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள் சுந்தா. அப்படி எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தாளோ தெரியாது.

''சுந்தா!'' அழைத்துக் கொண்டே உள்ளே வந்தாள் விசாலி.

சுந்தா நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்கவில்லை.

''சாரி சுந்தா! என் அவசரப் புத்தியைப் பற்றி உனக்குத்தான் தெரியுமே. மனதில் எதையுமே வைத்துக் கொள்ள எனக்குத் தெரியாது. எதையும் வெளியில் சொல்லி விடுவேன். பிறகு அந்த விஷயத்தையே மறந்து போய்விடுவேன். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் வேறு விதமாகப் பேச எனக்குத் தெரியாது. நீ தவறாக நினைக்காதே'' என்றாள்.

சுந்தா அப்பொழுதும் பதில் பேசவில்லை. 'கொலையைச் செய்வது என் பலவீனம். என்னையும் அறியாமல் கொலை செய்து விடுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்று கொலையாளி நீதிபதியிடம் வேண்டிக் கொள்வது போல் இருந்தது விசாலி சொன்னது.

''உண்மையைச் சொல்லணும் என்றால் எனக்குக்கூட உங்க அண்ணாவின் போக்கு எரிச்சலைத்தான் தருகிறது. ஆனால் அவரை ஒன்றும் சொல்ல முடியாது என்னால். அது என்னுடைய பலவீனம். தப்பித் தவறி ஏதாவது சொல்லிவிட்டால் சாப்பிடாமல், யாருடனும் பேசாமல் தன் மௌனத்தால் என்னைத் தண்டிப்பார். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.''

'நீங்க இருவரும் ஒருத்தரை ஒருத்தர் ஒன்றும் சொல்லமாட்டீங்க. வாஸ்தவம்தான். ஆனால் மற்றவர்களை வருத்தப்பட வைக்கத் தயங்க மாட்டீங்க. சொன்ன வார்த்தைகளை சுலபமாக மறந்து போய் விடுவீங்க. ஆனால் அந்த வார்த்தைகள் எதிராளியின் மனதை எப்படி காயப்படுத்துமோ, தீக்காயமாக எப்படி தகித்துக் கொண்டிருக்குமோ உங்களுக்குப் புரியாது' – இதை சுந்தா வெளியில் சொல்லவில்லை. விசாலியுடன் உரையாடலை நீடிப்பதுகூட அனாவசியம் என்று பட்டது அவளுக்கு.

அவளுடைய மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்ட விசாலி ''வா சுந்தா!'' என்று கையைப் பற்றி எழுப்பி ஹாலுக்கு அழைத்து வந்தாள். ஹாலில் உட்கார்ந்திருந்த கணவனைப் பார்த்து லேசாகச் சிரித்தாள். தங்களுக்கு இடையே எந்த கருத்து வேற்றுமையும் இல்லை என்று அவனுக்குத் தெரியப்படுத்தும் செயல் அது.

விசாலியின் இரட்டை வேடத்தை நன்றாகப் புரிந்துகொண்ட சுந்தா விரைவிலேயே ஆபிசுக்கு அருகில் ஒரு வீட்டைப் பார்த்துக் கொண்டு போய்விட்டாள். அந்த வீட்டின் சொந்தக்காரி அவள் ஆபிசிலேயே வேலை செய்பவள் என்பதால் தனிமை அவ்வளவாகத் தெரியவில்லை.

# 6

தன் வாழ்க்கையிலிருந்து ஜெயாவையும் வீட்டைவிட்டு சுநீதாவையும் அப்புறப்படுத்திய பிறகு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டாள் விசாலி. ஆனால் அந்த சந்தோஷம் அதிக நாள் நீடிக்கவில்லை.

ஒரு வாரத்தில் ஜுரத்தில் கிடந்த பிறகு பாட்டிக்கு பக்கவாதம் வந்துவிட்டது. ஒரு பக்கம் காலும் கையும் செயல் இழந்துவிட்ட பாட்டியை விசாலியின் பெற்றோர்கள் வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். விசாலி சிறகொடிந்த பறவையாகி விட்டாள். பாட்டி இல்லாத குறை பளிச்சென்று தெரிந்தது. மாமியார் மாமனார் இருவரும் ரொம்ப அன்பாக நடத்தி வந்த போதிலும் அவர்கள் இறந்து போனதுமே பாட்டி வந்துவிட்டதால் அந்தக் குறை தெரியவில்லை.

பாட்டி எப்பொழுதாவது ஊருக்குப் போனாலும் ஒருவாரம் பத்து நாட்கள் எப்படியோ சமாளித்துக் கொள்வாள். இனி தனக்கு பக்கபலமாக இருக்கவோ, அறிவுரை சொல்லவோ யாருமே இல்லை என்று நினைக்கும்போது அவளுக்கு துக்கம் பொங்கி வந்தது. மூன்று மாதங்கள் போவதற்குள் விசாலி பத்து வயது கூடிவிட்டாற் போல் தளர்ந்து போய்விட்டாள்.

'நான் செய்த பூஜாபலனோ இல்லை முன் ஜென்மத்தில் செய்த புண்ணியமோ தெரியாது. என் குழந்தைகளுக்கு இதுவரையில் பெரிய நோய் எதுவும் வந்ததில்லை. எங்களுக்கு கஷ்டங்களே வராது' என்று சொல்லக்கூடிய நெஞ்சுரம் இப்பொழுது இல்லை. வீட்டுப் பொறுப்பு முழுவதும் அவள் ஒருத்தியே சமாளிக்க வேண்டிய நிலைமை. ஒருபக்கம் ஆபீஸ் வேலை, மற்றொரு பக்கம் குழந்தைகளின் படிப்பு, உடல்நலக் குறைவுகள், அவர்கள் செய்யும் ரகளை, வீட்டுக்கு வந்து போகும் உறவினர், சமையல் என்று அத்தனையும் தலையில் விழவே மிகவும் நலிந்து போனதால்



அந்த எரிச்சலை குழந்தைகள் மீது காண்பித்தாள். அதனால் அவர்களிடம் பிடிவாதம், கோபம் போன்ற துர்க்குணங்கள் படிந்து விட்டன. சில நாட்கள் வரையில் விஸ்வம் விஷயத்தில் அவள் போக்கு மாறவில்லை. ஆனால் போகப் போக அவனுடைய பொறுப்பற்ற தன்மையைச் சகித்துக் கொள்வது அவளுக்கு சிரமமாக இருந்தது. ஆனால் வெளியே சொல்லவும் பயம். 'நீதானே என்னை இப்படிப் பழக்கப்படுத்தியது' என்று அவன் கேட்டு விட்டால்? மேலும் உறவினர்களிடையே தனக்கு இருக்கும் நல்ல பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று அச்சம் வேறு. அப்படியும் விஸ்வத்திடம் இரண்டு மூன்று தடவை முறையிட்டுக் கொண்டாள், தன்னால் வேலைகளை சமாளிக்க முடியவில்லை என்று.

''வேலையை விட்டுவிடேன். நமக்கென்ன குறைச்சல்? இல்லையா சமையலுக்கு ஆளை போட்டுக் கொள்'' என்று தாராள மனதுடன் பரிகாரம் சொன்னான் விஸ்வம்.

கைநிறைய கிடைக்கும் சம்பளத்தையும் விட்டுவிட மனம் வராமல் இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுத்தாள் விசாலி.

தூரத்து உறவான ஒரு கிழவியை அழைத்து வந்து சமையல் வேலைக்கு வைத்துக் கொண்டாள். சில நாட்கள் நன்றாகவே கழிந்தன. பிறகு வாரத்தில் மூன்று நாட்கள் உடம்பு சரியில்லை என்று சாக்குச் சொல்லி அந்தக் கிழவி படுக்கையில் கிடந்தாள். அவள் தனக்கு ஒத்தாசையாக இருப்பது போக தானே அவளுக்குப் பணிவிடை செய்ய வேண்டியதாகிவிட்டது.

அதோடு அவளுக்கு உடம்பு சரியில்லை என்று பார்க்க வருபவர்களின் கும்பல் அதிகரித்து விட்டது. வீட்டிலிருந்த பொருட்கள் ஒவ்வொன்றாக காணாமல் போகத் தொடங்கின. அத்துடன் கிழவியை அனுப்பிவிட்டாள் விசாலி.

சில நாட்களுக்குப் பிறகு அவளுடைய தாய் இன்னொரு சமையல்காரியை அனுப்பி வைத்தாள். அவள் கணவன் அவளை

விட்டு விட்டு எங்கேயோ போய் விட்டான். அண்ணன் வீட்
டும் சரியான ஆதரவு கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டி
தாள். அவன் வந்தபிறகு விசாலிக்கு உயிர் திரும்பி வந்தது. சொ
லாமலேயே எல்லாக் காரியங்களையும் துப்புரவாகச் செய்தா

ஆனால் அந்த மகிழ்ச்சியும் அதிக நாள் நிலைக்கவில்லை
விஸ்வம் அவளைத் திருட்டுப் பார்வை பார்ப்பதையும், த
இல்லாத சமயத்தில் வீட்டிலேயே இருப்பதையும், அடிக்
அவளை கூப்பிட்டு தன்னுடைய வேலைகளை செய்யச் சொ
வதையும் கவனித்தபிறகு விசாலிக்குத் தலை சுற்றத்தொடங்கியு
அந்த வேலைக்காரியும் விஸ்வத்தின் எண்ணத்தை உணர்
கொண்டவள் போல் அழகாக அலங்காரம் செய்துகொண்டு அ
கடி அவன் கண்ணில் படுவதுபோல் நடமாடுவதை பார்த்தபிற
நிலைமை கட்டுமீறிப் போவதை உணர்ந்து கொண்டாள் விசா
இந்த நிலைமையில் அவள் செய்யக் கூடியது ஒன்றுதான். க
வனை ஒன்றும் சொல்ல முடியாது அவளால். வேலைக்காரிய
வேலையைவிட்டு அனுப்பி விட்டாள்.

நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகும் வேலை
களுக்கு நடுவில் விசாலி ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொ
டிருந்தாள். எந்த வேலையும் செய்யாமல், பொறுப்பு முழுவது
அவளுடையதுதான் என்பதுபோல் நடந்து கொள்ளும் கணவனை
பார்க்கும்போது அவளுக்கு ஆத்திரமாக இருக்கும். குறைந்த பட்ச
வெளிவேலைகளைக் கூட அவனால் செய்ய முடியவில்லை
சதா வெளியே சுற்றி விட்டு வரும் அவன் போக்கை அவளா
புரிந்துகொள்ள முடியவில்லை. அவனை அப்படி பழக்கிய
தான்தானே. அதனால் வாயை மூடிக் கொண்டாள்.

குழந்தைகளை தன் பெற்றோரிடம் விட்டு வைத்தால் தன்
தன் குடித்தனம் ஒரு நிலைக்கு வராது என்று எண்ணினாள்
ஆனால் அதற்கு அவளுடைய தாய் சம்மதிக்கவில்லை.

''உங்க அண்ணிகள் ஆபீசுக்குப் போய்விடுவார்கள். அவர்களுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு என்மீதுதான். படுத்த படுக்கையாக இருக்கும் பாட்டிக்கு பணிவிடை செய்யவே எனக்கு முடியவில்லை. இந்த நிலைமையில் உன் குழந்தைகளையும் பார்த்துக் கொள்ளும் பொறுமை எனக்கு இல்லை'' என்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டாள்.

உதவிக்கு ஆளும் இல்லாமல் வேலையை விடவும் முடியாமல் விசாலி திண்டாடிக் கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளில் முழுவதுமாக ஆழ்ந்து போனதால் கணவனை பொருட்படுத்துவதைக் குறைத்துக் கொண்டாள்.

★ ★ ★

தன் சிநேகிதிகளைச் சந்திக்க வேண்டிய நாளைப் பற்றி விசாலி மறந்து போகவில்லை. அதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருந்தன. அதற்குள் தன் குடித்தனத்தில் பிரச்னைகள் தீர்ந்து போய் நிலைமை சரியாகி விடுமென்றும், சிநேகிதிகளிடம் தன் கதையைப் பெருமையாக சொல்லிக் கொள்ளலாம் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

மூன்றாவது பெண் அனுராதா. அவள் இந்த ஊரிலேயே இருப்பது தெரிந்தாலும் அவளைச் சந்திக்க விசாலி என்றுமே முயற்சி செய்யவில்லை. அவள் தன்னைவிட நிறைய மதிப்பெண்கள் பெற்று நல்ல கல்லூரியில் சேர்ந்து விட்டது விசாலிக்கு அவள் பால் கொஞ்சம் பொறாமையை ஏற்படுத்தியது.

அனுராதாவின் பெற்றோர்கள் பணத்தைக் கொடுத்து அவள் முதல் வகுப்பில் பாஸ் ஆகும் விதமாக செய்திருப்பார்கள் என்று விசாலி நம்பினாள். தன்னுடைய கணிப்பு என்றுமே பொய்த்ததில்லை என்பது அவளுடைய திடநம்பிக்கை. அதனால் அனுராதாவின் மேலிருந்த கோபத்தினால் அவளைச் சந்திக்க விரும்ப

வில்லை. ஓரிரு முறை வழியில் எதிர்ப்பட்ட போதும் பார்க்காதது போல் போய்விட்டாள்.

அனுராதாவும் அவளைச் சந்திக்க முயற்சி செய்யவில்லை.

விசாலிக்கு தன் சிநேகிதிகளில் யாருமே தன் அளவுக்கு சந்தோஷமாக இருந்திருக்க முடியாது என்ற நினைப்பு இருந்தது. ஒருமுறை பேப்பரைப் பார்த்துவிட்டு "யாரோ வைஜெயந்தியாம் I.P.S. ஆபீசராக இருக்கிறாளாம். நிறைய கொள்ளைக்காரர்களை பிடித்திருக்கிறாளாம். உன் சிநேகிதியாக இருக்குமோ?" என்றான் விஸ்வம்.

"போதுமே. அவளாக இருக்காது. அவளைப் போன்ற கோழையை நான் கண்டதில்லை. அவளாவது போலீஸ் ஆபீஸராக இருப்பதாவது?" என்று அலட்சியமாக பதில் அளித்தாள். அவள் தன் சிநேகிதிதானா என்று தெரிந்து கொள்ளக் கூட முயற்சி செய்யவில்லை. வைஜெயந்தி அவ்வளவு உயர்ந்த பதவிக்கு வருவது அவள் கற்பனைக்கும் எட்டாத விஷயம்.

விஸ்வத்திற்கு இப்பொழுதெல்லாம் வீட்டில் சந்தோஷமாக இருக்க முடியவில்லை. நண்பர்களை அழைத்துக் கொண்டு வந்தால் விசாலியால் முன்னைப்போல் டிபன் காபி சப்ளை செய்ய முடியவில்லை. மனைவி சமையலறையில் வேலைகளுக்கு நடுவில் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கும்போது தான் மட்டும் தனியாக உட்கார்ந்துகொண்டு வீடியோவில் சினிமா பார்ப்பது கஷ்டமாக இருந்தது. குழந்தைகளிடம் அவனுக்கு நெருக்கம் இருந்தது இல்லை. இப்பொழுது புதிதாக பழக்கப்படுத்திக் கொள்ள அவனால் முடியவில்லை. அதனால் பெரும்பாலும் வெளியே சுற்றிவிட்டு வரத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் தான் ராதா அவனுக்கு அறிமுகம் ஆனாள்.

ராதா சுநீதா குடியிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரி. அதே ஆபீஸில் வேலை செய்கிறாள். அவளுடைய கதை வேதனையமானது. கணவனால் அவளுக்கு எந்த நிம்மதியும் இல்லை. அவனை எதிர்த்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள். வேலையும் பார்த்துக் கொண்டு, தன் இரு மகள்களையும் வளர்த்து வருகிறாள். அவளும் நிறைய புத்தகங்களைப் படிப்பாள். இலக்கியத்தில் ஆர்வம் அதிகம். அவளைப் பற்றித் தெரிந்தபிறகு விஸ்வம் சுநீதாவைச் சந்திக்கும் சாக்கில் அடிக்கடி அவள் வீட்டிற்குப் போகத் தொடங்கினான்.

ராதாவின் தனித்தன்மை அவனை மிகவும் கவர்ந்துவிட்டது. அவளுடன் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியவில்லை. இருவருக்குமிடையே நட்பு மலர்ந்து விட்டது. சில நாட்கள் போவதற்குள் அந்த நட்பு எல்லையைத் தாண்டிவிட்டது.

விஸ்வத்தை அவ்வளவு தூரத்திற்கு கவர்ந்து விட்டிருந்த ராதா வேறு யாரோ இல்லை. நான்கு சிநேகிதிகளில் ஒருத்தியான அனுராதாதான்.

# அனுராதா

## 1

நந்தவனம் போன்ற இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் விதவிதமான மரங்களும், பூச்செடிகளும் நிறைந்திருந்தன. அதன் ஒரு கோடியில் பெரிய வீடு இருந்தது.

வீட்டிற்கு எதிரே ஒரு பக்கத்தில் மல்லிகைக் கொடி ஒன்று அடர்த்தியாக படர்ந்திருந்தது. நடுவில் போடப்பட்டிருந்த ஆர்ச் வளைவில் ஜாதி மல்லிகை, முல்லை போன்ற பூங்கொடிகளை படரவிட்டிருந்தார்கள். அதற்குப் பின்னாலிருந்த காலி இடத்தில் நந்தியாவட்டை, ரோஜா, செம்பருத்தி போன்ற செடிகள் பூத்துக் குலுங்கியிருந்தன.

அந்த வீடு சிறிய அரசமாளிகை போல் இருந்தது. வீட்டிற்குள் நுழைய வேண்டுமென்றால் பன்னிரெண்டு உயரமான படிகளில் ஏறவேண்டும். படி ஏறியதுமே பெரிய வராண்டா. அதற்குப் பின்னால் ஹால். அதைத் தாண்டியதுமே சுவாமி அறை.

கோடைக்காலம் என்பதால் எல்லோரும் வராண்டாவில் படுத்துக் கொண்டிருந்தார்கள். காலை ஐந்தரை மணி இருக்கும். வராண்டாவில் கட்டில் மீது படுத்துக் கொண்டிருந்த அந்த பெண் குழந்தை கண்களைத் திறந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பத்து நிமிடங்களில் குளியலையும் முடித்துக் கொண்டாள்.

கருப்பு கேன்வாஸில் யாரோ சிவப்பு வர்ணத்தைத் தீற்றியது போல் கரிய வானத்தில் சூரியன் உதிக்கும் காட்சி தென்பட்டது.



இரவெல்லாம் நிலவின் குளிர்ச்சியில் பனியில் நனைந்த மலர்கள் இதழ்களை விரித்து இளம் சூரியன் வெப்பத்தில் குளிர்காயத் தயாராக இருந்தன. ஒரு மூலையில் உதிர்ந்து விழுந்திருந்த பவழமல்லி மலர்களை அந்தப் பெண் தன் சின்னஞ்சிறு கைகளால் மெல்லப் பொறுக்கி மடியில் கட்டிக் கொண்டு வீட்டிற்குள் ஓடினாள்.

சுவாமி படங்களை எல்லாம் துடைத்து விட்டு, பூஜை சாமான்களை எடுத்துத் தேய்த்து வைத்தாள். சந்தனத்தை அரைத்து சின்னக் கிண்ணத்தில் எடுத்து வைத்தாள்.

''ராதா! வந்து பாலை குடிம்மா.'' சமையல் அறையிலிருந்து அழைப்புக் குரல் கேட்டது.

''இதோ வந்து விட்டேன்.'' சிறுமி எழுந்து வெளியே நடந்தாள்.

அனுராதாவின் வயது அப்பொழுது பத்து. ஐந்து வயதிலிருந்தே அவளுடைய தினசரி வேலைகளில் அதுவும் ஒன்றாகி விட்டது. விவரம் தெரிந்த நாள் முதல் அவள் அந்த வீட்டில் தான் வளர்ந்து வந்தாள். தோட்டத்தில் எந்த மூலையில் எந்தச் செடி முளைத்திருக்கிறது என்றும், எந்தச் செடி துளிர் விட்டிருக்கிறது என்றும் தோட்டக்காரனை விட அவளுக்குத் தான் நன்றாகத் தெரியும். அந்தச் செடிகள் தான் அவளுடைய சிநேகிதிகள். சகமாணவிகள். அவளிடமிருந்த கவிதை ரசனைக்கு உயிர் கொடுத்தது அந்த தோட்டம் தான்.

அனுராதாவின் தந்தை பட்டாபிராமன். அவருடன் கூட பிறந்தவர்கள் ஏழு பேர். அவர் தான் முதல் பிள்ளை. வழி வழியாக வாழ்ந்து வந்து கொண்டிருந்த ஊரை விட்டு பட்டணத்திற்குப் போய் கல்லூரியில் சேர்ந்து படித்த மனிதர். அந்தக் குடும்பத்தில் மட்டுமே இல்லை. அந்த ஊரிலேயே அவர் தான் முதல் ஆள். தன் குடும்பத்திற்கும், ஊர் மக்களுக்கும் சேவை

செய்வதையே தன் கடமையாக நினைத்துக் கொண்டார். தங்கைகளுக்குத் திருமணம் முடியும் வரையில் தன் திருமணப் பேச்சையே எடுக்கவில்லை.

தம்பிகளுக்குப் படிப்பு அவ்வளவாக ஏறாததால் நிலத்தின் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். தன் திருமணத்தோடு தம்பிகள் இருவரின் திருமணத்தையும் ஒரே சமயத்தில் நடத்தினார். தான் சம்பாதிப்பதில் தம்பிகளுக்கும் பங்கு உண்டு என்று நம்பினார்.

மனைவி அன்னபூரணி ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவள். மனைவியாக வருபவள் பிறந்த வீட்டுச் சீராக குணத்தைக் கொண்டு வரணுமே தவிர பணத்தை அல்ல என்று நம்பிய பட்டாபிராமன் தம்பிகளுக்கு அவர்கள் விரும்பியபடியே திருமணத்தை நடத்தி விட்டு தான் மட்டும் ஏழை வீட்டுப் பெண்ணையே தேர்ந்தெடுத்துக் கொண்டார். அன்னபூரணியும் கணவனை கடவுளுக்குச் சமமாக வழிபட்டு வந்தாள்.

திருமணம் ஆன பத்தாண்டுகளுக்குப் பிறகு பிறந்த மகள் மீது தந்தைக்குப் பிரியம் அதிகம். தன்னுடைய எண்ணங்களையும், கொள்கைகளையும் சிறுவயதிலிருந்தே அவளுக்குக் கற்பித்து வந்தார்.

''இசைக்கு ஜாதி மத வித்தியாசம் கிடையாது என்று இசை மேதை திருமதி.எம்.எஸ். சுப்புலக்ஷ்மி நிருபித்து விட்டார். நியம நிஷ்டைகளை ஒழுங்காக பின்பற்றக்கூடிய சத்பிராமணர்கள் கூட காலையில் எழுந்ததுமே எம்.எஸ்.பாடிய சுப்ரபாதத்தைக் கேட்டுக் கொண்டே தங்கள் பூஜை புனஸ்காரங்களை முடித்துக் கொள்வார்கள்'' என்பார் அவர்.

அனுராதாவுக்கு சிறுவயதிலிருந்தே இசைக்கும் இயற்கைக்கும் தொடர்பு இருப்பது புரியத் தொடங்கியது. விடியற்காலையிலேயே எழுந்து கொண்டு பறவைகளின் கலகலத்



தொனியைக் கேட்டுக் கொண்டே தோட்டத்தை சுற்றி வருவாள். பிறகு பூக்களைப் பறித்துக் கொண்டே ஏதாவது பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருப்பாள். ஆனால் அவள் சங்கீத ஞானம் பள்ளிக் கூடத்தில் பாடுவதோடு நின்றுவிட்டது.

பட்டாபிராமனுக்கு உறவுக்காரர்களிடமிருந்த பற்று நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருந்தது. ஊரில் யாராவது பொருளாதார கஷ்டத்தால் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாத நிலையில் இருந்தால் அவர்களை வரவழைத்து தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு பீஸ் கட்டி படிக்க வைப்பார்.

அவருக்குப் பிறந்தது ஒன்றுதான் என்றாலும் வீடு நிறைய குழந்தைகள் வளைய வந்து கொண்டிருப்பார்கள். தம்பி, தங்கைகளும் அவருடைய பலவீனத்தை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். குடும்பத்தில் கஷ்டங்கள் இருப்பதாகச் சொல்லி அடிக்கடி பணம் பெற்றுக் கொள்வார்கள்.

அன்னபூரணி எப்பொழுது பார்த்தாலும் சமையலறையிலேயே இருப்பாள். யாரிடமிருந்தும் எந்த விதமான பேச்சு வந்து விடக் கூடாது என்ற நினைப்பில் உழைத்துக் கொண்டிருப்பதிலேயே அவளுடைய வாழ்க்கை கழிந்து விட்டது.

அனுராதாவுக்குத் தன் கூடப் பிறந்தவர்கள் இல்லையே என்ற குறை இதனால் தீர்ந்து விடும் என்று பட்டாபிராமன் நினைத்திருந்தார். ஆனால் அவளுக்கு மட்டும் அவர்கள் எல்லோரும் கிளம்பிப் போய் வீடு அமைதியாக இருந்தால் போதும் என்று தோன்றும். முடிந்த வரையில் தோட்டத்திலேயே இருப்பாள்.

ஒரு நாள் அந்தக் குடும்பத்தில் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

பட்டாபிராமன் மிகவும் பிடிவாத குணமுள்ளவர். ஆபீஸில் மேலதிகாரியுடன் தகராறு ஏற்பட்டதில் வேலையை ராஜினாமா செய்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டார். வேறு ஏதாவது

வேலை கிடைக்காமல் போகாது என்ற நம்பிக்கையில் அப்படிச் செய்து விட்டார்.

ஆனால் நினைத்தது நினைத்தபடி நடப்பது என்பது எல்லா சமயத்திலும் சாத்தியப்படாது. வேறு வேலை கிடைப்பதற்கும் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமோ அவர் நினைத்துப் பார்க்கவில்லை. குடும்பம் சிறியது தான் என்றாலும் பொறுப்புக்கள் அதிகம். சேமிப்பு அசலுக்கே இல்லை.

அந்தச் சமயத்தில் கை கொடுக்க வேண்டிய உறவினர்கள் கையை விரித்து விட்டார்கள். ஒரு மூட்டை அரிசியை அனுப்பி விட்டு ஒரு தம்பியும், இரண்டாயிரம் ரூபாயை அனுப்பி விட்டு இன்னொரு தம்பியும் அண்ணனின் பாரத்தைக் குறைத்து விட்டதாக பறைச் சாற்றிக் கொண்டார்கள். தீங்கு செய்தவர்களுக்குக் கூட நல்லதே செய்யணும் என்றும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும் என்றும் காந்தியவாதி எண்ணங்களைக் கொண்ட பட்டாபிராமன் அவர்கள் மீது துவேஷத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. தனக்கு இது ஒரு சோதனை என்று நினைத்துக் கொண்டார்.

சுமார் ஒரு வருடம் அவர் வேலையில்லாமல் இருந்தார். பன்னிரெண்டு வயதான அனுராதா அப்பொழுது தான் முதல் முதலாக ஏழ்மையின் பாதிப்பை உணர்ந்தாள். ட்யூஷன் வாத்தியாரும், பாட்டு வாத்தியாரும் வருவதை நிறுத்திக் கொண்டார்கள். அதற்கு அவள் வருத்தப்படவில்லை. பெற்றோரின் கஷ்டம் அவளுக்குக் கொஞ்சம் புரியத் தொடங்கியது. அவளுக்குப் புரியாதது ஒன்று தான்.

இவ்வளவு கஷ்டத்திலும் தந்தை யாரையுமே வீட்டை விட்டு அனுப்பி வைக்காததோடு, கடன் வாங்கி அவர்களை பராமரித்துக் கொண்டு, ஃபீஸ்களையும் கட்டியது ஏன் என்று அவளுக்கு விளங்கவில்லை. வேலைக்காரியை நிறுத்தி விட்ட



தால் தாய் ஒருத்தியே அனைத்து வேலைகளையும் செய்து கொண்டு கஷ்டப்படுவதைக் கண்டு காணச் சகிக்காமல் உதவி செய்யத் தொடங்கினாள். அந்தச் சிறு வயதிலேயே வீட்டு வேலைகளைச் செய்யவும், தாய்க்கு உடல் நிலை சரியாக இல்லாத போது, பத்து பேருக்கு சமைத்துப் போடவும் அவளுக்கு பழகி விட்டது.

வீட்டில் இருந்த சித்தப்பாக்களின் குழந்தைகள் எல்லோருமே ஆண்குழந்தைகள் என்பதால் உதவி செய்ய முன் வராததோடு அவள் செய்யும் வேலையிலும் குறைகளைக் கண்டுபிடித்து பழித்து வந்தார்கள். அதனால் அவர்களை விட்டு தொலைவாக இருப்பதற்காக அவள் தோட்டத்தையும், தனிமையையும் நாடிச் சென்றாள்.

ஒரு நாள் பட்டாபிராமன் தம்பிகளிடம் கடன் கேட்பதற்காக சொந்த ஊருக்குப் போனார். திரும்பி வருவதாகச் சொன்ன நாளையும் தாண்டி நான்கு நாட்களாகி விட்டன. வீட்டில் மளிகைச் சாமான்கள் தீர்ந்து விட்டன.

அன்னபூரணி என்றுமே யாரிடமும் கை ஏந்தியதில்லை. அவர்கள் வீட்டிற்குக் கொஞ்சம் தொலைவில் தோட்டத்திற்கு அப்பால் சில வீடுகள் இருந்தன. அதிலிருந்தவர்கள் எல்லோரும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு அன்னபூரணியிடம் மதிப்பும் மரியாதையும் அதிகம். அவசரத்திற்கு எது கேட்டாலும் இல்லை என்று மறுக்காமல் தந்து உதவியிருக்கிறாள். அவர்களுக்கு இப்போதைய நிலைமை ஓரளவுக்குத் தெரியும்.

அவள் கஷ்டத்தில் இருப்பது தெரிந்ததுமே கையிலிருந்த பணத்தைத் தந்தார்கள். ஆனால் பத்து பேர் இருக்கும் வீட்டில் அது எவ்வளவு நாளுக்குத் தான் வரும்? மேலும் ஸ்கூல் பீஸ் கட்ட வேண்டுமென்று குழந்தைகள் ரகளை செய்து கொண்டிருந்தார்கள்.

வேறு வழியில்லாமல் கடன் வாங்குவதற்காக மகளை அனுப்ப முடிவு செய்த அன்னபூரணி. ''ராதா! கோடி வீட்டு பாட்டி வீட்டிற்குப் போய் நாலு படி அரிசி இருந்தால் கேட்டு வாங்கிக் கொண்டு வாம்மா'' என்றாள்.

''போம்மா. நான் போக மாட்டேன். நம்ப வீட்டுக்கு வந்தால் அந்தப் பாட்டி தன் சொந்த வீடு மாதிரி புழங்குவாள். ஆனால் நான் அவங்க வீட்டிற்குப் போனால் 'உள்ளே வராதே. வரான் டாவிலேயே நில்லு' என்பாள். அவங்க வீட்டு சமையலறைக்குள் நான் அடி எடுத்து வைத்தால் தீட்டாகிவிடுமாம். நான் மாட்டேன்'' என்றாள் கோபமாக.

''அப்படிச் சொன்னால் எப்படி? அந்தப் பாட்டிக்கு மடி ஆசாரம் அதிகம். நாம் அவர்களை குற்றம் சொல்லக் கூடாது. இந்த ஒரு தடவை போயிட்டு வாம்மா. அண்ணன்கள் ஸ்கூலுக்குப் போக அவசரப்படுகிறார்கள் பாரு.'' கெஞ்சினாள் அன்னபூரணி.

அனுராதா சலித்துக் கொண்டே போய் அரிசியை வாங்கிக் கொண்டு வந்தாள். ''அவங்க வீட்டிலும் அரிசி கொஞ்சமாகத் தான் இருக்காம். ஒரு படி தான் கொடுத்தாள். சீக்கிரமாக சமைக் கிறாயா. ரொம்ப பசிக்கிறது'' என்றாள்.

''என் கண் இல்லையா. இந்த ரொட்டியைத் தின்று விட்டுப்போ. ஸ்கூலுக்கு நேரமாகிவிடும். மாலையில் திரும்பி வரும்போது சுடச்சுட சாதமும், குழம்பும் சமைத்து வைக்கிறேன்'' தட்டில் ஒரு ரொட்டித்துண்டையும் ஊறுகாயும் வைத்துக் கொடுத்தாள்.

பள்ளிக் கூடத்திற்கு நேரமாகி விட்டதால் அனுராதா புறப்பட்டு விட்டாள். மாலையில் திரும்பி வந்த போது உண்மையாகவே சாதம் பாத்திரத்தில் இருந்தது.

''இதென்ன இவ்வளவு குறைச்சலாக சமைத்திருக்கிறாள்? மறுபடியும் சாதம் வைக்கப் போகிறாள் போலும்'' என்று



நினைத்துக் கொண்டு பசி அதிகமாக இருந்ததால் தட்டில் சாதம் போட்டுக் கொண்டு வயிறு நிரம்ப சாப்பிட்டாள். கையை அலம்பிக் கொண்டிருந்தபோது அன்னபூரணி உள்ளே வந்தாள். காலியாக இருந்த பாத்திரத்தைப் பார்த்ததுமே கோபத்தை அடக்க முடியாமல் மகளை கன்னத்தில் அறைந்து விட்டாள்.

''உன்னைத் தவிர இன்னும் சாப்பிட வேண்டியவர்கள் இருப்பார்களே என்று பார்த்துக் கொள்ள வேண்டாமா? இத்தனை வயதாகி விட்டது. இது கூடவா தெரியாது?'' என்று கோபமாக சொன்னாள்.

அனுராதாவுக்கு அப்பொழுது அழுகை வரவில்லை. உடனே தோட்டத்திற்கு ஓடினாள். மாமரத்திற்கு அடியில் உட்கார்ந்து கொண்டு தலையை முழங்கால்களுக்கிடையே புதைத்துக் கொண்டாள்.

''அம்மாவாக இருப்பவள் குழந்தை ரகளை செய்தாலோ, சொன்ன பேச்சை கேட்காவிட்டாலோ அடிப்பாள். நன்றாக படிக்கவில்லை என்றால், அது வேணும் இது வேணும் என்று அடம் பிடித்தால் அடிப்பாள். ஆனால் பசித்து சாதம் சாப்பிட்ட தற்காக அம்மா அடித்து விட்டாளே. வயிறார சாப்பிட்டாலும் குற்றமா? பெண்ணாக இருப்பதால் தானே அடி வாங்கினேன். அதுவே அண்ணன்கள் யாராவது இப்படி நடந்து கொண்டால் அம்மா அடித்திருப்பாளா? பெண்ணாக பிறப்பது அவ்வளவு பெரிய குற்றமா?'' என்று நினைத்த போது தான் அவளுக்கு அழுகை வரத் தொடங்கியது.

அன்று காலையில் அண்ணன்கள் எல்லோரும் சேர்ந்து சரியாக ஃபீஸ் கட்டாததால் தங்களை பள்ளியில் கோபித்துக் கொள்கிறார்கள் என்றும், வயிறார சாப்பாடு கூட போடவில்லை என்றும் அம்மா மீது எரிந்து விழுந்திருக்கிறார்கள் என்ற விஷயம் அவளுக்குத் தெரியாது.

தங்களுடைய பெற்றோர்கள் ஊரிலிருந்து ஒழுங்காக பண
அனுப்பி வைக்கிறார்கள் என்றும், பெரியம்மா தான் தங்களை
சரியாக கவனிப்பதில்லை என்பது போலவும் நடந்து கொ
டார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல முடியாமல் அம்
அழுதுகொண்டே உட்கார்ந்திருந்த விஷயம் அன்று இரவு தந்
வந்த பிறகு தான் தெரிந்தது. தன் தாய் சாப்பிட்டு நான்கு நாட்க
ஆயிற்று என்ற விஷயமும் அப்பொழுது தான் தெரிய வந்தது.

அம்மா தன்னை ஏன் அடித்தாள் என்று புரிந்து விட்ட
யாராவது தவறு செய்தால் ஏன் அப்படிச் செய்தார்கள் என்
எண்ணம் தான் முதலில் வரவேண்டும் என்று உணர்ந்
கொண்டாள் அனுராதா.

வாழ்க்கையின் பெரிய தத்துவம் அது. எதிராளிய
நடத்தையை அவர்களுடைய கோணத்திலிருந்து யோசித்து
பார்ப்பது!

சிலநாட்கள் கழித்து தந்தைக்கு வேறு வேலை கிடைத்
விட்டது. அவர்களுடைய கஷ்டங்கள் ஓரளவுக்கு தீர்ந்துவிட்ட
ஆனால் கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களின் பாதிப்பு அவ
மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அன்று முதல் வறுமை
அவளை என்றுமே பயமுறுத்தவில்லை. தன்னைச் சுற்றிலு
இருப்பவர்களின் வாழ்க்கையை கவனிக்கத் தொடங்கினாள்.

வலது பக்கத்துக் கோடி வீட்டில் ஒரு பாட்டியும் அவளுடை
தம்பி, மகன், மருமகள், திருமணம் ஆகாத மகளும் இருந்
வந்தார்கள். பாட்டிக்கு மடி, ஆசாரம் அதிகம். மகளுக்கு எதனா
திருமணம் ஆகவில்லை என்று தெரியாது. ஆனால் அந்த
பாட்டி மகனையும் மருமகளையும் சந்தோஷமாக இருக்கவி
மாட்டாள். மாமியாரும் மருமகளும் எப்போதும் சண்டை போட்டு
கொண்டே இருப்பார்கள். அம்மாவின் பேச்சைக் கேட்டு
கொண்டு அந்த மகனும் மனைவியை அடிப்பான். மனைவியி



பக்கம் தவறு இல்லை என்று தெரிந்தும் தாயை எதிர்த்துக் கேட்கும்
துணிச்சல் இல்லாமல் மனைவியின் மீது கையை ஓங்கும்
அவனைக் கண்டால் அனுராதாவுக்கு எரிச்சலாக இருக்கும்.

'நான் மட்டும் அந்த நிலையில் இருந்தால் திருப்பிக் கன்னத்
தில் இரண்டடி கொடுத்துவிட்டு பிறந்த வீட்டுக்குப் போயிருப்
பேன்' என்று நினைத்துக் கொள்வாள்.

இரண்டாவது வீட்டில் இருக்கும் தோட்டக்காரனின் மனைவி
நாள் முழுவதும் உழைத்துக் கொண்டிருப்பாள். குழந்தைகளை
யும் ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். அவர்களைப்
பார்க்கும்போது, பணம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை
என்று சிலசமயம் தோன்றும்.

இன்னொரு பக்கத்தில் சிறிய போர்ஷனில் குடியிருந்தாள்
துர்காம்பாள். அவள் தனியாக இருந்து வந்தாள். அவள் நடத்தை
சரியில்லை என்று யாருமே அவளை தங்கள் வீட்டிற்குள் வரவிட
மாட்டார்கள். அனுராதாவுக்கு அவளைக் கண்டால் பிடிக்கும்.
யாரும் இல்லாத சமயமாக பார்த்து துர்காம்பாள் தோட்டத்திற்கு
வந்து உட்கார்ந்து கொள்வாள்.

''நான் ஒரு துரதிஷ்டசாலி. ஆண்களின் பேச்சை நம்பி என்
வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டேன். படிக்காததால் இந்த
கதிக்கு ஆளாகிவிட்டேன். நீயாவது நன்றாக படித்து வேலைக்குப்
போ. ஆண்கள் மீது ஆதாரப்படாமல் சுயமாக வாழக் கற்றுக்
கொள். '' துர்காம்பாள் அனுராதாவிடம் அடிக்கடி சொல்லுவாள்.

பாட்டியிடம் எல்லோரும் ''துர்காம்பாள் தான் உங்க
தம்பியின் மனைவி'' என்று கேலி செய்வது ஏன் என்று வெகு
நாட்கள் வரையில் புரியவில்லை. ஒரு நாள் காலையில் பூக்களை
பறித்துக் கொண்டிருந்த போது பாட்டியின் தம்பி துர்காம்பாளின்
வீட்டிலிருந்து வெளியேறியதைப் பார்த்தாள். அவனுக்கு இல்லாத
கெட்ட பழக்கமே இல்லை. சீட்டாட்டம், குதிரைப் பந்தயம்,

குடி எல்லாமே இருந்தவ. போதாதக் குறைக்கு வீட்டில் இரண் மனைவியர். அரை டஜன் குழந்தைகள். ஆனாலும் பாட் தம்பியை ஒரு வார்த்தை கூட சொல்ல மாட்டாள். "தந்தி பிடித்தவள்! என் தம்பியை வலையில் போட்டுக் கொண் விட்டாள்" என்று துர்காம்பாளைத் தான் வசை பாடி கொண்டிருப்பாள்.

இடது பக்கத்து பெரிய வீட்டில் இருக்கும் கோவிந்தனை பார்த்தால் அனுராதாவுக்கு வேடிக்கையாக இருக்கும். அவ தினமும் காலையிலேயே எழுந்து கொண்டு இரண்டு மணி நேரம் பூஜை செய்வார். வாயைத் திறந்தால் பெருமாளின் பெயரைத் தான் உச்சரிப்பார். முன் அறையில் மளிகை கடையை வைத்திருந்தார். பின்னால் இருக்கும் வராண்டாவில் உட்கார்ந்துகொண்டு அரிசியிலும், பருப்பிலும் கலப்படம் செய்து கொண்டிருப்பார். கடவுள் (ஒருக்கால் இருந்தால்) அவ எப்படி தண்டித்தார் என்றால் வருடத்திற்கு ஒரு பெண் குழந்தை என்ற கணக்கில் தற்சமயம் அவருக்கு ஏழு மகள்கள். அவ களைப் பார்த்து விட்டால் மட்டும் அவருக்கு வாயிலிருந் கெட்ட வார்த்தைகள் தான் வரும். தினமும் அவர்கள் வீட் லிருந்து அழுகையும், ரகளையும் தான் கேட்டுக் கொண்டு இருக்கும்

நர்ஸாக வேலை பார்த்துக் கொண்டிருந்த சரஸ்வதியும் சந்தோஷமாக இருக்கவில்லை. கணவனுக்கு அவள் மே சந்தேகம். அவளுடைய சம்பளம் மட்டும் வேண்டும் அவனுக்

இவர்கள் எல்லோரையும் பார்த்த பிறகு அனுராதா நினைத்துக் கொண்டாள், "திருமணம் செய்து கொண்டால் பண இல்லாவிட்டாலும் பரவாயில்லை, குணமுள்ளவனைத் தான் பண்ணிக் கொள்ளணும். நானும் உழைத்துச் சம்பாதிப்பேன். இப்ப ஆணின் கீழே அடிமையாக மட்டும் வாழமாட்டேன்" என்று.

அவளை டாக்டருக்கு படிக்க வைக்க வேண்டுமென்பது தந்தையின் விருப்பம். படிப்பிற்கு இடைஞ்சலாக இருக்கும்



என்று பாட்டு வாத்தியாரை நிறுத்தி விட்டார்கள். அனுராதா வழக்கமாக நல்ல மதிப்பெண்களையே பெற்று வந்தாள். கொஞ்சம் முயற்சி செய்தால் முதல் இடமும் கிடைக்கும். ஆனால் ஹைஸ்கூலுக்கு வந்தபிறகு அவளுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. பள்ளி நூலகத்திலிருந்து புத்தகங்களை வாங்கிப் படிப்பாள். இலக்கியம் என்றால் அவளுக்கு விருப்பம் அதிகம்.

பத்தாவது பாஸ் செய்யும் வரையில் அவளுக்குக் குறிப்பிடத் தக்க சிநேகிதிகள் யாருமே இல்லை. பிளஸ் டூவில் சேர்ந்த முதல் நாள் நடந்த சம்பவத்தால் அவளுக்கு முதல் முறையாக நட்பில் இருக்கும் இன்பம் தெரிய வந்தது. அந்த மூவரையும் அவளுக்கு ரொம்ப பிடித்து விட்டது.

கஷ்டப்பட்டு படிக்கும் வைஜெயந்தி என்றால் ரொம்பப் பிடிக்கும். தன்னைப் போலவே புத்தகப் பைத்தியம் என்பதால் பார்கவியை விரும்பினாள். எதையும் மறைக்காமல் வெளிப் படையாகப் பேசும் விசாலியின் குணத்தைப் பாராட்டினாள். அந்த வயதிலேயே சிநேகிதிகளுக்கு நடுவில் வரும் சின்னச் சின்ன சண்டை சச்சரவுகள் வேடிக்கையாக இருக்கும்.

சிநேகிதிகள் கூட்டத்தில் மற்ற மூவரும் எவ்வளவு தான் பேசிக் கொண்டாலும் அனுராதா மட்டும் மௌனமாக கேட்டுக் கொண்டிருப்பாள். அவர்கள் பேசுவதை வைத்து அவர்களுடைய குணநலனை எடை போட முயற்சிப்பாள். வெறும் பேச்சை வைத்துக் கொண்டு ஒருவரை எடை போட நினைப்பது அறிவீனம். யாராவது ஏதாவது சொன்னால் அப்படியே நம்பி விடுவது அவளுடைய அப்பாவித்தனம்.

"விசாலிக்கு பொறாமை அதிகம். அவளிடமிருந்து விலகியே இரு" என்பாள் பார்கவி.

"அப்படி இல்லை. எதையும் வெளிப்படையாக பேசுவது அவள் சுபாவம். அதான் சில சமயம் அவள் வார்த்தைகள் கடுமை

யாகத் தோன்றும். மனதில் எதையுமே வைத்துக் கொள்ள மாட்டாள்.'' விசாலிக்காக பரிந்து பேசுவாள் அனுராதா.

''சரி தான். நீ ஒரு அப்பாவிப் பிராணி'' என்று திட்டுவாள் பார்கவி.

ஒரு நாள் ராதாவின் தோட்டத்திற்கு மற்ற மூவரும் வந்தார்கள். அவள் அவ்வளவு பெரிய வீட்டில் வசித்து வருவாள் என்று அவர்கள் நினைத்திருக்கவில்லை. வைஜெயந்தியும், பார்கவியும் அவளுடைய அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து பேசிய போது விசாலி மட்டும் நெற்றியைச் சுளித்தாள்.

''கிராமத்தில் எங்க தாத்தாவோட தோட்டம் இதை விட ரொம்பப் பெரியது. அதில் இருக்கும் சில மரங்களின் பெயரை கூட நாம் கேள்விப்பட்டிருக்க மாட்டோம்'' என்றாள் விசாலி.

''அந்தத் தோட்டம் இன்னும் அழகாக இருக்கும் இல்லையா?'' என்று அனுராதா பார்கவியிடம் மறுநாள் பேசிக் கொண்டிருந்த போது சொன்னாள்.

''எல்லாம் கட்டுக் கதை. நீ இவ்வளவு பெரிய தோட்டத்தில் வசிப்பதைப் பார்த்து விட்டு பொறாமையால் அப்படிச் சொல்லியிருக்கிறாள். அவளுடைய தாத்தாவைப் பற்றி எனக்குத் தெரியாதா? அந்த கிராமத்திலேயே அவ்வளவு பெரிய தோட்டம் இல்லை'' என்றாள் பார்கவி.

''பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? ஒருக்கால் உண்மையாகவும் இருக்கலாம் இல்லையா?''

''போதுமே! நீ இப்படி நம்புவதால் தான் அவள் உன்னிடம் இது போல் அளக்கிறாள். விசாலியைப் பற்றி உனக்குத் தெரியாது'' என்றாள் பார்கவி திடமாக. விசாலிக்கும், பார்கவிக்கும் தூரத்து உறவு முறை இருந்தது.

பிளஸ்டூ முடித்ததுமே வைஜெயந்தி டில்லிக்கும், பார்கவி மதுரைக்கும் போய் விட்டார்கள். விசாலி வேறு கல்லூரியில் சேர்ந்து விட்டதால் அனுராதா தனியளாகி விட்டாள். எப்பொழுதாவது விசாலியைச் சந்திக்க முயன்றாலும் அவள் ஆர்வம் காட்டமாட்டாள். ஒரே ஊரில் இருந்த போதிலும் விசாலியின் திருமண விஷயம் கூட ராதாவுக்குத் தெரியாது. வேறு சிநேகிதி மூலமாக அந்த விஷயம் தெரிய வந்த போது ராதாவுக்கு வருத்தமாக இருந்தது. நட்பை இவ்வளவு சீக்கிரத்தில் மறக்கக் கூடியவர்கள் இருப்பார்களா என்று தன் வருத்தத்தைத் தெரிவித்து பார்கவிக்குக் கடிதம் எழுதினாள்.

''விசாலியைப் பற்றி உனக்குச் சரியாக தெரியாதுன்னு நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அவளைப் போன்ற சந்தர்ப்பவாதியை நான் எங்கேயுமே பார்த்ததில்லை. மேற்கொண்டு படிக்கப் போகிறேன். திருமணமே செய்து கொள்ள மாட்டேன் என்று அவள் சொன்னதெல்லாம் வெறும் பேச்சுத் தான். சமயத்திற்கு தகுந்தாற் போல் ப்ளேட்டை மாற்றுவது அவள் சுபாவம். இனி அவளை மறந்து விட்டு வேறு நல்ல சிநேகிதிகளை தேடிக் கொள்'' என்று பதில் கடிதம் எழுதினாள் பார்கவி.

ஆனால் ராதாவுக்கு வேறு யாருடனும் நட்பு ஏற்படுத்திக் கொள்ளத் தோன்றவில்லை. விசாலியையும் சந்திக்க முயற்சி செய்யவில்லை. நட்பு ஏற்படுவதற்கு பல வருடங்கள் தேவைப்படலாம். பிரிந்து போவதற்கு ஒரு நிமிஷம் போதும்.

ராதா பி.எஸ்.ஸி. கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். இரண்டாவது ஆண்டு முடிவடைந்ததுமே அவள் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

அவள் காதல் வயப்பட்டு விட்டாள்.

## 2

**லீவு** விட்டு விட்டதால் அத்தைகள் எல்லோரும் குழந்தைகளுடன் வந்து விட்டார்கள். கல்யாண வீட்டைப் போல் வீடு

முழுவதும் ஒரே சந்தடி. எவ்வளவு தான் ஒதுங்கிக் கொள்ள நினைத்தாலும் குழந்தைகள் அவளை விடவில்லை. அவர்களுடைய அம்மாக்கள் எல்லோரும் தினமும் ஏதாவது சினிமாவுக்குப் போய் விடுவார்கள். அன்னபூரணிக்கு சமையல் அறையிலிருந்து வெளியேவர ஒழியவில்லை. அவளைப் பார்த்தால் பாவமாக இருந்தது. மற்றவர்களுக்காகவே உழைப்பதிலேயே அவளுடைய வாழ்நாள் முழுவதும் கழிந்து கொண்டிருந்தது. அப்படியும் அவளுக்கென்று ஒரு அங்கீகாரம் கிடைக்கவில்லை.

எப்படியோ குழந்தைகளிடமிருந்து விடுபட்டு தோட்டத்திற்குப் போய்விட்டாள் ராதா. பல நாட்களுக்குப் பிறகு தென்பட்ட சிநேகிதியை வரவேற்பது போல் செடிகள் எல்லாம் தலையாட்டிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும் தொட்டு குசலம் விசாரித்து விட்டு தனக்குப் பிடித்த மா மரத்தின் மீது ஏறி கிளையில் உட்கார்ந்து கொண்டாள். தன்னையும் அறியாமல் மெல்லிய குரலில் பாடத் தொடங்கினாள்.

பாட்டு எங்கேயிருந்து வருகிறது என்று வியப்போடு தேடிக் கொண்டே வந்த நபரை அவள் கவனிக்கவில்லை. பாட்டு முடிந்ததுமே கைத்தட்டல் ஓசையைக் கேட்டு அவள் கீழே பார்த்தாள்.

சினிமாவில் பார்த்தும், புத்தகங்களையும் படித்தும் தனக்கு வர வேண்டிய கணவன் எப்படி இருக்க வேண்டுமென்று ராதா ஊகித்துக் கொண்டிருந்தது. உண்மை தான். தன் கதாநாயகன் ஆறடி உயரத்தோடு, திடமாக, அழகாக இளவரசனைப் போல் இருக்க வேண்டுமென்று அவள் நினைக்கவில்லை. தோற்றத்தில் சாதாரணமாக இருந்தாலும் தன்னைப் புரிந்து கொள்பவனாக இருக்க வேண்டுமென்று விரும்பினாள். பணம் இல்லா விட்டாலும், குடில் போன்ற சிறிய வீட்டில் இருவரும் சந்தோஷமாக நிம்மதியாக வாழமுடியும் என்று நம்பினாள்.



ஆனால் மரத்தடியில் முறுவலுடன் நின்று கொண்டிருந்தவன் சுமார் ஆறடி உயரத்தில், சிவப்பாக, சுருண்ட கேசத்துடன் சினிமா ஹீரோவைப் போலவே இருந்தான்.

அனுராதாவின் இதயம் வேகமாகத் துடித்தது. மனதில் ஏதோ சலனம். மெதுவாகக் கீழே இறங்கினாள். புது மனிதர்களுக்கு முன்னால் அதுவும் ஆண்களுக்கு முன்னால் பாட விருப்பப்பட மாட்டாள். இன்றைக்கு ஒரு புது மனிதன், அதுவும் அழகான ஆண் மகன் தன் பாட்டைக் கேட்டதோடு அல்லாமல் தன்னைப் பாராட்டவும் செய்கிறான். குறும்புப் பார்வையால் தன்னைத் தொடுகிறான். நினைக்கும்போதே வெட்கம் அவளை சூழ்ந்து கொண்டது.

''உங்களுடைய பாட்டு ரொம்ப நன்றாக இருக்கு. உங்க தோட்டமும் நன்றாக இருக்கு. பாரதியாரின் 'கண்ணம்மா' பாட்டை நீங்க பாடிக் கேட்கணும் போல் இருக்கு'' என்றான் அவன்.

''தாங்க்ஸ்'' ராதாவுக்கு வாயிலிருந்து வார்த்தை வருவதே கஷ்டமாகி விட்டது. அவன் யாரோ அவளுக்குத் தெரியாது. என்றுமே பார்த்ததில்லை. அண்ணன்கள் யாருக்காவது நண்பனாக இருக்கக் கூடும். இல்லாவிட்டால் வெளியாட்கள் இது போல் தோட்டத்திற்குள் வர வாய்ப்பு இல்லை.

''நீங்க யாரு? யாருக்காக வந்தீங்க?'' துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டு விட்டாள். அந்தக் கேள்வியில் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் தென்பட்டது அவளுக்கு.

''என் பெயர் மோகன். இங்கே எப்படி வந்தேன் என்று ஆச்சரியமாக இருக்கா? வெங்கடேசன் என் நண்பன். அவனைத் தேடிக் கொண்டு அவன் வீட்டுக்குப் போன போது, வெளியே போயிருப்பதாகவும், கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான் என்றும்

சொன்னாங்க. பொழுதுபோகாமல் இப்படி வந்தேன்'' என்றான் வெங்கடேசன் தோட்டக்காரனின் பெரிய மகன்.

ராதாவுக்கு அங்கிருந்து போய்விட வேண்டும் போலிருந்தது. அதே சமயத்தில் போகக்கூடாது என்றும் இருந்தது. அவ பார்வை தன்னைக் கட்டிப் போட்டு விட்டது போன்ற உணர்வு ஆனால் என்ன பேசுவது? எப்படிப் பேசுவது?

''உங்க தோட்டம் ரொம்ப நன்றாக இருக்கு. நீங்க இந்தப் பங்களாவில் இருக்கீங்கன்னு நினைக்கிறேன். ரொம்ப அதிர்ஷ்ட சாலி நீங்க. கவிதைகளைப் படித்துக் கொண்டும், பாட்டு பாடிக் கொண்டும் சந்தோஷமாக வாழ்க்கையைக் கழித்து விடலாம்.''

''உங்களுக்குக் கவிதை என்றால் ரொம்பப் பிடிக்குமோ?'' அனுராதா கேட்டாள்.

''பிடிக்குமாவா? கவிதை என்றால் உயிர். ஆனால் உங்களைப் போல் பாடத் தெரியாது. படிக்கவே நேரம் இருப்பதில்லை. என் துரதிர்ஷ்டத்திற்கு வருத்தப்படுவதை விட வேறென்ன செய்ய முடியும்?''

கொஞ்ச நேரம் பேசி விட்டு அவன் போய் விட்டான். அன்றிரவு அவளுக்குத் தூக்கம் வரவில்லை. கண்ணை மூடினாலும் திறந்தாலும் அவன் உருவம் தான் தென்பட்டது. கண்டதுமே காதல் என்றால் இது தானா? அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவனும் எதுவும் கேட்கவில்லை. சொல்லவும் இல்லை. இது உண்மையான காதல் தானா அல்லது வெறும் கவர்ச்சி மட்டும் தானா? அவன் அவளைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை. அவளுடைய அழகையோ, படிப்பையோ புகழவில்லை. பேசிய சொற்ப நேரத்திலும் தோட்டத்தைப் பற்றித் தான் பேசினான். தன்னுடைய விருப்பு வெறுப்பு எல்லாம் தெரிந்தவன் போல் பேசினான். அதனால் தான் அவன் அவளைக் கவர்ந்து விட்டான். ஐந்து நிமிட அறிமுகத்தில் இவ்வளவு தூரம் யோசிப்பது விவேக



மில்லை என்று நினைத்தாள். ஆனால் மன்மதனின் அம்பு வந்து தாக்குவதற்கு அரை வினாடி போதும் என்ற விஷயம் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இரவில் தூங்கும்போது கனவிலும் அவன் உருவம் தான் வந்தது. காலையில் எழுந்து தோட்டத்திற்குப் போனாலும் அவன் நினைவு தான். ''ராதா மோகன்'' என்று எழுதிப் பார்க்கும் போது பொருத்தம் இருப்பது போல் தோன்றியது. தான் இப்படி யோசிப்பது விவேகமில்லை என்று தெரிந்தாலும் அவள் மனம் இப்பொழுது அவள் வசத்தில் இருக்கவில்லை.

ரொம்ப நாட்கள் வரையில் மோகன் அவள் கண்ணில் படவில்லை. லீவு முடிந்து கல்லூரிக்குப் போகத் தொடங்கி விட்டதால் பழையபடி படிப்பில் ஆழ்ந்து விட்டாள். அவனைப் பற்றி மறந்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில் மறுபடியும் தென்பட்டான்.

இந்த முறை பஸ் ஸ்டாண்டில். எதிரே நிறுத்தியிருந்த காரில் உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்ததுமே அவள் இதயம் லயம் தப்பி விட்டது.

''வாங்க. இறக்கி விடுகிறேன்'' கார் கதவைத் திறந்து கொண்டே சொன்னான் அவன்.

''பரவாயில்லை. பஸ் வந்துவிடும்'' என்றாள் அவள். அது வெட்கமா அல்லது அவ்வளவு நாட்கள் தென்படாததற்குக் கோபமா என்று அவளுக்கே தெரியவில்லை.

''இவ்வளவு தயக்கம் எதுக்கு? அந்தப் பக்கமாகத் தான் போகிறேன். வாங்க'' கெஞ்சுவது போல் வந்தது அவன் குரல். ராதா காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

''பெண்கள் கல்லூரியில் தானே படிக்கிறீங்க?'' டிரைவ் செய்து கொண்டே கேட்டான்.

''உங்களுக்கு எப்படி தெரியும்?''

''மனம் இருந்தால் வழி தானே பிறக்கும். உங்களுடைய நினைவு பல முறை வந்தது. அதான் உங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன்.''

அவள் இதயத்தில் சிலிர்ப்பு ஏற்பட்டது. தன்னைப் போலவே அவனும் அவளைப் பற்றியே யோசித்து வருகிறான் போலும். அது அதிர்ஷ்டம் இல்லையா? பார்த்தால் சாதாரண ஆள் போல் தென்படுகிறான், காரை எப்படித்தான் வைத்துப் பராமரிக்கிறானோ?

''இந்தக் கார் என்னுடையது இல்லை'' அவள் மனதில் இருந்ததை ஊகித்து விட்டாற் போல் சொன்னான்.

''அப்படி என்றால்?''

''நான் ஒரு கார் மெக்கானிக். உண்மையைச் சொல்லணும் என்றால் நான் ரொம்ப ஏழை. பத்தாவது வரையில் தான் படிக்க முடிந்தது. பொறுப்புக்கள் என்னை மேற்கொண்டு படிக்க விடாமல் தடுத்து விட்டன. எதுக்காக வெட்கப் படணும்? எனக்குத் தெரிந்த தொழில் இது தான். சில நாட்கள் வேறொரு ஒர்க் ஷாப்பில் வேலை பார்த்து விட்டு பிறகு சொந்தமாக தொழில் தொடங்கி விட்டேன், இன்னொரு கூட்டாளியையும் சேர்த்துக் கொண்டு.''

அவன் வார்த்தைகளில் நேர்மை வெளிப்பட்டது. கல்லூரிக்குப் போய் சேரும் வரையில் அவன் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவனுக்குத் தந்தை இல்லை. திடீரென்று அவர் இறந்து போனபிறகு இரண்டு தம்பி, இரண்டு தங்கைகளின் பொறுப்பு இவன் தலையில் விழுந்தது. படிப்பை நிறுத்தி விட்டு சம்பாதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பிளஸ் டூ கூட படிக்காத போது, அவனுக்கு என்ன வேலை கிடைக்கும்? அதனால் தான் அவன் ஐந்து ஆண்டுகள் வரையில்



வேலையை கற்றுக் கொண்டான். இப்பொழுது சேமிக்க முடியா விட்டாலும் தன் குடும்பத்திற்கு எந்த குறையும் இல்லாத விதமாக வாழ்க்கை வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

ராதாவுக்கு வியப்பாக இருந்தது. படித்தது பத்தாவது வகுப்பு வரையில் தான். ஆனாலும் பாரதியாரின் கவிதைகளை, கீட்ஸ் கவிதைகளை நினைவில் வைத்திருக்கிறான். அதை அவனிடமே கேட்டுவிட்டாள்.

''இலக்கியம் எனக்குப் பிடித்த சப்ஜெக்ட். மேற்படிப்பு படிப்பதாக இருந்தால் இலக்கியம் தான் படிக்கணும்னு இருந்தேன். இப்பொழுதோ பகல் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்த பிறகு அரைமணி நேரம் உட்கார்ந்து எதையாவது படிக்கணும் என்றாலும் முடியவில்லை.''

''பிரைவேட்டாகப் படிக்கலாமே?''

''அதுவும் சாத்தியப் படவில்லை. என்னுடைய வேலைக்குக் குறிப்பிட்ட நேரம் என்று எதுவும் இல்லை. அம்மாவும், தம்பி தங்கைகளும் தஞ்சாவூருக்குப் பக்கத்தில் சிறிய கிராமத்தில் இருக்கிறார்கள். அதனால் சமையல் மற்ற வீட்டு வேலைகள் எல்லாம் நானே செய்து கொள்ளணும். அதனால் மேற்கொண்டு படிக்க முடியாமல் போய் விட்டது.''

அவன் சொன்னதை கேட்ட போது அவளுக்குத் தந்தையின் நினைவு தான் வந்தது. 'அப்பாவுக்கு இவனை நிச்சயமாக பிடிக்கும்' என்று நினைத்துக் கொண்டாள்.

★ ★ ★

**மோ**கன் ஒரு வாரமாக கண்ணில் படவில்லை. அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. படிப்பில் கவனம் செல்லவில்லை. எந்த வேலையும் செய்யத் தோன்றவில்லை. பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தாலும் அவள் மனம்

பக்குவம் அடையவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. கற்பனைக்கும் வாஸ்தவத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கும் நிலையில் அவள் இல்லை. தனக்குத் தெரிந்த சின்னஞ்சிறு வட்டத்தையே உலகம் என்று எண்ணிவிட்டாள்.

யாருக்கும் கிட்டாத காதல் அனுபவம் தனக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது என்ற பிரமையில் இருந்தாள். வெளி உலகத்தில் நடந்து கொண்டிருக்கும் மாற்றங்களைத் தெரிந்து கொள்ளாமல் எதிராளியை எடை போடும் ஞானமும் இல்லாமல் மனமுதிர்ச்சி அடைவது கஷ்டம்.

அவளிடம் கள்ள கபடம் இல்லை. எதிராளியிடமுள்ள கபடமும் அவள் கண்களுக்குத் தெரியாது. காதலுக்கு கண் இல்லை என்று எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் அது தன் விஷயத்தில் சரியில்லை என்று நினைத்தாள். அவளுக்குத் தெரிந்தது ஒன்று தான். தான் மோகனை மிக ஆழமாக நேசிக்கிறாள். அவன் இல்லாமல் தன்னால் வாழ முடியாது. அந்த முடிவுக்கு வந்ததும் அவளால் மேற்கொண்டு பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் சொன்ன முகவரியைத் தேடிக் கொண்டு ஒர்க் ஷாப்பிற்குப் புறப்பட்டாள்.

அவளை மகிழ்ச்சியோடு வரவேற்றான் மோகன். ''ஏனோ நீங்க வருவீங்கன்னு தோன்றியது. எனக்கே தெரியாமல் காலையிலிருந்தே உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

தன் வருகையை அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த ராதாவுக்கு அவன் அப்படிச் சொன்னதுமே தாங்க முடியாத சந்தோஷம் ஏற்பட்டது. தான் வரப் போவதை அவன் முன்கூட்டியே எதிர்பார்த்ததை எத்தனையோ ஜென்மங்களாக தங்களுக்கு இடையே ஏற்பட்ட பந்தத்திற்கு நிதர்சனமாக எடுத்துக் கொண்டாள்.

''நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது.''



இது போன்ற உரையாடல்கள் அவர்களுக்கு இடையே நிகழவில்லை. ஆனால் ஒருவர் மனதை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டாற் போலவும், கண்ணுக்குத் தெரியாத பந்தம் தம் இருவரையும் பிணைத்து விட்டாற்போலவும் தோன்றியது. மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள்.

மனம் முழுவதும் சந்தோஷம் பரவிய நிலையில் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். 'ஏன் தாமதமாக வந்தாய்?' என்று வீட்டில் கேட்டதற்கு பிரைவேட் கிளாஸ் இருந்ததாக பொய் சொன்னாள்.

அது தான் தொடக்கம். வாரத்திற்கு இரண்டு நாட்கள் பிரைவேட் கிளாஸ்கள் நடக்கும். மோகன் அவள் வீட்டிற்கு அருகிலேயே ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். ராதாவிடம் மாற்று சாவி ஒன்றைத் தந்தான். அந்த அறைக்கு மாறிய பிறகு அவர்களுக்கு தனிமை கிடைத்தது. கொல்லையில் நின்று பார்த்தால் மோகனின் அறை கண்ணில் படும். அவன் வாசலில் நின்று ஜாடை காட்டியதும் ராதா அவனுடைய அறைக்குப் போவாள்.

''நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி ராதா! என்னைப் போன்ற சாதாரணமானவனை நீ விரும்பியதை கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை'' என்றான், அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டே.

''நான் மட்டும் அதிர்ஷ்டசாலி இல்லையா. நானும் சாதாரணப் பெண் தானே'' என்றாள் ராதா.

''எந்தச் சூழ்நிலையிலும் உன் மனம் கஷ்டப்படாமல் பார்த்துக் கொள்கிறேன் ராதா!''

''அதை விட எனக்கு வேறு என்ன வேண்டும் மோகன்! உன் கஷ்டங்களை நானும் பகிர்ந்து கொள்கிறேன். ஏழ்மைக்கு என்றுமே நான் பயப்படமாட்டேன்'' அனுராதா சொன்னாள்.

உள்ளத்தை பறிகொடுத்த பிறகு உடலையும் அர்ப்பணித்து கொள்வது அவளுக்குத் தவறாகப் தோன்றவில்லை. எதிர்காலத்தை பற்றிய இனிமையான கனவுகளில் ஆழ்ந்து போனவளை தன்னையே அவனிடம் ஒப்படைத்தாள்.

இறுதியாண்டு தேர்வுகள் நெருங்கி விட்டன. எதி காலத்திற்குப் பட்டப்படிப்பு அவசியம் என்றும், முதல் வகுப்பில் பாஸாக வேண்டும் என்றும் உறுதியோடு படித்தாள் சில நாட்கள் மோகனிடமிருந்து கூட விலகியிருந்தாள்.

பரீட்சை இருக்கும் நாட்களில் மோகன் கல்லூரிக்கு வந்து சந்தித்து விட்டுப் போவான். அந்த உற்சாகத்தில் பரீட்சையை நன்றாக எழுதினாள். கடைசிப் பரீட்சை எழுதி முடித்துவிட்டு வெளியே வந்தாள். பிராக்டிகல்ஸில் அவளுக்கு எப்போதும் நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். முதல் வகுப்பு கட்டாயம் வரும் என்று நம்பிக்கை ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்காக மோகனின் அறைக்குச் சென்றாள். அவனும் அவளுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தான். நேரம் எப்படித்தான் கழிந்ததோ தெரியவில்லை. வீடு திரும்பும்போது நன்றாக இருட்டிவிட்டது.

எதிரே வராண்டாவிலேயே காத்திருந்தான் அவளுடைய சித்தப்பாவின் மகன். அவனும் பட்டப்படிப்புத் தான் படித்துக் கொண்டிருந்தான்.

"அண்ணா! பரீட்சை எப்படி எழுதியிருக்கிறாய்? நான் ரொம்ப நன்றாக எழுதினேன். முதல் வகுப்பு நிச்சயம்" என்றாள் மகிழ்ச்சி கலந்த குரலில்.

அவன் இதழ்களில் விகாரமான முறுவல் படர்ந்தது. "பெரியம்மா உன்னைக் கூப்பிடுகிறாள். உள்ளே போ. உனக்காக வெகுமதி காத்துக் கொண்டிருக்கு" என்றான் சீரியஸாக.



நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டது என்று ஊகித்துக் கொண்டாள். ஆனால் என்ன நடந்ததென்று புரியவில்லை. ராதாவைப் பார்த்ததுமே அன்னபூரணி கை வேலையை விட்டு விட்டு அவளை அறைக்குள் இழுத்துக் கொண்டு போனாள்.

"எங்கே போய் விட்டு வருகிறாய்?" தாயின் குரலில் அந்த அளவுக்கு தீவிரத்தை என்றுமே கண்டதில்லை.

"பிரண்ட் வீட்டிற்கு" அழுத்தமாகவே பதில் சொன்னாள்.

"யாரந்த பிரண்ட்? எவ்வளவு நாளாக இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கு?"

அனுராதாவின் கன்னத்தில் அறை விழுந்தது. தாயின் கையால் அறை வாங்கியது அது இரண்டாவது முறை. கை வலிக்கும் வரையில் அடித்து விட்டு, பிறகு அந்த தாய் அழுது கொண்டே உட்கார்ந்திருந்தாள். அனுராதா மட்டும் எதுவுமே நடக்காதது போல் தைரியமாக உட்கார்ந்திருந்தாள்.

பெற்றோருக்கு இந்த விஷயம் என்னிக்காவது தெரியாமல் போகாது என்றும் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்றும் தயாராகத் தான் இருந்தாள். அவள் தாய் மட்டும் கொஞ்சம் பரிவோடு விசாரித்திருந்தால் விஷயத்தைச் சொல்லியிருப்பாள். ஆனால் எடுத்ததுமே கையை ஓங்கி விட்டதால் ராதாவின் மனம் காயப்பட்டது. தங்கள் வீட்டிலேயே இருந்து கொண்டு தன் மீதே துப்பறியும் வேலையைச் செய்து தாயிடம் இல்லாதது பொல்லாத தைக் கூட்டிச் சொன்ன அண்ணன் மீது அருவருப்பு ஏற்பட்டது. தாய் சாதாரண பெண். ஆனால் குறைந்த பட்சம் தந்தையாவது தன்னைப் பரிவோடு விசாரிப்பார் என்றும் விஷயத்தைச் சரியாக புரிந்து கொள்வார் என்றும் அவள் நம்பினாள். ஆனால் விஷயம் தெரிந்ததுமே பட்டாபிராமன் கோபத்தால் தாம்தூம் என்று குதித்தார். வாய்க்கு வந்தபடி திட்டினார். அவள் சொல்வதை எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. இரண்டு நாட்கள் அவளை

அறையை விட்டு வெளியே வர விடவில்லை. அந்த இரண்டு நாட்களும் சித்தப்பாவின் மகள் ராஜி மட்டும் அவளோடு பேசினாள்.

"அக்கா! மோகனிடம் ஏதாவது சொல்லணுமா?" என்று கேட்டாள்.

ராதாவுக்கு வியப்பாக இருந்தது. இதெல்லாம் யாருக்குமே தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் எல்லோருக்குமே தெரிந்திருக்கிறது.

"மோகன் தங்கியிருக்கும் அறை தெரியுமா?"

"பின்னால் இருக்கும் தெருவில் தானே இருக்கிறார்? சரியாகத் தெரியாது. தேடிப் பார்த்து கண்டு பிடித்து விடுவேன். என்னை அடையாளம் புரிந்து கொள்வார் இல்லையா?" ராஜி சொன்னாள். அவள் பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்தாள்.

"நடந்ததையெல்லாம் அவரிடம் சொல்லு. அப்பா இரண்டு மூன்று நாட்களில் சமாதானமாகி விடுவார் என்று நினைக்கிறேன். ஒருக்கால் ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் நான் கிளம்பி வந்துவிடுவேன் என்று சொல்லு."

ராஜி போய் விட்டாள்.

நான்காவது நாள் பட்டாபிராமன் கொஞ்சம் சமாதானமடைந்தார். மகளை அழைத்து நல்ல வார்த்தைகளைச் சொன்னார். மோகனைப் பற்றி எல்லா விஷயமும் விசாரித்ததாகவும், அவன் குணம் நல்லதில்லை என்றும், அவனோடு அவள் சந்தோஷமாக வாழ முடியாது என்றும் நயமாக எடுத்துச் சொன்னார்.

"எவ்வளவு நாளாக அவனை உனக்குத் தெரியும்?"

"ஏறக்குறைய ஒரு வருடமாக –"

"இந்த ஒரு வருடத்தில் எத்தனை முறை அவனைச் சந்தித்து இருக்கிறாய்?"



"சுமார் இருபது தடவை" என்றாள்.

"வாழ்நாள் முழுவதும் சேர்ந்து இருந்தாலும் ஒரு மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்வது கஷ்டம். அவன் நண்பர்களிடமே விசாரித்தேன். அவனுக்கு வேறு பெண்களோடு கூட பழக்கம் இருப்பதாக தெரிய வந்தது. அவன்தாய் ரொம்ப பொல்லாதவள் என்றும் கேள்விப் பட்டேன். அந்த வீட்டில் உன்னால் சந்தோஷமாக இருக்க முடியாது. அவன் உன்னைக் காதலிப்பது போல் நடிப்பதெல்லாம் உன் பணத்திற்காகத் தான். உனக்கு ஏதோ நிறைய சொத்து வரும் என்ற பிரமையில் இருக்கிறான்."

ராதா உள்ளூர சிரித்துக் கொண்டாள். காதலிப்பவர்களைத் தவிர வேறு யாருக்குமே காதல் மேல் நம்பிக்கை இருக்காது.

"அப்பா! எனக்கு எவ்வளவு சொத்து இருக்குன்னு அவன் ஒரு நாளும் என்னைக் கேட்டதில்லை. அந்த விஷயம் எனக்குத் தெரியாது. அதோடு எங்களுக்கு உங்களுடைய சொத்து எதுவும் தேவையில்லை. நானும் வேலைக்குப் போவேன். எங்களால் சந்தோஷமாக வாழமுடியும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு."

"அவசரப்படாதே ராதா! நான் சொல்கிற படி செய். இன்னும் ஒரு வருடம் வரையிலும் அவனைக் கவனித்துக் கொண்டே வா. அவனுடைய உண்மை சொருபத்தைக் கண்டு கொள். வீணாக வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளாதே. காதல் ஒரு வேளை கூட சோறு போடாது. உன் வயது உன்னை யோசிக்க விடாமல் தடுக்கிறது. பின்னாடி வருத்தப்படுவாய்."

"நான் இன்னும் சின்னப் பெண்ணோ, ஒன்றும் தெரியாதவளோ இல்லை அப்பா! மோகன் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. கல்யாணம் செய்து கொண்டால் அவனைத் தான் செய்து கொள்வேன். இப்பொழுது முடியாவிட்டாலும் கொஞ்ச நாள் கழித்தாவது சரி. பணத்திற்கு முக்கியத்துவம் தரக்கூடாது, மனதிற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கணும் என்ற விஷயத்தை

நான் உங்களிடமிருந்து தான் கற்றுக் கொண்டேன். இப்பொழுது பணத்தை விட வேறு எதுவும் முக்கியம் இல்லை என்று பேசுவது நீங்கள் தான்.''

''நான் முக்கியத்துவம் தரச் சொன்னது மனதிற்கு அல்ல, குணத்திற்கு. அவனிடம் பணம் இல்லை என்ற காரணத்தால் நான் தடை சொல்லவில்லை. அப்படிப்பட்ட போக்கிரியுடன் வாழ்க்கையை நடத்துவது கஷ்டம்.''

''அப்பா! உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அந்த விஷயத்தை நேராகச் சொல்லுங்கள். அவ்வளவு தானே தவிர தெரிந்தும் தெரியாமலும் யாரோ சொன்னதைக் கேட்டுக் கொண்டு அவனைப் பற்றி அபாண்டமாகப் பேசாதீங்க.'' கோபமாக சொன்னாள் ராதா.

பட்டாபிராமனுக்கு கோபம் கட்டுக்கு அடங்காமல் போய் விட்டது. ''அப்படி என்றால் உன் உத்தேசம் தான் என்ன? நான் அவ்வளவு அயோக்கியனா? நீ முட்டாள்தனமாக எவனையோ காதலிக்கிறேன் என்று சொன்னால் உடனே அவன் காலைக் கழுவி கன்னியாதானம் செய்து தருவேன்னு நினைத்துவிட்டாயா? உன் வாழ்க்கையை என் கையாலேயே கெடுக்க என்னால் முடியாது. உனக்கு அவன் தான் வேணும் என்றால் போய் நீயே கல்யாணம் செய்து கொள்.''

''அப்பா! நான் முதலிலேயே சொல்லிவிட்டேன், எனக்கு உங்க சொத்து தேவை இல்லைன்னு. இப்படியே கட்டிய புடவையோடு கிளம்பிப் போகிறேன். என் முடிவு சரியானது தான் என்றும், சந்தோஷமாக இருப்பேன் என்றும் எனக்கு நம்பிக்கை இருக்கு. அதைப் புரிந்து கொண்ட பிறகு நீங்களே என்னை வீட்டிற்கு அழைப்பீங்க.''

அன்றைக்கே வீட்டை விட்டுப் போய் விட்டாள் அனுராதா. அன்னபூரணி எத்தனையோ விதமாக எடுத்துச் சொன்னாள்



அழுது தீர்த்தாள். தந்தையும் மகளும் இருவருமே பிடிவாதமாக இருந்தார்கள். 'இது தான் கடைசி இந்த வீட்டில்' என்று ராதாவுக்குத் தெரியும்.

கட்டிய புடவையுடன் வந்த ராதாவை மனப்பூர்வமாக வரவேற்றான் மோகன். மறுநாளே கோவிலில் திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்து விட்டான். நாலைந்து நண்பர்களின் முன்னிலையில் அவர்களுடைய திருமணம் நடந்து முடிந்து விட்டது. கடன் வாங்கி வந்து அவளுக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தந்தான்.

உடல்ரீதியாக இணைவது இது முதல் இல்லை அவர்களுக்கு. ஆனால் தம் எதிர்காலத்தைப் பற்றிப் பேசிக் கொள்வதற்கும், திட்டம் போடுவதற்கும் அதை முதல் நாளாக பாவித்தாள்.

''முதலில் உங்க ஊருக்குப் போய் எல்லோரையும் பார்த்து விட்டு வரலாம். எனக்கு ஏனோ கில்டியாக இருக்கு. உங்க வீட்டில் சொல்லாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டதற்கு அத்தை எவ்வளவு வருத்தப்படுவாங்களோ? திரும்பி வந்ததுமே எங்கேயாவது வேலை தேடிக் கொள்கிறேன்'' ராதா சொன்னாள்.

''இப்போ நாம் அவசரமாக எங்கேயும் போகத் தேவையில்லை. அம்மா கட்டாயம் புரிந்து கொள்வாள். முதலில் உன் பிராக்டிகல்ஸ் முடியட்டும்'' என்றான்.

''அத்தை ஏதாவது நினைத்துக் கொள்வாளோ என்னவோ?'' கவலையோடு சொன்னாள்.

''ஒன்றும் நினைத்துக் கொள்ள மாட்டாள். அம்மாவுக்கு நான் என்றால் உயிர். நான் சொன்னால் புரிந்து கொள்வாள். முதலில் நான் போய் பேசிவிட்டு வருகிறேன். அப்புறமாக இரண்டு பேரும் சேர்ந்து போகலாம்.''

அன்றே புரோகிராம் எல்லாம் முடிவு செய்து கொண்டார்கள். எதிர்பார்த்தது போலவே பிராக்டிகல்ஸ் எல்லாம் நன்றாகச்

செய்து முடித்தாள் அனுராதா. திருமண விஷயத்தைப் பற்றி துருவித் துருவி கேட்கக் கூடிய சிநேகிதிகள் யாருமே இல்லை அவளுக்கு.

மோகன் ஊருக்குப் போயிருந்தான். அவளுடைய கடைசி பிராக்டிகல்ஸ் அன்று திரும்பி வருவதாகச் சொல்லியிருந்தான். அவன் வரும்போது வீட்டிலேயே இருந்து வரவேற்க வேண்டும் என்று நினைத்தவளாக பரீட்சை முடிந்த கையோடு ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்தாள். அவன் முன்னாடியே வந்து விட்டான் போலும். பூட்டு திறந்திருந்தது. ஒருக்கால் அவனும் தன்னைப் போலவே யோசித்து படுக்கையைத் தயார் செய்து கொண்டிருக்கிறானோ என்று நினைத்து சந்தடி செய்யாமல் முறுவலுடன் கதவை நெருங்கினாள். கதவின் மேல் கையை வைக்கப் போனவள் அப்படியே நின்று விட்டாள். உள்ளே இருந்து பேச்சுக்குரல் கேட்டது. அதில் ஒன்று பெண்ணின் குரல்.

'மாமியார் தான் வந்து விட்டாளோ?' சந்தேகத்துடன் நின்று விட்டாள்.

''கல்யாணம் ஆனதும் என்னை மறந்து விட்டாயா மோகன்?'' பெண்ணின் குரல் கேட்டது.

''உன்னை மறப்பதா? ஊருக்குப் போனபிறகு நீ தான் என்னை மறந்துவிடுவாயோ என்னவோ'' மோகன் சொன்னான்.

''இப்போ உறவுமுறை கூட ஏற்பட்டு விட்டது இல்லையா? இனி மறந்து போவது என்ற கேள்விக்கே இடம் இல்லை.'' கலகலவென்று சிரிப்புச் சத்தம்.

அனுராதாவுக்கு ஏதோ சந்தேகம் வரவே கதவு இடுக்கு வழியாக பார்த்தாள்.

ராஜி!

இதெல்லாம் கனவு இல்லை என்றும், தான் கேட்டது உண்மை தான் என்றும் தன்னைத் தானே நம்ப வைத்துக் கொள்ள



தற்கு ரொம்ப நேரம் பிடித்தது அவளுக்கு. உள்ளே இருப்பது அவளுடைய தங்கை. 'மோகன் என்னை அடையாளம் புரிந்து கொள்வானா?' என்று கேட்ட அப்பாவி தங்கை. பிளஸ்டு படித்துக் கொண்டிருப்பவள்.

அந்தப் பெண் வெளியில் வரும் சத்தம் கேட்டு சட்டென்று மறைந்து கொண்டாள்.

வானம் இடிந்து விழவில்லை. பூமி சுழல்வது நின்று விடவில்லை. எல்லாம் வழக்கம் போல் இருந்தன. இதயத்தில் வெடித்துக் கொண்டிருந்த எரிமலை தான் எஞ்சி நின்றது. அவளைத் தவிர உலகம் முழுவதும் சந்தோஷமாக இருக்கிறது.

''வந்துவிட்டாயா? பிராக்டிகல்ஸ் நன்றாகச் செய்தாயா?'' அன்போடு அவளை அணைத்துக் கொண்டான் மோகன். ராதா அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள். அவன் குரலில் தென் பட்ட சந்தோஷம் நடிப்பாகத் தோன்றவில்லை.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? அம்மா என்ன சொன்னாளோ என்று யோசிக்கிறாயா? நான் தான் சொன்னேனே, அம்மாவுக்கு என்னிடம் பிரியம் அதிகம்னு. உன்னை ஒரு தடவை அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள்.''

''ராஜீ என்ன சொல்கிறாள்?'' அவனிடமிருந்து விலகிக் கொண்டே கேட்டாள்.

''நீ பார்த்தாயா அவளை?'' கேட்டான் தாழ்ந்த குரலில்.

அவள் பதில் சொல்லவில்லை.

''சாரி ராதா! உன் மனம் கஷ்டப்படும் என்று தான் உன்னிடம் சொல்லத் தயங்கினேன். ராஜிக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவள் ஒரு மாதிரியான பெண். அவ்வப்பொழுது என் அறைக்கு வருவாள். எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டாள். அவள் தொல்லையிலிருந்து விடுபட வேறு வழியில்லாமல் பேசிக் கொண்டிருப்பேன். இல்லாவிட்டால் நான் அவளிடம்

தவறாக நடந்து கொண்டு விட்டதாக எல்லோரிடமும் பிரசாரம் செய்து விடுவேன் என்று மிரட்டினாள். நான் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அதையும் பண்ணியிருப்பாள். என்னை நம்பு ராதா! உன் அறிமுகம் ஏற்பட்ட பிறகு அவளை எவ்வளவு தூரத்தில் வைக்க முடியுமோ அவ்வளவு தூரத்தில் வைத்திருக்கிறேன். அப்படியும் சில சமயம் இப்படி வந்து விடுவாள். இன்றைக்கு இனிமேல் இங்கே வராதே என்று சொல்லி அனுப்பிவிட்டேன். நீயும் கேட்டிருப்பாய்.''

சிரிப்பும், துக்கமும் அவள் மனதில் பரவியிருந்தன.

''என்னை மன்னித்துவிடு ராதா! என் பேச்சை நம்பு. அதெல்லாம் நடந்து முடிந்து போன விஷயம். இனி ஒரு போதும் இது போன்ற தவறு நடக்காது,'' அவளை தீனமாக பார்த்துக் கொண்டே சொன்னான்.

ராதா பதில் பேசவில்லை. தன் உடலையும், உள்ளத்தையும் அர்ப்பணித்துக் கொண்ட அன்றே மோகனை தன் கணவனாக ஏற்றுக் கொண்டு விட்டாள். ஆனால் மோகனுக்கு அவள் முதல் பெண் இல்லை.

''என்னை மன்னிக்க மாட்டாயா ராதா! என்னை நம்ப மாட்டாயா?'' அருகில் வந்து கைகளைப் பற்றிக் கொண்டான்.

ராதா நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் கண்களில் வேதனை வேண்டுகோள் தென்பட்டது. என்ன இருந்தாலும் பெண் இல்லையா? மெல்ல அவன் கைகளில் சரிந்து விட்டாள்.

## 3

**அ**தற்குப் பிறகு நான்கு நாட்கள் வரை மோகன் வீட்டிலேயே தங்கியிருந்தான். ஒரு நிமிடம் கூட ராதாவை விட்டுப் பிரியாமல் அன்பு வெள்ளத்தில் திக்குமுக்காடச் செய்தான்.



நடந்த சம்பவத்தை கெட்ட கனவாக மறந்து போகச் செய்யும் அளவுக்கு அன்பு காட்டினான்.

அந்தச் சின்னஞ்சிறு குடில் அந்த இருவருக்கும் சொந்தம். அதுவே சுவர்க்கம். சுற்றிலும் இருந்த செடி கொடிகளையே நந்தவனமாக பாவிக்கும் மனம் அந்த இருவருக்கும் இருந்தது.

அந்த வீடு தமக்கு மட்டுமே சொந்தம் என்று நினைத்து ராதா சின்ன தவறு செய்து விட்டாள். அந்த வீட்டின் மூன்றாவது நபர் மாமியார்.

* * *

**''ரொ**ம்ப உற்சாகமாக தென்படுகிறாயே? உன் வீட்டு மனிதர்கள் யாராவது கண்ணில் பட்டு உன்னிடம் பேசினார்களா என்ன?'' என்று கேட்டான் மோகன் ராதா கொடுத்த காபியைப் பெற்றுக் கொண்டே.

உற்சாகமாக வந்த ராதாவின் முகம் அந்தக் கேள்வியால் களையிழந்தது. கல்யாணம் முடிந்து ஒரு மாதமாகி விட்டது. அம்மாவும் அப்பாவும் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு நேரில் வந்து தங்களை வீட்டுக்கு அழைப்பார்கள் என்ற ஆசை தரைமட்டமாகிவிட்டது. அவர்களைப் பற்றி எந்த விஷயமும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

''ராதா!'' மோகன் அன்புடன் அழைத்தான். ''போகட்டும் அவர்களைப் பற்றி கவலைப்படாதே. இன்னிக்கு இல்லாவிட்டாலும் சில நாட்கள் கழித்தாவது நம்மை புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அது வரையில் காத்திருப்போம்'' என்றான், அவளுக்கு ஆறுதல் சொல்வது போல்.

தான் வருத்தப்பட்டதை அவன் கவனித்து விட்டான் என்று புரிந்ததுமே வெட்கமடைந்தாள் ராதா. ''விஷயத்தைச் சொல்லவே இல்லையே. எனக்கு வேலை கிடைத்து விட்டது'' என்றாள் உற்சாகமாக.

"வேலையா? எங்கே?" வியப்புடன் கேட்டான்.

"சமீபத்தில் பேப்பரைப் பார்த்து அப்ளை செய்தேன். இன்னிக்கு இண்டர்வியூக்கு வரச் சொல்லி தபால் வந்தது. போனேன். உடனே வேலையில் சேரச் சொல்லி விட்டார்கள். மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம்."

"அதற்குள் வேலை எதுக்கு ராதா? உன் ரிசல்ட்ஸ் வரட்டும். நல்ல வேலை கிடைக்கும். இவ்வளவு குறைவான சம்பளத்திற்கு காலை முதல் மாலை வரை செக்கு மாடாக உழைக்கச் சொல்லு வாங்க. பிரைவேட் கம்பெனி சமாசாரம் உனக்குத் தெரியாது."

"கல்யாணம் ஆன அடுத்த நிமிடத்திலிருந்து உங்க சுகதுக்கத்திலும் சுகத்திலும் பங்கெடுத்துக் கொள்ளணும் என்று முடிவு செய்து விட்டேன். ரிசல்ட்ஸ் வந்த பிறகு நல்ல வேலை கிடைக்க எவ்வளவு நாளாகுமோ என்னவோ? அது வரையில் சும்மா உட்கார்ந்திருப்பானேன்? ப்ளீஸ்.. என்னைத் தடுக்காதீங்க" என்றாள் அனுராதா.

"சரி. உன் விருப்பம். உன் மனதை வருத்தப்பட வைப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் உனக்கு ஏதாவது சங்கடமாகத் தோன்றினால் உடனே விட்டுவிடணும்" என்றான்.

"சரி, நாளைக்கே போய் வேலையில் சேருகிறேன்" உற்சாகத்துடன் சொன்னாள் ராதா.

அனுராதாவின் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் தொடங்கிவிட்டது. வெளி உலகத்தில் ஆணின் ஆதிக்கத்தில் பெண் படும் பாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முதல் படி அந்த வேலை.

வேலை இல்லா விட்டாலும் அடிக்கடி உள்ளே அழைத்து உட்கார வைத்து தேவையில்லாமல் பேசிக் கொண்டிருக்கும் மேலதிகாரி சுந்தர்.



"நீ என் மகளைப் போன்றவள். அந்த சுந்தரிடமிருந்து தொலைவில் இரு" என்று சொல்லிக் கொண்டே வேலை கற்றுத் தரும் சாக்கில் தொட்டுப் பேசும் அறுபது வயது அகௌண்டெண்ட். பாஸ் அறையிலிருந்து வெளியே வந்ததுமே ஏதோ புரிந்து விட்டாற் போல் நமுட்டுச் சிரிப்பு சிரிக்கும் ப்யூன் ஆறுமுகம்.

ச்சி..ச்சி.. இந்த ஆண்களுக்குப் பெண்களைப் பார்த்தால் இந்த யோசனை தவிர வேறெதுவுமே வராதா என்று எண்ணிக் கொள்வாள். கணவன் நினைவுக்கு வருவான். உடனே ராஜியின் நினைவு வரும்.

மதிய வேளையில் திடீரென்று வீட்டிற்குப் போய் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொள்வாள். வீட்டில் என்ன நடக்கிறதோ என்ற யோசனை வந்ததுமே மனம் கலங்கி விடும்.

* * *

**ம**னைவி வாந்தியெடுப்பதும், கணவன் டாக்டரை அழைப்பதும், டாக்டர் வந்து நாடியை பரிசீலித்து விட்டு "உங்க மனைவி கருவுற்றிருக்கிறாள்" என்று சொல்வதும், உடனே கணவன் சந்தோஷத்தோடு அவளை முத்தமாரி பொழிவதும் சினிமாக்களில் தான் நிகழும். எந்த டாக்டரும் சொல்லாமலேயே ஆறு வாரம் தாண்டியதும் தான் கருவுற்றிருப்பதாக சந்தேகம் வந்து விட்டது ராதாவுக்கு.

வெட்கப்பட்டுக் கொண்டே கணவனிடம் "நீங்க அப்பா ஆகப் போறீங்க" என்று சொல்லவில்லை. மாறாக "எனக்கு சந்தேகமாக இருக்கு. டாக்டரை போய்ப் பார்க்கிறேன். உறுதியாக சொல்லிவிட்டாள் என்றால் உடனே அபார்ஷன் செய்து கொள்கிறேன்" என்றாள்.

''அபார்ஷனா? வேண்டாம். ராதா எனக்கு விருப்பம் இல்லை'' என்றான் மோகன்.

''கொஞ்சம் யோசித்துப் பாருங்க மோகன். நம்ம பொறுப்புக்கள் அதிகம். பொருளாதார ரீதியாக நாம் இன்னும் காலூன்றிக் கொள்ளவில்லை. எனக்கு நல்ல வேலையும் இல்லை. இப்பொழுதே நமக்குக் குழந்தைகள் வேண்டாம்.''

''மனைவி, குழந்தைகளை போஷிக்க முடியாத அளவுக்கு நிலையில் இருக்கிறேன்னு நினைவுப் படுத்துகிறாயா ராதா'' வருத்தப்பட்டுக் கொண்டே கேட்டான் மோகன்.

''ச்செ...ச்செ... என் உத்தேசம் அது இல்லை. கொஞ்ச நாள் வரைக்கும் நாம் இருவர் மட்டுமே இருந்தால் நன்றாக இருக்கும்னு நினைத்தேன். வீட்டுக்குத் தேவையானவற்றை எல்லாம் வாங்கிக் கொள்ள முடியுமே என்று தான்.''

''எனக்குக் குழந்தைகள் என்றால் ரொம்ப பிரியமே ராதா அதோடு நமக்கு மகன் பிறந்தால் உங்க அப்பா அம்மா கூட உனக்கு நெருக்கமாகி விடுவாங்கன்னு நம்புகிறேன். ஒரு குழந்தை நமக்கு பாரம் ஒன்றுமில்லை, ப்ளீஸ்... என் பேச்சைக் கேள்.''

ராதா எவ்வளவு விதமாக சொல்லிப் பார்த்தாலும் பலன் இல்லாமல் போய்விட்டது. மசக்கைப் பிரச்னையும் சேர்ந்து கொண்டதில் வேலையை விட்டுவிட்டாள்.

* * *

''இவன் எங்க சித்தப்பாவின் மகன் ரமேஷ். ஊரிலிருந்து வந்திருக்கிறான் , ஏதோ இன்டர்வியூக்காக'' அறிமுகம் செய்து வைத்தான் மோகன்.

ராதாவுக்குச் சந்தோஷமாக இருந்தது. திருமணம் ஆன பிறகு முதல் முதலாக வீட்டிற்கு வந்த விருந்தாளி அவன். மனப்பூர்வமாக வரவேற்றாள்.




இன்டர்வியூ முடிந்து விட்டது. ரமேஷுக்கு வேலை கிடைக்கவில்லை. வேறு வேலை தேடும் முயற்சியில் அவன் அங்கேயே தங்கி விட்டான். இரண்டு அறைகள் கொண்ட வீட்டில் மூன்றாவது ஆள் வந்ததால் இடம் போதவில்லை. தனிமை, அமைதி இல்லாமல் போய்விட்டன.

ராதா மனதில் விரக்தி ஏற்படத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

பகல் முழுவதும் ராதா சிரித்துக் கொண்டே வேலை செய்தாலும் இரவில் கணவன் தன்னை நெருங்கும் போது ''இவனுக்கு நான் முதல் பெண் இல்லை. ஏற்கனவே இன்னொரு பெண்ணுடன்...'' என்ற உண்மை நினைவுக்கு வந்ததுமே இதயத்தில் முள்ளாகக் குத்தத் தொடங்கி விடும்.

வெறும் மரத் தடுப்புச் சுவருக்கு அந்தப் பக்கம் இருக்கும் அறையில் படுத்திருக்கும் ரமேஷுக்கு தம் பேச்சுக் குரல் கேட்டு விடப் போகிறதே என்ற கூச்சம் அவளுடைய ஆவேசத்தை அடக்கி விடும். தாம்பத்திய வாழ்க்கையில் திருப்தியின்மை மனிதனை எவ்வளவு துன்புறுத்துமோ அனுபவித்தவர்களுக்குத் தான் புரியும். விடிந்த பிறகு மச்சினன் முகம் பார்க்கவே வெட்கமாக இருக்கும். அவனை அனுப்பி விடும்படி சொல்லவும் தைரியம் இல்லை.

''இன்னும் கொஞ்சம் பெரிய வீட்டை பாருங்கள் மோகன்! எனக்கென்னவோ கூச்சமாகவும், சங்கடமாகவும் இருக்கு. நம் பேச்சு அவன் காதில் விழுகிறதோ என்று'' ராதா சொன்னாள்.

''அழகாகத் தான் இருக்கு. இந்த வீட்டுக்கு வாடகை தருவதற்கே அவஸ்தையாக இருக்கு. ஒரு பக்கம் ஒர்க் ஷாப்பில் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நாளுக்கு நாள் உனக்கு ஆசைகள் ஜாஸ்தி ஆகிக் கொண்டே போகிறது'' என்றான் எரிச்சலுடன்.

அவள் திகைத்துப் போய்விட்டாள். நடப்பதற்கெல்லாம் நீயே தான் பொறுப்பு என்ற தோரணை அவன் பேச்சில் வெளிப்பட்டது. வேலையை விட்டு விட்டு தவறு செய்து விட்டாளா?

மறுநாள் முதல் அவள் மறுபடியும் வேலையைத் தேடும் முயற்சியில் இறங்கினாள். ஒரு வாரம் போவதற்குள் வேறொரு கம்பெனியில் அவளுக்கு வேலை கிடைத்து விட்டது.

''இந்த நிலையில் வேலைக்கு எதுக்காக போகணும். நாலைந்து மாதங்கள் போன பிறகு மறுபடியும் லீவு கேட்டால் கொடுப்பாங்களா?'' மோகன் கோபமாக கேட்டான்.

''சம்பளம் இல்லாமல் தருவாங்களாம். கேட்டு விட்டுத் தான் வந்தேன்.''

''உன் விருப்பம். கஷ்டமாக இருக்குன்னு மறுபடியும் என்னிடம் சொல்லாதே.''

ஹிப்போகிரஸி! அவனுக்கு அவள் வேலையில் சேருவது சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் வெளிப்படையாக அந்த விஷயத்தை ஒப்புக் கொள்ள மாட்டான். எல்லாம் உன் விருப்பத்திற்கு விட்டு விட்டேன் என்று சொல்லிக் கொண்டே தன் விருப்பப்படி காரியத்தை நடத்திக் கொள்ளும் சாமர்த்தியம் அவனிடம் இருந்தது. நாளைக்கு ஏதாவது நடந்து விட்டால் 'நான் முன்னாடியே சொல்லி விட்டேனே' என்று சொல்வதற்கு வசதியாக இப்பொழுதே தன் வாதத்தை பலப்படுத்திக் கொள்கிறான். தற்போது அவனுக்கு அவளுடைய வருமானம் தேவை. அந்த விஷயம் அந்த மாத சம்பளம் அவள் பெற்றுக் கொள்வதற்கு முன்பே வெளிப்பட்டு விட்டது.

மோகன் அவளை அன்புடன் அழைத்தான். ''ராதா! அம்மா கடிதம் போட்டிருக்கிறாள். பெரிய தம்பிக்கு படிப்பு சரியாக வரவில்லையாம். நம்மிடம் அனுப்பி வைக்கலாம்னு நினைக்கிறாளாம். உன்னிடம் கலந்து யோசித்து விட்டு சொல்லச் சொல்லியிருக்கிறாள். நீயும் சம்பாதிக்கிறாய். நமக்குப் பணப் பிரச்னை இருக்காது என்று வைத்துக் கொள். ஆனால் உனக்கு வேறு ஏதாவது பிராப்ளம் இருக்குமோ யோசித்துச் சொல்லு. அம்மா திரும்ப எழுதியிருக்கிறாள், உனக்கு எப்படிப் பிடிக்குமோ அப்படியே செய்யச் சொல்லி.''

''வரச் சொல்லி எழுதிவிடுங்கள் மோகன். இதில் யோசிக்க என்ன இருக்கு? நம்முடனேயே இருக்கட்டும். அவனைப் படிக்க வைப்பது நம்முடைய கடமை'' என்றாள்.

''உண்மை தான். ஆனால் உன்னைப் பற்றித் தான் யோசிக்கிறேன். ஏற்கனவே உனக்கு வேலை அதிகமாக இருக்கு. பிள்ளைத் தாய்ச்சி வேறு.''

''பரவாயில்லை. உடனே வரச் சொல்லி எழுதுங்க'' என்றாள் உற்சாகத்துடன். தன் கஷ்டத்தை கணவன் உணர்ந்து பேசுகிறான். அதை விட வேறு என்ன வேண்டும்?

பதில் கடிதம் போடத் தேவையில்லாமல் ஆளே வந்து சேர்ந்தான். அனுராதா அவனை முழுமனதுடன் வரவேற்றாள். அவன் பெயர் ரவி. ராதாவின் முதல் மாதச் சம்பளம் ரவியை கல்லூரியில் சேர்க்கப் பயன்பட்டது. ரவிக்கு படிப்பைத் தவிர வேறு எந்த விஷயத்திலுமே கவனம் இல்லை. டைப்ரைட்டிங்கு கிளாஸிலும் சேர்ந்தான். வீட்டில் ஒரு வேலையும் செய்ய மாட்டான். தான் எப்போதும் பிஸி என்று சொல்லிக் கொள்வது அவன் சுபாவம்.

காலையில் எழுந்ததுமே காபி, டிபன், சமையல் எல்லாம் முடித்து விட்டு ஆபீசுக்கு ஓட்டமெடுப்பாள் ராதா. மாலையில் திரும்பி வரும் போது ரமேஷ், ரவி இருவரும் அவளுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

''அண்ணி உங்களுக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறோம். சூடாக டீ போட்டுக் கொடுங்கள்'' என்பான் ரமேஷ். ரவியும் டீயை குடித்து விட்டு வெளியே போய் விடுவான்.

அப்படியே இருக்கும். எல்லாவற்றையும் சுத்தம் செய்து விட்டு மறுபடியும் சமைக்க வேண்டும். வேலைகள் எல்லாம் முடிப்பதற்குள் உடல் களைத்துப் போய் ஓய்வுக்காக கெஞ்சும். ஆனால் மோகன் அவ்வளவு சுலபத்தில் விடமாட்டான். தன்னை அறியாமல் அவள் தூங்கிப் போய் விட்டால் மறுநாள் முழுவதும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பான். அவள் தன் சிரமங்களைப் பற்றித் தப்பித் தவறி சொல்லி விட்டாலோ "நீ தானே அவனை வரச் சொன்னாய். கஷ்டமாக இருந்தால் முன்னாடியே சொல்லிவிடு என்று நான் தான் ஏற்கனவே சொன்னேனே" என்பான்.

"உண்மை தானே. இது தானாக வரவழைத்துக் கொண்டது" என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்ளப் பார்ப்பாள்.

ராதாவுக்கு பிரசவ சமயம் நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த விஷயம் தெரிந்த பிறகாவது தாய், தந்தை தன்னை பார்க்க வருவார்கள் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அதுவும் பொய்த்து விட்டது.

"அத்தையை வரச் சொல்லுங்க மோகன்! எனக்கு ஏனோ பயமாக இருக்கு." கெஞ்சியது போல் சொன்னாள்.

"அம்மாவால் எப்படி வர முடியும்? வயல் வேலைகள் நின்று விடாதா? அதோடு வயதுக்கு வந்த தங்கைகளை அந்த கிராமத்தில் விட்டு விட்டு வரவும் மாட்டாள். ஒரு காரியம் செய்யேன்."

"என்ன?"

"உங்க வீட்டுக்கு போய் விட்டு வா. உன் நிலைமையை பார்த்த பிறகாவது உங்க அம்மாவின் மனம் உருகுகிறதா என்று பார்ப்போம்."

"ஊஹூம். எனக்கு வேண்டியது அவர்களுடைய இரக்கம் இல்லை. அன்பு! அது இருந்தால் நான் கூப்பிடாமலேயே



வருவாங்க. அவர்களாக வந்து கூப்பிடாத வரையில் நான் போக மாட்டேன்."

"அவர்களும் அதே போல் நினைக்கிறார்களோ என்னவோ."

"கட்டிய புடவையுடன் என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பியவங்க அவங்க. இப்போ வந்து கூப்பிட வேண்டிய பொறுப்பும் அவர்களுடையது தான்."

"என்னவோப்பா. பெற்ற மகளைத் துரத்திவிட்டு மற்ற பிள்ளைகளை வைத்துக் கொண்டு போஷிக்கிறார்கள். இப்படிப் பட்ட பெற்றோரை நான் எங்கேயும் பார்த்ததில்லை. அப்படி நீ என்ன தவறு செய்து விட்டாய். ஓடிப் போகவில்லையே?"

ராதாவின் மனம் காயப்பட்டது. அவன் சொன்னதிலும் உண்மை இருந்தது. ஆனால் அவன் மீது இருந்த அன்பினால் தானே அவள் பெற்றோரை எதிர்த்துக் கொண்டு வந்து விட்டாள். தன் கஷ்ட சுகத்தைப் பற்றி யோசிக்க வேண்டிய பொறுப்பு இவனுடையது தானே.

வேலைக்காரியைக் கூட வைத்துக் கொள்ளாமல் வேலைக்கும் போய்க் கொண்டு வீட்டு வேலைகளையும் ஒண்டியாக செய்து கொண்டு அவள் கஷ்டப்படுவது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அவனுக்குச் சமமாக அவளும் குடும்ப பாரத்தை சுமப்பது அவன் கண்களுக்குத் தெரியவில்லை. இதெல்லாம் அவளுடைய கடமை என்பது போல் நடந்து கொள்கிறான். அவளுக்கு துக்கம் பொங்கி வந்தது. ஆனால் விவேகம் அவளைத் தட்டி எழுப்பியது.

குடும்பப் பொறுப்பை பகிர்ந்து கொள்வதாக அவன் சொன்னது அவனுடைய பாராட்டை எதிர்பார்த்து இல்லையே. அது தன் கடமை என்று தானே நினைத்தாள்.

சில மாதங்களுக்குள்ளேயே இப்படிப்பட்ட யோசனை வந்திருக்கு என்றால் அவளிடம் சுயநலம் வளர்ந்து விட்டதா

அலலது கொள்கையில் தான் குறை வந்து விட்டதா? அன்பி
வேகம் தணிந்துவிட்டதா?

மனதிற்கு மகிழ்ச்சியைத் தருபவை விவேகமோ, அறிவோ,
பிடிவாதமோ அல்ல. புரிந்து கொள்ளும் மனப்பான்மை. இந்
பாரமெல்லாம் ஒரே ஒரு அன்பான வார்த்தையால் லேசாகி விடு
அது கிடைக்காத போது விரக்தியானது காட்டுத் தீயாக மனை
தகித்து விடும்.

திருமணமாகி ஒரு வருடம் முடிவடைவதற்குள் அவளுக்குப்
பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பிறந்ததற்கு அவ
வருத்தப்படவில்லை. மோகனுக்கு அந்த எண்ணமே ஏற்பட
கூடும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. பிரசவ
ஆனதும் ஜெனரல் வார்டில் படுத்துக் கொண்டு அவனுக்கா
இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. வந்த பிறகும்
அவன் குழந்தையை கையில் எடுத்துக் கொள்ளவில்லை.

''ராதா! உனக்கு ஒரு நல்ல செய்தி. உன் விஷயம் தெரிந்
தும் எங்க அம்மா வந்திருக்கிறாள். அதான் வர முடியாமல்
போய்விட்டது'' என்றான்.

''அத்தை எங்கே? அழைத்து வரவில்லையா?'' உற்சாகத்துடன்
கேட்டாள் ராதா.

''அம்மாவுக்கு ஆஸ்பத்திரி நாற்றம் ஒத்துக் கொள்ளாது
அதான் வரவில்லை. நாளைக்கு வீட்டுக்கு வந்து விடப்
போகிறாயே. கிளம்பட்டுமா'' எழுந்து கொண்டான். கிளம்பும்
முன் தொட்டிலில் இருந்த குழந்தையை சும்மா எட்டிப் பார்த்து
விட்டு போய் விட்டான்.

ராதாவுக்கு துக்கம் கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது
இந்த முறை. உடல் ரீதியான சுகத்தை இருவருமே அனுபவித்
தார்கள். சொல்லப் போனால் அவன் அளவுக்கு அவளால் அந்
சுகத்தை அனுபவிக்க முடியவில்லை. ஆனாலும் அதன் விளைவை



ஒன்பது மாதங்கள் சுமந்தாள். அவனிடமிருந்து ஒரு ஆறுதல்
வார்த்தை கூட இல்லை. பிரசவம் பெண்ணிற்கு மறுபிறவி
என்பார்கள். அவள் பட்ட கஷ்டத்தை குழந்தையின் சிரிப்பும்,
கணவனின் ஆதரவும் போக்கிவிட வேண்டும். அதில் முதலாவது
மட்டும் தான் அவளுக்குக் கிடைத்தது.

அவன் பணத்திற்குக் கஷ்டப்படுவான் என்று ஜெனரல்
வார்டிலேயே இருந்து விட்டாள். அங்கே அவள் பட்ட அவஸ்தை
அவனுக்குத் தெரியவில்லை. தன் தாயால் அந்தச் சூழ்நிலையில்
அரைமணி நேரம் கூட இருக்க முடியாது என்ற விஷயம் மட்டும்
அவனுக்குத் தெரிந்திருக்கிறது. 'ஏன் இப்படி ஒப்பிட்டுப் பார்க்
கிறாய்'? அவள் மனம் கேள்வி கேட்டது. இது போன்றவற்றை
சமாளித்து நிற்க வேண்டும் என்பது தானே தன்னுடைய லட்சியம்.
போகட்டும். வீட்டுக்குப் போனதுமே மாமியார் அம்மாவைப்
போல் தன்னை ஆதரிப்பாள். தாய் அருகில் இல்லாத குறையை
தீர்த்து விடுவாள். இன்னும் ஒரு நாள் தானே என்று மனதைச்
சமாதானப் படுத்திக் கொண்டாள்.

வீட்டு வாசலில் எதிர்ப்பட்ட பெண்மணியை பார்த்ததுமே
திடுக்கிட்டாள். தாய் என்றால் அவள் கண்ணோட்டத்தில் தெய்
வீகக் களையோடு இருப்பவள். ஆனால் இந்த அம்மாளோ நேர்
எதிராக இருந்தாள். அவள் தன் மாமியாரைப் பார்ப்பது அது
தான் முதற் தடவை. இவ்வளவு முரட்டுத்தனமாக இருக்கும்
பெண்மணியை இதுவரை கண்டதே இல்லை. வறுமை மனிதனை
முரட்டுத்தனமாக மாற்றாது. பண்பற்றதன்மை தான் அப்படி மாற்றி
விடும் என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள அதிக நாள் ஆக
வில்லை. மாமியார் ஸ்தானத்தில் இருந்த அந்தப் பெண்மணி
யிடம் கொஞ்சம் கூட மென்மையான குணமோ, இரக்க மனப்
பான்மையோ இல்லை. வயல்வேலைகள் செய்து பழக்கப்பட்
டவள் என்பதாலோ என்னவோ உறுதியான உடல்வாகு கொண்
டிருந்தாள். தோற்றம் எப்படி இருந்ததோ குரலும் அதே போல்
இருந்தது. உடல் வாகு எப்படி இருந்தாலும் சிலரிடம் பெண்

களுக்கே உரிய இயல்புகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஆனால் அவளிடம் அதுவும் இல்லை. பேச்சும் செயலும் முரட்டு தனமாகத் தான் இருந்தன.

ரோஜாப் பூவைப் போல் மென்மையாக இருந்த குழந்தை மாமியாரின் கைகளில் அரக்கியின் பிடியில் சிக்கிக் கொண்ட ராஜகுமாரியைப் போல் இருந்தாள்.

வந்த அன்றைக்கு மட்டும் கொஞ்சம் வாயை மூடிக் கொண் டிருந்தாள் அந்த அம்மாள். இரண்டாவது நாளிலிருந்தே தன் வாக் பிரவாகத்தைத் தொடங்கி விட்டாள். அவள் என்ன சொல்கிறாள் என்று புரிந்து கொள்வதற்கே அனுராதா ரொம்பவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

''மோகனுக்கு நிறைய வரதட்சணை தருவதாக இரண்டு மூன்று இடம் வந்தது. எல்லாம் நஷ்டமாகி விட்டது. ஏதோ காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டான். ஒரே மகள், அப்பா ஆபீஸர் என்றதும் சொத்து ஏதாவது வரும்னு நினைத்துக்கிட்டிருந்தேன் ஆனால் கட்டிய புடவையோடு அனுப்பி வைத்து விட்டு தலையை மூழ்கி விட்ட பிச்சைக்காரர்கள் என்று நினைக்க வில்லை. நாளைக்கு தங்கைகளின் கல்யாணத்தை எப்படி முடிக்கப் போகிறானோ தெரியவில்லை.'' இது தான் அந்த அம்மாள் சொன்னதன் தாத்பரியம்.

இரு மகள்களும் தாய்க்கு சளைத்தவர்கள் இல்லை. தோற்றத் தில் கொஞ்சம் நாகரீகமாக இருந்தார்கள் . மற்றபடி அதே குணம் தான். அண்ணனைப் போன்ற அழகனை எந்த இளவரசியோ மோகித்து மணந்து கொள்வாள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் சொத்துக்களை எல்லாம் விட்டு விட்டு வந்த துரதிர்ஷ்ட சாலி என்று அவர்கள் நினைக்கவில்லை.

அவனை விட அதிகமாக படித்து, அழகும் நிறைந்த, எல்லா விதத்திலேயும் நல்ல நிலையில் இருக்கும் அனுராதா விரும்பி



யிருந்தால் ஏதாவது டாக்டரையோ, இன்ஜினியரையோ மணந்து கொண்டிருக்க முடியும் என்ற விஷயம் அவர்கள் கற்பனைக்கும் எட்டாதது. வேடிக்கையாக பேசுவது போல் மோகன் கூட அவர் களுக்கு ஒத்துப் பாடியது அவள் மனதிற்குக் கிடைத்த பெரிய அடி. தன் கணவனிடம் அப்படிப்பட்ட யோசனை இருக்கக் கூடும் என்று அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இரண்டே அறைகள் கொண்ட அந்த வீட்டில் இரண்டு மாத காலம் நரகத்தை அனுபவித்து விட்டாள் ராதா. பிரசவம் ஆன பதினைந்தாவது நாள் முதல் அவள் வீட்டு வேலைகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்தனை குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட பிறகும் மாமியாருக்கு குழந்தையை குளிப் பாட்டத் தெரியாது. பழிப்புக் காட்டவும், கிண்டல் செய்யவும் மட்டும் தெரியும். அந்த மூவரில் யாராவது ஒருவர் ஏதாவது ஒரு விஷயத்தில் எப்பொழுது பார்த்தாலும் கத்திக் கொண்டே தான் இருப்பார்கள். அவர்கள் அந்த வீட்டுக்கு வந்த விருந்தாளிகள் என்பதால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பது மோகனின் வாதம்.

''குழந்தைக்குப் பால் போதவில்லை. பால் டப்பா வாங்கி வர வேண்டியிருக்கும்.'' ராதா சொன்னாள்.

''உன் பிரசவத்திலிருந்து இது வரை இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறேன். அதற்கு வட்டி கூட கட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கும் போது இந்தச் செலவு வேறு. என்னால் முடியாது. நீயே எப்படியாவது சமாளித்துக் கொள்'' என்றான் எரிச்சலுடன்.

அவள் பிரசவத்திற்கு ஆன ஆஸ்பத்திரி செலவு நூற்றி ஐம்பது ரூபாய் மட்டும் தான். மீதி கடன்கள் அவனுடைய அம்மாவையும், தங்கைகளையும் திருப்திப் படுத்துவதற்காக செய்தவை.

விரக்தியுடன் ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு விட்டது. அவள் உன்மத்த நிலையை அடைவதற்குள்ளாகவே அதிர்ஷ்டம் அவளை வரித்தது. எப்பொழுதோ மனுப் போட்டிருந்த ஒரு பொதுத்துறையில் நல்ல வேலை கிடைத்து விட்டது அவனுக்கு.

''நல்ல வேலை. பிரமோஷனுக்குக் கூட வாய்ப்பு இருக்கிறதாம். உனக்கு விருப்பம் இருந்தால் சேர்ந்து விடு'' என்றான் மோகன். ராதா பதில் சொல்லவில்லை. அவள் கோபமாக இருப்பதை உணர்ந்து கொண்ட மோகன் ''என்னை மன்னித்து விடு ராதா! பல பிரச்சனைகள் இருப்பதால் உன்னையும் கஷ்டப் படுத்துகிறேன். ஆனால் என்னை நம்பு. நமக்கு இந்த கஷ்டங்கள் அதிக நாள் இருக்காது. நீ கொஞ்சம் ஒத்துழைத்தால் விரை விலேயே பொறுப்புக்களை எல்லாம் முடித்து விடலாம். அதற்குப் பிறகு எல்லோருக்கும் தொலைவாகி, நமக்காக நாம் வாழ்வோம். என் பேச்சை நம்பு ராதா!''

அவள் உருகி விட்டாள்.

''நான் உங்க சுகத்தில் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ள வரவில்லை மோகன். எனக்கு வேண்டியது உங்கள் அன்பு. நான் இழந்து விட்ட தாய் தந்தையரின் அன்பை உங்களிடமிருந்து பெற வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அவ்வளவு தான். என் சம்பாத்தியம் கூட எனக்குத் தேவையில்லை. நகைகள், புடவைகள் மீது எனக்கு ஆசையில்லை. எல்லாம் உங்க வீட்டாருக்காகவே செலவழிக்கிறேன். உங்கள் வீட்டில் ஒருத்தியாக என்னையும் பார்த்துக் கொண்டால் போதும்.'' நீர் நிறைந்த விழிகளுடன் சொன்னாள்.

''பட்டிக்காட்டில் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களுக்கு நாசூக்காக நடந்து கொள்ளத் தெரியாது. நான் கண்டித்து வைக்கிறேன். நீ வருத்தப்பட்டுக் கொள்ளாதே.''



அவன் என்னதான் சொன்னானோ தெரியாது. அவர்களுடைய அட்டகாசம், ரகளை குறைந்தன. அதற்குப் பிறகு ரொம்ப நாட்கள் அவர்கள் அங்கே இருக்கவில்லை.

''எங்களை நினைவில் வைத்துக் கொள்ளும்மா. பட்டிக் காட்டு வாசிகள். உங்களைப்போல் நாகரிகம் தெரியாது. என் மகள் களுக்கு இனி நீ தான் தாய். அவர்களின் கல்யாணம் முடிந்து விட்டால் நிம்மதியாக இருப்பேன். உன் நன்றியை என்றுமே மறக்க மாட்டேன்'' போகும் முன் மாமியார் சொன்னாள்.

அவள் எவ்வளவு காரியவாதி என்பதை ராதா புரிந்து கொண்டு விட்டாள். ஆனாலும் மாமியாரின் மனம் புண்படும் விதமாக அவளால் பேச முடியவில்லை. மனித உறவுகளின் உண்மையான ஆழம் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது.

அவளுடைய முதல் ஆறு மாத சம்பளம் கடன்களை அடைப் பதற்கே சரியாகிவிட்டது. பிறகு ஐந்து வருடங்கள் பொறுப்புகளை சுமக்க பயன்பட்டது. அந்த ஐந்து வருடங்களும் அவள் ரொம்ப கஷ்டப்பட்டாள். ஓவர் டைம் செய்தாள். பிரமோஷனுக்காக படித்து பாஸ் செய்தாள். இன்னொரு பெண் குழந்தையும் பிறந்து விட்டது. இரண்டாவது முறை கரு உண்டாகாமல் கவனமாகத் தான் இருந்து வந்தாள். ஆனால் வேலை பளுவினால் ஏற்பட்ட அசதியால் அலட்சியமாக இருந்து விட்டதால் அந்த ஆபத்து நேர்ந்து விட்டது. அபார்ஷன் செய்து கொள்வதாகச் சொன்ன போது மோகன் சம்மதிக்கவில்லை.

''இன்னொரு குழந்தை இருந்தால் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக இருப்பார்கள். அம்மாவும் பேரன் வேண்டுமென்று ஆசைப்படுகிறாள். இப்போ நமக்கு எந்த கஷ்டமும் இல்லை. உனக்கு பிரசவ விடுமுறையும் கிடைக்கும். மறுக்காதே ராதா.''

''ஆனால் நமக்கு பொறுப்புக்கள் இன்னும் அதிகரித்து விடும்.''

''எல்லா பொறுப்புக்களும் முடியணும் என்றால் நான் கிழவனாகி விடுவேன். ஏற்கனவே நமக்கிடையே பத்து வருஷம் வயது வித்தியாசம் இருக்கு. அதையும் யோசித்துப் பார்க்க வேண்டாமா? நீ ஏன் கவலைப்படுகிறாய்? நல்ல வேலைக்காரியாக பார்த்து நான் ஏற்பாடு செய்கிறேன்.''

ராதாவால் அதற்கு மேல் பதில் பேச முடியவில்லை. பெரிய மகள் மல்லிகாவுக்குத் துணையாக ரோஜா பிறந்தாள்.

ராதாவுக்குப் பிரமோஷன் கிடைத்து விட்டது. கொஞ்சமாவது பொறுப்புக்களைத் தீர்த்து விடலாம் என்று நினைத்திருந்த சமயத்தில் இன்னொரு இடையூறு வந்து சேர்ந்தது. மோகன் நடத்தி வந்த ஓர்க் ஷாப் நஷ்டத்தில் மூழ்கி விட்டது. வேறு வழியில்லாமல் அதை மூடும்படி ஆகிவிட்டது.

மோகன் ரொம்பவும் மனமொடிந்து போய் விட்டான். நாள் முழுவதும் தனியாகவும், வெறுமையுடன் உட்கார்ந்திருக்கும் மோகனை ராதாதான் தேற்ற வேண்டியிருந்தது.

''வருத்தப்படாதீங்க மோகன்! எனக்கு நல்ல சம்பளம் தான் கிடைக்கிறதே. கொஞ்சம் சிரமப்பட்டால் இன்னொரு பிரமோஷன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நமக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நம் நாலு பேருக்கு எவ்வளவு செலவாகி விடப் போகிறது?''

ஆனால் அவள் சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க செலவுகளும் கூடிவிட்டன. அவர்களுக்கு உதவி செய்வதற்கு வராவிட்டாலும் தன்னுடைய தேவைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மாமியார் அடிக்கடி வந்து கொண்டு தான் இருந்தாள். வரும் போதெல்லாம் மகள்களுக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டு பெற்றுக் கொண்டு போவாள். மற்ற இரு மகன்கள் சம்பாதிக்கத் தொடங்கி விட்டார்கள். ஆனால் அவர்களைத் தொந்தரவு செய்ய அவளுக்குப் பிடிக்காது. பெரிய மருமகள் தான் அவளுக்குக் காமதேனுவாகி விட்டாள்.



மோகன் சின்ன வேலையில் சேர்ந்தான். ஆனால் அந்த வேலை அவனுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. எல்லாவற்றிற்கும் எரிந்து விழத் தொடங்கினான். குடிப்பழக்கமும் ஏற்பட்டு விட்டது. விழித்துக் கொண்டிருந்த நேரத்தில் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான். வேண்டாமென்று தடுத்தால் வேறு ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு சண்டை போடுவான். மனைவி தன்னை விட உயர்ந்தவளாகி விட்டாள் என்ற வேதனையும், தாழ்வு மனப்பான்மையும் அவனிடம் படிந்து விட்டன.

ராதா மோகனை பொருட்படுத்துவதை விட்டுவிட்டாள். மேலும் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. குழந்தைகள் கொஞ்சம் பெரியவர்கள் ஆனதும் ராதாவுக்கு யோசிக்க சமயம் கிடைத்தது.

வயது இருபத்தெட்டு ஆகி விட்டது. எட்டு ஆண்டு தாம்பத்திய வாழ்க்கையில் தான் சாதித்தது என்ன?

யோசிப்பது என்பது இந்த சிருஷ்டியில் மனிதனுக்கு மட்டுமே கிடைத்த வரம். நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பற்றி யோசிக்கும் அளவுக்கு மனிதன் கடந்த காலத்தைப் பற்றி யோசிக்க மாட்டான். கடந்த காலத்து அனுபவம் என்ற அஸ்திவாரத்தின் மீது தான் எதிர்காலம் ஆதாரப்பட்டிருக்கும் என்ற உண்மையை மறந்து விடுவான். அனுராதாவிடம் தலையெடுத்த இந்தக் கேள்வி எத்தனை படித்தவர்களிடம் தலையெடுத்திருக்கிறது? சிலரை இந்தக் கேள்வி சங்கடத்தில் ஆழ்த்தக் கூடும். ஆனால் மனச்சாட்சிக்குக் கூட பதிலளிக்க முடியாதவன் மனிதனே அல்ல.

கணவனின் பொறுப்புக்களை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியதற்குக் கிடைத்த பிரதிபலன் தான் என்ன? இன்னும் ஏதோ குறை வைத்து விட்டாற் போல் தன்னை இளப்பமாகத் தானே பார்க்கிறார்கள்? குறைந்த பட்சம் கணவன் கூட அதைப் புரிந்து கொள்ளவில்லை. அவன் சாதித்ததாக

சொல்லக் கூடியது இரண்டு குழந்தைகளை மட்டும் தானா? அதில் கூட ஆண் குழந்தையைப் பெறவில்லை என்ற குற்றச் சாட்டு இன்னும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

கொஞ்சம் பெரிய வீடாகப் பார்த்து குடிபோனதுமே விருந் தாளிகளின் வருகையும் அதிகரித்து விட்டது. மோகனுக்கு தன் வீட்டாரிடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற சுயநலம் அதிகமாக இருந்தது. அவர்களை கால்கட்டாக அவன் நினைக்க வில்லை. தன் வீட்டு மனிதர்களுக்கு நன்மை செய்வதன் மூலம் தான் எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்று அவனுக்குப் புரிய வில்லை. ராதாவுக்கு இப்பொழுது மோகன் மீது அன்பு இல்லை ஒரே வீட்டில் வாழும் துணைவர்கள் அவர்கள். அவ்வளவு தான். திருமணம் என்றால் வெறும் உடல் தேவையைத் தீர்த்துக் கொள்வது மட்டும் தானா? குழந்தைகளைப் பெறுவதும், தம் பதிகள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் இருக்கும் பாதுகாப்பு மட்டும் தானா? வாழ்க்கை என்றால் திருமணம், குழந்தைகள், வேலை, பணம், அந்தஸ்து.... இவை தானா?

ஒரு காலத்தில் எத்தனை புத்தகங்களைப் படிப்பாள் அவள். திருமணம் ஆன இந்த எட்டு ஆண்டுகளில் பத்து புத்தகங்களைக் கூட படிக்கவில்லை. எப்படி வாழ முடிந்தது அவளால்? பாரதி யாரையும், கல்கியையும் நினைத்துக் கொள்ளாத நாள் தான் உண்டா? இலக்கியத்தைப் பற்றியே மறந்து விட்டாளே? அதெப்படி முடிந்தது? தன்னுடைய கொள்கைகளை எப்படி மறந்து போனாள்? நினைத்துப் பார்க்கும்போது அவளுக்கு துக்கம் ஏற்பட்டது.

இந்த யோசனை வந்த பிறகு ராதாவிடம் நிறைய மாற்றம் வந்தது. தனக்கு என்று தனியாக ஒரு உலகத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு அது வழி வகுத்தது. வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டுமென்றால் பொருளாதார ரீதியாக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டியது முக்கியம்.



அவள் மறுபடியும் படிப்பைத் தொடர்ந்தாள். இரண்டு ஆண்டுகளில் போஸ்ட் கிராட்யுயேஷனை முடித்து விட்டாள்.

''டிபார்ட்மெண்ட் பரீட்சைகளை எழுதினால் பிரமோஷன் கிடைக்கும். இந்தப் படிப்பு எதுக்கு?'' மோகன் தொடக்கத் திலேயே முட்டுக்கட்டை போட முயன்றான்.

''அப்பா என்னை பெரிய படிப்புப் படிக்க வைக்கணும் என்று நினைத்தார். இப்பொழுதாவது அவருடைய ஆசையை நிறைவேற்ற முடிந்ததே என்று திருப்தியாக இருக்கிறது'' என்று பதிலளித்தாள் ராதா. அவள் யோசித்த அடுத்த விஷயம் தன் குழந்தைகளின் படிப்பு. மோகன் மறுத்த போதும் கேட்காமல் மல்லிகாவை ரெஸிடென்ஷியல் ஸ்கூலுக்கு அனுப்பி வைத்து விட்டாள். ரோஜாவுக்கு நாட்டியத்தில் ஆர்வம் அதிகம். அவளை நாட்டிய நிலையத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். அதற்கும் தடை போடப் பார்த்தான் மோகன்.

''பாட்டுக் கற்றுக் கொண்டாலும் நன்றாக இருக்கும். டான்ஸ் என்றால் பிறகு வருத்தப்படணும். கல்யாணம் ஆன பிறகு டான்ஸ் புரோகிராமும் தர முடியாமல், நாட்டியத்தை விடவும் முடியாமல் அவஸ்தைப் படணும். யோசிக்காமல் எதையும் செய்யாதே.''

''நான் அவளுக்கு டான்ஸ் கற்றுக் கொடுப்பது அவள் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காகத் தானே தவிர, அவளுக்கு வரப்போகும் கணவனுக்காக இல்லை.''

''உன் இஷ்டம். உன் சம்பளத்தில் சாப்பிடுகிறவன் நான். என் பேச்சு செல்லுபடி ஆகும்னு எப்படி எதிர்பார்க்க முடியும்?'' குத்தலாகப் பேசிவிட்டுப் போய்விட்டான். நான்கு பெக்குகள் குடித்ததும் ஆவேசம் தணிந்தது. அப்படித் தான் நடந்து கொண்டி ருந்தது அந்த வீட்டில். அதற்குப் பிறகு இருட்டு எப்படியும் வரத்தான் போகிறது. இன்னொரு ஆவேசத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு.

## 4

"ராதா? உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க. வந்து பாரு. முன் அறையிலிருந்து கத்தினாள் மாமியார். சமையல் வேலையை அப்படியே நிறுத்தி விட்டு வெளியே வந்தாள் ராதா. எதிரே அவளுடைய சித்தப்பாவின் மகன்.

"அண்ணா! நீயா! உள்ளே வா" சந்தோஷமாக வரவேற்றாள். அவள் வார்த்தை இன்னும் முடியக் கூட இல்லை. மாமியார் குறுக்கிட்டாள்.

"உங்க அண்ணாவா? என்ன தம்பி! இவ்வளவு நாட்களுக்கு அப்புறம் தங்கையின் நினைவு வந்ததா? அவள் நல்ல வேலையில் இருக்கிற விஷயம் தெரிந்ததா? என்ன வேலையாக வந்தாய்?"

அவனும் சளைத்தவன் இல்லை. "எங்களுக்கு பெண் பிள்ளைகளின் சம்பாத்தியத்தின் மீது ஆசை இல்லைங்க. அவளுடைய அம்மா இறந்து போய் விட்டாள். அந்த விஷயத்தைச் சொல்லத் தான் நான் இங்கே வந்தேன்" என்றான் பதிலடி கொடுப்பது போல்.

"அம்மா இறந்து போய் விட்டாளா?" அதிர்ச்சி அடைந்து விட்டாள் அனுராதா. அவள் இன்னும் தேறிக் கொள்ளக் கூட இல்லை. மாமியார் இடையில் புகுந்தாள்.

"அதற்காக இப்போ என்ன செய்யச் சொல்கிறாய்? ஒரே மகள் இவ்வளவு நாளாக எப்படி இருந்தாள் என்று கூட விசாரிக்க வில்லை. இப்போ எதற்காக செய்தி சொல்லி அனுப்பணும்? அவள் வர மாட்டாள். போய் அவங்க அப்பாவிடம் சொல்லிக் கொள்." அவளுடைய கர்ண கடூரமான வார்த்தைகளில் கொஞ்சம் கூட மனித நேயம் இருக்கவில்லை.

"கொஞ்சம் இரு அண்ணா! நான் வருகிறேன்." செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே நடந்தாள் ராதா.



"எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு போகிறாய்? இப்பொழுதாவது உங்க அப்பா வந்து அழைத்தாரா? நீ போவது மோகனுக்கு பிடிக்காது. நான் முதலிலேயே சொல்லிவிட்டேன்.

"நான் போகப் போவது கடைசி முறையாக என்னைப் பெற்ற தாயைப் பார்ப்பதற்காக. அம்மா என்னைப் பார்க்கிற நிலையில் இல்லை. என் திருப்திக்காக நான் போகிறேன். உங்க மகனுக்கு பிடிக்கும் என்று எனக்கு விருப்பம் இல்லாத காரியங்கள் எத்தனையோ செய்திருக்கிறேன். இந்தக் காரியத்தை மட்டும் அவருக்கு பிடிக்கா விட்டாலும் செய்தே தீருவேன்." திரும்பிப் பார்க்காமல் போய்விட்டாள்.

தாயின் உயிரற்ற உடல் அக்னி பகவானுக்கு இரையாவதற்காக தயாராக இருந்தது. ராதாவுக்கு துக்கம் வரவில்லை. 'இவள் என்னுடைய தாய். கணவனையே தெய்வமாக வழிபட்டு வந்தாள். அதனால் தான் ஒரே மகளைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு தவித்த போதும் வெளியே அதைப்பற்றி அவளால் சொல்ல முடியவில்லை. வேதனையை மனதிலேயே அடக்கிக் கொண்டு, குமுறிக் குமுறி கடைசியில் உயிரையும் இழந்து விட்டாள். கணவனை எதிர்த்துப் பேசாத இல்லத்தரசியாக இவள் சாதித்தது தான் என்ன?' அனுராதா தாயின் கால்களில் விழுந்து வணங்கினாள் கடைசி முறையாக.

அவள் வந்ததுமே பெரிதாக அழுவாள் என்றும், தந்தை அப்பொழுதாவது அவளுடன் பேசுகிறாரா இல்லையா பார்ப்போம் என்று ஆவலுடன் காத்திருந்த உறவுக்காரர்களுக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது.

"எவ்வளவு அழுத்தம் பாரு! கண்ணில் ஒரு சொட்டு கண்ணீர் வரவில்லை. அவளுக்குத் தாய் மீது அன்பு என்று ஏதாவது இருந்தால் தானே"

ராதா அந்த வார்த்தைகளைக் கேட்டு மனம் தளர்ந்து விட வில்லை. தந்தை உள்ளே அறையில் இருந்தார். அவரைப் பார்த்ததுமே அவள் கண்களில் நீர் சுழன்றது. நெருங்கிய துணையை இழந்து விட்ட வேதனையைப் பகிர்ந்து கொள்ளும் துக்கம் அது. இந்தப் பத்து வருடங்களில் அவர் மிகவும் வயதானவராகி விட்டிருந்தார்.

ராதா போய் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவர் வாய் திறந்து பேசவில்லை. மகளின் தலையை மெதுவாக வருடிக் கொடுத்தார். பார்ப்பவர்களுக்கு அது மிகச் சின்ன, சாதாரண காரியம். ஆனால் அந்த ஸ்பரிசத்தில் அன்பு, துக்கம் எல்லாம் கலந்திருந்தன. எரிமலையாக தகித்துக் கொண்டிருந்த அவள் இதயம் அந்த ஸ்பரிசத்தால் குளிர்ந்து கண்ணீர் உருவத்தில் வெளியேறத் தொடங்கியது.

மயானத்தில் தொலைவிலிருந்தே தன் தாயின் உடல் அக்னிக்கு இரையாவதைப் பார்த்து விட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள்.

''அப்படியே நேராக பாத்ரூமுக்குள் போய்க் குளி. மாற்றுப் புடவையைக் கொண்டு வந்து தரேன்.'' கத்தினாள் மாமியார். ராதா நேராக உள்ளே வந்தது அவளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. ''பிணத்தைத் தொட்டு விட்டு வந்திருக்கிறாய், வீடு தீட்டாகி விடும். முதலில் வெளியே போ.''

ராதா நேராக தன் அறைக்குள் போய்க் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

''என் தாய் தெய்வம். அவள் உயிரோடு இருந்தாலும் இறந்து போனாலும் தெய்வம் தான். அவளைத் தொட்டால் தீட்டாகி விடுமா? தான் சாப்பிடா விட்டாலும் பத்து பேருக்கு அன்னமிட்ட கை அது. தான் பெற்றது ஒரு குழந்தை என்றாலும் பத்து பேருக்கு தாயாகி போஷித்தாள். அப்படிப்பட்ட தெய்வத்தின் உடலைத் தொட்டால் புண்ணியம் தான் வரும். அவள் உடல்



கிடந்த இடம் கோவிலாக மாறும். அவளைக் கடைசி தடவையாகத் தொட்ட கை இது. இனி அந்த ஸ்பரிசம் தனக்குக் கிடைக்காது.''

அப்படியிருக்கும் போது அந்தக் கைகளை கழுவி அதனுடைய புனிதத்தன்மையை போக்கிக் கொள்ள அவள் மனம் ஒப்பவில்லை. கண்களிலிருந்து கண்ணீரைக் கூட துடைத்துக் கொள்ளாமல் வெகு நேரம் அந்த கைகளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். மோகன் வந்து விட்டான் போலும். மாமியார் அவனிடம் உரத்த குரலில் அவள் செய்த காரியத்தைப் பற்றி கொலைக் குற்றம் செய்து விட்டது போல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் வந்து கதவைத் தட்டினான். ராதா திறக்கவில்லை.

''இன்னிக்கு ஒரு நாள் மட்டும் என்னை தொந்தரவு செய்யாதீங்க மோகன்'' என்று மட்டும் சொன்னாள்.

கொஞ்ச நேரம் கத்தி விட்டு அவன் போய் விட்டான். ராதா இரவு முழுவதும் உறங்கவில்லை. தாயைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். காலையில் எழுந்து வெளியே வந்தவள் கிணற்றடியில் இருக்கும் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டாள். உள்ளங்கைகளைப் பார்க்கும் போது தாயின் உருவம் தென்பட்டது.

'எவ்வளவு நாட்கள் இந்தக் கையை அப்படியே வைத்துக் கொள்ள முடியும்?' மயான வைராக்கியம் என்பது இதுதானோ?

அவள் தலைமீது யாரோ குளிர்ந்த நீரை யாரோ ஊற்றினார்கள். கோபத்தாலும், குளிரினாலும் நடுங்கி விட்டாள் ராதா.

பின்னால் திரும்பிப் பார்த்தாள் – மாமியார்!

★ ★ ★

மனதில் ஏற்பட்டு விட்ட சின்ன காயம் கூட மனிதனின் வாழ்க்கையை எப்படி எல்லாம் மாற்றி விடும் என்பதற்கு அது ராதாவின் வாழ்க்கையே ஒரு உதாரணம்.

காலையில் மாமியார் செய்த காரியம் அவளுக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை. எதிராளியைத் துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர அதனால் தன் மீது கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கும் அன்பையும் கொன்று புதைத்து விடுகிறோமே என்ற யோசனையே இல்லாத முட்டாள் அந்த மாமியார்.

ஆனால் மோகன்? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே அதை ஏதோ நகைச்சுவைக் காட்சியாக எடுத்துக் கொண்டு சிரித்தது, அவள் மனதில் துவேஷத்தை ஏற்படுத்தியது. கோபத்தைக் காட்டிலும் பயங்கரமானது துவேஷம்.

"இன்றைக்குக் கூட ஆபீசுக்குப் போகிறாயா? நாலு பேர் என்ன நினைப்பார்கள்," என்று சொல்லிக் கொண்டிருந்த அவர்கள் பேச்சை லட்சியப்படுத்தாமல் வீட்டை விட்டு வெளியே வந்தாள்.

"நாலு பேர் என்ன நினைத்துக் கொள்வார்கள்?" என்ற வார்த்தை தான் மனிதனிடமுள்ள பலவீனத்தையும், கோழைத் தனத்தையும் எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த நான்கு பேர்களுக்கிடையே தங்கள் குடும்பம் எவ்வளவு சந்தி சிரிக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பது முட்டாள் தனம்.

நாள் முழுவதும் மாமியார் கத்தும் கத்தல்களாலும் இரவு நேரத்தில் குடித்து விட்டுத் தள்ளாடிக் கொண்டே வரும் கணவனின் நடத்தையாலும் அக்கம் பக்கத்தில் ஏற்கனவே தங்கள் குடும்பம் சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு நாளாகக் கணவன், குழந்தைகள், தன் குடும்பம் அவர்களுடைய சந்தோஷம் என்ற சிறிய கோட்டைக் கிழித்துக்



கொண்டு வெளி உலகத்தோடு எந்தத் தொடர்பையும் வைத்துக் கொள்ளாமல் போய் விட்டாள். இன்றைக்குத் தன் சிறிய உலகில் 'அன்பு' என்பது கிடையாது என்று தெரிந்து கொண்டு விட்ட பிறகு தனிமையைத் தேடி வெளியே வந்து விட்டாள். நல்ல நட்பு கிடைக்காத போது மனிதன் அநாதையாகி விடுகிறான். யாருமே இல்லாமல் வாழ்ந்து விட முடியாது. வேதாந்திகளுக்குத் தான் அது சாத்தியம்.

பத்து பேர் வளையவரும் பார்க்கில் உட்கார்ந்திருந்தாலும், ஹோட்டலுக்குப் போனாலும் பெண்ணிற்கு தனிமை கிடையாது. அவள் ஏதோ காரணத்திற்காக அவ்வாறு சுற்றுகிறாள் என்று எண்ணி சந்தர்ப்பத்திற்காக முயற்சி செய்வார்களே தவிர அவளும் தம்மைப் போன்றவள் தான் என்றும், தம்மைப்போலவே மனதிம்மதிக்காக தனிமையை நாடுகிறாள் என்ற யோசனையே வராது.

அதனால் தான் போலும் பெண் என்பவள் ஆண் என்ற பாது காப்பு கோட்டையை விட்டுப் பிரிந்து தனியாக வசிக்க அஞ்சு கிறாள். இந்தப் பலவீனத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு ஆண் அவளை இன்னும் துன்புறுத்த தொடங்குவான்.

மாலையில் ஆபீஸிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வருவதைத் தவிர ராதாவுக்கு வேறு வழி தெரியவில்லை.

* * *

பட்டாபிராமன் கிராமத்திற்குப் போய் விட்டார். போகும் முன்னால் ராதாவை அழைத்து மனைவியின் நகைகளையும், கொஞ்சம் பணத்தையும் கொடுத்தார்.

"சின்னதாக வீடு கட்டிக் கொள்ளணும் என்று உங்க அம்மா என்னை வற்புறுத்தி, பிளாட் வாங்கச் செய்தாள். என்னால் எப்படியும் வீடு கட்ட முடியாது. நீயாவது கட்டிக் கொள். அந்த இடத்தை

உன் பெயரில் ரிஜிஸ்டர் செய்திருக்கிறேன்.'' தஸ்தாவேஜுக்களை கையில் கொடுத்தார்.

''அப்படியே வீடு கட்டிக் கொள்ளலாம் அப்பா. ஆனால் நீங்களும் எங்களுடனே இருந்து விடுங்கள்.''

''நான் எதுக்கும்மா? ஊர்க்காரர்களுக்கு இப்போ என் தேவை இருக்கிறது. இந்தக்க கடைசி காலத்தில் அவர்களுக்கு உபயோகப்படும் காரியங்களைச் செய்து விட்டு அங்கேயே என் மூச்சை விட விரும்புகிறேன். இது தான் எனக்கு திருப்தி தரும் விஷயம். அவர்களும் சந்தோஷப்படுவார்கள்.''

''என்னிடம் இருந்தால் எனக்கு மட்டும் சந்தோஷமாக இருக்காதா அப்பா?''

''முதலில் நீ சந்தோஷமாக இருக்கிறாயா ராதா?'' நேராகவே கேட்டு விட்டார். உனக்கு இல்லாத சந்தோஷத்தை உன்னால் எனக்கு எப்படித் தர முடியும் என்ற கேள்வி தென்பட்டது அந்த பார்வையில்.

ராதா பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். எந்தக் கேள்வி அவர் வாயால் வரக்கூடாது என்று நினைத்திருந்தாளோ அதையே கேட்க வேண்டி வந்தது ராதாவுக்கு வேதனையைத் தந்தது.

அந்தக் கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை. தனக்கு எந்த உறவும் அல்லாத ஊர் மக்களுக்கு உதவி செய்ய கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்த தந்தையை இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர் பணம் கொடுத்த விஷயம் தெரிந்ததுமே மாமியாரின் தோரணையே மாறிவிட்டது.

''நான் ஒரு முட்டாள். யாருக்காவது தங்கள் குழந்தைகள் மீது அன்பு இல்லாமல் போகுமா. சிலர் வெளியே சொல்லிப் பாங்க. சிலர் மனதிலேயே வைத்துக் கொள்வாங்க' என்று சம்பந்தியை பாராட்டத் தொடங்கினாள்.





ஒரு வாரத்திற்குப் பிறகு மோகன் மெதுவாக விஷயத்திற்கு வந்தான்.

''கண்ட கண்ட ஆள் கிட்டே வேலை பார்த்து ஒன்றுமே சரியாக வரவில்லை ராதா! பணத்தைக் கடனாகவே கொடு. வேண்டியதை வங்கியிலிருந்து லோன் வாங்கிக் கொள்கிறேன். மறுபடியும் சின்ன ஒர்க் ஷாப் தொடங்குகிறேன். பார்ட்னர் கூட வேண்டாம். கஷ்டப்பட்டு உழைக்கிறேன். இந்த ஒரு வாய்ப்பு மட்டும் கொடு'' என்று கெஞ்சினான்.

ராதா யோசித்தாள். சமீபத்தில் வேலை சரியாக கிடைக்காததால் மோகன் சோம்பேறியாக மாறிக் கொண்டிருந்தான். பெரும் பாலான நேரம் வீட்டிலேயே இருப்பதால் தாயின் பேச்சுக்கு ஒத்துப் பாடுவதும் அதிகரித்து விட்டது. பணம் போனாலும் பரவாயில்லை. அவன் மாறினால் போதும்.

மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு பணத்தைத் தந்தாள். இரண்டு மாதங்கள் வரை அவன் நடத்தை ஒழுங்காகவே இருந்து வந்தது. முதல் மாதத்தில் குழந்தைகளுக்கு உடைகள் வாங்கி வந்தான். இரண்டாவது மாதத்தில் ராதாவுக்கு ஒரு புடவை வாங்கி வந்தான். அதற்கு அடுத்த மாதம் தங்கைகளுக்கு வாங்கித் தராவிட்டால் நன்றாக இருக்காது என்று சொல்லிவிட்டு தன் வீட்டு மனிதர்களுக்கெல்லாம் துணிமணி எடுத்துத் தந்தான். பிறகு அம்மா ரொம்ப நாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள் என்று டேப் ரிக்கார்டர் வாங்கித் தந்து அவளை ஊருக்கு அனுப்பி வைத்தான். ஆறு மாதங்கள் முடியும் முன்பே எல்லாம் நஷ்டமாகி விட்டது என்று சொல்லி ஒர்க் ஷாப்பை மூடி விட்டான்.

பத்தாயிரம் ரூபாயும் கடலில் கரைத்த பெருங்காயமாகி விட்டது. அவனிடம் சில புதுப் பழக்கங்கள் ஏற்பட்டது தான் மிச்சம்.

★ ★ ★

"வணக்கம். என் பெயர் சுபாஷ்! முழுப் பெயர் சுபாஷ் சந்திர போஸ்" என்றான் அவன்.

அனுராதா நிமிர்ந்து அவன் பக்கம் பார்த்தாள். ஏறத்தாழ அவள் வயது இருக்கலாம். அழகை விட ஆரோக்கியமாக இருந்தான்.

"என்ன மேடம்? ஏன் அப்படிப் பார்க்குறீங்க?" அவன் குரலில் குறும்புத்தனம் எட்டிப் பார்த்தது.

"சுபாஷ் சந்திர போஸ் விமான விபத்தில் இறந்து போகவில்லை என்ற செய்தி உண்மைதானென்று சொல்லுங்க" என்றாள் அவள் சீரியஸாக இருப்பது போல் காட்டிக் கொண்டே.

அவனும் சளைக்கவில்லை. "இமயமலையில் இலைகளையும், தழைகளையும் தின்று தவம் செய்தேன் இல்லையா. வயது ஏறுவதற்கு பதில் குறையத் தொடங்கி விட்டது. இன்னும் கொஞ்ச நாள் போனால் கைக்குழந்தையாக மாறி விடுவேனோ என்று பயந்து போய், ஏதோ இளைஞனாக இருந்தால் இந்த சமுதாயத்தைக் காப்பாற்றலாமென்று திரும்பி வந்தேன்."

தான் செய்த கிண்டலுக்கு தடுமாறாமல் அவன் தந்த பதிலைக் கேட்டுவிட்டு ரொம்ப நாள் கழித்து மனம் விட்டு சந்தோஷமாகச் சிரித்தாள் ராதா.

"ஒரு வாரமாக இதே செக்ஷனில் தென்பட்டீங்க. இன்னிக்கு புதுசா வந்து அறிமுகப்படுத்திக் கொள்றீங்களே ஏன்?" ராதா கேட்டாள்.

"ஐயோ! உங்களிடம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும்."

"ஏன்?"

"ஒரு வாரமாக கவனித்துக் கொண்டே வருகிறேன். உங்கள் பக்கத்து சீட்டில் இருக்கும் சுமதியைக் கூட தெரியாதது போலவே தென்பட்டீங்க. இப்போ என்னவோ ஒரு வாரமாக நான் இங்கே





இருப்பதை கண்டுபிடித்து விட்டதாகச் சொல்றீங்க. இப்படி வெளியில் தங்களை காட்டிக் கொள்ளாமல் அழுத்தமாக இருப்பவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்கணும்னு காந்திஜி சொல்லி இருக்கிறார் ஒரு சந்தர்ப்பத்தில்."

"அப்படியா! நல்ல அறிவுரை தான். ஆனால் அந்தக் காலத்தில் என்னைப் போன்ற நபர் அவருக்கு யார் தென்பட்டாங்களோ தெரியவில்லையே?" என்றாள் முறுவலுடன்.

"முகமத் அலி ஜின்னான்னு ஒருத்தர் இருந்தார். தான் கொஞ்ச நாளில் இறந்து போய் விடுவோம் என்ற விஷயம் தெரிந்தாலும், யாருக்கும் தெரிந்து விடாமல் நாட்டுக்காக பாடு பட்டார். அவருடைய நோய் பற்றி வெளிப்பட்டு இருந்தால் இந்தப் பிரிவினையே ஏற்பட்டிருக்காது என்பது சரித்திர வல்லுனர்களின் அபிப்பிராயம். அந்த விஷயத்தை காந்தியே என்னிடம் சொன்னார்."

"ரொம்ப தான் அளக்காதீங்க. அந்தச் சம்பவம் நடந்தது 1947ல். அப்பொழுது நீங்க இமய மலையில் தவம் பண்ணிக் கொண்டு இருந்திருக்கணும். காந்தியைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லையே?"

அடிவாங்கியது போல் பார்த்து விட்டு "ஆபீஸ் அகௌண்ட்ஸ், கரஸ்பாண்டென்ஸில் நீங்க ரொம்பவும் பர்ஃபெக்ட் என்று கேள்விப் பட்டேன். சரித்திரத்தையும் கரைத்துக் குடித்திருக்கீங்கன்னு இப்பொழுது தான் தெரிகிறது" என்றான்.

"இதற்கு சரித்திரத்தைக் கரைத்துக் குடிக்க வேண்டிய அவசியமில்லை. லால் காலின்ஸ் எழுதிய 'ஃப்ரீடம் அட் மிட் நைட்' படித்திருந்தால் போதும்."

"நல்ல புத்தகம் நல்ல நண்பனுக்குச் சமம் என்று சொல்வார்கள். உண்மை தான். ஆனால் மனிதனுக்கு புத்தகத்தோடு நல்ல நண்பர்கள் இருப்பதும் அவசியம். நீங்க என்ன சொல்றீங்க?

''அதுவும் சரி தான். ஆனால் புத்தகங்களைப் படிக்கும் ரசனையுள்ளவர்கள் என்பதற்காக எல்லோருடனும் நட்பு ஏற்படுத்திக் கொள்ள முடியாது. தாங்கள் படிக்கும் புத்தகங்களின் லெவலில் இருக்கும் நட்பைத் தான் மக்கள் விரும்புவார்கள்.''

''அப்படி என்றால் உங்களுடன் நட்பு வைத்துக் கொள்ள நான் தகுதியானவன் தானா என்று ஒரு தடவை பரிசீலனை செய்யுங்கள்.''

லேசாக அடியுண்டவள் போல் பார்த்தாள் அனுராதா. ''சரி. நான் ஏதோ ரொம்ப உயர்ந்தவள் என்றும், எல்லோருடன் நட்பு வைத்துக் கொள்வதால் என் கௌரவம் குறைந்து விடும் என்றும் நான் நினைக்கவில்லை. என்னால் சாதாரண உரையாடல்களில் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. குழந்தைகளின் படிப்பு, புடவைகள், நகைகள், புதுவிதமான சமையல் இது போன்ற பேச்சுக்களில் என்னால் ஆர்வம் காட்ட முடியாது. இது என்னுடைய பலவீனமாகவும் இருக்கலாம். என்னை விட உயர்ந்தவர்களோடு நட்பு ஏற்படுத்திக் கொண்டால் எனக்கு லாபம் என்ற சுயநலம் கூட என்னிடம் இருக்கலாம் இல்லையா.''

லேசாகச் சிரித்தான் அவன். ''நீங்க தவறாக நினைக்கவில்லை என்றால் ஒரு விஷயம் சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள். இதில் தவறாக நினைக்க என்ன இருக்கு?''

''இந்த ஒரு வாரமாக உங்களைக் கவனித்துக் கொண்டு வருகிறேன். உங்களைப் பற்றி நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். எப்படி என்று கேட்காதீங்க. உங்களோடு நட்பை ஏற்படுத்திக் கொள்ளணும் என்ற விருப்பத்தை விட, நட்பில் உள்ள இனிமையை உங்களுக்குத் தெரியப் படுத்தணும் என்ற விருப்பம் தான் அதிகமாக ஏற்பட்டது. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. ஆனால் நம் இருவரின் ரசனைகளும் ஏறக்



குறைய ஒத்துப் போகும் விஷயம் எனக்குத் தெரியும். இப்போ சொல்லுங்கள், என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள சம்மதமா?''

''நான் என்றுமே யாருடனும் இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேசிப் பழக்கமில்லை. நம்ப சிநேகம் தொடங்கி பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகப் போகிறது.''

''தாங்க்யூ'' என்றான் அவன் சந்தோஷமாக.

''ஒரு விஷயம். நட்பில் தாங்க்யூவும் சாரியும் இருக்கக் கூடாதுன்னு உங்களுக்கு யாருமே சொன்னதில்லையா?''

''சொல்லியிருக்கிறார். ரவீந்திரநாத் தாகூர் சொன்னார். சாகும் தருணத்தில் அவர் எனக்கு தந்த கடைசி அறிவுரை அது தான். ''

''இப்பவே ஃபேர் வெல் மை ஃபிரண்ட் என்று மட்டும் சொல்லிவிடாதீங்க.''

''நோ...நோ.... சீ யூ அகெயின் மை ஃபிரண்ட்'' சிரித்துக் கொண்டே போய் விட்டான் அவன்.

★ ★ ★

ஒரு வாரம் போவதற்குள் இருவரும் நல்ல நண்பர்களாகி விட்டார்கள். ராதாவிடம் புதிதாக உற்சாகம் தொற்றிக் கொண்டது. அவன் கொண்டு வந்து தந்த புத்தகங்களைப் படித்து, நேரம் கிடைத்த போது, அவனுடன் அதைப் பற்றி வாதம் புரியத் தொடங்கினாள். இதற்கு முன் வீட்டிற்குச் சீக்கிரமாக போய்ச் சேர வேண்டும் என்று ஆபீஸ் வேலைகளை அவசர அவசரமாக முடிப்பது பழக்கம். ஆனால் இப்பொழுது அவனுடன் கொஞ்ச நேரத்தைக் கழிக்க வேண்டுமென்று வேலைகளை சீக்கிரமாக முடிக்கத் தொடங்கினாள்.

எப்பொழுதும் யாருடனும் அதிகமாகப் பேசாத ஒரு பெண் திடீரென்று ஒரு ஆணுடன் – அதிலும் பிரம்மச்சாரி இளைஞனிடம்

சிநேகமாக இருக்கத் தொடங்கினால் அதற்கு வேறு காரணத்தை யோசிக்க வேண்டிய தேவை யாருக்குமே இல்லை. ராதா சுபாஷின் நட்பைப் பற்றிய கதைகள் பிரசாரமாக அதிக நாள் ஆகவில்லை... அது மோகன் வரையிலும் வந்து சேர்ந்து விட்டது.

''என்ன? உனக்கு யாரோ பிரண்ட் கிடைத்திருக்கானாமே? நாள் முழுதும் அவனுடன் சிரித்துப் பேசிக்கிட்டு இருக்கிறாயாமே? யார் அவன்?''

''அந்தக் கேள்வியை எங்களைப்பற்றிச் சொன்னவர்களிடமே கேட்டிருக்கலாமே?''

''உன் வாயால் கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்று தான்.''

''அப்படி என்றால் கேட்டுக் கொள்ளுங்கள். எனக்குப் புது நட்பு பழைய நட்பு என்று யாரும் கிடையாது. இருப்பது ஒரே ஒரு நண்பன் தான். பெயர் சுபாஷ்.''

மோகன் அதைக் கேட்டு விட்டு அரை பாட்டில் விஸ்கியை காலி செய்தான். தன்னுடைய கெட்ட பழக்கங்களுக்கு சாக்கு ஜாப்பு சொல்லிக் கொள்வதற்கு ஒரு காரணம் கிடைத்து விட்டது இப்பொழுது.

## 5

''உட்காரு. இதோ வருகிறேன்.'' உள் அறைக்குப் போனான் சுபாஷ். அவன் சிவில் சர்வீஸ் பரீட்சையில் பாஸாகியிருந்தான். ஒரு மாதத்தில் நேர்முகத் தேர்வு இருந்தது. அதற்காக லீவு போட்டிருந்தான். மறுபடியும் இந்த ஊருக்கு வராமல் போகலாம்.

அனுராதா அறை முழுவதும் பார்வையிட்டாள். ரொம்ப துப்புரவாக இருந்தது. ஒரு பிரம்மசாரியின் அறையைப் போல் இல்லை. திருமணமான புதிதில் மோகனின் அறையில் சாமான்கள்



எல்லாம் தாறுமாறாய் இறைந்து கிடக்கும். அவள் அவற்றை எல்லாம் ஒழுங்காக எடுத்து வைப்பாள். அதைப் பார்த்து விட்டு மோகன் பாராட்டினால் மகிழ்ந்து போவாள். இப்படிப்பட்ட சிறிய அனுபவங்கள் தான் வாழ்க்கையில் சுவாரசியத்தை கூட்டும் என்று அந்த நாட்களில் நினைத்து வந்தாள். பாராட்டுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் பெண்! வெறும் வாயால் பாராட்டி விட்டு அவளைச் சந்தோஷப்படுத்தும் ஆண்! மனதளவில் வளர்ச்சி அடைந்த பிறகு தான் அசல் விஷயம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆணுக்குச் சமமாக வேலைக்குப் போய் உழைக்கும் பெண், வீட்டுப் பொறுப்புகளில் கணவன் பங்கெடுத்துக் கொள்வதைத் தான் விரும்புவாள்.

சுபாஷ் ரொம்ப கஷ்டப்பட்டு வேலை செய்வான். அவன் செய்யும் வேலையில் நேர்மை இருக்கும். இன்னும் எதையோ சாதிக்க வேண்டும் என்ற தவிப்பு தென்படும். பொருளாதார ரீதியாக முன்னுக்கு வந்துவிட்டால் போதும் என்ற எண்ணம் மட்டும் இல்லை. அவனிடம் உறுதியும், விடா முயற்சியும் இருந்தன. ஆபீஸ் விஷயமானாலும் சரி, படிப்பு விஷயமானாலும் சரி, வீட்டை எடுத்து வைக்கும் விஷயமாக இருந்தாலும் சரி அவனிடம் ஒழுக்கம் தென்படும்.

விரைவிலேயே அவன் தொலைவிற்குப் போய் விடப் போகிறான் என்று நினைக்கும் போது அவளுக்கு வருத்தமாக இருந்தது. ஒரு நல்ல நண்பன் கிடைத்தான் என்ற சந்தோஷம் ஒரு வருடம் கூட நிலைக்கவில்லை. அவன் வெறும் நண்பன் மட்டும் தானா? அதைத் தவிர அவள் மனதில் அவனுக்கு இடம் இல்லையா? இந்தக் கேள்வியை தனக்குத் தானே கேட்டுக் கொண்ட போது அவளுக்குப் பயம் ஏற்பட்டது. சுய விமரிசனம் செய்து கொள்ளும் நபரால் மனசாட்சியை வஞ்சித்துக் கொள்ள முடியாது.

ஒரு காலத்தில் அறிந்தும் அறியாத வயதில் காதல் வயப்பட்டு விட்டாள். ஆவேசம் இருந்ததே தவிர யோசிக்கும் திறமை இல்லை. தன் காதலுக்கு முன்னால் மற்ற உலகமெல்லாம் அற்பமாகத் தோன்றியது. ஆனால் இப்பொழுதோ.....

''என்ன? ரொம்ப சீரியஸாக யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'' காபி கோப்பையை நீட்டிக் கொண்டே கேட்டான் சுபாஷ்.

''ஒன்றுமில்லை'' மௌனமாக காபியைக் குடிக்கத் தொடங்கினாள். அவனுடன் நட்பு ஏற்பட்ட பிறகு அவளிடம் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. மறந்து போயிருந்த இசையை, இலக்கியத்தை மற்றொரு முறை அசை போடத் தொடங்கினாள். அவன் தன்னைப் பற்றி எவ்வளவு யோசிப்பானோ அதே அளவிற்கு அவளைப் பற்றியும் யோசிப்பான். அவள் எதைப் பற்றி யோசிக்கிறாள்' என்று தெரிந்து விட்டாற் போல் அந்த விஷயத்தையே பேசுவான்.

''எனக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு என்னைப் பற்றி யோசிப்பது நன்றாக இல்லை.''

சுபாஷ் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டாள். ''உங்களைப் பற்றி யோசிக்கிறேன்னு ஏன் நினைக்கிறீங்க?''

''வேறு விஷயமாக இருந்தால் என்னிடமே சொல்லுவாய். அதனால்''

ராதா முறுவலித்தாள். ''இவ்வளவு பிடிவாதமாக இன்னிக்கு வீட்டுக்கு அழைத்து வந்தீங்க. என்ன பேசப் போறீங்கன்னு யோசிச்சுக்கிட்டு இருந்தேன். அவ்வளவு தான்.''

''பயமாக இருக்கா?''

ஒரு வினாடி பொறுத்து பதில் சொன்னாள். ''ஆமாம் ஆனால் நீங்க நினைக்கிற விஷயத்தைப் பற்றி இல்லை. அதற்குப் பிறகு நடக்கப் போகிற விஷயத்தைப் பற்றி. ''



''அதற்குப் பிறகு நடக்கப் போகிற விஷயத்தைப் பற்றிப் பேசத் தான் கூப்பிட்டேன். 'நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது' இது போன்ற வசனங்களை சொல்லிக் கொள்ளும் ஸ்டேஜை தாண்டிவிட்டோம். உன் வீட்டில் உனக்கு சந்தோஷமோ அமைதியோ இல்லை. அவற்றுக்காகத்தான் நீ என்னை நேசிக்கிறாய் என்ற சந்தேகம் எனக்கு வரவில்லை. நீ என்னிடமிருந்து எதிர்பார்த்தது இரக்கத்தை அல்ல, அன்பை. என் மனதிலிருப்பதை வெளிப்படையாகச் சொல்கிறேன். நீயும் யோசித்துப் பாரு. உடனே பதில் சொல்லணும் என்ற கட்டாயம் இல்லை.'' ஒரு வினாடி நிறுத்தினான் அவன்.

ராதாவின் இதயத்தில் கலவரம் ஏற்பட்டது. அவள் மனதில் உள்ள விஷயம் புரிந்து போய் விட்டாற் போலிருந்தது. கேட்கவே பயமாக இருந்தது.

''ராதா! எனக்கு இந்தச் செலக்ஷன் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை இருக்கு. அதற்குப் பிறகு இரண்டு வருடங்கள் பயிற்சி காலம் இருக்கும். நீ இப்பொழுதே டைவோர்ஸ்க்கு அப்ளை செய்து விடு. குழந்தைகளுடன் தனியாக போய் இருந்து கொள். உனக்கு உதவி செய்யக் கூடிய நண்பர்களை அறிமுகப் படுத்தி வைக்கிறேன். என் டிரைனிங் முடிவடைவதற்குள் உனக்கு விவாகரத்து கிடைத்து விடும். வட இந்தியாவில் போஸ்டிங் வாங்கிக் கொண்டு போய் விடலாம். கல்யாணம் செய்து கொள்வோம். நீ எடுத்த முடிவைப் பற்றி நீ என்றுமே வருத்தப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்தது. உன்னைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. உனக்கும் அந்த நம்பிக்கை இருப்பது எனக்குத் தெரியும். யோசித்துப் பாரு ராதா! எனக்கும் கல்யாணம் செய்து கொண்டு செட்டில் ஆகணும் என்று தோன்றிவிட்டது. என் வீட்டாரும் அவசரப்படுகிறார்கள். நான் அவர்களுக்கு இன்னும் பதில் சொல்லவில்லை.''

ராதா தலையைக் குனிந்து கொண்டாள். அவனுக்குத் தன் மீது அன்பு இருப்பது தெரியும். ஆனால் இவ்வளவு தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வருவான் என்று அவள் நினைத்துப் பார்க்கவில்லை. பேச்சிலும், செயலிலும் என்றுமே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்தவன் இன்று இவ்வாறு கேட்கிறான் என்றால் அந்த விஷயத்தை எவ்வளவு தீவிரமாக யோசித்திருப்பான் என்று உணர முடிந்தது. ஆனால் இது சுலபமாக நடக்கக் கூடிய விஷயமா?

''யோசித்துப் பாரு ராதா! நடைமுறைக்கு ஒத்துவராது என்று பயப்படுகிறாயா? சுய நம்பிக்கை இருந்து விட்டால் சாத்தியம் ஆகாதது எதுவுமே இல்லை. இந்தக் காலத்தில் இது ஒன்றும் வித்தியாசமான விஷயம் இல்லை.''

''ஒருக்கால் நான் முடியாது என்றால்?''

''நிச்சயமாக தேவதாஸ் ஆக மாட்டேன். கல்யாணம் செய்து கொண்டு தான் ஆகணும் என்பதால் எங்க வீட்டார் தேர்ந்தெடுக்கும் பெண்ணையே பண்ணிக் கொள்வேன். நீ மறுத்து விட்ட பிறகு யாராக இருந்தாலும் ஒன்று தான். வாழ்க்கையில் நான் எதிர்பார்க்கும் சந்தோஷத்தை பெற முடியாது என்றும் சொல்ல மாட்டேன். அந்தப் பெண்ணுடன் சந்தோஷமாக வாழ முயற்சி செய்வேன்.''

''எனக்கு யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் வேண்டும்.''

''கண்டிப்பாக. உன்னிடமிருந்து பதில் வந்த பிறகே என் எதிர் காலத்தை முடிவு செய்வேன்.''

ராதா எழுந்து நின்று கொண்டாள்.

''ராதா! '' அன்பு ததும்பும் குரலில் அழைத்தான் சுபாஷ். ''ஆணும் பெண்ணும் உடலால் இணைவது சுகத்தை அனுபவிப்பதற்காகத்தான் என்று சொன்னால் அந்த சேர்க்கையை 'காமம்' என்று தான் சொல்ல வேண்டும். அவர்கள் கணவன் மனைவியாக

இருந்தாலும் சரி. எனக்கு உன்னோடு அணு அணுவாய் ஒன்றிணைய வேண்டும் என்று வேட்கையாக இருக்கிறது. அது வெறும் உடல் வேட்கை மட்டும் இல்லை. மனதளவிலும் நாம் ஒன்றுபட வேண்டும். உன் மீது எனக்கு இருக்கும் அன்பையும், வாயால் எடுத்துச் சொல்ல முடியாத உணர்வுகளையும் உனக்கு என் ஸ்பரிசத்தால் புரிய வைக்க வேண்டும். என்னுடையது இச்சை இல்லை. அதுவாக இருந்தால் ஒரு தடவையில் தீர்ந்து விடும். எனக்கு நீ வேண்டும். முப்பது வருட காலம் நீ யாரென்று தெரியாமல் இருந்து விட்டேன். மீதி வாழ்க்கையை உனக்குத் துணையாக வாழணும்.''

''இரண்டு நாட்களில் சந்திக்கிறேன் சுபாஷ்.''

''சரி.'' அவன் முகத்தில் முறுவல் மாறவில்லை. அருகில் வந்து அவள் கையைப் பற்றிக் கொண்டான். அவன் அவளைத் தொட்டது அது தான் முதல் தடவை. அவளை ஒரு முறை மார் போடு அணைத்துக் கொண்டு மென்மையாக முத்தம் பதித்தான்.

★ ★ ★

அனுராதாவுக்கு உறக்கம் வரவில்லை. மோகன் இன்னும் வீடு திரும்பவில்லை. தினமும் தாமதமாக வருவதும், எந்த நிலையில் இருந்தாலும் சரி தன்னுடைய வேட்கையைத் தீர்த்துக் கொள்வதும் அவனுக்கு வழக்கமாகி விட்டது. திருமணம் என்பதே சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட விபச்சாரம்.

குழந்தைகள் இருவரும் தூங்கி விட்டார்கள். மோகன் குழந்தைகளிடம் அன்பாக பேசாவிட்டாலும் அப்பாவைக் கண்டால் அவர்களுக்குப் பிரியம் அதிகம். ஒருக்கால் அந்த தவறு அவளுடையது தானோ. தமக்கிடையே நடக்கும் சச்சரவுகள் குழந்தைகளுக்குத் தெரியக் கூடாது என்று கவனமாக இருந்து வந்தாள். இந்த விஷயம் குழந்தைகளுக்குப் புரியாது. மாமியார் குழந்தைகளுக்கு நன்றாக செல்லம் கொடுப்பாள். குழந்தைகள் தவறு செய்யும் போது கண்டிக்கப் போனால் குறுக்கிட்டு அவர்

களை தன் பக்கம் இழுத்துக் கொள்வாள். ஆனால் தான் வீட்டில் இல்லாத போது வேளைக்குப் பால் கூடச் சுட வைத்துக் கொடுக்க மாட்டாள்.

விவாகரத்து என்றால் மோகன் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டான். பொன் முட்டையிடும் வாத்து போல் ஆகி விட்டாள் அவள். கொஞ்சம் குரலை உயர்த்தினால் குழந்தைகளை சுட்டிக் காட்டி ரகளை செய்வான். அவள் மீது உள்ள கோபத்தை குழந்தைகள் மீது காட்டுவான். தன்னுடைய எதிர்காலத்திற்காக குழந்தைகளை பலி கொடுக்க முடியுமா? பெற்றவள் என்ற முறையில் குறைந்த பட்சம் அவர்களுக்குத் தன்னால் எந்தத் தீங்கும் நேராமல் பார்த்துக் கொள்வது அவளுடைய கடமை.

சுபாஷிற்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். இந்தத் திருமணத்தால் அவர்கள் எதிர்காலம் பாழாகி விட்டால்? யாருக்குமே நன்மை செய்யா விட்டாலும் பரவாயில்லை. தீமை மட்டும் செய்யக் கூடாது. மறைமுகமாகக் கூட இன்னொருவருக்கு துன்பத்தை ஏற்படுத்துவது மனித நேயம் இல்லை. அவளுக்கும், சுபாஷுக்கும் துணிச்சல் இருக்கலாம். ஆனால் இந்தச் சமுதாயம் ஒரு பெரிய சங்கிலியைப் போன்றது. எந்தத் தொடராவது தளர்ந்து விட்டால் போதும். இன்னொருத்தருக்கு ஆதாரம் குறைந்து விடும். தன் வாழ்க்கையில் பெரும்பகுதி பல அனுபவங்களில் கழிந்து விட்டது. ஆனால் சுபாஷிற்கு பொன்னான எதிர்காலம் இருக்கிறது. தெரிந்து கொண்டே அவனைக் குழியில் தள்ளுவது சரியில்லை.

''தூங்காமல் எனக்காக காத்திருக்கிறாயா?'' என்று மேலே விழவந்தான் மோகன். விஸ்கியின் நெடி குப்பென்று வந்தது.

''உங்களுக்காக நான் காத்துக் கொண்டிருப்பது அதற்காக இல்லை. உங்களிடம் கொஞ்சம் பேசணும். சற்று தள்ளி உட்காருங்கள்'' சீரியஸாக சொன்னாள்.



''என்ன பேசணும்? இன்னிக்கு நான் சந்தோஷமாக இருக்கேன்.'' மறுபடியும் நெருங்கப் போனவனை வலுக்கட்டாயமாக தள்ளி விட்டாள். ''அப்புறம் என் பேச்சை கேட்கும் மூட் உங்களுக்கு இருக்காது'' என்றாள்.

''சரி தான். என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லு?'' பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து எண்ணிக் கொண்டே சொன்னான். சீட்டாட்டத்தில் அவனுக்கு பணம் கிடைத்திருக்கிறது.

ராதா அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

இவன் என்னை நேசிக்கிறான் என்று நினைத்தாலே இதயம் பெருமையாய் பொங்கி வழிய வேண்டும். என்னிடம் என்ன இருக்கு என்று என் மீது இவ்வளவு அன்பு என்ற யோசனை வர வேண்டும். நன்றியால் அவன் பால் அன்பு இருமடங்காக வேண்டுமே தவிர போயும் போயும் இவனையா நான் காதலித்தேன்? இவ்வளவு பெரிய தவறு எப்படிச் செய்தேன்? இது போன்ற கேள்விகள் மனதில் ஏற்படும் நிலைமையை காதலன் வரவழைத்துக் கொண்டால் அதைக் காட்டிலும் துர்ப்பாக்கியம் வேறு இல்லை.

''என்ன யோசனை? விஷயம் என்னவென்று சீக்கிரமாகச் சொல்லு. எனக்குத் தூக்கம் வருகிறது.'' சலித்துக் கொண்டான் மோகன்.

''அப்பா கொடுத்த இடத்தில் சின்னதாக ஒரு வீடு கட்டிக் கொள்ளணும் என்று நினைக்கிறேன் . கடன் வாங்க அப்ளை செய்திருக்கிறேன். ஆனால் அது மட்டுமே போதாது. நகைகளை விற்று விடப் போகிறேன். மேற்கொண்டு தேவைப்பட்டால் வேறு இடத்திலும் கடன் வாங்கப் போகிறேன்.''

''அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?''

''நான் உங்களிடம் பணம் கேட்கவில்லை. கொஞ்ச காலத்திற்கு என் சம்பளத்தை வீட்டுக்குச் செலவழிக்க முடியாது என்று சொல்கிறேன்.''

''நன்றாகத் தான் இருக்கு. பொறுப்புக்களை என்னுடன் பகிர்ந்து கொள்வதாக வாய் கிழியச் சொன்னாய். என் தங்கைகள் இரண்டு பேரும் பிரசவத்திற்கு வரப் போகிறார்கள். அது தானே நீ சொல்ல வந்தது? அது என் பாடு. நான் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறேன். நீ இஷ்டம் வந்தது போல் செய்து கொள். உன் பணத்தை மட்டும் கேட்க மாட்டேன். போதுமா?'' கோபமாக சொன்னான் மோகன்.

திருமணம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆன பிறகும் அவனுடைய தங்கைகளுக்கு இன்னும் பிறந்த வீட்டிலிருந்து ஒவ்வொரு பண்டிகைக்கும் சீர் வரிசை அனுப்பியாக வேண்டும். தம்பிகளுக்குத் தேவை ஏற்பட்டால் பணம் கொடுத்து உதவ வேண்டும்.

''இது வரைக்கும் அவர்களுக்குச் செய்ய வேண்டியவை எல்லாம் செய்து விட்டோம். இனி நம் குழந்தைகளைப் பற்றி யோசிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.''

''ஆமாமாம். பெற்றிருக்கிறாய் இல்லையா இரண்டு பெண் குழந்தைகளை. இப்பொழுதிலிருந்தே சேர்த்து வைத்துக் கொள். அடிக்கடி என்னைக் குத்திக் காட்டுகிறாயே? உங்க அப்பா செய்த காரியம் கூட அது தானே? ஒரு மனையை வாங்கி கையில் கொடுத்து விட்டால் போதுமா? ஒரு வீடாவது கட்டிக் கொடுத்தாரா? இப்பொழுதாவது புத்தி வந்ததா என்றால் அதுவும் இல்லை. இன்னும் ஊர் மக்களுக்காகவே உழைக்கப் போய் விட்டார்.''

''எங்க அப்பா எது செய்தாலும் அவருடைய உழைப்பால் சம்பாதித்த பணம் அது. அதைப் பற்றிக் கேட்கும் தகுதி உங்களுக்கு இல்லை. இன்னொருத்தரின் கஷ்டார்ஜிதத்தை தானம் செய்யக் கூடிய பெரிய மனிதர் இல்லை அவர்.''

''ஓஹோ! விவகாரம் அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டதா? என் சம்பளம்! என் இஷ்டம்! நீ யாரு கேட்பதற்கு என்று சொல்ல வருகிறாயா?''

''நீங்க எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். நமக்கு என்று சொந்த வீடு ஒன்று தேவை. அதற்காக எவ்வளவு கஷ்டம் வேண்டுமானாலும் படுகிறேன். ஆனால் ஒரு விஷயம் அந்த வீட்டில் நீங்களும், நானும், நம்ப குழந்தைகளும் மட்டும் தான் இருக்கணும்.வேறு யாராவது வந்தால் இரண்டு நாட்கள் இருந்து விட்டுப் போய் விடணும். அவ்வளவு தான். உங்க அம்மாவாக இருந்தாலும் சரி.''

''அது தான் உன் முடிவாக இருந்தால் நானும் அந்த வீட்டுக்கு வரமாட்டேன். என் வீட்டு மனிதர்களை விட்டு விட்டு வரவேண்டிய தேவை எனக்கு இல்லை.''

''அது தான் உங்க தீர்மானமாக இருந்தால் அப்படியே நடக்கட்டும். ஆனால் என் முடிவு மட்டும் மாறாது. உங்க மிரட்டலுக்கு இனிப் பணியப் போவதில்லை.''

''குழந்தைகள் மீது உனக்கு எவ்வளவு உரிமை இருக்கோ எனக்கும் அதே அளவு உரிமை இருக்கு. அவர்களை என்னிடமே வைத்துக் கொள்வேன். கஞ்சியோ கூழோ ஊற்றி காப்பாற்றுவேன். துணைக்கு அம்மாவை ஊரிலிருந்து அழைத்து வருவேன். இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமாக என்னை மிரட்ட வேண்டாம். நான் பயப்பட மாட்டேன். மேலும் உனக்குத் தான் நஷ்டம். உன் வீட்டையும் சம்பளத்தையும் பார்த்து உன் பின்னாலேயே வந்து விடுவேன்னு கனவு காணாதே.''

ஆண் துணையில்லாமல் பெண்ணால் தனியாக வாழ முடியாது என்ற தைரியம் தான் அவனை அப்படிப் பேச வைக்

கிறது. குழந்தைகளைத் தண்டித்தால் அதைப் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியாத தாய்மையின் பலவீனம் ஆணுக்கு வரமாகி விட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்தாலும், இந்த நாட்டில் பெண் என்பவள் தாழ்த்தப்பட்ட நிலையில் தான் வாழ்ந்து வருகிறாள்.

ராதா பாரமாக மூச்சு விட்டுக் கொண்டு திரும்பிப் படுத்தாள்.

## 6

**கா**லை ஒன்பது மணி. காலிங் பெல் ஒலித்தது. சீரியலாக படித்துக் கொண்டிருந்த சுபாஷ் சலித்துக் கொண்டே வந்து கதவைத் திறந்தான். எதிரே அனுராதா! அவள் முகத்தைப் பார்த்ததுமே அவனுக்குப் புரிந்து விட்டது அவள் பதில் என்னவென்று.

''உள்ளே வந்து உட்காரு'' வரவேற்றான் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல்.

''என் பதிலைக் கேட்டு விடு முதலில்'' சோபாவில் உட்கார்ந்து கொண்டே சொன்னாள்.

''புரிந்து விட்டது ராதா! வேறு எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை. அந்த விஷயத்தைப் பற்றி இனி பேச வேண்டாம். ஒரு நிமிஷம் உட்காரு. காபி கலந்து கொண்டு வருகிறேன்'' உள்ளே போய் விட்டான்.

கொஞ்ச நேரம் தயங்கி விட்டு ராதாவும் உள்ளே போனாள். சுபாஷ் ஏதோ யோசித்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் மனதிலிருந்த வேதனை கண்களில் பிரதிபலித்தது. எதிரே ஸ்டவ் மீது தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது.

''என் துரதிர்ஷ்டத்திற்காக வருத்தப் படுகிறாயா சுபாஷ்''

''இல்லை. இல்லை. பெரிய ஹீரோவைப் போல் ஒரே நொடியில் காபியைக் கொண்டு வரேன்னு சொல்லி விட்டேன்.



டிக்காஷன் இன்னும் போடவே இல்லை. நேரமாகி விடுமேன்னு கவலை. அது தான்–'' ஃபில்டரில் வெந்நீரை ஊற்றிக் கொண்டே சிரித்தான். ஹாட்ஸ் ஆஃப் டு ஹிஸ் சென்ஸ் ஆஃப் ஹ்யூமர்.

''நான் லீவ் போட்டு விட்டு வந்திருக்கிறேன். மாலை வரையிலும் இங்கேயே இருப்பேன். காபிக்கு ஒன்றும் அவசரமில்லை. உங்கள் படிப்பிற்கு இடைஞ்சல் தான். இருந்தாலும் எனக்காக ஒரே ஒரு நாள் ஸ்பேர் பண்ணுவீங்கன்னு நம்புகிறேன்.''

''நீ லீவு போட்டதே அதிசயம் தான். இங்கே வந்து என் கைச் சமையலைச் சாப்பிடுவதாக சொன்னது இன்னும் பெரிய அதிசயம். வா, உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம்.''

சுபாஷ் சோபாவில் உட்கார்ந்து கொண்டதும் அவன் காலடியில் உட்கார்ந்து அவன் மடியில் தலையை வைத்துக் கொண்டாள். அவனும் அவள் கையை மெதுவாக பற்றிக் கொண்டான். அந்த நிசப்தத்தில் அனுராதாவின் குரல் மந்திரஸ் தாயியில் ஒலிக்கத் தொடங்கியது.

''வாழ்க்கை எவ்வளவு வினோதமானது சுபாஷ்! நாம் ஏறவேண்டிய ரயில் ஒரு வாழ்நாள் முழுவதும் தாமதம் என்றார் ஒரு கவிஞர். நாம் ஏறிய ரயில் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு போகாது என்று தெரிந்து கொள்வதற்குள் வாழ் நாளே முடிந்து போய் விடுகிறது. நடந்ததை உணரும் சக்தி கூட இல்லாமல் விரக்தி என்ற சமாதி நிலைக்கு போய்விட்டேன். அந்த ஜடத் தன்மையிலிருந்து வெளியே இழுத்து வந்து நான் யார் என்று தெரிந்து கொள்ளும்படி செய்தாய்.

''பகீரதன் கடும் தவம் செய்த பிறகு தான் கங்கையை பூமிக்குக் கொண்டு வர முடிந்தது. பாற்கடலைக் கடைந்த பிறகு தான் தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்தது. எந்தத் தவமும் செய்யாமலேயே நான் கனவிலும் எதிர்பார்க்க முடியாத வரத்தை எனக்குத் தந்தீங்க. ஆனால் கைக்குக் கிடைத்த அமிர்த கலசத்தைப் பெற்றுக்

கொள்ள முடியாத துரதிர்ஷ்டசாலி நான். நம் இருவருக்கும் ஏறக் குறைய ஒரே வயது. அனுபவத்தால் பழுத்துப் போய் விட்டேன் நான். உங்களுக்கு இன்னும் வாழ்க்கையே தொடங்கவில்லை. என் கசப்பான அனுபவங்கள் காரணமாக வாழ்க்கையில் இனி என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. உங்களுக்கும் சுகம் தர முடியாது. குறும்புத்தனம் செய்யும் வயது தாண்டி விட்டது. உடலையும், உள்ளத்தையும் சிலிர்க்கச் செய்யும் அனுபவங்கள் இல்லாத வாழ்க்கை சாரமில்லாமல் இருக்கும்.''

''எனக்கு வேண்டியது அந்தச் சின்ன சின்ன அனுபவங்கள் இல்லை ராதா. நீ என்னோடு இருப்பது தான் எனக்குப் பெரிய அனுபவம்.''

''அது சாசுவதமாக வேண்டும் என்று ஏன் நினைக்கிறீங்க?''

''மனதிற்குப் பிடித்ததை சாசுவதமாக அடையவேண்டும் என்று நினைப்பது தவறா?''

''தவறு இல்லை. ஆனால் சாத்தியப் படாதவற்றின் மீது ஆசைப்பட்டு ஏமாற்றமடைவது விவேகம் இல்லை.''

''பின்னே என்னை எந்த விதமாக திருப்திப் பட்டுக் கொள்ளச் சொல்கிறாய்?''

ராதா தலை குனிந்து கொண்டாள். ''இதுவரை உங்களுக்கு எவ்வளவு பெண்களுடன் உறவு இருக்கிறது?'' மெதுவாக கேட்டாள்.

அவன் அதிர்ச்சி அடைந்தவன் போல் பார்த்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, ''எந்தப் பெண்ணுமே எனக்கு இந்த அளவுக்கு நெருக்கமானதில்லை. மனதளவிலும், உடலளவிலும் சரி, நீ என்னை நம்பினாலும் நம்பாவிட்டாலும் நீ தான் முதலா மவள்'' என்றான்.





''மனதளவில் நான் தான் முதலாமவள். அந்த இரண்டாவது கூட நானேவாக ஏன் இருக்கக் கூடாது சுபாஷ்! என்னிடம் கோழைத்தனம் போகவே இல்லை. அதனால் தான் நீங்க சட்ட ரீதியாக தர நினைப்பதை ரகசியமாக பெற விரும்புகிறேன். மனம் விரும்பாத இடத்தில் வலுக்கட்டாயமாக உடலால் இணைய வேண்டியதிருந்தால் அது விபச்சாரம் தான். அதோடு ஒப்பிட்டால் நாம் இணைவதில் தவறே இல்லை. இந்தக் கொஞ்ச நாட்களையும் உங்களோடு கழிக்கிறேன். இந்த இனிமை யான கணங்களை மூட்டை கட்டி பத்திரமாக போற்றுகிறேன். அந்த நினைவுகளிலேயே வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்க முயற்சிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு ராதா கண்களை மூடிக் கொண்டாள். அவளுக்கு ஏனோ துக்கம் பொங்கி வந்தது.

''மகா புருஷர்களே! பெண்ணின் வாழ்க்கையை வரையறுக்கும் வல்லுனர்களே, என்னை மன்னியுங்கள். தெரிந்தே நான் இந்தத் தவறை செய்கிறேன். நீங்கள் எழுதிய நீதி சாஸ்திரங்களை புறக் கணித்து விட்டு, எல்லைக் கோட்டைத் தாண்டி என் சுயநலத்தைத் தேடிக் கொள்கிறேன். என் வாழ்க்கை யாருக்கும் பாடப் புத்தக மாகப் போவதில்லை. உங்கள் மனைவியர்கள் யாரும் இதைப் படிக்கக் கூடாது. என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். தயவு செய்து என்னைப் பார்க்காதீர்கள். என்னைக் கவனிக்காதீர்கள்.''

அவளை அவன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

* * *

நேர்முகத் தேர்வுக்கு நான்கு நாட்களுக்கு முன்னால் சுபாஷ் கிளம்பிப் போனான். கனத்த இதயத்துடன் அவனை வழியனுப்பி வைத்தாள். வாழ்க்கையில் மறுபடியும் தாம் சந்திப்போமா என்ற சந்தேகம் ஏற்பட்டது அவளுக்கு. இந்தியன் பீனல் கோட் 497 நினைவிற்கு வந்த போது சிரிப்பு வந்தது. திருமணமான பெண் ணொருத்தி தனக்கு விருப்பம் இருந்தாலும் சரி, கணவனுக்கு

விருப்பம் இல்லாமல் வேறு ஆணுடன் தொடர்பு கொண்டிருந்தால் அது குற்றம். அதாவது திருமணம் ஆன பிறகு அந்தப் பெண் கணவனின் உடமை என்று அர்த்தம். திருமணமாகாத பெண்ணிற்கு இந்தக் கட்டுப்பாடுகள் இல்லை.

அதுவே கணவனுக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக மனைவி நிரூபித்தால் விவாகரத்து பெறுவதற்கு அது உறுதுணையாக இருக்குமே தவிர அவனை தண்டிக்கப் பயன்படாது. இந்தியாவில் தவிர வேறெந்த நாட்டிலும் இது போன்ற சட்டம் இல்லை.

அனுராதா வலுக்கட்டாயமாக யோசனைகளை விரட்டியடித்தாள்.

சில நாட்கள் கழிந்தன. அவளுக்கு சுபாஷை பார்க்க வேண்டுமென்றும் ஒரு தடவையாவது பேச வேண்டும் என்றும் தோன்றும். தூக்கத்தில் திடீரென்று விழிப்பு வந்து விடும். அதற்குப் பிறகு உறக்கம் வராது.

நேர்முகத் தேர்வில் செலக்ட் ஆகிவிட்டதாகவும் பயிற்சி தொடங்கி விட்டதாகவும் சுபாஷிடமிருந்து கடிதம் வந்தது. மேலும் சில மாதங்கள் கழிந்தன. அவனுடைய நினைவுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவள் தேறிக் கொண்டிருந்த சமயத்தில் அவனிடமிருந்து கடிதம் வந்தது.

ராதா, அன்பைத் தவிர வாழ்க்கையில் வேறெதுவும் இல்லை என்று சிறு வயதில் நான் படித்த புத்தகங்களிலிருந்து கற்றுக் கொண்டேன். உன் அறிமுகம் கிடைத்த பிறகு அது உண்மை என்று ஆழமாக நம்பினேன். ஆனால் போகப் போக அன்பு என்பது வாழ்க்கையில் ஒரு பகுதி மட்டும் தான் என்று அனுபவங்கள் மூலம் கற்றுக் கொண்டேன்.

நாம் கழித்த சில நாட்களை இனிய நினைவுகளாக மனதில் தேக்கிக் கொண்டு வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாகக் கழித்து



விடுவேன் என்று சொன்னேன். என்னுடைய அன்பு உன்னுடைய அன்பிற்குச் சற்றும் குறைந்ததல்ல என்று கூடச் சொன்னேன். உன்னோடு ஒன்று கலந்த பிறகு வேறு பெண்ணை அவ்வளவு ஆர்வத்தோடு அணைத்துக் கொள்ள முடியுமா என்று கூடத் தோன்றியது. இதெல்லாம் மனப்பூர்வமாக உணர்ந்த உண்மைகள் தான் ராதா! என்னை நம்பு.

ஆனால் காலம் எதையும் மாற்றக் கூடிய வலிமை வாய்ந்தது. இதையெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால் நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் . ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறாய் இல்லையா?

மைதிலி ஒரு துர்ப்பாக்கியசாலி. திருமணம் ஆன ஆறே மாதங்களில் கணவனை இழந்து விட்டாள். கணவன் இறக்கும் போது அவள் ஆறுமாதக் கருவை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தாள். அவளுக்கு இப்பொழுது ஒரு மகன் இருக்கிறான். நீ யார் என்று குறிப்பிடாமல் நம் காதலைப் பற்றி மட்டும் அவளிடம் சொன்னேன். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு துணையாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை இருவருக்குமே ஏற்பட்டது. பதினைந்து நாட்களில் எங்கள் திருமணம் சிம்பிளாக நடக்கப் போகிறது. இந்தத் திருமணத்திற்கு உன் வாழ்த்துக்கள் எப்போதும் உண்டு என்று எனக்குத் தெரியும்.

இப்படிக்கு, சுபாஷ்

பி.கு:- அவளை நான் மணந்து கொள்வதற்கு அவளுடைய துர்ப்பாக்கிய நிலைமை மட்டுமே காரணம் இல்லை.

அனுராதாவின் கண்களில் நீர் சுழன்றது. அது ஆனந்தக் கண்ணீரா அல்லது வேதனைக் கண்ணீரா என்று அவளுக்கே புரியவில்லை. ஒரு அத்தியாயம் அத்துடன் முடிந்து விட்டது.

* * *

குறிப்பிட்ட சமயத்திற்குள் வீடு கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அதற்குள் ராதாவுக்கு இன்னொரு பதவி உயர்வும் கிடைத்தது. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளத் தான் யாருமே இல்லை.

புது வீட்டிற்கு குடி போகலாம் என்றதுமே மோகன் ரகளை செய்ய ஆரம்பித்து விட்டான். தங்களுடன் சேர்ந்து இருக்கும் தம்பியின் குடும்பத்தையும் அழைத்துப் போக வேண்டும் என்பது அவனுடைய வாதம். அதற்கு ராதா சம்மதிக்கவில்லை. ஒரு முறை சம்மதம் சொன்னால் அது தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

''எப்பொழுதாவது நூறோ இருநூறோ வேண்டுமானால் கொடுத்து உதவி செய்வோம். அவர்கள் தனியாக இருப்பதே நல்லது'' என்றாள்.

''சம்பாதிக்கிறோம்னு திமிரு உனக்கு. அவர்களுக்கு வேண்டியது பணம் இல்லை, ஆதரவு. ஏதோ சின்ன வேலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச் சமயத்தில் தனியாக விட்டு விட்டுப் போனால் திண்டா டிப் போவான். 'உனக்கு நான் இருக்கிறேன்' என்று சொல்லி அழைத்து வந்தேன். இப்போ என் சௌகரியத்தைப் பார்த்துக் கொண்டு போய் விட்டால் நாலு பேர் என்ன நினைத்துக் கொள்வார்கள்?''

''உங்களுக்கு உங்க வீட்டாரைத் தவிர, என்னைப் பற்றியோ, நம் குழந்தைகளைப் பற்றியோ யோசனையே வராதா? அவர்களை அழைத்துக் கொண்டு வந்தீங்க, மறுக்கவில்லை. அவனுக்கு வேலை கிடைத்து விட்டது. இனி அவங்க பாட்டை அவங்க பார்த்துக் கொள்ளட்டும்.''

''எனக்கு அவ்வளவு சுயநலம் கிடையாது. வீடு பெரிசு தானே. அவர்களும் இருந்தால் உனக்கென்ன பிரச்சனை?''

''அதில் ஒரு போர்ஷனை வாடகைக்கு விடப் போகிறேன்.''





மோகன் கோபமாக பார்த்தான். ''அப்படி என்றால் என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டிய தேவையில்லைன்னு சொல்லு. உன் வீடு இல்லையா! போ – போய் தனி ஒருத்தியாகச் சந்தோஷமாக இருந்து கொள்'' என்று கத்திவிட்டு வெளியே போய் விட்டான். அவள் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

பள்ளிக்கூடத்திலிருந்து வரும் குழந்தைகளுக்கு உடைகளைக் கூட மாற்ற மாட்டாள் அவளுடைய ஓர்ப்படி. ஐநூறு ரூபாய் வீட்டில் கொடுப்பதுடன் தன் பொறுப்பு முடிந்து விட்டது என்று நினைத்துக் கொள்ளும் மைத்துனன். குழந்தைகளின் பொறுப்பு முழுவதும் அனுராதாவுடையது தான். ''வீட்டில் பழங்கள் ஒரு சீப்பு வாங்கி வா அக்கா! ஆப்பிள் கூட நன்றாக கிடைக்கிறதாமே. ஒரு டஜன் ஆப்பிளும் அப்படியே கிரீம் பிஸ்கெட்டும் வாங்கி வா'' என்று ஓர்ப்படி ஆணையிடுவாள்.

ஆபீசில் வேலை செய்து களைப்புடன் வீட்டிற்குத் திரும்பும் போது குழந்தைகள் பால் கூட குடித்திருக்க மாட்டார்கள். மைத்துனன், அவன் மனைவி இருவரும் வெளியே ஊர் சுற்றப் போய் விடுவார்கள். காலையில் கிளம்புவதற்கு முன்னால் எல்லாவற்றையும் செய்து வைத்து விட்டுப் போக வேண்டும். மாலையில் வந்த பிறகு இரவு சமையல், மற்ற வேலைகளையும் அவள் தான் செய்ய வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்காக ஏன் கஷ்டப்படவேண்டும்? அவள் சுயநலக்காரி தான். ஆனால் தன் உரிமைகள் சம்பந்தப்பட்டவரைக்கும் தான் அவள் சுயநலக்காரி!

அனுராதா வீட்டை முழுவதும் பார்வையிட்டாள். அந்த வீட்டில் இருந்த ஒவ்வொரு பொருளும் அவள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்திலிருந்து வாங்கியவை தான். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போனாலும் தட்டிக் கேட்கும் உரிமை யாருக்குமே இல்லை. ஆனால் முக்கியமான சாமான்களை மட்டுமே எடுத்துக் கொண்டாள்.

''புருஷன் சொல்லைக் கேட்காமல் எதிர்த்துப் பேசுவது எங்கள் குடும்பத்தில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. நானா அடி கொடுத்தாலும் வாயை மூடிக் கொண்டு குடும்பம் நடத்த வேண்டியது தான். பெரிய பெரிய இடங்களிலிருந்து எத்தனையோ பேர் பெண் கொடுப்பதற்கு வந்தாலும் வேண்டாம்னு உதறித் தள்ளிவிட்டு இவளை கட்டிக் கொண்டதற்கு நல்ல பாடம் தான் கற்பித்து விட்டாள்'' மாமியார் முணுமுணுத்தாள்.

''கஞ்சியோ கூழோ குடித்துக் கொண்டு கணவனோடு இருக்கணுமே தவிர தனியாகப் பிரிந்து போய் விருந்து சாப்பாடு சாப்பிட ஆசைப்படும் பெண்ணை இப்பொழுது தான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்'' காதில் விழும்படியாக ஓர்ப்படி சொல்லிக் கொண்டிருந்தாள்.

சாமான்களை டிரக்கில் ஏற்றிக் கொண்டிருக்கும்பொழுது மோகன் வந்தான். நடந்ததை எல்லாம் பார்த்து விட்டு எண்ணெயில் விழுந்த அப்பம் போல் குதித்தான்.

''போனால் போய்க் கொள். குழந்தைகளை மட்டும் உன்னோடு அனுப்ப மாட்டேன். எந்தக் கோர்ட்டுக்குப் போவாயோ அதையும் பார்த்து விடுகிறேன்'' மோகன் கத்தினான்.

ராதா ஒரு வினாடி கண்ணிமைக்காமல் அவனையே பார்த்தாள். எத்தனை யுகங்கள் கழிந்தாலும் ஆண்களுக்குரிய அகங்காரம் தணியவே தணியாதா? வீட்டில் இருக்கும் மற்ற இரண்டு பெண்களும் அந்த ஆணுக்கே சப்போர்ட் செய்தது எந்த தர்க்கத்தாலும் விளக்கம் சொல்ல முடியாத பிரத்யட்ச சத்தியம்.

குழந்தைகளைக் காட்டி அவளை அடக்கப் பார்க்கிறார்கள். இதை அவள் முன்பே எதிர்பார்த்தாள். மனதளவில் தயாராகவும் இருந்தாள்.



''போகட்டும். உங்கள் குழந்தைகளை நீங்களே கவனமாக வளர்த்துக் கொள்ளுங்கள். நான் போகிறேன்.'' நிதானமான குரலில் சொன்னாள்.

அந்தப் பதில் வெடிகுண்டாக வெடித்தது. பயங்கரமான நிசப்தம். அவர்கள் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. வாய் அடைத்துப் போனவர்களாக அப்படியே நின்று விட்டார்கள்.

புதுவீட்டில் அன்று இரவு அனுராதாவுக்கு அழுகை தான் துணை புரிந்தது. ஒரு வாரம் உறுதியுடன் தாக்குப் பிடித்தாள். ஒரு வாரம் போனதும் சின்ன மகளைக் கூட்டிக் கொண்டு வந்தான் மோகன்.

''உனக்குத் தான் எந்தக் கவலையும் இல்லை. நன்றாக இருக்கிறாய். இவளானால் உன்னையே நினைத்துக் கொண்டு ஏக்கத்தில் ஜுரத்தை வரவழைத்துக் கொண்டு விட்டாள்'' என்று விட்டு விட்டு போய்விட்டான். அடுத்த ஒரு வாரத்திற்குள் பெரிய மகளையும் அனுப்பி விட்டான்.

''நீ என்னவோ பெற்றுப் போட்டு விட்டாய். போஷிக்க வேண்டியது நாங்களா?'' என்றான்.

சூழ்நிலைக்கு ஏற்ப தனக்கு அனுகூலமாகப் புதிய வாதங்களை உருவாக்கிக் கொள்வது மனிதனுக்குப் புதிது இல்லையே. எது எப்படிப் போனால் என்ன? ராதா திருப்தியோடு பெருமூச்சு விட்டாள். மோகன் இப்பொழுது வந்தாலும் மன்னித்து விடத் தயாராக இருந்தாள் அவள்.

''அம்மா அப்பா ரொம்ப பேட். தினமும் என்னை அடிப்பார். சித்தி சரியாக சாப்பாடு கூடப் போட மாட்டாள். தான் எது கேட்டாலும் தர மாட்டாள். நாம்ப அங்கே போக வேண்டாம்'' என்றாள் மல்லிகா.

''அத்தை கூட என்னைத் தினமும் அடிப்பாள்'' ரோஜா சொன்னாள்.

''இனிமேல் எந்தப் பயமும் இல்லை கண்ணம்மா. உங்களுக்கு எது வேண்டும் என்றாலும் நான் வாங்கித் தருகிறேன்.'' அனுராதா குழந்தைகளை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

எதிர்பார்த்தாற் போலவே சில நாட்கள் கழித்து மோகன் வந்தான். ஏதேதோ பசப்பு வார்த்தைகளையும் சால்ஜாப்புக்களையும் சொன்னான். இங்கேயே இருந்து விடுவதாகவும் சொன்னான். இனி மேலாவது ஒழுங்காக இருந்தால் நன்றாக இருக்கும் என்று ராதா நினைத்துக் கொண்டாள். இரண்டு நாட்கள் சரியாகத் தான் இருந்தான். மூன்றாவது நாள் ராதாவுக்கு சம்பளம் வந்ததுமே முதலில் கெஞ்சி, பிறகு சண்டை போட்டு தனக்கு வேண்டிய பணத்தை வாங்கிக் கொண்டு போனான்.

நாளுக்கு நாள் அவன் குடிகாரனாகவும், சூதாடியாகவும் மாறிக் கொண்டிருந்த விஷயம் அவளுக்குப் புரியாமல் இல்லை. மனைவியின் நடத்தையால் வெறுத்துப் போய் அவன் அவ்வாறு மாறி விட்டான் என்று மாமியார் எல்லோரிடமும் பறை சாற்றி வந்தாள். வேடிக்கை என்னவென்றால் நிறைய பேர் அதை நம்பவும் செய்தார்கள். பணம் தேவைப்பட்ட போதெல்லாம் வருவதும், ரகளை செய்து அவளுக்கெதிரேயே குழந்தைகளை அடித்துச் சாதித்துப் பணத்தை வாங்கிக் கொண்டு போவதும் மோகனுக்கு வழக்கமாகி விட்டது

சுந்தா வந்து வீட்டை வாடகைக்குக் கேட்டபொழுது துணையாக இருக்கும் என்றும் நன்றாகத் தெரிந்த பெண் என்றும் எண்ணி ஒரு போர்ஷனை வாடகைக்குத் தந்து விட்டாள்.

அவள் வாழ்க்கையில் இது ஒரு திருப்பம். புத்தகங்கள் மீதுள்ள ஆர்வம் அந்த இருவரையும் ஒன்று சேர்த்தது. விஸ்வம் சுந்தாவைப் பார்க்க அந்தப் போர்ஷனுக்கு வருவான். அவனுக்கும் இலக்கியத்தில் ஆர்வம் இருந்தது. போகப் போக விஸ்வம் அந்த வீட்டுக்கு அடிக்கடி வரத் தொடங்கினான். மணிக் கணக்காக



உட்கார்ந்து கொண்டு இலக்கியத்தைப் பற்றியும், நாட்டின் நடப்பைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பார்கள். அடிக்கடி மோகன் வந்து பணத்திற்காக சண்டை போடுவது ராதாவை வருத்தப்படச் செய்தாலும் விஸ்வம், சுந்தாவின் நட்பினால் விரைவிலேயே தேறிக் கொண்டு விட்டாள்.

ஆனால் விஸ்வத்தின் மனம் தான் தற்சமயம் சரியாக இல்லை. வாழ்க்கையில் முதல் முறையாக காதல் என்றால் என்னவென்று புரியத் தொடங்கியது. கண்ணை மூடினாலும் திறந்தாலும் ராதாவின் உருவம் தான் தெரிந்தது. அவளை ஒரு நாள் பார்க்காமல் போனால் எதையோ இழந்து விட்டாற் போல் தோன்றியது. ஜெயாவுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவு போல் இல்லை இது. அவளைப் பார்க்க வேண்டும், கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும். அதைத் தவிர வேறெதுவும் தேவையில்லை என்று தோன்றியது. ஆனால் ராதாவிடம் அதைப் பற்றிச் சொல்லவும் பயம். அவளுடைய ஆதரவற்ற நிலைமையை பயன்படுத்திக் கொண்டு ஒரு வாய்ப்புக்காக முயற்சி செய்வதாக நினைத்துக் கொண்டு விடப் போகிறாளே என்று பயந்தான்.

அனுராதாவுக்கு விஸ்வத்திடம் பிடித்த விஷயங்கள் இரண்டு. எல்லோரையும் போல் அவன் அவளுடைய கணவன் மீது குற்றம் சொல்லிக் கொண்டு அவளை நெருங்க வேண்டுமென்று முயற்சிக்கவில்லை. மோகனை வழிக்குக் கொண்டு வர முடியுமா என்று தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

''எனக்கு மோகன் மீது கோபம் வரவில்லை. இரக்கம் தான் தோன்றுகிறது. உன்னைப் போன்ற மனைவியை அடைந்தும் அவனால் வாழ்க்கையில் சந்தோஷமாக இருக்க முடியவில்லை'' என்பான். அவனுக்குப் பெண்கள் மீது இருந்த மதிப்பு புரிந்த போது ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு. சாதாரணமாக அவளைப் போன்ற பெண்களை ஆண்கள் உயர்வாக நினைக்க மாட்டார்கள்.

அப்படியே நினைத்தாலும் அதை வெளியே சொல்லிக் கொள்ள இருக்க மாட்டார்கள்.

நம் பழக்க வழக்கங்களும், நாம் உயர்வாக சொல்லிக் கொள்ளும் கலாச்சாரமும் நம் பெண்களை கீழ் நிலைக்குத் தள்ளி விட்டன. மனைவி படித்தவளாக இருந்தால் தன்னை மிஞ்சி விடப் போகிறாளே என்ற சுயநலத்தில் அந்த வாய்ப்பே இல்லாமல் செய்து விட்டான் ஆண். கணவன் எவ்வளவு துன்புறுத்தினாலும் அதைத் தாங்கிக் கொண்டு அவனை வழிபடுகிற பெண் தான் மதிப்பிற்குரியவள் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதைத் தான் ராதா சுநீதாவிடம் சொன்னாள்.

''ஆனால் பெண்ணிற்கு ஆணை விட இன்னொரு பெண் தானே முதல் எதிரி'' -சுநீதா சொன்னாள்.

அதற்கு விஸ்வம் பதிலளித்தான். ''காலங்காலமாக அஞ்ஞானத்தில் மூழ்கி விட்டதால் வந்து சேர்ந்த அனர்த்தம் இது. தாம் ஒரு அடிமை என்றும், ஆண் எல்லா விதத்திலேயும் தன்னை விட உயர்ந்தவன் என்ற எண்ணம் அவள் இரத்தத்தோடு கலந்து விட்டது. வெளியே சொல்லிக் கொள்ளாவிட்டாலும் 'மகன் பிறந்தான்' என்றதுமே ஒரு பெண் சந்தோஷப்படுகிறாள். எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் மகனையும், மகளையும் வளர்க்கும் முறையில் வேற்றுமையைக் காட்டுகிறாள். அந்த விதமாக தாமே பெண் குழந்தைக்கு எதிரியாகிறாள். தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்த நிலைமை ஒரு நாளில் மாறி விடாது. இது யுகசந்தி. இப்பொழுது கொஞ்சம் மாறுபாடு வந்திருக்கிறது. விரைவிலேயே பெண் அடிமைத்தனமான எண்ணங்களை உதறிவிட்டு உண்மையான சுதந்திரத்தைச் சாதிப்பாள். இது மட்டும் நிச்சயம்.''

இது போன்ற உரையாடல்கள் தினந்தோறும் இடம் பெறும். தன் மனதில் இருக்கும் எண்ணங்களை அவன் வாயிலிருந்து கேட்கக் கேட்க ராதாவுக்கு சந்தோஷமாக இருந்தது.



சில மாதங்கள் கழிந்தன. மனதிலிருப்பதை மறைக்க முடியாமல் விஸ்வம் ஒரு நாள் சொல்லி விட்டான்.

ராதா வியப்படையவில்லை.

விஸ்வம் மேலும் சொன்னான். ''காதல் என்றால் யார் மீதோ எதற்கு என்றே தெரியாமல் நிகழும் ஒரு அப்ஸ்ட்ராக்ட் உணர்ச்சி இல்லை. இவள் நல்ல குணமுடையவள், என் மனதிற்கு பிடித்தவள். அதனால் இவளைக் காதலிக்கலாம் என்று யோசித்து பார்த்து விட்டுக் காதலிப்பது உண்மையான காதல். கணவன் மனைவிக்கு இடையில் காதல் இருந்தாலும் அது அந்த பந்தத்தால் ஏற்பட்டது தான். 'இவர் என்னுடைய கணவர். இவருக்கு நான் பணிவிடை செய்ய வேண்டும்.' என்ற நியமத்திற்கு கட்டுப்பட்டு மனைவி எல்லா வேலைகளையும் செய்வாள். 'எனக்காக இவள் இவ்வளவு கஷ்டப்படுகிறாளே' என்ற நன்றி உணர்ச்சியுடன் கணவன் அவளைக் காதலிக்கிறான். எனக்குத் தோன்றுகிறது, எங்களுக்கு இடையே உறவுமுறையே இல்லாமல், நாங்களிருவரும் முன்பின் அறியாதவர்களாக இருந்திருந்தால் என்னை என் மனைவியால் காதலிக்க முடியுமா என்று. ஒருக்கால் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியிருக்க மாட்டோம்.

''வாழ்க்கையில் முதல் முறையாக காதல் என்ற உணர்வை அனுபவிக்கிறேன் என்பதால் இந்த உண்மையை இப்பொழுது புரிந்து கொண்டேன். நீயும் என்னைக் காதலித்துத்தான் ஆக வேண்டும் என்று நினைக்கவில்லை. அந்த உணர்வு சுயமாக வர வேண்டுமே ஒழிய கட்டாயப் படுத்தி வரவழைக்க முடியாது. என்னை ஒரு நண்பனாக ஏற்றுக் கொள். அது போதும். உனக்கு என்ன தேவைப்பட்டாலும் கேட்கத் தயங்காதே. உனக்காக இல்லை. என்னுடைய திருப்திக்காக செய்கிறேன். ஆனால் நான் உன்னைக் காதலிப்பது மட்டும் உண்மை.''

அனுராதா பதில் சொல்லவில்லை. அவன் மீது மதிப்பு இருந்தது. ஆனால் அதைக் காதலாக ஏற்றுக் கொள்ள அவள்

மனம் சம்மதிக்கவில்லை. அவன் விசாலியின் கணவன் என்று தெரிந்ததால் தானா என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். விசாலியின் சுபாவம் தெரியும் என்பதால் வீட்டில் நிம்மதி இல்லை என்று அவன் சொன்ன போது, சந்தேகப்படவில்லை. ஆனால் இரக்கத்தைத் தவிர வேறு எந்த உணர்ச்சியும் அவன் மனதில் ஏற்படவில்லை. அந்த விஷயத்தை அவனிடம் வெளிப்படையாகச் சொல்லி விட்டான். ஆனால் அவன் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. அந்தப் பதிலை முன்பே எதிர்பார்த்தாற் போல் நடந்து கொண்டான். அதற்குப் பிறகு அவர்களுடைய நட்பு மேலும் வலுவடைந்தது.

★ ★ ★

**வ**ழக்கம் போல் மாலையில் அந்த வீட்டிற்கு வந்தான் விஸ்வம். சுநீதாவின் அறைக்கு வெளியே பூட்டு தென்பட்டது. ராதாவின் வீட்டுப் படியில் ஏறப் போனவன் நின்று விட்டான். உள்ளேயிருந்து ஏதோ வாக்குவாதம் கேட்டுக் கொண்டிருந்தது.

''நீ என் மனைவி. உன்னிடம் வராமல் வேறு என்ன செய்வது? ஆனாலும் உனக்கு அந்த தேவையில்லையா? அல்லது எவனாவது தீர்த்து வைக்கிறானா?'' தாக் குறைவாக ஒலித்தது ஆண்குரல்.

''நான் உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. போய் விடுங்கள் சுநீதாவும், குழந்தைகளும் வரும் வேளையாகி விட்டது.''

''வரட்டும், அவங்களுக்கு முன்னால் வெட்கப்படுவதற்கு நான் என்ன உனக்குக் கள்ளக் காதலனா? சட்டப்படி உன் மீது எனக்கு உரிமை இருக்கு.''

பலமாக இழுக்கும் சத்தம். விஸ்வம் என்ன செய்வதென்று புரியாமல் அப்படியே நின்று விட்டான். தான் தலையிடக் கூடிய விஷயம் இல்லை அது. ஆனால் அப்படியே விட்டு விட்டுப் போகவும் மனம் வரவில்லை. இதயத்தைக் கசக்கிப் பிழிவது

போன்ற வேதனை ஏற்பட்டது. மேலும் பொறுத்துக் கொள்ள முடியாமல் பெல்லை அடித்தான் அழுத்தமாக. கொஞ்ச நேரம் உள்ளே நிசப்தம்.

''போய் விடுங்கள். அவர்கள் வந்து விட்டார்கள் போலிருக்கிறது. குழந்தைகளுக்கு முன்னால் மிருகத்தனமாக நடந்து கொள்ளாதீங்க. இதோ நீங்கள் கேட்ட பணம்.''

''சரி போகிறேன். மறுபடியும் வரமாட்டேன்னு சந்தோஷப்பட்டுக் கொள்ளாதே. உனக்கு புத்தி புகட்டுவது எப்படின்னு எனக்கு நன்றாகவே தெரியும்'' என்று கதவைத் திறந்தவன் எதிரே தென்பட்ட விஸ்வத்தைப் பார்த்துவிட்டுச் சட்டென்று நின்று விட்டான்.

''நான் சுநீதாவின் அண்ணன். சுநீதா உள்ளே இருக்கிறாளா?'' விஸ்வம் கேட்டான் ஒன்றும் தெரியாதவன் போல்.

அவனை ஏற இறங்கப் பார்த்த மோகன் ஏதோ புரிந்தாற் போல் தலையை அசைத்து விட்டு அங்கிருந்து வேகமாய்ப் போய் விட்டான். விஸ்வம் உள்ளே நுழைந்தான். முழங்காலில் முகம் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள் ராதா.

''ராதா!'' அவன் குரலிலிருந்த அன்புக்கும், இரக்கத்திற்கும் சிக்கப்பட்டவளாய் நிமிர்ந்து பார்த்தாள். அடுத்த நிமிடம் அவன் கைகளில் சரிந்து விட்டாள்.

★ ★ ★

**ஆ**ராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரு கதையாகி விடும். சினிமாவிலும், நாவல்களிலும் மட்டுமே நிகழும் என்றெண்ணிக் கொண்டிருக்கும் விஷயங்கள் சில சமயம் வாழ்க்கையிலும் எதிர்படலாம்.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் சிநேகிதியாக இருந்த விசாலியின் கணவன் தன் வாழ்க்கையில் இந்த விதமாக

அடியெடுத்து வைப்பான் என்று அனுராதா கனவிலும் நினைக்க வில்லை. அது அவ்வாறு நிகழ்ந்து விட்டது. அவ்வளவு தான். சுபாஷ் விஷயத்தில் யோசித்த அளவுக்கு அத்தனை தீவிரமாக விஸ்வத்தின் விஷயத்தில் அவள் யோசிக்கவில்லை. உலகத்தை நினைத்து பயப்படவும் இல்லை. 'என்னுடைய சந்தோஷம், சுகம் இவற்றைப் பற்றி கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்காத இந்த சமுதாயத்திற்கு நான் எதற்காக பதில் சொல்லவேண்டும்? எதற்குப் பயப்பட வேண்டும்?' இது போன்ற புரட்சிகரமான தோரணைக்கு மாறியிருந்தாள். நிச்சயமாக விஸ்வத்தின் மீது அவளுக்கு இருந்தது காதல் இல்லை. சமுதாயத்தின் பால் வெறுப்பு அவ்வளவு தான்.

கணவன் வெளிநாட்டிலிருந்து சீக்கிரமாக திரும்பி வரவும் சுந்தா கிளம்பிப் போய் விட்டாள். விஸ்வம் முடிந்த போதெல்லாம் ராதாவைச் சந்தித்துக் கொண்டிருந்தான். எந்தத் தேவை வந்தாலும் கேட்காமலேயே உறுதுணையாக இருந்தான்.

அனுராதா விரும்பியதெல்லாம் ஒன்று தான். குறைந்த பட்சம் தன் குழந்தைகளாவது தன்னைப் புரிந்து கொண்டால் போதும். குழந்தைகளுக்கும் விஸ்வத்தின் வருகை மகிழ்ச்சியைத் தந்தது. இதெல்லாம் யாருக்குமே இடைஞ்சலாக இருக்கவில்லை. தேர்வு வரையில் விசாலிக்குக் கூட.

நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஏப்ரல் மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது.

# பார்கவி

## 1

"இதென்ன? இருபத்தி ஐந்து ரூபாய் குறைவாக இருக்கே?" தந்தையின் குரல் அதட்டுவது போல் ஒலித்தது.

"பிரின்ஸிபால் ரிடையராகி விட்டார். அவருக்கு ஃபேர்வெல் பார்ட்டி தருவதற்காக எல்லோரிடமும் வசூல் செய்தார்கள்."

"ஃபேர்வெல் பார்ட்டிக்கு இருபத்தி ஐந்து ரூபாயா? என்னைக் கேட்காமல் ஏன் தந்தாய்?"

"எல்லோரும் தரும் போது நான் மட்டும் தரவில்லை என்றால் நன்றாக இருக்காது. அதுவும் அவங்க முன்னாடியே கட் பண்ணி விட்டுத் தான் சம்பளத்தையே தந்தாங்க."

"அழகு தான். போன மாதம் வாங்கிய புடவைக்கு ஐம்பது ரூபாய் தவணைப் பணம் கட்ட வேண்டியது பாக்கியிருக்கு. இது போன்ற வெட்டிச் செலவுகளை எப்படியாவது தவிர்க்கணும்னு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? என் பேச்சை என்னிக்கு மதித்து இருக்கிறாய்? உன் காரியம் தான் உனக்கு?"

"அது இல்லைங்க. இப்பவே ஸ்கூலில் என்னை எல்லோரும் கருமின்னு கேலி செய்யறாங்க. இப்போ நமக்கு என்ன குறைச்சல்ன்னு எல்லோருக்கும் முன்னால் அவமானப்படணும்?"

"நாலு பேருக்காக நாம்ப யோசித்துக் கொண்டிருந்தால் நம்மைப் பற்றி கவலைப் படறவங்க யாரு? குழந்தைகளை முன்னுக்குக் கொண்டு வரணும். அது தான் நம்ப லட்சியம். இன்னொரு தடவை

இந்த மாதிரி காரியம் எதுவும் செய்யாதே. உள்ளே போய் காபி கொண்டு வா.''

''இதோ கொண்டு வருகிறேன். ஆனால் புடவைக்கு ஐம்பது ரூபாய்.......''

''இந்த முறை இருபத்தி ஐந்து ரூபாய் கட்டு. அடுத்த மாதம் பாக்கியைத் தரேன்னு சொல்லு. அப்பொழுது தான் உனக்கு புத்தி வரும்.'' அவர் அதட்டினார். அவள் சமையலறைக்குப் போய்விட்டாள்.

பன்னிரெண்டு வயது பார்கவிக்கு அது போன்ற உரையாடல்கள் புதிது அல்ல. அப்படித் தொடங்கும் உரையாடல் சில சமயம் தந்தை தாயை அடிக்கும் வரையிலும் கொண்டு போய் விடும். அப்படி நடக்காத நாள் அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

எல்லோர் வீட்டிலும் தாய் வீட்டிலேயே இருந்து சமையல் செய்வதையும், தந்தை வெளியே போய் பணம் சம்பாதித்துக் கொண்டு வருவதையும் பார்கவி கவனித்து வந்திருக்கிறாள். ஆனால் எல்லோருக்கும் வித்தியாசமாக தன் தாய் வேலைக்குப் போவது அவளுக்கு ரொம்ப பெருமையாக இருந்தது. ஆனால் வேலைக்குப் போகும் பெண்களின் கஷ்டத்தைப் பற்றி இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது. தந்தை ஆபீசிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வரும் நேரம் நெருங்க நெருங்க அவளுக்கு பயமாக இருக்கும்.

தாய் இந்துமதி சம்பளக் கவரை அப்படியே அணா பையுடன் தந்தையிடம் கொடுத்து விடுவாள். அந்தப் பணத்திலிருந்து ஐம்பது ரூபாயை அவளுடைய செலவுக்காக அவர் கொடுப்பார். அதற்குப் பிறகு ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்குக் கேட்டுக் கொண்டே இருப்பார். அவர் ஒரு புடவை வாங்கித் தந்தால் அவள் மகிழ்ந்து போய் விடுவாள். ஆனால் வாங்கித் தரமாட்டார்.



இனி வீட்டு வேலையை எடுத்துக் கொண்டால் வேலைக்காரியைக் கூட வைத்துக் கொள்ளக் கூடாது. காலையிலேயே எழுந்திருந்து எல்லா வேலைகளையும் செய்து கொள்ள வேண்டும். அவர் ஏழு மணிக்கு மேல் எழுந்து கொண்டு 'காபி' என்று கத்துவார். அதைக் கொண்டு வந்து தருவதற்குள் பத்து முறையாவது குரல் கொடுப்பார். காபியைக் குடித்த பிறகு பேப்பரை வைத்துக் கொண்டு ஒரு மணி நேரம் உட்கார்ந்து விடுவார். குளியலுக்கு தண்ணி விளாவி வைக்கவில்லை என்றோ, துணிகளை சரியாக இஸ்திரி செய்யவில்லை என்றோ முணுமுணுத்துக் கொண்டே இருப்பார். அவருக்கு டிபன் தந்து விட்டு மதிய உணவை கேரியரில் வைத்துத் தந்து விட்டு அதற்குப் பிறகு தான் அவள் தன்னுடைய வேலையைக் கவனிக்க வேண்டும். இத்தனைக்கும் அவளுக்கு ஸ்கூல் ஒன்பதரை மணிக்கு என்றால் அவருக்கு ஆபீஸ் பத்து மணிக்குத் தான்.

மாலையில் சீக்கிரமாகவே வந்து விடுவாள் என்பதால் கணவர் வருவதற்குள் உடைகளை மாற்றி காபி டிபனுடன் தயாராக இருக்க வேண்டும். எந்தக் காரணத்தினாலாவது கொஞ்சம் தாமதமாக வீடு திரும்ப நேர்ந்தால் அவருக்குக் கோபம் வந்து விடும்.

அனுராதாவின் வாழ்க்கையும், பார்கவி தாயின் வாழ்க்கையும் ஏறத்தாழ ஒன்று தான் என்றாலும் அனுராதாவிடம் இருந்த துணிச்சல் இந்துமதியிடம் இல்லை. சமுதாயத்தின் பார்வையில் அவள் ஒரு சிறந்த இல்லத்தரசி. பார்கவிக்கு மட்டும் தாயைப் பார்த்தால் இரக்கம், வெறுப்பு , கோபம் எல்லாம் வரும்.

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மூத்தவள் பார்கவி. அவளை விட ஒரு வருடம் சிறியவன் விநோத். அவர்களை வளர்க்கும் விஷயத்திலும் தந்தையின் பேச்சு தான் எடுபடும். ஆண் பிள்ளை என்பதாலும், சின்னவன் என்பதாலும் விநோத் தந்தையைப் போலவே அதிகாரத்தைக் காட்டிக் கொண்டிருப்பான். தந்தையின் செல்லம் வேறு.

பத்தாவது வகுப்பு பாஸாகும் வரையில் இந்தச் சூழ்நிலையில் தான் வளர்ந்தாள் பார்கவி. மகளை ஹாஸ்டலில் சேர்ப்பதில் இந்துமதிக்கு விருப்பமில்லை. கணவருக்கு மாற்றல் ஆகி விட்டதால் வேறு வழியில்லாமல் அவளும் மாற்றல் வாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அவருக்கு மனைவி எப்போதும் அருகிலேயே இருக்க வேண்டும். தான் முழுவதும் அவருடைய தேவைகளை உணர்ந்து பணிவிடை செய்ய வேண்டும். அதற்காக வீட்டிலேயே உட்கார்ந்திருக்கக் கூடாது. வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கவும் வேண்டும்.

''வயது வந்த பெண்ணை வெளி ஊரில் தனியாக எப்படி விட்டு வைப்பது?'' கணவரிடம் சொல்லிப் பார்த்தாள்.

''அப்படி என்றால் படிப்பை நிறுத்திவிடுவோம். வீட்டிலேயே இருக்கட்டும். ஆனால் அந்த ஊரில் கோ எஜுகேஷன் காலேஜில் மட்டும் சேர்க்க மாட்டேன்'' என்றார் பிடிவாதமாக.

பார்கவிக்குப் படிப்பில் இருக்கும் ஆர்வம் தெரிந்திருப்பதால் இந்துமதி அதற்கு மேல் பேசவில்லை. ஹாஸ்டலில் சேர்ந்த புதிதில் பார்கவிக்கு வருத்தமாக இருந்தாலும் விரைவிலேயே அந்தச் சூழ்நிலைக்குப் பழக்கப்பட்டு விட்டாள். வீட்டை விட ஹாஸ்டல் நன்றாக இருப்பது போல் தோன்றியது.

நல்ல சிநேகிதிகள் கிடைத்தார்கள். நன்றாகப் பொழுது கழிந்தது. ஆனால் விசாலிக்கும் அவளுக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகவில்லை. ஹாஸ்டலில் தங்கியிருப்பவர்கள் எல்லோருமே தறிக் கெட்டு அலைபவர்கள் என்பது விசாலியின் எண்ணம். அவளை அழ வைப்பதற்காக பார்கவி இல்லாத கதைகளை எல்லாம் கற்பனை செய்து சொல்லுவாள். தெருவில் போகும் ஆண்களை வலுவில் கூப்பிட்டுப் பேசுவோம் என்று அளப்பாள். விசாலி முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொள்வதைப் பார்த்து விட்டு விழுந்து விழுந்து சிரிப்பாள். இரண்டாண்டுகள் வேகமாக



கழிந்து விட்டன. பட்டப் படிப்பைக் கூட அங்கேயே படிக்க வேண்டும் என்று தான் விரும்பினாள். ஆனால் தந்தைக்கு மதுரைக்கு மாற்றலாகி விட்டதால் அங்கே போய் விட்டாள்.

வீட்டின் நிலைமையைப் பற்றி ஏற்கனவே அவளுக்கு ஒரு அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால் அதன் தீவிரத்தை முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடிய வயதும், அறிவும் இப்பொழுது தான் வந்தன. தாயின் நிலைமையில் இன்றும் எந்த மாற்றமும் இல்லை, ட்யூஷன் சொல்லித் தந்து இன்னும் கொஞ்சம் வருமானத்தை ஈட்டித் தந்ததைத் தவிர. தந்தையின் சம்பாத்தியத்திலும் குறைவு இல்லை. மேல் வரும்படியும் இருப்பதாக கேள்விப் பட்டாள். சம்பாதிப்பதில் தவறு இல்லை. ஆனால் அதை அனுபவிப்பதற்குத் தான் உரிமையில்லை. ஒரு ரூபாய் செலவழிக்க வேண்டுமென்றாலும் பல முறை யோசிப்பவர் அவர். ஆளுக்கு நாலு செட் உடைகள் தான். அப்படித் தான் இருக்க வேண்டு மென்பது அவருடைய கொள்கை. பிளஸ் டூ வரையிலும் எந்த மாதிரி உடையணிந்து கொண்டாலும் யாரும் அதிகமாக பொருட் படுத்தவில்லை. பட்டப் படிப்பில் சேர்ந்த பிறகு பார்கவிக்கு கஷ்டமாக இருந்தது. தம்பிக்கு இருந்த சுதந்திரம் அவளுக்கு இருக்கவில்லை.

அவள் சென்னையிலிருந்து திரும்பி வந்த அன்று வீட்டில் ?களை நடந்தது. மனைவியை சினிமாவுக்கு வரச் சொல்லி தொந்தரவு செய்து கொண்டிருந்தார் அவர்.

''மகள் இன்னிக்குத் தான் ஊரிலிருந்து வந்திருக்கிறாள். அவளை விட்டு விட்டு சினிமாவுக்குப் போனால் நன்றாக இருக்குமா? எல்லோருமாகச் சேர்ந்து போவோம்'' என்றாள் இந்துமதி.

''இது குடும்பத்தோடு சேர்ந்து பார்க்கக் கூடிய சினிமா இல்லை. அதோடு வயது வந்த பெண்களுடன் சேர்ந்து பார்க்கக் கூடிய படமும் இல்லை'' என்பது தந்தையின் வாதம்.

"அப்படிப்பட்ட சினிமாவுக்குப் போகா விட்டால் தான் என்ன? வீட்டில் வேலை கூட இன்னும் முடியவில்லை" என்று சொல்லி, தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள் இந்துமதி.

"அதுக்காக நான் சினிமா பார்ப்பதை விட்டு விடணுமா? எனக்கு அந்த சினிமாவைப் பார்த்தாகணும், இன்னிக்கே." அவர் வழக்கம் போல் கத்தினார். அவருடைய பிடிவாதம் தான் ஜெயித்தது. புறப்படும் முன் மகளிடம் சொல்லிக் கொள்ளவும் இந்துமதிக்கு சங்கடமாக இருந்தது. தந்தை தான் சொன்னார்.

"பார்கவி! சினிமாவுக்குப் போகிறோம். இரவு சமையலை செய்து விடு. தம்பிக்கு உருளைக் கிழங்கு பிடிக்கும். உருளைக் கிழங்கு கறியும் ரசமும் வைத்து விடு போதும்."

தந்தை சொன்னதைக் கேட்டு வியந்து போனாள். அவளுக்குச் சமைக்கவே தெரியாது.

"அவளுக்கென்ன தெரியும்? நான் வந்து செய்கிறேன்" என்றாள் இந்துமதி.

"தெரியாவிட்டால் தெரிந்து கொள்ளணும். பெண் பிள்ளை இல்லையா. இவ்வளவு வயதாகியும் சமையல் தெரியாதுன்னு சும்மாயிருக்க முடியுமா? எப்படியாவது செய்து வை" -தந்தை உத்தரவு போட்டு விட்டுப் போய்விட்டார். பின்னாடியே ஆட்டுக் குட்டியைப் போல் அவளுடைய தாய்.

ஆண் பெண் என்ற பாகுபாடு பெற்ற தாய் தந்தையரிட மிருந்தே தொடங்குகிறது. பெண் இனத்தின் மீது மதிப்பு இல்லாத ஆண் மகனை மணந்து கொள்ளும் ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையும் தன் தாயின் வாழ்க்கையைப் போலவே தான் இருக்கும் போலும்.

பார்கவி சாதம் வடித்தாள். அது குழைந்து போய் விட்டது. உருளைக் கிழங்கு சரியாக வேகாததால் மேல் தோலை உரிக்க வரவே இல்லை. அப்படியே துண்டங்கள் செய்து வதக்கத்



தொடங்கினாள். உப்பு காரம் எவ்வளவு போட வேண்டும் என்று தெரியவில்லை. உப்பு குறைவாகவும் காரம் அதிகமாகவும் இருந்தது. பருப்பிலேயே உப்பும், சாம்பார் தூளும் போட்டு கொதிக்க வைத்தாள். அது எவ்வளவு நேரம் ஆகியும் வேகாததால் இறக்கி அப்படியே வைத்து விட்டாள்.

சூடாக இருந்த சாதத்தில் ஊறுகாயைப் போட்டுப் பிசைந்து சாப்பிட்டு விட்டாள். ஹாஸ்டல் சாப்பாட்டை ருசி பார்த்த பிறகு எதுவாக இருந்தாலும் நன்றாகவே இருப்பது போல் தோன்றும். தம்பி அப்பொழுதுதான் கடைத் தெருவில் சுற்றி விட்டு திரும்பி வந்தான்.

"அம்மா.........அம்மா" வீட்டில் நுழையும் போதே கத்தினான். பார்கவி பதில் சொல்லவில்லை.

"அம்மா எங்கே? இவ்வளவு கத்தியும் காது கேட்க வில்லையா?" புத்தகம் படித்துக் கொண்டிருந்த பார்கவியிடம் வந்து கேட்டான்.

"அம்மா வீட்டில் இல்லை. சினிமாவுக்குப் போயிருக்காங்க" சுருக்கமாக பதிலளித்தாள்.

"வந்து சீக்கிரமாக சாப்பாடு போடு. பசிக்கிறது." பாத்ரூமுக்குள் நுழைந்து கொண்டே உத்தரவு பிறப்பித்தான்.

பார்கவிக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை.

"என்ன ? எருமை மாடு மாதிரி உட்கார்ந்திருக்கிறாய்? சாதம் போடுன்னு சொன்னேனே?" முகம் துடைத்துக் கொண்டே வந்தான் விநோத்.

"நான் படித்துக் கொண்டிருக்கிறேன். கண் தெரியவில்லையா? போய் எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடு. எல்லாம் மேஜை மீது தான் இருக்கு." எரிச்சலுடன் பதிலளித்தாள்.

''பெரிதாகப் படித்துக் கிழித்தாய். I.A.S. படிப்பு'' கேலியாக பழித்தான்.

''துப்பறியும் நாவல் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே. பசித்தால் எடுத்துப் போட்டுண்டு சாப்பிடு'' நிதானமான குரலில் பதிலளித்தாள்.

''அப்பா வரட்டும். உன்னை என்ன செய்கிறேன் பார்'' கோபமாகப் போய் விட்டான். தட்டுகளும், பாத்திரங்களும் மேலும் கீழும் உருளும் சத்தம். இரண்டு நிமிடங்கள் கழித்து ''யார் சமைத்தது?'' என்று கத்தினான்.

''நான் தான் சமைத்தேன். நன்றாக இல்லையா?''

''உன் மூஞ்சியைப் போல் இருக்கு.''

''எனக்குத் தெரிந்தாற் போல் சமைத்தேன். பிடிக்கவில்லை என்றால் நீயே சமைத்துக் கொள்.''

''நல்ல வேளை. பற்றுப் பாத்திரங்களைக் கூட தேய்என்று சொல்லாமல் விட்டாயே?''

''இதில் தவறென்ன இருக்கு? ஹாஸ்டலில் தேவைப்பட்ட போது உன் தட்டை நீ தேய்க்கவில்லையா?''

''உனக்கு ரொம்பத் திமிர் ஏறிடுத்து'' என்று கையை ஓங்கிக் கொண்டே அடிக்க வந்தான்.

ஓங்கிய அவன் கையை அப்படியே அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள் பார்கவி. ''என் மேல் கையை வைத்தால் தெரியும் சேதி. அடுத்த நிமிடமே என் கையால் அறை வாங்குவாய்.''

விநோத் கையை விடுவித்துக் கொண்டு வேகமாக உள்ளே போய் விட்டான்.

எதைப் பற்றியும் யோசிக்காமல் பெற்றோர் நடந்து கொள்ளும் முறை குழந்தைகள் மீது எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துமோ



பார்கவிக்குப் புரியத் தொடங்கியது. அக்கா என்ற அன்பு இல்லை. அம்மா என்ற கௌரவம் இல்லை. தந்தையின் செல்லம் அவனை ஒரு மிருகமாக மாற்றிக் கொண்டிருந்தது. எதிர்காலத்தில் எத்தனை பெண்கள் அவனால் இம்சிக்கப் படுவார்களோ?''

பெற்றோர் சினிமாவிலிருந்து திரும்பி வந்ததுமே விநோத் ஓடிப் போய் நடந்ததை மலையளவுக்கு உருவகப்படுத்திச் சொல்லுவது பார்கவியின் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் அவள் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. ஹாஸ்டல் வாழ்க்கை அவளுக்குத் துணிச்சலை கற்றுக் கொடுத்தது.

யாரோ பின்னாலிருந்து தலைமுடியைப் பிடித்துப் தூக்கியதும் வலியால் வீலென்று கத்தி விட்டாள்.

''எவ்வளவு திமிரு உனக்கு? ஆண் பிள்ளையை கையை நீட்டி அடித்தாயா? எங்கே என்னை அடி பார்ப்போம். குடலை உருவி விடுவேன் ஜாக்கிரதை! பெண் பிள்ளை அடக்க ஒடுக்கமாய் இருக்கணும்'' என்று கத்திக் கொண்டே வேகமாக அவளைக் கீழே தள்ளிவிட்டார் அவள் தந்தை.

''நான் அவனை அடிக்கவில்லை. அவன் பொய் சொல்கிறான். இருந்தாலும் நான் என்ன தவறு செய்து விட்டேன்? சமைக்கத் தெரியாத போதும் எனக்குத் தெரிந்த வரையில் சமைத்து வைத்தேன். எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட முடியாதா?'' பார்கவி சொன்னாள் தடுமாறாமல். கோபம் வலியை அடக்கி விட்டது.

''ஏன்? பரிமாறினால் தேய்ந்து போய் விடுவாயா? கண்ட கண்ட குப்பை நாவல்களைப் படிக்கிறாய். அதோடு எதிர்த்து வேறு பேசுகிறாயா?'' என்று அவள் கன்னம் அதிரும்படி அடித்தார்.

பார்கவி நிமிர்ந்து தந்தையை கண்ணிமைக்காமல் பார்த்தாள். பிறகு மெதுவாக தம்பியிடம் வந்தாள். அவன் இதழ்களில் பெருமை கலந்த முறுவல் படர்ந்திருந்தது. ஒரு வினாடி நின்றாள். பிறகு

அவள் கை மின்னலை விட வேகமாகச் செயல்பட்டு அவன் கன்னங்களில் மாறி மாறி அடித்தது. அடுத்த வினாடியே அவன் கன்னங்கள் அப்பமாக வீங்கி விட்டன.

அந்த அறையில் மனிதர்களும், காற்றும் கூட ஸ்தம்பித்துப் போய் விட்டது போல் சில வினாடிகள் நிசப்தம் நிலவியது. பார்கவியின் தந்தை கூட கொஞ்ச நேரம் எதிர்பாராத அந்த சம்பவத்தால் தத்தளித்துப் போய் விட்டார்.

பார்கவி கோபத்தால் தம்பியை அடித்த அடிகள் இல்லை அவை. தான் உயர்ந்தவன் என்றும், அந்த வீட்டுக்கு மகுடம் சூட்டாத மகாராஜா என்றும் நினைக்கும் ஒரு தந்தையின் புருஷ அகங்காரத்திற்கு மறைமுகமாக கொடுக்கப்பட்ட சாட்டை அடிகள் அவை.

தந்தை ராஜாவாக இருப்பதால், தான் ஒரு இளவரசன் என்றும், வயதில் பெரியவள் என்றாலும் 'பெண்' என்பதால் அடக்க ஒடுக்கமாக விழுந்து கிடக்க வேண்டும் என்றும் நினைக்கும் தம்பியின் கர்வத்தை கோடாலியால் பிளந்த அடிகள் அவை.

பெண் என்பவள் அடங்கியிருக்க வேண்டும் என்றும், ஆணின் கீழே தான் பெண்ணிற்குப் பாதுகாப்பு என்றும், தன்னைப் போலவே மகளும் இப்பொழுதிலிருந்தே பழக்கப் படுத்திக் கொண்டால் எதிர்காலத்தில் சுகமாக இருப்பாள் என்றும் இரத்தத்தோடு ஜீரணித்துக் கொண்டிருந்த தாயின் நம்பிக்கையின் மேல் விழுந்த அடிகள் அவை.

முதலில் தேறிக் கொண்டது தந்தை தான். வேறு ஒன்றும் செய்ய முடியாமல் 'இதில் உன் பங்கு எவ்வளவு தூரம் இருக்கு?' என்பது போல் மனைவியைக் கோபமாகப் பார்த்து விட்டு உள்ளே போய் விட்டார்.

அவமானத்தால், அழுகையை வெளியே காட்டிக் கொண்டால் எங்கே இளப்பமாகி விடுவோமோ என்று நினைத்துக் கொண்டு



விநோத் ஹாலுக்குப் போய் விட்டான். அறையில் தாயும், மகளும் மட்டுமே இருந்தார்கள்.

பார்கவி நிமிர்ந்து பார்த்தாள். தாயின் முகத்தில் வேதனை! பயம்! ''அவசரப்பட்டு விட்டாய் பார்கவி! அப்பாவுக்கு முன்னால் இப்படி நடந்து கொள்வது சரியில்லை. சின்ன சின்ன வேலைகளை செய்வதில் தவறு இல்லை. இப்பொழுதிலிருந்து பழக்கப் படுத்திக் கொள்ளவில்லை என்றால் எதிர் காலத்தில் ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருக்கும். உங்க அப்பாவின் எண்ணமும் அது தான்'' என்று கொஞ்சம் மென்மையாகவும், கொஞ்சம் எச்சரிப்பது போலவும் சொன்னாள்.

''அப்பாவின் எண்ணம் என்னவென்று எனக்கு நன்றாகவே தெரியும். பெண்ணாகப் பிறந்தது என் தவறு இல்லை. அப்படிப் பிறந்ததற்காக நான் வெட்கப்படவும் இல்லை. ஆனால் தம்பி சொன்னதை மட்டுமே கேட்டுக் கொண்டு உண்மை என்னவென்று கூடத் தெரிந்து கொள்ளாமல் வயதுக்கு வந்த பெண்ணை கையை நீட்டி அடித்த அந்தத் தந்தைக்கு மகளாகப் பிறந்ததற்கு இப்பொழுது உண்மையிலேயே வெட்கப்படுகிறேன்.''

இந்துமதி பயந்து கொண்டே மகளைப் பார்த்தாள். ''சும்மா இரு பார்கவி! அப்பாவின் காதில் விழுந்தால் மறுபடியும் ரகளை'' என்றாள்.

''எதுக்கு அம்மா நாமெல்லாம் அவ்வளவு பயந்து கொண்டே ஹீனமாக வாழணும்? நாம் இப்படி பயப்படுவதால் தான் அவர்களின் அகம்பாவம் எல்லை மீறிப் போகிறது. கஷ்டப் பட்டு சம்பாதித்து எல்லா விதத்திலேயும் பாதி பொறுப்பை பகிர்ந்து கொள்ளும் உன் மீதாவது மதிப்பு இருக்கா அப்பாவுக்கு?''

''வேறு வழியில்லை பார்கவி! ஆணின் நிழலில் வாழ்வதில் தான் ஒரு பெண்ணிற்கு சந்தோஷமும், பாதுகாப்பும் இருக்கு. சம்பாதிக்கிறேன் என்று எல்லோரையும் எதிர்த்துக் கொண்டு

தனியாக இந்த சமுதாயத்தில் ஒரு பெண்ணால் வாழ முடியுமா? உங்க அப்பா நமக்கு எந்த குறையும் வைக்கவில்லையே. அவர் என்ன செய்தாலும் முன் யோசனையுடன் தான் செய்வார். எதிர் காலத்தில் நாம் சுகமாக இருக்கணும் என்பது தான் அவருடைய தவிப்பெல்லாம்.''

பார்கவி சிரித்தாள். ''இப்போ எந்த அளவுக்கு சுகமாக இருக்கிறோம் என்று எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காண்பது? முதலில் உன் எண்ணத்திலேயே பலம் இல்லை அம்மா.''

''உனக்கு அப்படித் தோன்றலாமோ என்னவோ. ஆனால் எனக்கு மட்டும் உங்க அப்பா செய்கிற எல்லா காரியத்திலும் நமக்காகத் தவிப்பது தென்படுகிறது. வீணாக வாதம் புரிந்து வீட்டை நரகமாக்காதே.''

''இப்போ இந்த வீடு உனக்கு சுவர்க்கமாகத் தென்படுகிறதுன்னு சொல்லு.''

''ஆமாம். இது என் வீடு. நீங்கள் எல்லோரும் என் மனிதர்கள். உங்க எல்லோருக்கும் நடுவில் தான் எனக்கு சுவர்க்கம். ஒவ்வொரு மனிதனிடமும் சில பலவீனங்கள் இருக்கும். சமாதானமாக போகாவிட்டால் வீடு நரகமாகி விடும். உன்னை இப்பொழுதே எச்சரிக்கிறேன். இன்னொரு வீட்டுக்கு போக வேண்டியவள். எந்த வீட்டிலும் இது போன்ற சூழ்நிலை தான் இருக்கும். அந்த விஷயத்தை மறந்து விடாதே'' இந்துமதி கோபமாக அறையை விட்டு வெளியேறினாள்.

தந்தை அடித்த அடி வேதனையை ஏற்படுத்தவில்லை. ஆனால் தாயிடம் தென்பட்ட இந்த சுயகௌரவமற்ற தன்மையைப் பார்க்கும் போது கன்னத்தில் அறை விழுந்தாற் போல் இருந்தது.

முந்தைய தலைமுறையில் பெண்ணாகப் பிறந்தவள் பொருளாதாரச் சுதந்திரமோ, படிப்போ இல்லாமல் அடிமையாக வாழ்ந்து வந்தாள். அது தன் தலையெழுத்து என்று மனதைச் சமா



தானப்படுத்திக் கொண்டாள். இந்த இரண்டும் இருக்கும் இந்த காலத்துப் பெண்ணோ அந்த அடிமைத்தனத்தில் உழன்று கொண்டு இருக்கிறாள். இன்னும் எத்தனை தலைமுறைக்குப் பிறகு இந்த நாட்டுப் பெண்களின் நிலையில் மாற்றம் ஏற்படுமோ காலம் தான் முடிவு செய்ய வேண்டும்.

அந்த நிமிடம் தான் பார்கவி தனக்கு வரப்போகும் கணவனைப் பற்றி முதல் முறையாக யோசித்தாள்.

அழகான சூழ்நிலை மனதை எப்படி மகிழ்விக்கச் செய்யுமோ, அதே போல் வீட்டில் நெருங்கியவர்களின் அன்பு ஆதரவு, சின்னச் சின்ன விளையாட்டுச் சண்டைகள் வாழ்க்கையை இனிமையாக மாற்றும். தம்பியும் அவளும் ஹாஸ்டலில் தங்கிப் படித்து வந்தார்கள். லீவு வந்து விட்டால் போதும் வீட்டிற்குப் போய் தம் மனிதர்களுடன் சந்தோஷமாகக் கழிக்கத் தோன்றும். வீட்டுக்குப் போனதுமே தாயும் தந்தையும் அன்புடன் வரவேற்பார்கள். அன்று பண்டிகையைப் போல் கொண்டாடுவார்கள். ஒவ்வொரு நாளும் விதவிதமாக பட்சணங்களை செய்து தருவதில் தாய் முனைந்திருப்பாள்.

கண்மூடி திறப்பதற்குள் விடுமுறை முடிந்து விடும். மறுபடியும் ஹாஸ்டலுக்கு அனுப்பி வைக்கும் போது கண்ணீருடனும், கவலையுடனும் விடை கொடுப்பார்கள். இனிப்புகளை, பட்சண வகைகளை, ஊறுகாய் பாட்டில்களை வேண்டாம் என்றாலும் கொடுத்தனுப்புவார்கள். வேளா வேளைக்குச் சாப்பிடச் சொல்லி திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள். கடிதங்கள் எழுதுவார்கள். பதில் கடிதம் வரா விட்டால் கவலைப்படுவார்கள். தொலைவில் இருந்த போதிலும் ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் உங்களுக்குத் துணையாக இருக்கிறோம் என்ற நினைப்பு இருக்கும் விதமாக நடந்து கொள்வார்கள். ஹாஸ்டலில் இருக்கும் தம்பிக்கு அவள் கடிதம் எழுதுவாள்.

அருமை தம்பிக்கு,

நான் ஹாஸ்டலுக்கு நலமாக வந்து சேர்ந்தேன். உடனே சிநேகிதிகள் கூட்டமாக வந்து என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். அம்மா கொடுத்தனுப்பிய இனிப்பையும், பட்சணங்களையும் ஒரு கை பார்க்கத் துடித்தார்கள். கடைசியில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தேன்.

தெருவில் போகும் ஆண்களை விசிலடித்துக் கூப்பிட்டதாக எங்க விசாலியிடம் சும்மா சொன்னேன். அவள் முகம் கறுத்து விட்டது. அவளுக்கு இதெல்லாம் பிடிக்காது. அவளை அழவைத்து வேடிக்கை பார்ப்பது என்னுடைய பொழுது போக்கு. ஹாஸ்டலில் இருந்தால் இது போல் குறும்புகள் எதையாவது செய்யலாம் இல்லையா? உனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி கடிதம் போடு – என்று தம்பிக்கு ஜாலியாக கடிதம் எழுதுவாள்.

இதெல்லாம் அவளுடைய கற்பனை தான். உண்மையில் அவள் ஹாஸ்டலுக்குப் புறப்படும் போது இனிப்புகள் இருக்கட்டும், அப்பளக் கட்டுக் கூட கொடுத்தனுப்பமாட்டாள் அவளுடைய தாய். "எதுக்கு? அங்கே பத்து பேர் சேர்ந்து ஒரே நாளில் தின்று தீர்த்து விடுவார்கள்" என்பார் தந்தை. ஃபீசைத் தவிர மேல் செலவு எதுவும் இருக்காது என்பது போல் பத்தோ இருபதோ கையில் தருவார். தம்பி என்றுமே அவளை ஒரு பொருட்டாக மதித்ததே இல்லை.

இந்த மன வருத்தங்களை எல்லாம் ஒரு மூலையில் ஒதுக்கி விட்டு சினேகிதிகளின் வேடிக்கைப் பேச்சிலும் சிரிப்பிலும் காலம் போனதே தெரியவில்லை. அதே போல் இன்னும் மூன்று ஆண்டுகள் ஓடிவிடும் என்று நினைத்திருந்த போது பெற்றோருக்கு மதுரைக்கு மாற்றலானதும் அங்கே இருந்த கல்லூரியில் சேர்ப்பதற்கு அவளை வரவழைத்ததும் நடந்து முடிந்து விட்டன.

தம்பியை அடித்த அந்தச் சம்பவத்திற்குப் பிறகு பார்கவியிடமே நிறைய மாறுதல்கள் வந்தன. மனதில் இனம் புரியாத



வேதனை. அனாலிஸிஸ் என்ற வேதனை வெளிச்சத்தைக் கூட இருளால் நிரப்பிவிடும். அந்த இருட்டுக்கு நிசப்தம் துணையாகி விடும். விரக்தி மனிதனை தனியனாக்கி விடும். தகுந்த வைத்தியம் செய்யாவிட்டால் தனிமை கேன்சரைப் போல் பரவி விடும். எல்லாவற்றையும் விட பயங்கரமான நோய் தனிமை.

ஆனால் பார்கவி அந்த நோயை அவ்வளவு தூரத்திற்கு வளர விடாமல் அரும்பாடுபட்டு வென்று விட்டாள். ஆனால் நோய்க்கு வைத்தியம் பண்ணும்போது சில சமயம் பக்கவிளைவுகள் ஏற்படுவதைப் போல் தனிமையை வெல்லும் முயற்சியில் அவளிடம் பிடிவாத குணம் ஒட்டிக் கொண்டு விட்டது. வீட்டில் வாயைத் திறக்காமலேயே காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் கலை அவளுக்கு வந்து விட்டது. 'எதிர்க்க முடியாத பலமான வாதம் மௌனம்' என்றார் ஒரு எழுத்தாளர். அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை.

பெண்ணின் வாழ்க்கையை இரண்டு கட்டங்களாக பிரிக்கலாம். திருமணமாகும் வரையில் முதலாவது, திருமணமானதிலிருந்து இரண்டாவது. இரண்டாவதில் புதிய சூழ்நிலை... புதிய மனிதர்கள். முதலாவதில் பழக்கப்பட்ட விதத்திலேயே இரண்டாவது கட்டத்தில் ஒன்றிப் போவது கொஞ்சம் கஷ்டம்தான். அந்தச் சமயத்தில் தான் கணவரின் நட்பையும், நெருக்கத்தையும் பெண் விரும்புகிறாள். அப்படிப்பட்ட நட்பு கணவனிடமிருந்து கிடைத்து விட்டால் அந்தப் பெண் அதிர்ஷ்டசாலி. கிடைக்காத பெண் மனநோயாளியாகவோ, பொல்லாதவளாகவோ மாறிவிடுகிறாள். பார்கவியின் வாழ்க்கை எப்படி மாறுமோ காலம் தான் முடிவு செய்ய வேண்டும்.

## 2

மூன்று ஆண்டுகள் கழிந்தன. பட்டம் கைக்கு வந்து விட்டது. கிளாஸ் டூவில் குறைவான மதிப்பெண்கள் பெற்று எப்படியோ

பாஸ் செய்த தம்பிக்கு ஐம்பதாயிரம் டொனேஷன் கட்டி இன்ஜினியரிங்கில் சீட்டு வாங்கித் தந்தார் அவள் தந்தை.

மேலும் படிக்க விரும்புவதாக பார்கவி சொன்ன போது மறுத்து விட்டார். நிறைய படித்தால் அதை விட அதிகமாக படித்த வரனைத் தேட வேண்டும். அதாவது அதிக வரதட்சணை கொடுக்க வேண்டும். அதனால் அவள் படிப்பை நிறுத்தி விட்டு ஏதாவது வேலைக்குப் போனால் நல்லது என்பது அவருடைய எண்ணம்.

பார்கவிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. படிப்பை விட்டு விடச் சொன்னது கூட அவளுக்கு அவ்வளவு வருத்தமாக இல்லை. ஒவ்வொரு ரூபாயாக எண்ணி எண்ணி செலவழித்து, இரண்டு செட் உடைகளுடன் கல்லூரிக்குப் போவதை விட படிப்பை விட்டு விடுவதே மேல் என்று தோன்றியது. ஆனால் அவள் வேலைக்குப் போய் சம்பாதிப்பது எதற்காக? அவளுடைய பொருளாதார சுதந்திரத்திற்காக இல்லை. பணத்தைச் சேர்த்து வைத்து வரப் போகும் கணவனுக்கு வரதட்சணையாக தர வேண்டும். வேலைக்குப் போகும் பெண் என்றால் வரதட்சணை குறையக் கூடும். வேலைக்குப் போக வேண்டும் என்று உள் மனதில் ஆசையிருந்தாலும் தந்தையின் மேலிருந்த கோபத்தினால் பார்கவி சம்மதிக்கவில்லை. எந்த வேலைக்குமே மனுப் போடவில்லை. தந்தை வலுக்கட்டாயமாக மனுப் போடச் செய்தால் நேர்முகத் தேர்வில் வேண்டுமென்றே தவறான பதில்களைச் சொல்லுவாள்.

பகல் முழுவதும் நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகங்களைப் படித்துக் கொண்டும், மாலை நேரத்தில் தந்தை வீட்டிலிருந்தால் பக்கத்து வீட்டில் பேசிக் கொண்டும் கழித்தாள். சில நாட்களில் அதுவும் போரடித்து விட்டது. வித விதமாக பொம்மைகளைச் செய்யவும், தையல் வேலையும் கற்றுக் கொண்டாள். அவளுடைய ஆர்வத்தைப் பார்த்து விட்டு தாய் தான் ரகசியமாக வைத்திருந்த பணத்திலிருந்து மகளுக்கு எடுத்துத் தருவாள். பார்கவியின் பற்றற்ற தன்மை அவளை பயமுறுத்தியது. கணவனுக்காக மகளை இழந்து கொண்டிருக்கிறோமோ என்ற குற்ற உணர்வும் ஏற்பட்டது.

மணமகன் வேட்டையில் இன்னொரு ஆண்டு கழிந்து விட்டது. அவளுக்கு வேலை இல்லை என்றும் வரதட்சணை போறாது என்றும் மறுத்தவர்கள் தான் அதிகம். அதைக் கேட்டதும் தந்தை கோபத்தால் தாம் தூம் என்று குதிப்பதும், அதைப் பார்த்து பார்கவியின் பிடிவாதம் மேலும் அதிகரிப்பதும் தான் நிகழ்ந்தன.

அந்தச் சமயத்தில் தான் ஸ்ரீராம் என்ற வரன் வந்தது. பி.காம். பாஸாகியிருந்தான். வங்கியில் ஆபீசர் வேலை. கஷ்டப் பட்டு முன்னுக்கு வந்தவன். தாய் இல்லை, தந்தையும் அக்கா மற்றும் தங்கையும் இருந்தார்கள். சமீபத்தில் தான் அக்காவின் திருமணத்தை நடத்தி வைத்தான். தங்கையின் திருமணமும் ஏறக் குறைய முடிவாகி விட்டாற் போல்தான்.

சம்பிரதாயப்படி பெண் பார்க்கும் நிகழ்ச்சி நடந்தது. அவன் ரொம்ப அழகானவன் இல்லை. ஆனால் பார்கவி தனக்கு வரப் போகும் கணவனின் அழகைப் பற்றிப் பெரிதாக எதிர்பார்ப்புகள் வைத்துக் கொள்ளவில்லை. அவளுக்கு வேண்டியது சுதந்திரம். முதலில் அந்த வீட்டிலிருந்து வெளியேற வேண்டும். வெளி உலகில் யாருமே தந்தையைப் போல் அவ்வளவு துஷ்டர்களாக இருக்க மாட்டார்கள். இவ்வளவு வருடங்களாக தந்தையிடம் வளர்ந்த பிறகு எப்படிப்பட்ட ஆணாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு போக முடியம் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது.

''என்ன தம்பி? பெண்ணைப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்ட தரகரிடம் ''நல்லா கேட்டீங்க. நான் மட்டும் ரொம்ப அழகா என்ன? அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு கேட்டுத் தெரிஞ்சுக்குங்க'' என்றான் அவன்.

அவனுடைய தோற்றம் எப்படி இருந்தாலும் அவன் சொன்ன இந்த வார்த்தைகள் பார்கவிக்கு மிகவும் பிடித்து விட்டன.

''இன்னொரு விஷயம். வரதட்சணை கொடுக்கக் கூடாதுன்னு கொள்கை ஏதாவது உங்களுக்கு இருக்கா? ஏன் என்றால் சமீபத்தில் தான் அக்காவின் திருமணத்தை முடித்து நிறைய கடன் பட்டிருக்கிறேன். தங்கையின் திருமணத்திற்கு வரதட்சணை கொடுக்க வேண்டும். அதாவது நான் வரதட்சணை பெற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.'' வெளிப்படையாகச் சொன்னான்.

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. எங்க அப்பா தருவாரோ மாட்டாரோ அதை முதலில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' மனதில் நினைத்துக் கொண்டாள் பார்கவி. வெளியில் மட்டும் இல்லை என்பது போல் தலையை அசைத்தாள்.

''குட். அப்படி என்றால் உங்க அப்பாவிடம் பேசுகிறேன். உங்களுக்கு ஏதாவது கேட்க வேண்டியிருந்தால் கேளுங்கள். பதில் சொல்கிறேன்'' என்றான்.

''எதுவும் இல்லை'' என்றாள் பார்கவி.

★ ★ ★

சுபாவத்தில் ஸ்ரீராம் ரொம்ப சாது. திருமணத்தின் போது எந்தப் பிரச்சனையும் கிளப்பவில்லை. முதல் இரவில் ஸ்ரீராம் சொன்னதை வைத்து அவனைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டாள் பார்கவி.

''பார்கவி! வாழ்க்கையில் நான் நிறைய கஷ்டப்பட்டேன் என்பதை விட எங்களுக்காக எங்க அப்பா ரொம்ப கஷ்டப்பட்டார் என்று சொல்லலாம். அப்பா அரசாங்க அலுவலகத்தில் ப்யூனாக வேலை பார்த்து வந்தார். நான் இது போல் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று அவர் நிறைய தியாகங்களைச் செய்தார். ஆனால் என்னை பிளஸ்டு வரையில் படிக்க வைப்பதற்கு



நிறைய கடன் பட்டு விட்டார். அந்த விஷயத்தைப் புரிந்து கொண்ட நான் படிப்பை நிறுத்தி விட்டு வேலையில் சேர முடிவு செய்தேன். வங்கியில் குமாஸ்தா வேலை கிடைத்தது. இரவு பகல் பார்க்காமல் உழைத்தேன். இரவு எவ்வளவு நேரமானாலும் சரி, உட்கார்ந்து வேலையை முடித்து விட்டுத் தான் போவேன். அந்த விதமாக எங்க மானேஜரின் அன்பைப் பெற முடிந்தது. அதற்குப் பிறகு வந்த ஆபீசர்கள் கூட என்னை மிகவும் விரும்பினார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தில் பிரைவேட்டாக பி.காம் படிக்கத் தொடங்கினேன். அதை முடித்த பிறகு வங்கி பரீட்சைகளிலும் பாஸ் செய்தேன். உடனே ஆபீசராக பிரமோஷன் கிடைத்தது. இப்படியே கஷ்டப்பட்டு உழைத்தால் அடுத்த பிரமோஷன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆபீசராக பிரமோஷன் கிடைத்ததும் அப்பாவை வேலையிலிருந்து ஒய்வு பெற்றுக் கொள்ளும்படிச் சொன்னேன்.

''அக்காவுக்கு திருமணம் செய்து வைக்க ரொம்ப கஷ்டப் பட்டோம். அவள் அதிகமாக படிக்கவில்லை. பார்க்கவும் சுமாராகத் தான் இருப்பாள். நிறைய கடன் வாங்க வேண்டியிருந்தது. ஒரு பக்கம் தங்கையின் படிப்புச் செலவு. இத்தனை நாட்கள் கழித்து அவளுக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது. அதை முடித்து விட்டால் என் பொறுப்பு முடிந்து விடும். அதற்கு உன் ஒத்துழைப்பு தேவை.''

அன்று இரவு முழுவதும் அவன் வாழ்க்கையில் தான் பட்ட கஷ்டங்களை, சந்தித்த அவமானங்களைப் பற்றி சொல்லிக் கொண்டே இருந்தான். கேட்கக் கேட்க பார்கவியின் மனம் உருகி விட்டது. இத்தனை கஷ்டங்களை அனுபவித்தவனிடம் தான் கண்டிப்பாகச் சுகப்படுவோம் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

மறுநாள் மதியம் தனியாக இருந்த போது தான் அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அவன் தன்னைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தான் என்றும், அவளைப் பற்றி ஒன்றுமே

கேட்கவில்லை என்றும், சொல்லுவதற்கு சந்தர்ப்பம் கூடத் தரவில்லை என்றும்.

★ ★ ★

**அ**ங்கும் இங்கும் சுற்றியதில் சில நாட்கள் ஓய்வு இல்லாமல் கழிந்து விட்டன. மாமியார் வீட்டிற்குப் புறப்பட்ட போது தம்பி உட்பட வீட்டில் எல்லோரும் கண் கலங்கியதைப் பார்த்த போது ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு. ஹாஸ்டலை விட மாமியார் வீடு மோசமான இடம் என்பது அவர்களின் எண்ணம் போலும் என்று நினைத்து உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

லீவு இல்லை என்று ஸ்ரீராம் வந்த அன்றே வங்கிக்குக் கிளம்பி விட்டான். பரீட்சைகள் நெருங்கி விட்டன என்று நாத்தனார் கல்லூரிக்குப் போய் விட்டாள். நோயாளியான மாமனார் ஒரு அறையில் படுத்துக் கொண்டிருந்தார். பார்கவி தன் அறையில் தனித்து விடப்பட்டாள்.

வந்த முதல் நாளே எல்லோரும் தன்னை விட்டு விட்டுப் போனது அவளுக்கு வருத்தத்தைத் தரவில்லை. அவளுக்குத் தேவையான சுதந்திரம் கிடைத்து விட்டது. கூண்டிலிருந்து விடுபட்டு நந்தவனத்தில் பறந்து கொண்டிருந்த பறவை போல இருந்தது அவள் மனம். வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தாள். விலையுயர்ந்த சாமான்கள் அதிகமாக இல்லை. ஆனாலும் இது தன்னுடைய வீடு. அதை அழகாக திருத்தி அமைத்துக் கொள்வாள். தனக்கென்று புத்தக அலமாரியை ஏற்பாடு செய்து கொள்வாள். இருக்கும் கொஞ்ச நஞ்ச இடத்தில் சிறிய தோட்டத்தை உருவாக்குவாள்.

மாலையில் ஸ்ரீராம் திரும்பி வருவதற்குள் எல்லா வேலைகளையும் முடித்து, நேர்த்தியாக அலங்காரம் செய்துகொண்டு உட்கார்ந்தாள் பார்கவி.




மணி ஆறு...ஏழு....எட்டு மணி அடித்த பிறகும் அவன் வராமல் போகவே கலவரமடைந்தாள்.

''உனக்குத் தெரியாது அண்ணி! அண்ணன் வருவதற்குச் சிலசமயம் பத்து மணிக்கு மேல் ஆகிவிடும். நீயும் எங்களுடன் சாப்பிட்டு விட்டு படுத்துக் கொள்'' என்றாள் யாமினி.

பார்கவிக்குச் சாப்பிடத் தோன்றவில்லை. இரவு பதினோரு மணிக்கு ஸ்ரீராம் திரும்பி வரும் வரையில் அவள் வாசலிலேயே எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஸ்ரீராம் வந்த போது அவன் வாயிலிருந்து குப்பென்று எந்த நாற்றமும் வரவில்லை. முகத்தில் சோர்வு மட்டும் தான் தென்பட்டது.

''வங்கியில் வேலை அதிகமாக இருந்தது. தாமதமாகி விட்டது. அப்பா, யாமினி தூங்கி விட்டார்கள் இல்லையா?'' வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததுமே கேட்டான்.

பார்கவி பதில் பேசவில்லை. இருவருக்கும் தட்டை வைத்துப் பரிமாறினாள். வாயைத் திறந்தால் துக்கம் பொங்கி வந்து விடுமோ என்ற பயம்.

''அட! இன்னும் நீ சாப்பிடவில்லையா? எனக்காக இது போல் இனி காத்துக் கொண்டிருக்காதே. நான் எந்த நேரத்திற்கு வருவேன்னு எனக்கே தெரியாது.''

''இன்னிக்கு ஒரு நாள் மட்டும் தான் என்று நினைத்தேனே. அப்படி என்றால் இனி தினமும் இது போல் தாமதமாகுமா? '' வியப்புடன் கேட்டாள்.

''பின்னே? பதினைந்து நாட்கள் லீவில் இருந்தேன் இல்லையா? வேலையெல்லாம் தேங்கி விட்டது'' என்றான், வங்கி விவகாரம் முழுவதும் தன் தலை மீதே இருப்பது போல். லீவு இல்லை என்று அவன் தேன் நிலவுக்குக் கூட போக மறுத்து விட்டான்.

... திருமணத்தைப் பற்றி பேச்செடுத்தான். "நாலைந்து நாட்களில் எங்க சித்தி வருகிறாள். வந்ததுமே நீயும் அவங்களுமாக கல்யாண வேலைகளில் இறங்கிடுங்க. இப்போதிலிருந்தே எல்லா ஏற்பாடுகளையும் செய்யா விட்டால் பின்னால் பிரச்னையாகி விடும். மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து ஒரு வார்த்தை கூட வரக் கூடாது. சம்பந்தி மாமாவுக்கு முன் கோபம் அதிகம்" அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போனான்.

எதிராளியிடம் எவ்வளவு காரியங்களைச் சொன்னாலும் அது சிரமமாகத் தோன்றாமல், ஆர்வத்தைத் தூண்டும் விதமாய் சொல்வது ஒரு கலை. பாடும் பாட்டுக்கு ஒரு தாளமும், லயமும் இருப்பது போல், பேசும் பேச்சுக்கும் ஒரு ஸ்வரம் இருக்கும். கொஞ்சம் மென்மையை, நயத்தை ஜோடித்தால் கடினமான காரியம் கூட எளிதாக இருப்பது போல் தோன்றும். ஸ்ரீராமிடம் அப்படிப் பட்ட வாக்சாதுரியம் கொஞ்சம்கூட இல்லை.

சாப்பிட்டு முடித்ததும் மேலும் ஒரு ஐந்து நிமிடம் தன் தேவைக்காக விழித்திருந்து விட்டு ஸ்ரீராம் உறங்கி விட்டான். அந்தச் சமயத்திலாவது ஸ்ரீராம் தன்னோடு அன்பாகப் பேசுவான் என்றும், தன் உணர்வுகளை அவனுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும், எதிர்காலம் என்ற பொற்கனவுகளுக்கு அஸ்திவாரம் அந்த பள்ளியறையில்தான் போடப்படும் என்றும் எதிர்பார்த்த பார்கவிக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. பகல் முழுவதும் ஆபீசில் வேலை செய்ததாலோ என்னவோ ஸ்ரீராம் களைத்துப் போனவன் போல் ஆழமாக உறங்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு மட்டும் உறக்கம் வரவில்லை.

திருமண வேலைகளில் ஆழ்ந்து விட்ட பிறகு ஒரு நிமிடம் கூட ஒய்வு இல்லாமல் போய் விட்டது. திருமணத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்னால் தான் ஸ்ரீராமுக்கு லீவு கிடைத்தது. திருமணத்திற்கு அழைப்பதற்காக வெளியே போனதுதான் கணவனுடன் முதன் முதலாக அந்த வீட்டை விட்டு அவள் வெளியே வந்தது.

யாமினியின் திருமணம் நடந்து முடிந்தது. மாப்பிள்ளை வீட்டார் பல விதங்களில் தொல்லை கொடுத்தார்கள். எல்லாவற்றையும் சமாளித்து அவர்களைச் சமாதானப் படுத்தி ஒப்பேற்றுவதற்குள் உடலாலும், உள்ளத்தாலும், பொருளாதார ரீதியாலும் களைத்துப் போய் விட்டார்கள்.

ஸ்ரீராம், பார்கவி வயதில் சிறியவர்களாக இருந்த போதும் அவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்று திறமையாக நடத்தியதற்கு எல்லோரிடமிருந்தும் பாராட்டுக்கள் கிடைத்தன. அந்த திருப்தியில் ஸ்ரீராமுக்கு மனம் நிரம்பி விட்டது. அன்றிரவு நிம்மதியாக உறங்கி விட்டான். பார்கவி இரவு முழுவதும் உறங்காமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

எல்லோரையும் விட அதிகமாக உழைத்தது அவள் தான். பெரிய காரியத்தை எந்தக் குறையும் இல்லாமல் நடத்தி விட்டோம் என்ற திருப்தி இருந்தாலும் அடி மனதில் ஏதோ அதிருப்தி சுழன்று கொண்டிருந்தது.

திருமணத்தில் தங்கைக்கு எந்தக் குறையும் வைக்காமல் ஸ்ரீராம் சீர்வரிசைகளை தாராளமாகவே செய்தான். தங்கையின் மனம் கொஞ்சம் கூட நோகக் கூடாது என்று தவித்தான். ஆனால் தன் மனைவியும் ஒரு புது மணப் பெண் தான் என்றும், அவளுக்கும் ஆசைகளும், விருப்பங்களும் இருக்கும் என்றும் அவனுக்குத் தோன்றவேயில்லை. மாப்பிள்ளை வீட்டார் தங்கள் தகுதிக்கும் மீறி டிமாண்ட் செய்தவற்றையெல்லாம் முறுவல் மாறாமல், பொறுமையாகச் செய்து முடித்தான்.

மாப்பிள்ளைக்கு பீரோ வேண்டுமென்று கேட்டதற்கு தன் திருமணத்திற்குப் பரிசாகத் தந்திருந்த கோத்ரேஜ் பீரோவைத் கொடுத்து விட்டான். "தேன் நிலவுக்குப் போக வேண்டும். பணம் போறாது போலிருக்கு" என்று தங்கை பேச்சு வாக்கில் சொன்னதும் பார்கவியிடம் கேட்டு தங்களுடைய தேன் நிலவுக்காக அவள் தந்தை கொடுத்திருந்த பணத்தை அப்படியே தந்து விட்டான்.

பார்கவியிடம் பொறாமை இல்லை. தன்னுடைய பொறுப்பை உணர்ந்து கொண்டு தேவைக்கேற்ப அனுகூலமாக நடந்து கொள்ளும் சுபாவமுடையவள் என்பதால் அன்று அந்த விட்டில் ரகளை ஏற்படவில்லை. ஆனால் அவளும் மனுஷி தான். எவ்வளவு அடக்க முயன்றாலும் அடங்காத அதிருப்தியும், வேதனையும் அவளை உறங்க விடாமல் செய்தன. மனிதனுக்கு சுயநலமே இருக்கக் கூடாது என்று சொன்னவர் யாரோ ரிஷியாகத் தான் இருக்க வேண்டும். ரிஷிகளும் மனிதர்கள் தான். ஆனால் மனிதர்கள் எல்லோரும் ரிஷிகள் இல்லை.

* * *

உறவினர்கள் எல்லோரும் போய் விட்டாலும் கல்யாண சந்தடி இன்னும் குறையவில்லை.

''பார்கவி! டிபன் பரிமாறுகிறாயா? ஆபீசுக்கு நேரமாகி விட்டது.''

கணவனின் குரலைக் கேட்டு பார்கவி வியப்புடன் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

''இன்னும் இரண்டு நாள் லீவு தான் இருக்கே. நேற்று வரையிலும் ஒய்வே இல்லை. ஒரே அலைச்சல். இன்றைக்குப் போகா விட்டால் தான் என்ன?'' என்றாள்.

''மை காட்! பாங்கில் வேலை எல்லாம் அப்படியே இருக்கு பண்டிகைக்குத் தங்கையும், மாப்பிள்ளையும் வந்தால் அப்பவே லீவு போடவில்லை என்றால் நன்றாக இருக்காது. ஏற்கனவே எங்க மானேஜர் சொல்லியனுப்பி விட்டார், வேலை ரொம்ப இருக்கு, உடனே வரச் சொல்லி.''

பார்கவி வாயடைத்துப் போனவளாய் நின்று விட்டாள். குறைந்த பட்சம் இந்த இரண்டு நாட்களாவது தன்னோடு ஜாலியாக கழிப்பான் என்று அவள் நினைத்திருந்தாள். வைசாக் வந்த பிறகு தினமும் கடற்கரைக்குப் போகலாம் என்று ஆசைப்பட்டாள்.

ஆனால் கடலை தொலைவிலிருந்து பார்க்கும் சந்தர்ப்பம் கூட கிடைக்கவில்லை.

மறு பேச்சுப் பேசாமல் அவனுக்கு டிபனை பரிமாறினாள்.

''பார்கவி! ரொம்ப களைத்துப் போய் விட்டாய் இல்லையா. மாலை வரையிலும் ரெஸ்ட் எடுத்துக் கொள். சீக்கிரமாகவே வந்து விடுகிறேன். கடற்கரைக்குப் போவோம்'' என்றான்.

அந்த ஒரு வார்த்தையிலேயே அவளது வேதனை எல்லாம் துடைத்தெறிந்தாற் போல் மாயமாயிற்று. மாலையில் அவன் வரும் நேரத்தில் அவனுக்குப் பிடித்தமான முந்திரிப் பருப்பு பகோடா தயார் செய்தாள். குளித்து விட்டு அவனுக்கு மிகவும் பிடித்த ரோஜா நிறப் புடவையைக் கட்டிக் கொண்டு அழகாக தயாராகி உட்கார்ந்திருந்தாள்.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு கடலைப் பார்க்கப் போகிறோம் என்றும், கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு அலைகளுக்கு நடுவில் நிற்க வேண்டும் என்றும் பார்கவி கனவு கண்டு கொண்டிருந்தாள். காலிங் பெல் சத்தம் கேட்டு ஓடிப் போய் கதவைத் திறந்தாள். எதிரே யாரோ முன் பின் தெரியாத நபர்.

''நான் உங்கள் கணவருடன் வேலை பார்க்கிறேன். டே புக் பேலன்ஸ் இன்னும் முடியவில்லையாம். வருவதற்குத் தாமதமாகும் என்று சொல்லச் சொன்னார்.'' தகவல் தெரிவித்து விட்டு அவன் போய் விட்டான்.

உற்சாகமெல்லாம் வடிந்து போய் சோர்வாக இருந்தது பார்கவிக்கு. இது போன்ற சம்பவங்களில் பெண்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று சினிமாக்களில் பார்த்திருக்கிறாள். நாவல்களில் படித்திருக்கிறாள். வீட்டில் இருக்கும் பொருட்களை வீசி எறிவது, தலையை விரித்துப் போட்டுக் கொண்டு, முகத்தை தூக்கி வைத்துக் கொள்வது, சாப்பிடாமல் வீம்பாக இருப்பது போன்றவை. ஆனால் யோசித்துச் செயல்படக் கூடிய அளவுக்கு

அறிவும், படிப்பும் பெற்றிருக்கும் தன்னால் அப்படி நடந்து கொள்ள முடியுமா? ஊடலில் இருக்கும் சந்தோஷத்தை அனுபவிக்க அவளுக்கும் பிடிக்கும். ஆனால் சின்னச் சின்ன விஷயங்களுக்கே இல்லாத கோபத்தை வரவழைத்துக் கொண்டு நடிக்கத் தேவையில்லை.

திருமணம் முடிந்து இன்னும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால் பல ஆண்டுகளாக அந்த ஸ்தானத்தில் இருந்தாற் போல் அனுபவம் ஏற்பட்டு விட்டது. புது மணத் தம்பதிகளுக்கு இடையே ஏற்படக் கூடிய குறும்புகள், ஊடல்கள், கோபதாபங்களுக்கு தாம் அப்பாற்பட்டவர்களாகத் தோன்றியது. பிறந்த வீட்டில் பழக்கப்பட்டுப் போய் விட்டது போல் இந்தச் சூழ்நிலைக்குப் பழக்கப்படுத்திக் கொள்வது அவசியம் தானோ?

இரவு பதினோரு மணி தாண்டிய பிறகு ஸ்ரீராம் வந்தான்.

''சாரி பார்கவி! எங்க மானேஜர் ஒரு வேலையை ஒப்படைத்து விட்டார். எப்படியாவது வேலையை முடித்து விட்டு வரணும்னு நினைத்தால் முடியவேயில்லை. நாளை காலையிலும் சீக்கிரமாகப் போகணும். அது சரி. என்ன புத்தகம் படித்துக் கொண்டு இருக்கிறாய்?''

''பாஞ்சாலி சபதம்.''

''தமிழ்ப் புத்தகமா?'' ஏளனமாகச் சொன்னான். ''இந்தத் தமிழ் நாவல்கள் எல்லாமே ஆங்கில நாவல்களைப் பார்த்து காப்பியடித்து எழுதியவை தானாமே. எங்க ஆபீசில் எல்லோரும் அப்படித்தான் பேசிக் கொள்வார்கள்'' என்றான்.

பார்கவி அவனை இரக்கம் மற்றும் வருத்தம் கலந்த பார்வையுடன் பார்த்தாள். தன் கணவன் சராசரி ஆண் மகன் தான் என்று முதல் முறையாகப் புரிந்து கொண்டாள், 'நினைக்கிறாங்க... சொன்னாங்க...அப்படித்தானாமே' என்று அவன் சொன்னதைக் கேட்ட பிறகு.

''ஆமாம்'' என்றாள் கொஞ்சம் கடுமையான குரலில். ''பாரதியார் சிட்னி ஷெல்டனை காப்பி அடித்து பாஞ்சாலி சபதம் எழுதியிருக்கிறார்.''

''எனக்குத் தமிழ் படிக்கத் தெரியாது. சென்ட்ரல் ஸ்கூலில் படித்தேன். நீ எப்போதாவது எனக்குக் கடிதம் எழுதணும்னால் ஆங்கிலத்தில் தான் எழுதணும்'' என்றான் பெருமை பொங்கும் குரலில்.

''அப்படின்னால் உங்களுக்கு ஆங்கில இலக்கியம்னால் பிடிக்கும்னு சொல்லுங்கள். ஷெல்லியும் வர்ட்ஸ்வர்த்தும் எனக்குப் பிடித்தமான கவிஞர்கள்.'' ஒரு நிமிஷத்திற்கு முன்னாலிருந்த கோபத்தையும் மறந்து போய் உற்சாகமாகச் சொன்னாள் அவள்.

''அதெல்லாம் இப்போ யாருக்கு நினைவு இருக்கு? படிக்கும் போது ஏதோ மனப்பாடம் பண்ணி பரீட்சை எழுதி விட்டேன். இப்பொழுதெல்லாம் மூளையில் கூட்டல்கள், கழித்தல்கள், இது தானே இருக்கு. வா... பசிக்கிறது. பரிமாறு'' என்று உள்ளே போய் விட்டான்.

சோர்ந்து போனவளாக சமையலறையை நோக்கி நடந்தாள் பார்கவி.

''இதன்ன? நீ இன்னும் சாப்பிடவில்லையா? எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன், எனக்காக காத்திருக்க வேண்டாம்னு'' கோபமாகக் கேட்டான்.

''எனக்குத் தனியாக சாப்பிட பிடிக்கவில்லை.'' சுருக்கமாகச் சொன்னாள்.

''அப்படி என்றால் அப்பாவுடன் சேர்ந்து சாப்பிடு. யாமினி போய் விட்ட பிறகு அவரோடு சேர்ந்து சாப்பிடுவதற்கு யாருமே இல்லை. அவருக்கும் வருத்தமாக இருக்கலாம்.

அந்த வார்த்தைகள் அவளுக்கு வியப்பைத் தந்தன. ''எனக்கு உங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதில் தான் சந்தோஷம் இருக்கு.

எவ்வளவு நேரமானாலும் சரி, காத்திருப்பேன்" என்றாள் வெறுமை யான குரலில்.

"அப்படி பிடிவாதம் பிடித்தால் எப்படி? என் வேலையைப் பற்றி உனக்குச் சரியாக புரியலைன்னு நினைக்கிறேன். வங்கியில் ஆபீஸர் பதவி என்றால் ரொம்பப் பெரிய பொறுப்பு. எல்லோரும் வேலையை முடித்து விட்டுப் போன பிறகு தான் எங்க வேலை தொடங்கும். நான் இல்லா விட்டால் இந்த பிராஞ்சே இல்லைன்னு எங்க மானேஜர் கூடச் சொல்லுவார்."

பார்கவி பதில் பேசவில்லை. பேச வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை அவளுக்கு. இந்திய ஜனாதிபதி கூட இந்தியாவைப் பற்றி அப்படி நினைத்துக் கொண்டிருக்க மாட்டார்.

மனம் ஒரு கடலைப் போன்றது. வெளிப் பார்வைக்கு அமைதியாகத் தென்பட்டாலும் ஆழத்தில் கண்ணுக்குத் தெரியாத வேதனைகள் எழும்பி அலைகள் போல் துள்ளிக் கொண்டே இருக்கும். கண்ணீர்த் துளிகளாக உருமாறும்.

* * *

"அம்மா....பார்கவி!"

மாமனாரின் குரலைக் கேட்டு வெளியே வந்தாள்.

"இந்தாம்மா. இந்தப் பணத்தை வாங்கிக் கொள். பென்ஷன் அரியர்ஸ் வந்தது."

"எனக்கு எதுக்குங்க? உங்க அக்கௌண்ட் தான் இருக்கே. அதில் போட்டுக் கொள்ளுங்கள்."

"இல்லையம்மா. யாமினி கல்யாணத்திற்கு நிறையகடன் வாங்கியிருக்கிங்க. உன்னிடமிருந்த பணத்தைக் கூட வாங்கிக் கொண்டு விட்டோம். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்? உனக்குத் தேவையானதை வாங்கிக்



கொள். உனக்கு ஒரு நல்ல புடவை கூட வாங்கித் தராமல் போய் விட்டோம். பண்டிகைக்கு பட்டுப் புடவையாவது வாங்கிக் கொள்."

பரிவுடன் அவர் தரும் போது அவளால் மறுக்க முடிய வில்லை. மாமனார் ரொம்ப சாதாரணமான மனிதர். பார்த்த வேலை சிறியது தான் என்றாலும் பண்பாடு உள்ளவர். அவள் மீது அவருக்கும் பரிவு இருந்தது. பெரிய இடத்திலிருந்து வந்தவள் என்றும், நன்றாகப் படித்தவள் என்றும் மதிப்பு வைத்திருந்தார். நாள் முழுவதும் அவ்விருவர் மட்டுமே வீட்டில் இருந்து வந்ததால் அன்பும், பாசமும் அதிகரித்தன. அவருடைய திருப்திக்காக ஏதாவது வாங்கிக் கொண்டு அவரிடம் காட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் விஷயம் தெரிந்ததும் ஸ்ரீராம் கோபத்தால் குதித்தான்.

"புடவைக்காக ஆயிரம் ரூபாய் எதுக்கு? பண்டிகைக்கு யாமினி இங்கே வந்தால் ஏதாவது வாங்கித் தர வேண்டாமா? நிறைய கடன் வாங்கியாச்சு. இன்னும் எங்கிருந்து வாங்குவேன்? ஒரு காரியம் செய் பார்கவி! இந்தப் பணத்தில் எல்லோருக்கும் துணி மணி வாங்கி விடு. இரண்டு மாதங்களில் எனக்குப் பணம் வரும். அப்போ உனக்காக ஏதாவது வாங்கிக் கொள்."

"சரி. அவங்க இரண்டு பேருக்கும் வாங்கி விடுகிறேன். நம் இரண்டு பேருக்கும் எப்படியும் எங்க அப்பா வீட்டில் வாங்கித் தருவாங்க" என்றாள் வேண்டுமென்றே.

"மாமனார் வீட்டிலிருந்து இன்னும் வாங்கிக் கொள்வது நன்றாக இருக்காது. கல்யாணத்திலேயே நிறைய செலவழித்து விட்டார்கள். அந்தச் சமயத்தில் என்னால் மறுக்க முடிய வில்லை. திரும்பத் திரும்ப மாமனார் வீட்டுக்குப் போவதும் அவர்களுக்குச் செலவு வைப்பதும் எனக்குப் பிடிக்காத விஷயம்" ஸ்ரீராம் சொன்னான்.

''பண்டிகைக்கு போகவில்லை என்றால் நன்றாக இருக்காது. போய் வருவோம். ஆனால் ஒன்றுமே வாங்க வேண்டாம்னு சொல்லி விடுவோம்.'' கடைக் கண்ணால் அவனைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''எப்படி போக முடியும்? யாமினியும், அவள் கணவனும் பண்டிகைக்கு வரப் போறாங்க. அக்கா அத்தானையும் கூட எப்படியும் கூப்பிடணும். எல்லோரும் வரும் போது நாம் கிளம்பிப் போனால் நன்றாக இருக்காது'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

பார்கவி வேதனையுடன் சிரித்துக் கொண்டாள். அவளுக்கும் இது முதல் பண்டிகை தான். கட்டாயம் வரச் சொல்லி தாயும் தந்தையும் கடிதம் எழுதியிருந்தார்கள். அவளுக்குப் பெற்றோரையும், தம்பியையும் பார்க்க வேண்டும் என்று பெரிதாக ஆசை ஒன்றுமில்லை. யாமினிக்கு நடந்து கொண்டிருந்த தடபுடல்களைப் பார்த்ததும் தான் இழந்து விட்டது எது என்று உணர முடிந்தது. இந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியேறினால் கூட்டல் கழித்தல்களை மறந்து கொஞ்சம் அன்பும், ரொமான்ஸும் ஸ்ரீராம் மனதில் துளிர்க்காதா என்ற நப்பாசை. அந்த வீட்டை விட்டு வந்த பிறகு தனக்கு எப்படிப்பட்ட சுதந்திரம் கிடைத்திருக்கிறதென்று தம் வீட்டாரிடம் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம்.

''ஒரு தடவை போய் விட்டு வந்தால் நன்றாக இருக்கும். எனக்கும் அம்மாவைப் பார்க்கணும் போலிருக்கு'' மனதில் இருப்பதைச் சொல்லி விட்டாள்.

''அடடா! இப்போதைக்கு பிறந்த வீட்டில் காலடி எடுத்து வைக்க மாட்டேன்னு சொன்னாயே. அதனால் தான் அக்காவையும் அத்தானையும் வரச் சொல்லி கடிதம் போட்டு விட்டேன். இப்போ போறோம்னு சொன்னால் நன்றாகவா இருக்கும்? '' என்றான்.



இவ்வளவு நாட்களுக்குப் பிறகு தனக்கென்று ஆத்மார்த்தமான நபர் கிடைத்து விட்டான் என்ற பெருமையுடன் பெற்றோர் மீதிருந்த வருத்தத்தை எல்லாம் அவனிடம் பகிர்ந்து கொண்டு மனபாரத்தை இறக்கிக் கொண்டு விட்டதாக திருப்திப் பட்டுக் கொண்டாள். ஆனால் அவள் செய்தது தவறோ? முன்பின் யோசிக்காமல் சொல்லக் கூடாத விஷயங்களை எல்லாம் சொல்லி தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டு விட்டாளா?

''எவ்வளவு நெருங்கியவர்களாக இருந்தாலும் மனதில் இருக்கும் எல்லாவற்றையும் சொல்லாதே'' என்றொரு கவிஞன் எழுதியது உண்மைதானோ?

## 3

தீபாவளி பண்டிகை நெருங்கி விட்டது. நான்கு நாட்களுக்கு முன்னாலேயே ஸ்ரீராமின் அக்கா, தங்கை இருவரும் தம் கணவன்மார்களுடன் வந்து விட்டார்கள். அன்றைக்கே தன்னுடைய தந்தையும் வந்து சேர்ந்தது பார்கவிக்கு ஆச்சரியமாக இருந்தது.

''உங்களை அழைத்துக் கொண்டு போகத் தான் வந்தேன்'' என்றார் அவர்.

''அப்பா! நாங்க வர தோதுபடாதுன்னு கடிதம் எழுதிப் போட்டோமே. வீணாக இவ்வளவு செலவு செய்து கொண்டு வந்தீங்க'' என்றாள் பார்கவி.

''செலவுக்கு என்னம்மா? நேரில் வந்து கூப்பிடவில்லைன்னு மாப்பிள்ளை ஏதாவது நினைத்துக் கொண்டு விட்டா ரோன்னு அம்மா சொன்னாள். ஊரிலும் எல்லோரும் விசாரிப் பார்கள். அதான் வந்தேன்.'' தந்தை சொன்னார்.

''அவ்வளவு தானே தவிர உங்களுக்கு என்னைப் பார்க்கணும்னு இல்லை. ஊரில் நாலு பேர் ஏதாவது சொல்வார்களே என்று பயம்!'' மனதிலேயே நினைத்துக் கொண்டாள் பார்கவி.

''அதனால் என்ன? உங்களுக்கும் இது முதல் பண்டிகை தானே. போயிட்டு வாங்க. நான் தான் இங்கே இருக்கேனே காரியங்களைப் பார்த்துக் கொள்ள'' என்றாள் ஸ்ரீராமின் அக்கா.

''பாங்கில் கஸ்டமர் வீக் இது. லீவு கிடைக்காது. இன்னொரு முறை வருகிறோம் மாமா! பண்டிகைக்குத் தான் வரணும்னு கட்டாயம் எதுவும் இல்லையே,'' ஸ்ரீராம் சொன்னான்.

''போகட்டும். நீயாவது போய் நாலு நாட்கள் இருந்து விட்டு வாம்மா'' என்றார் மாமனார்.

''இப்போ வேண்டாம். அப்புறம் எப்பவாவது வருகிறோம் அப்பா'' என்றாள் பார்கவி. கணவனோடு சேர்ந்து போக வேண்டும் என்று ஆசைப்பட்டாளே தவிர தனியாகப் போய் பிறந்த வீட்டில் கொண்டாட வேண்டும் என்று விரும்பவில்லை.

''எங்க அண்ணி சாட்சாத் சீதையே தான். கணவனை விட்டு விட்டு பிறந்த வீட்டுக்குக் கூடப் போக மாட்டாள். திருமணமாகி வந்ததிலிருந்து அந்த வீட்டுப் பக்கமே போகவில்லை'' என்றாள் யாமினி. அது கேலியா புகழ்ச்சியா என்று பார்கவிக்குப் புரியவில்லை. அவள் முகம் சிவந்ததைப் பார்த்து விட்டுப் பெருமையாகச் சிரித்துக் கொண்டான் ஸ்ரீராம்.

''மாமா! விடுமுறை கிடைத்ததும் பார்கவியை அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று மாமனாரைச் சமாதானப்படுத்தினான் ஸ்ரீராம்.

பார்கவி கையில் கொஞ்சம் பணம் கொடுத்து, பண்டிகைக்குத் துணிமணி வாங்கிக் கொள்ளச் சொல்லி விட்டு கிளம்பிப் போனார்.

நாலு பேர் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற அச்சத்திற்கு முன்னால் செலவு ஒரு பொருட்டல்ல போலும். அதுவே தான் வீட்டில் இருந்த போது கொஞ்சம் அன்பாக, ஆதரவாக எப்போதாவது ஒரு பத்து ரூபாயைத் தன் கையில் கொடுத்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாள்? தந்தை



என்றால் ஏற்பட வேண்டிய அன்பையும், மதிப்பையும் கூட நசிந்து போகும்படி நடந்து கொண்டது ஏன்? ஒருக்கால் இப்பொழுது அவர் தன்னைப் பார்த்து பெருமை பட்டுக் கொள்கிறாரோ?

''அடியே! இத்தனை நாட்கள் கழித்து அவள் என் மகள் என்பதை நிரூபித்து விட்டாள். புகுந்த வீட்டில் எல்லோரும் அவளைத் தலை மேல் வைத்துக் கொண்டாடுகிறார்கள். அந்த வீட்டுக்கு வந்த மகாலட்சுமியாம் அவள். அவளும் வீட்டுப் பொறுப்பை எல்லாம் தலையில் போட்டுக் கொண்டு முறுவலுடன் வளைய வருகிறாள். இந்த வீட்டில் நாம் வளர்த்த விதம் அப்படி'' ஊருக்குப் போனதுமே பெருமையாகச் சொல்லிக் கொள்வாராய் இருக்கும்.

பக்கத்து வீட்டு பார்வதி மாமி கண்டிப்பாக கேட்பாள், ''பண்டிகைக்குக் கூட உங்க மகள் வரவில்லையே?'' என்று.

''புகுந்த வீட்டில் அவளை ரொம்ப அபூர்வமாகப் பார்த்துக் கொள்கிறார்களாம். இவர் எவ்வளவு கெஞ்சிக் கேட்டுக் கொண்ட போதும் அனுப்பவே மாட்டோம்னு சொன்னாங்களாம். அவள் இல்லா விட்டால் அவர்களுக்கு பண்டிகை கொண்டாடுவது போல் இருக்காதாம்.'' பெருமை கலந்த குரலில் தாய் பதில் சொல்லுவாள்.

''என்ன அண்ணீ? என்ன யோசனை? அப்பாவோடு போகலைன்னு வருத்தமாக இருக்கா?'' யாமினியின் வார்த்தைகளைக் கேட்டு விட்டு இந்த உலகிற்கு வந்தாள்.

''ச்ச... ச்ச... அப்படி எதுவும் இருக்காது. அவளுக்குப் பிறந்த வீட்டு நினைப்பே அவ்வளவாக வராது. அப்பா கொடுத்து விட்டுப் போன பணத்தில் என்ன வாங்கிக் கொள்ளலாம்னு யோசித்துக் கொண்டிருப்பாள். அப்பா கையிலிருந்து பணம் பெறுவது அவளுக்கு மிக அரிதான விஷயமாச்சே.'' பதில் சொன்னான் ஸ்ரீராம்.

திருமணம் ஆவதற்கு முன்னாலிருந்த பிடிவாத குணம் இப்பவும் இருந்திருந்தால் வெடுக்கென்று ஏதாவது சொல்லி யிருப்பாள். ஆனால் இப்பொழுது எதுவும் பேசாமல் உள்ளே போய் விட்டாள்.

எல்லாம் இருந்தும், எல்லோரும் இருந்தும் அனாதையாகி விட்டாற் போலவும், அடர்ந்த காட்டுக்கு நடுவில் வழி தெரியாமல் நடந்து போய்க் கொண்டிருந்தாற் போலவும்.... உள்ளே போனாள்.

★ ★ ★

**பா**ர்கவிக்கு நவம்பர், டிசம்பர் மாதங்கள் ரொம்ப பாரமாகக் கழிந்தன. வங்கியில் நிறைய வேலை இருப்பதாகச் சொல்லி நள்ளிரவு தாண்டிய பிறகுதான் வீடு திரும்புவான் ஸ்ரீராம். டிசம்பர் மாத கடைசி வாரத்தில் இரண்டே இரண்டு நாட்கள் தான் இரவில் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.

ஆஸ்துமா நோயாளியான மாமனாரின் உடல் நிலை மோசமாகி விட்டது. ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாக அலைய வேண்டிய பொறுப்பு பார்கவியின் தலையில் விழுந்தது. அவர் படுத்த படுக்கையாகி விட்ட பிறகு ஒரு நிமிஷம் கூட பார்கவியால் வீட்டை விட்டுப் போக முடியவில்லை. மருந்து மாத்திரை வாங்கி வர வேண்டுமென்றால் கூட பக்கத்து வீட்டுப் பசங்களை கெஞ்ச வேண்டிய நிலைமை. வீட்டு வேலைகளையும் வெளி வேலைகளையும் பார்த்துக் கொண்டதால் மிகவும் நலிந்து போய் விட்டாள்.

அக்கம் பக்கத்தாருடன் கொஞ்சம் அறிமுகம் ஏற்பட்ட பிறகு அவளுக்குப் பல விஷயங்கள் தெரிய வந்தன.

அந்தச் சுற்று வட்டாரத்தில் பாங்குகளில் வேலை பார்ப்பவர்கள் பலர் இருந்தார்கள். அதில் குமாஸ்தாக்களும், அதிகாரிகளும் இருந்தார்கள். ஆனால் யாருமே ஸ்ரீராமைப் போல் வங்கியே



கதியென்று கிடக்கவில்லை. எவ்வளவு வேலை இருந்தாலும் ஏழுமணிக்கெல்லாம் வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவார்கள். லீவு நாட்களில் மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகக் கழிப்பார்கள். ஆபீஸ் நேரத்தில் கூட வீட்டில் ஏதாவது வேலை இருந்தால் நடுவில் வந்து விட்டுப் போவார்கள். பாங்க் ஆபீசரின் மனைவி என்பதால் பார்கவியிடம் எல்லோரும் மரியாதையுடன் பழகினார்கள். ஆனால் ஆபீசராக இருந்த ஸ்ரீராமிடம் யாருக்குமே மதிப்பு இருக்கவில்லை.

ஜனவரி முதல் தேதி, விடுமுறை. முதல் நாள் மாலையிலிருந்தே எல்லோர் வீட்டிலும் சந்தடி தென்பட்டது. ஆனால் ஸ்ரீராம் அன்றிரவு வீட்டிற்குத் திரும்பவே இல்லை. காலையில் வந்த போதும் களைப்பாக இருப்பதாகச் சொல்லி விட்டு தூங்கப் போய் விட்டான். எழுந்ததும் சாப்பிட்டு விட்டு மானேஜரைச் சந்திக்க வேண்டும் என்று மறுபடியும் கிளம்பி விட்டான். நள்ளிரவு தாண்டிய பிறகு தான் வீட்டுக்கு வந்தான்.

காலையில் எழுந்ததுமே, "இன்றைக்குச் சீக்கிரமாகப் போக வேண்டும்" என்று அவசர அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்ததும் பார்கவிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"உங்க பாங்கில் உங்களுக்கும் மேலே மானேஜர் இருக்கிறார். இன்னும் இரண்டு ஆபீசர்கள் இருக்கிறார்கள். யாருக்குமே இல்லாத பொறுப்பு உங்களுக்கு மட்டும் தானா? வீடுன்னு ஒன்று இருப்பதை நினைவுப்படுத்தணுமா?" என்று கேட்டு விட்டாள்.

"என்னுடைய ஆபீஸ் விஷயத்தில் உன்னுடைய யோசனையோ, தலையீடோ தேவையில்லை. என் பழக்க வழக்கங்கள் என்னுடையவை. இப்போ உனக்காக மாற்றிக் கொள்ள தேவையில்லை. இருந்தாலும் உனக்கு என்ன குறை வைத்தேன் என்று இந்தக் கோபம்?"

''அப்படி என்றால் உங்க உத்தேசம்தான் என்ன? எனக்குச் சாப்பாடு சரியாக கிடைக்கவில்லைன்னு உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்னு நினைப்பா உங்களுக்கு? மனைவியாக எனக்குத் தேவையானது அது மட்டும் தானா?''

''என்னைத் தொந்தரவு செய்யாதே பார்கவி! புத்தாண்டின் முதல் வர்கிங் டே. வேலை நிறைய இருக்கும். சீக்கிரமாக டிபன் கொண்டு வா. நான் போகணும்.''

''புது வருஷம்னால் புது அகௌண்ட், புது லெட்ஜர் புத்தகங்கள் இவற்றைத் தவிர வேறு விதமான பொழுது போக்குகள் இருக்கும்னு உங்களுக்குத் தெரியாதா? உங்களுடன் சந்தோஷமாக கொஞ்ச நேரம் கழிக்கணும்னு நான் விரும்புவது தவறா?''

''பாங்கில் நான் என்னவோ உல்லாசமாக பொழுது போக்குகிறேன் என்று நீ நினைத்துக் கொண்டால் அது தவறு. கஷ்டப்பட்டு உழைத்ததால் தான் இன்றைக்கு இந்த நிலைக்கு வந்திருக்கிறேன். இன்னும் உயர்பதவியை அடையப் போகிறேன். அது உனக்கும் சந்தோஷம் தரக் கூடிய விஷயம் தானே. நான் ஒன்றும் சீட்டாடவில்லை. ரேசுக்குப் போகவில்லை. வேலை செய்கிறேன். ஆனாலும் இப்போ இந்த விவாதம் எதுக்கு? சீக்கிரமாக டிபன் கொண்டு தரவில்லை என்றால் அப்படியே போய் விடுகிறேன்.''

மறு பேச்சுக்கு இடமில்லாத மிரட்டல் அது. பார்கவி அவனுக்கு எல்லாம் எடுத்துக் கொடுத்துவிட்டு போய்ப் படுத்துக் கொண்டாள். கனவு கண்ட நாழி ஆகவில்லை. தான் இன்னொரு கூண்டிற்குள் சிக்கிக் கொண்டு விட்டிருப்பது புரிந்தது. சிறகுகளை முறித்து விசாலமான மைதானத்தில் விட்டு விட்டாற் போன்ற சுதந்திரம் இது. இது தானா அவள் கனவு கண்ட தாம்பத்தியம்?

பெண் ஒருத்திக்கு வாழ்க்கையில் வேண்டியது என்ன? உயர் பதவியில் இருக்கும் கணவன், எந்தக் குறையும் இல்லாத




வாழ்க்கை. அவளுக்கு அவை இரண்டுமே இருந்தன. ஆனால் வாழ்க்கையில் தான் சாரமே இருக்கவில்லை. இவ்வளவு நாளாக ஸ்ரீராமைப் பற்றி எதிர்மறையாக யோசித்துப் பார்க்கவே பயந்தாள். ஆனால் இப்பொழுது அதைப் பற்றித் தான் யோசனையே.

ஸ்ரீராம் திருமணம் செய்து கொண்டது தனக்காக இல்லை, பணத்திற்காக. அந்தப் பணம் கூடத் தன் சொந்த சந்தோஷத்திற்காக இல்லை, தங்கையின் திருமணச் செலவுகளுக்காக. இதைத் தவிர அவனுக்குத் தன் திருமணத்தைப் பற்றியோ, மனைவியைப் பற்றியோ எந்த அபிப்பிராயமும் இல்லை. அவன் மனதில் மேலோங்கி இருக்கும் விருப்பம் ஒன்றே ஒன்றுதான். பெரிய ஹோதாவுக்கு வரவேண்டும். ஒருக்கால் அவனிடம் சிறுவயதிலிருந்தே தாழ்வு மனப்பான்மை அணுவணுவாய் படிந்து போய் விட்டிருக்க வேண்டும். தந்தை ஒரு ப்யூனாக வேலை செய்து வந்தார். அந்த லெவலிலிருந்து தான் மேலும் மேலும் உயர வேண்டும். இந்த விருப்பம் மனதைத் துளைத்துக் கொண்டிருந்ததால் தன் மேலதிகாரிகளிடம் அடக்க ஒடுக்கமாக இருப்பது பழகிப் போய் விட்டது.

மற்ற ஊழியர்களைப்போல் தானும் ஒருத்தன் என்ற விஷயத்தை அவன் மனமே ஒப்புக் கொள்ளாமல் போய் விட்டது. பிரமோஷன் கிடைத்து ஆபீசராகி விட்ட போதிலும் அவனிடமிருந்த தாழ்வு மனப்பான்மை போகவில்லை. தனக்குக் கீழே வேலை செய்பவர்களுக்கு முன்னால் கூட தன் அதிகாரத்தைக் காட்ட முடியாத பலவீனம் அவனை ஒரு ஜோக்கராக எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

எல்லோருக்கும் முன்னால் குரலை உயர்த்திப் பேசி விட்டால் 'ப்யூனுடைய மகனுக்கு என்ன திமிரு பார்த்தாயா?' என்று எண்ணிக் கொள்வார்களோ என்ற பயம். மேலதிகாரிகளின் வேலைகளை எல்லாம் அவர்கள் கேட்காமலேயே செய்து கொடுத்து விட்டு

அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வந்தான். அந்தப் பழக்கத்திலிருந்து வெளியேற முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தான். தியாகம் அவனுடைய சுயநலம். தியாகம் செய்வதில் தான் அவனுக்குச் சந்தோஷம்.

மனைவியின் புடவையைத் தங்கைக்குத் தருவான். தங்கையின் கணவனைத் திருப்திப் படுத்துவதற்காக லீவு போடுவான். மானேஜரிடமிருந்து பாராட்டைப் பெறுவதற்காக இரவும் பகலும் கஷ்டப்படுவான். மனைவியைத் தவிர எல்லோருடைய பாராட்டும் வேண்டும் அவனுக்கு.

பார்கவிக்குத் தன் தாயின் நினைவு வந்தது. தாயின் கண்ணோட்டத்தில் தந்தை தெய்வம். அவர் செய்யும் காரியங்களிலும், பேசும் பேச்சிலும் குற்றம் கண்டு பிடிப்பது மகாபாவம். இது போன்ற கருத்துகளில் பிறந்து வளர்ந்த அவள் தாய் தந்தையிடம் மாறுதல் கொண்டு வர முயற்சி செய்யாமல் போய் விட்டாள். ஆனால் தான் அப்படி இருக்கக் கூடாது. நல்ல வார்த்தைகள் சொல்லியோ அல்லது ஊடல் கொண்டு கோபத்தைக் காட்டியோ அவனிடம் மாறுதலைக் கொண்டு வர வேண்டும். அது தன்னுடைய பொறுப்பு என்று நினைத்தாள்.

கணவனை சரியான வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் நன்றாகத் தான் இருந்தது. ஆனால் எப்படி என்று தான் புரியவில்லை. 'கணவனைக் கைக்குள் போட்டுக் கொள்வது எப்படி?' 'கணவனை வழிக்குக் கொண்டு வர நூறு யோசனைகள்' இது போன்ற புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் அவளுக்கு இல்லை.

தன்னால் முடிந்த வரையிலும் ஸ்ரீராமின் குணநலனை ஆராய்ந்தாள். அவன் ஏழ்மையில் வளர்ந்தவன். ஸ்கூல் ஃபீஸை கட்ட முடியாமல் வகுப்பில் அவமானப்பட்டதும், வித விதமாக ஆடைகளை உடுத்திக் கொண்டு வரும் சக மாணவர்களுக்கு இடையே இரண்டே உடைகளுடன் காலம் கழித்து வந்ததும், அவர்களைக் காட்டிலும் தான் மிகவும் தாழ்ந்தவன் என்ற உணர்வும் அப்பொழுதே அவனுள் படிந்து போயிருக்க வேண்டும். நாளடைவில் குடும்பம் ஏழ்மையிலிருந்து நடுத்தர நிலைமைக்கு மாறியது. ஒரு ஆபீசராக அவனுக்குச் சமுதாயத்தில் மதிப்பு இருந்தது. ஆனால் தாழ்வு மனப்பான்மை அவனிடமிருந்து நீங்க மறுத்தது.

அக்கா, தங்கை, ஆபீசர்... பிறருடைய பாராட்டைப் பெறுவது ஒன்று தான் தன்னுடைய குறிக்கோளாக வைத்துக் கொண்டிருக்கிறான். அவனை மாற்ற வேண்டுமென்றால் முதலில் இந்த தாழ்வு மனப்பான்மையைப் போக்க வேண்டும். அதற்காக ஒரு திட்டம் வகுத்துக் கொண்டாள் பார்கவி. முதலில் வீட்டுச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். வீட்டிற்கும் பாங்கிற்கும் உள்ள வித்தியாசத்தை வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததுமே உணர வேண்டும்.

அவள் தன்னிடமிருந்த பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போனாள். குஷன் உறைகள், பிளவர் வாஸ்கள், திரைச் சீலைகள் போன்ற சின்னச் சின்ன சாமான்களைக் கொண்டு வீட்டை மாற்றி அமைத்தாள். வேண்டாத சாமான்களை எல்லாம் மூட்டை கட்டி பரணில் போட்டாள். மாலையில் வாக்கிங்கிற்குப் போய் விட்டுத் திரும்பி வந்த மாமனார் அப்படியே நின்று விட்டார்.

"நம்ப வீடு தானா இது? ரொம்ப நன்றாக இருக்கும்மா? தகிக்கும் வெயிலில் தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பவனுக்கு குளிர்ந்த நிழலும், ஜில்லென்று தண்ணீரும் கிடைத்தாற் போல் திருப்தியாக இருக்கு" என்றார்.

பார்கவியின் இதயம் சந்தோஷத்தால் பூரித்து விட்டது. இனி ஸ்ரீராம் என்ன சொல்லுவானோ பார்ப்போம் என்று நினைத்தபடி

காத்திருந்தாள். வழக்கம் போல் எட்டரை மணிக்கு வந்தான் அவன். வந்ததுமே அப்பாடா என்று மூச்சு விட்டபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான். பார்கவி தண்ணீர் டம்ளரைக் கொண்டு போய்க் கொடுத்தாள். குடித்து விட்டு கண்களை மூடிக் கொண்டே கையை நீட்டி பக்கத்திலிருந்த மேஜை மீது வைக்கப் போனான். அங்கே இருந்த மேஜையை வேறு இடத்திற்கு மாற்றியிருந்தாள் பார்கவி. தம்ளர் கீழே விழுந்த சத்தம் கேட்டு கண்களைத் திறந்தான். பார்கவி ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இங்கே இருந்த மேஜை எங்கே?'' என்று கேட்டான்.

''என் கையில் கொடுத்திருந்தால் வாங்கிக் கொண்டிருப்பேனே.'' தம்ளரை எடுத்து வைத்து விட்டு துணியால் தரையைத் துடைத்தாள். அவள் சமையலறைக்குப் போய் விட்டுத் திரும்பி வருவதற்குள் ஸ்ரீராம் ஷுக்களைக் கழற்றி நாற்காலியின் அடியில் தள்ளினான். ஸ்டுல் மீது அவள் வைத்திருந்த பூத்தொட்டியை எடுத்துப் பக்கத்தில் தரை மீது வைத்து விட்டு ஸ்டுல் மீது கால்களை நீட்டிக் கொண்டான்.

பார்கவி மௌனமாக ஷுக்களை எடுத்துக் கொண்டு போய் ஸ்டாண்டில் வைத்து விட்டு ஹவாய் செருப்புக்களைக் கொண்டு வந்து அவனுக்கு அருகில் வைத்தாள். முன் அறையில் அவள் செய்த மாற்றங்களையோ, படுக்கையறையில் அவனுடைய வசதிக்காக அவள் போட்டிருந்த மேஜை, நாற்காலியோ அவன் கண்களில் படவே இல்லை.

''என் ஆபீஸ் வேலைகளைப் பார்க்கவும் இங்கே தான் உட்காரணுமா?'' என்று மட்டும் கேட்டான்.

''ஏன்? வசதியாக இல்லையா? மேஜை விளக்குத்தான் வைத்திருக்கிறேனே. அங்கே என்றால் மாமனாருக்குத் தொந்தரவாக இருக்கும்.''

''சரி சரி,'' பைல்களை எடுத்து மேஜை மீது பரப்பி வைத்தான்.



''ஏங்க... நான் ஏதாவது உதவி செய்யலாமா? சொல்லுங்க செய்கிறேன்.'' பக்கத்தில் இருந்த ஸ்டுல் மீது உட்கார்ந்து கொண்டே கேட்டாள்.

''நீயா! உனக்கென்ன தெரியும் பாங்க் வேலையைப் பற்றி?'' ஜோக் கேட்டு விட்டது போல் சிரித்தான்.

''நானும் பட்டதாரி தான். சொன்னால் புரிந்து கொள்கிறேன். பத்தாம் வகுப்பு படித்தவர்கள் கூட பாங்கில் வேலை செய்கிறார்களே! என்னால் அவ்வளவு கூட செய்ய முடியாதா?''

''ஆமாம். நான் பத்தாம் வகுப்புப் பாஸானதுமே வேலையில் சேர்ந்து விட்டேன். அப்புறம் ஏதோ மனப்பாடம் செய்து டிகிரி படித்து விட்டேன். அந்த விஷயத்தை எனக்கு நினைவு படுத்த வேண்டாம்.'' கடுகடுவென்ற குரலில் வந்தது அவன் பதில்.

பலமாகக் கன்னத்தில் அறைந்திருந்தால் கூட பார்கவி அது போல் அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டாள். எப்படியோ சமாளித்துக் கொண்டு ''சாரி... நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை'' என்று சொல்லிவிட்டு அதற்கு மேலே அங்கே இருக்க முடியாமல் படுக்கையில் சரிந்தாள். துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவள் பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. ஆரம்பித்த முதல் நாளே இப்படி நடக்கும் என்று நினைக்கவில்லை. உடனே தேறிக் கொண்டாள். ஸ்ரீராமிடம் உடனே மாறுதல் வந்து விடாது. பொறுமையுடன் காத்திருக்க வேண்டியது தான். தன் முயற்சியை விடாமல் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டியது தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மாமனாருக்கு திடீரென்று பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்து விட்டதால் பார்கவியின் முயற்சிகளுக்குத் தடை ஏற்பட்டு விட்டது.

* * *

அன்புள்ள அனுராதா,

ரொம்ப நாட்களுக்குப் பிறகு கடிதம் எழுதுகிறேன். உன் விலாசத்தைக் கண்டு பிடிப்பதற்குள் ஒரு மாதமாகி விட்டது. ஏன் என்று கேட்கிறாயா? அவசியமாக இருப்பதால் தான். பதினைந்து ஆண்டுகள் வரையிலும் நம் விஷயங்களை ஒருவருக்கொருவர் தெரியப் படுத்திக் கொள்ளக் கூடாது என்றும், நால்வரும் சந்திந்துக் கொள்ளும் போது தான் நம் வாழ்க்கைக் கதைகளை மனம் விட்டு சொல்லிக் கொள்ள வேண்டும் என்றும் எடுத்துக் கொண்ட முடிவை நான் மறக்கவில்லை. ஆனால் அந்த வார்த்தையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் என் வேதனையை யாருடன் பகிர்ந்து கொள்ள முடியும்?

எனக்கு வந்த கஷ்டம் தான் என்னவென்று கேட்கிறாயா? துடைப்பத்தால் அடிப்பதும், கிரோஸினை ஊற்றிக் கொளுத்துவதும் தான் கொடுமை என்றால் எனக்கு வந்த கஷ்டம் எதுவும் இல்லை.

என் கணவர் பாங்க் ஆபிசர். சம்பாதிப்பது அவருடைய கடமை. என் திருமணம் ஆன பிறகு முதல் ஐந்து ஆண்டுகளும் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்துவதிலேயே கழிந்து விட்டது.

பக்கவாதத்தால் படுக்கையில் விழுந்த மாமனார் மூன்று ஆண்டுகள் அதே நிலையில் இருந்தார். நாத்தனார்கள் இருவரும் மாதத்திற்கு ஒரு தடவையாவது தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற சாக்குடன் வந்து விட்டுப் போவார்கள். கை கால்கள் சரியாக இருந்தும் பக்கவாதம் வந்த நோயாளிகளைப் போல் நடந்து கொள்வார்கள். என் கஷ்டத்தைப் புரிந்து கொண்டது படுக்கையில் கிடந்த மாமனார் தான். யார் மீதும் ஆதாரப்படாமல் சொந்த உழைப்பில் அறுபது வயது வரையிலும் வாழ்ந்து விட்டு திடீரென்று மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்கு வந்தால் எவ்வளவு வேதனை இருக்குமோ அவரைப் பார்த்துத்



தான் புரிந்து கொண்டேன். பேச்சு இருந்த இரண்டு வருடங்களில் அவர் என்னிடம் மனம் விட்டுப் பேசுவார். பேச்சு விழுந்த விட்ட பிறகு கண்களாலேயே தன் வேதனையை வெளிப்படுத்து வார். அவர் அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது அருகில் உட்கார்ந்து கொண்டு இரண்டு வார்த்தைகள் பரிவாகப் பேசக் கூட என் கணவருக்கு நேரமிருக்கவில்லை. தன் வேலை, தன் பிராஞ்சு இவை தான் அவருடைய உலகம். பெற்ற தந்தை யின் வேதனையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத ஆள் என்னை எப்படிப் புரிந்து கொள்வாரோ, நீயே ஊகித்துக் கொள்.

மாமனார் போய் விட்டார். செலவும் குறைந்து விட்டது. எங்கள் வீட்டில் புது பர்னிசர்கள் இடம் பெற்றன. பத்து பேருக்கு நடுவில் எங்கள் ஸ்டேடஸ் உயர்ந்து விட்டது. ஸ்ரீராமுக்குக் கிடைக்க வேண்டிய பிரமோஷன் ஏன் வரவில்லை என்று தெரிய வில்லை. அதனால் அவருடைய தாழ்வு மனப்பான்மை மேலும் அதிகரித்து விட்டது. அவரை மறுபடியும் சகஜநிலைக்குக் கொண்டு வருவதற்காக பல விதமாக முயற்சி செய்தேன். அவ்வளவு தளர்ந்து போக வேண்டிய தேவையில்லை என்றும் சொன்னேன். ஆனால் பலன் தான் இருக்கவில்லை. ஏதோ சாப்பிடுவதாக பெயர் பண்ணுவது, தூங்குவது, மீதி நேரமெல்லாம் வீட்டில் தனியாக என்ன செய்வது என்று தெரியாமல் அங்கும் இங்கும் அலைவது.. இது தான் என் தினசரி நிகழ்ச்சி. சம்பளம் வந்த அன்று கொடுக்கும் பணத்திலேயே மாதச் செலவு ஓடிவிடும் என்பதால் அதைப் பற்றிப் பேசும் தேவையும் இல்லை.

பிறந்த வீட்டில் இல்லாத பொருளாதாரச் சுதந்திரம் கிடைத்து விட்டது. அதைத் தவிர வேறு எந்த மாறுதலும் இல்லை இந்த வாழ்க்கையில். திருமணமாகி இவ்வளவு நாளாகி யும் என்னைச் சந்தோஷமாக வெளியே அழைத்துச் சென்றது இல்லை. ஒரு மணி நேரம் சிரித்துப் பேசி பொழுது போக்கிய தில்லை.

வீட்டில் ஒரு வேலைக்காரியைப் போல் எத்தனை நாள் வாழ்வது? ஏன் வாழ வேண்டும்? ஒரு பெண்ணின் வாழ்க்கை இவ்வளவு தான் என்றால் எனக்கு இந்த வாழ்க்கையே வேண்டாம். தற்கொலை செய்து கொள்கிறேன். இல்லையா வேறு யார் வீட்டிலேயாவது உழைத்து வாழ்கிறேன். ஒரு வேளை சாப்பாடு கிடைக்காமல் போகாது.

அங்கே பெற்றோருக்கும் சரி இங்கே கணவருக்கும் சரி நான் தேவையில்லை. அக்கம் பக்கத்தாரின் இரக்கம் நிறைந்த பார்வையைச் சகித்துக் கொள்ளும் துணிச்சல் எனக்கு இல்லை.

நான் ரொம்பவும் களைத்துப் போய் விட்டேன் அனு! இனி இது போல் வாழ என்னால் முடியாது. என்னைப் போன்றவர்களுக்கு புகலிடம் தரக்கூடிய நிறுவனங்கள் சென்னையில் நிறையவே இருக்கும். அவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டு எனக்கு எழுதினால், நான் வந்து விடுகிறேன். எங்கே இருந்தாலும் இதை விடச் சந்தோஷமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. தயவு செய்து எனக்காக கொஞ்சம் சிரமத்தை மேற்கொண்டு இந்த உதவியைச் செய். உன்னுடைய கடிதம் கிடைத்ததுமே வந்து விடுகிறேன்.

உன் பார்கவி

தபால் பெட்டியில் போட்டு விட்டு வந்துவிட்டாளே தவிர பார்கவியின் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை. 'நீ ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டால் உனக்குத் தேவையான காரியங்கள் எல்லாம் தானாக நடந்து விடுவது தான் ஆடோமிஷன். அதற்கு மறுபெயர் பெண்' என்றார் ஒரு எழுத்தாளர். கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் சரி அடிமையாக பணிந்து போக வேண்டியவள் தான் மனைவி என்று இந்த ஆண்கள் நினைக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்றால் எதிர்த்து நிற்பதுதான் ஒரே வழி.



இரவு நேரம் கழித்து ஸ்ரீராமின் ஸ்கூட்டர் சத்தம் கேட்ட போது பார்கவி எழுந்து கொள்ளவில்லை. கொஞ்ச நேரம் கழித்து அவளைத் தேடிக் கொண்டு அவனே வந்தான். ''இங்கே இருக்கிறாயா. பசிக்கிறது. சாதம் போடு. ஆபீஸ் வேலை செய்ய வேண்டியது பாக்கியிருக்கு'' என்றான் சோர்வாக.

''நான் சமையல் எதுவும் செய்யவில்லை. செய்யும் பொறுமையும் இல்லை'' உட்கார்ந்த இடத்தை விட்டு நகராமலேயே சொன்னாள்.

வியப்புடன் அவளைப் பார்த்து விட்டு உள்ளே போய் விட்டான். சற்றுப் பொறுத்து அவளும் உள்ளே போய்ப் படுத்துக் கொண்டாள். காலையில் அவள் எழுந்து கொள்ளும் முன் ஸ்ரீராம் ஆபீசுக்குப் போய் விட்டான்.

சரியாக பத்து நாட்கள் கழித்து அனுராதாவிடமிருந்து பதில் வந்தது. பரபரப்புடன் பிரித்தாள் பார்கவி. மிகப் பெரிய கடிதம் தான்.

பார்கவி,

நான் என்ன எழுதியிருப்பேனோ என்று மிகவும் பரபரப்போடு இருக்கிறாய் இல்லையா? இவ்வளவு பெரிய கடிதத்தில் என்னதான் இருக்குமோ என்று அவசர அவசரமாக படித்து விடாதே. மனதை அமைதியாக வைத்துக் கொண்டு நிதானமாகப் படி. முழுவதுமாக படித்து முடித்த பிறகு நன்றாக யோசித்துப் பாரு. ஒரு முடிவை எடு. உன் முடிவு எதுவாக இருந்தாலும் நான் சந்தோஷப்படுவேன்.

நீ சொன்னது போல் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு எத்தனையோ கனவுகளைக் கண்டோம். நம் வாழ்க்கை நம் கையில் தான் இருக்கிறது என்றும், அதை எப்படி செதுக்கிக் கொள்வது என்பது நம் தன்னம்பிக்கையின் மேல் தான் ஆதாரப்பட்டிருக்கும் என்றும் நாம் எல்லோரும் நம்பினோம்.

அகண்ட வானத்தில் சிறகுகளைப் படபடத்துக் கொண்டே விருப்பம் போல் பறந்து செல்கிறது பறவை. நீரில் நீந்தும் மீன் கூட தன் மனம் போல் பாதையை மாற்றிக் கொண்டு உல்லாசமாக பயணம் செய்கிறது. பெண்களாகிய நாம் மட்டும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் யோசித்துப் பார்த்துத் தான் வைக்க வேண்டிய நிலைமை. எந்த அடி நம்மை எந்தக் குழியில் தள்ளி விடுமோ என்று தெரியாத ஹீன நிலையில் இருக்கிறோம்.

உன் கஷ்டங்களை விவரமாக எழுதியிருந்தாய். உன் நிலைமையை ஒரு சிநேகிதி என்ற நிலையில் மட்டுமே அல்லாமல் ஒரு பெண் என்ற நிலையிலும் நன்றாகப் புரிந்து கொண்டேன். உன் கணவர் மட்டும் கண்ணில் பட்டால் ''நீ திருமணம் எதற்கு செய்து கொண்டாய்?'' என்று உலுக்கி எடுக்கத் தோன்றும் யாருக்குமே. ஆனால் உன் கடிதம் என்னுள் அப்படிப்பட்ட ஆவேசத்தை ஏற்படுத்தவில்லை. காரணம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நீ என் கதையைக் கேட்க வேண்டும். உன்னைச் சுற்றிலும் இருக்கும் உலகில் உள்ள பெண்களின் வாழ்க்கையை புரிந்து கொள்ள வேண்டும். நம் சிநேகிதிகளின் கூட்டணி சந்தித்துக் கொள்ளும் சமயத்தில் நான் இந்த உலகத்தில் இருப்பேனோ இல்லையோ என்று எனக்கே தெரியாத நிலையில் இருக்கிறேன்.

கலங்கிப் போகாதே. முழுவதுமாக படி. நான் காதலித்தேன். அது சாதாரண காதல் இல்லை. வீட்டை விட்டு வந்து விடக் கூடிய தீவிரமான காதல் அது. முறைப்படி திருமணம் செய்து கொண்டோம். நான் அவருடைய படிப்பு, அழகு, வேலை எதையும் பார்க்கவில்லை. என் மனதிற்குப் பிடித்து விட்டார். அவருடன் சந்தோஷமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையுடன் துணிந்து செயல்பட்டேன். ஆனால் சில நாட்களிலேயே எனக்கு ஒரு உண்மை தெரிந்து விட்டது. அவருக்கு என் தங்கையுடனேயே உறவு இருக்கிறது என்றும், ரொம்ப நாட்களாகவே அத்தொடர்பு இருந்து வந்திருக்கிறது என்றும், என் காதல் எவ்வளவு கண் மூடித்தனமானது என்றும் புரிந்து கொண்டேன்.

காதல் திருமணம் எல்லாமே அப்படித்தான். அது என்றுமே அவசரப்பட்டு எடுத்துக் கொள்ளும் முடிவு தான். விமரிசகர்கள் சொல்லும் வார்த்தைகள் உண்மையாகி விடக் கூடாது என்றும், என் பெற்றோரிடம் தாழ்ந்து போய் விடக் கூடாது என்றும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அவருடன் சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டேன்.

இன்றைக்கு என் நிலைமை என்ன தெரியுமா? என் கணவர் வீட்டை விட்டு வெளியே போகமாட்டார். உத்யோகம் எதுவும் இல்லை. அதாவது எந்த வேலையும் செய்ய மாட்டார். அவருடைய தாய், உடன் பிறந்தவர்கள் எல்லோருடைய பொறுப்பும் என்னுடையது. எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பொறுப்பும் என்னுடையது தான். இந்த மூன்று தலைமுறையைச் சேர்ந்த மக்களை காப்பாற்றுவதற்காக நான் ராப்பகலாக உழைக்கிறேன். மேலும் வீட்டுக்குத் திரும்பி வந்து மறுநாள் காலையில் ஆபீசுக்குப் போகும் வரையிலும் திட்டுக்களை வாங்கிக் கொண்டு இருக்கிறேன். என் குழந்தைகள் மீது யாருக்குமே அன்பு இல்லை.

பார்கவி! சம்பாதிக்கிறேனே தவிர ஒரு ரூபாய் செலவழிக்கும் சுதந்திரம் எனக்கு இல்லை. குழந்தைகளைப் பெற்றேனே தவிர என் விருப்பம் போல் அவர்களை என்னால் வளர்க்க முடியவில்லை. சீட்டாடி விட்டுக் குடி போதையில் தள்ளாடிக் கொண்டு வரும் கணவனைச் சகித்துக் கொண்டு தான் ஆகணும். இரு குழந்தைகளுக்குத் தாயாக இருப்பதால் சாகாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இது தான் என்னுடைய வாழ்க்கை. ஒரு முறை நம் இருவரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்.

உன் கணவர் வேளைக்கு வீடு திரும்ப மாட்டார். உன்னை சினிமா, டிராமா என்று வெளியே அழைத்துப் போக மாட்டார். ஜாலியாக உன்னிடம் பேசிக் கொண்டிருக்க மாட்டார். இவையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாத விஷயங்கள் தான். ஆனால் அவரிடம் எந்த துர்க்குணமும் இல்லை. சிகரெட்கூட

தொட மாட்டார். போதைப் பொருட்கள் இருக்கும் பக்கமே போக மாட்டார். குதிரைப் பந்தயம் நடக்கும் இடம் கூடத் தெரியாது. சீட்டாட்டமோ தெரியவே தெரியாது. இதெல்லாம் அவரிடமிருக்கும் நல்ல குணங்களாக எடுத்துக் கொள்ளலாம்.

உன்னை விட நான் அதிகமாக உலகத்தைப் பார்த்திருக்கிறேன். எங்கள் அலுவலகத்தில் நிறைய பெண்கள் வேலை செய்கிறார்கள். நான் அதிகமாக யாருடனும் பேசியதில்லை. ஆனால் அவர்கள் பேசும் பேச்சுக்கள் என்ன தான் வேண்டாம் என்றாலும் காதில் வந்து விழும்.

''என் கணவர் ஐந்து மணி ஆனதுமே வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவார். சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் இல்லையா. கொஞ்சம் மேல் வரும்படி வரும் வேலைகளை பார்க்கக் கூடாதா என்று சொன்னாலும் கேட்க மாட்டார். அவருடன் வேலை செய்கிற ஊழியர்கள் வீட்டிற்குப் போய் பார்த்தால் தெரியும். டி.வி. பிரிட்ஜ்... சிலர் வீடுகளில் ஏசி கூட இருக்கும். இவருக்கென்னவோ மாலையாகி விட்டால் நான் எதிரே இருந்தாக வேண்டும்'' என்று பெருமையுடன் குறைபட்டுக் கொள்வாள் பக்கத்து சீட்டில் இருக்கும் பெண்.

ஒரு நாள் அனலாக கொதிக்கும் ஜுரத்துடன் ஆபீசுக்கு வந்தாள் ஒரு பெண். ஏன் வந்தாய் என்று கேட்டால் ''என் கணவருக்கு லீவு கிடைக்கவில்லை'' என்றாள். அவருடைய அனுமதி இல்லாமல் லீவு போடக் கூடாது. அவர் வீட்டில் இருந்தால் தான் அவளும் வீட்டில் இருக்க வேண்டும். இதெல்லாம் ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்களின் பிரச்னைகள் என்று தள்ளி விடாதே.

வீட்டில் இருக்கும் பெண்களின் பிரச்னைகள் வேறு விதமாக இருக்கும். கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டு வருகிறேன். அதனால் மனைவி தனக்கு அடிமையாக வாழ வேண்டியது தான் என்பான் கணவன்.



''கத்திரிக்காய் கறி செய்யச் சொன்னால் புடலங்காய் கூட்டு செய்திருக்கிறாயே'' என்று ஒருத்தன் மனைவியை அடித்தால், ''மாலையில் நான் வரும் வேளையில் சிங்காரித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே? யாருக்காக?'' என்று இன்னொருத்தன் மனைவியைச் சாத்துவான். கணவனிடம் அடிவாங்காத நாள் இருக்காது சில பெண்களுக்கு. தங்கள் ஆதிக்கத்தைக் காட்டிக் கொள்ள ஆண்களுக்கு ஒரு சின்ன காரணம் போதும். இவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உன் கணவர் ரொம்ப உத்தமர். அவருக்கு ஆபீஸ் ஒரு அப்ஸெஷன், அவ்வளவு தான். அதைத் தவிர அவர் ஒன்றும் கயவர் இல்லை.

கஷ்டத்தையும் சுகத்தையும் சமமான நிலையில் எடுத்துக் கொள்ளத் தெரிய வேண்டும். அவ்வளவு தூரத்திற்கு உயர நம்மால் முடியுமோ முடியாதோ. பெண் தன் காலில் தான் நிற்க வேண்டும். பொருளாதார ரீதியாகவும், உணர்வாலும் தன் யோசனைகளை நடைமுறைக்குக் கொண்டு வர முடிந்தால் தான் பரிபூரணமாகச் சுதந்திரம் கிடைத்தாற் போல் ஆகும்.

''பெண்கள் நள்ளிரவில் வீதியில் தைரியமாக சுற்ற முடிந்த அன்று தான் நமக்குப் பூரணமான சுதந்திரம் கிடைத்தாற் போல்'' என்றார் மகாத்மா காந்தி.

''நள்ளிரவில் பெண் ஒருத்தி வெளியே சுற்ற வேண்டிய அவசியம் என்ன?'' என்று கேட்பான் இன்றைய சுதந்திரக் குடிமகன். அதாவது இவர்களுடைய கண்ணோட்டத்தில் இருட்டிய பிறகு வெளியே போக விரும்பும் பெண்களிடம் கெட்ட எண்ணம் இருப்பதாக அர்த்தம் போலும். இப்படிப்பட்ட சமுதாயத்தில் உன் கணவர் உத்தமர் தானே.

உன் கடிதத்தைப் படித்த பிறகு உங்கள் இருவருக்கும் இடையே கம்யூனிகேஷன் கேப் இருப்பதாக எனக்குத் தோன்றியது. உனக்குத் தேவையானது என்னவென்றோ, அவர் நடத்தை ஏன் அவ்வாறு இருக்கிறது என்றோ நேரடியாக அவரிடம் கேட்டிருக்

கிறாயா? ஒரு முறை நீங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. என் கணவரைப் போல் அவர் ''வாயை மூடு, எல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒன்றும் சொல்லத் தேவையில்லை'' என்று சொல்லு வார் என்று நான் நினைக்கவில்லை.

அவரோடு உன்னால் உண்மையிலேயே சுகப்பட முடியாது என்றும் தனியாக இருந்து உன்னுடைய தனித்தன்மையை நிலை நாட்டிக் கொள்ள முடியும் என்றும் நினைத்தால், அதற்கான துணிச்சலும், தைரியமும் இருந்தால் உடனே கிளம்பி வா. உனக்கு ஒரு வழி காட்டாமல் போக மாட்டேன்.

உன் கணவரிடம் மாற்றம் கொண்டு வருவதற்கு நீ முயன்று தான் ஆக வேண்டும் என்றும் அது தான் உன் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியைத் தரும் என்றும் சொல்ல மாட்டேன். உன்னுடைய சுய கௌரவம் என்னைக் கவர்ந்து விட்டது. பெண்களிடம் இப்படிப் பட்ட மாற்றம் ஏற்படுவது வரவேற்கத்தக்கது. ஆணின் அகங்காரம் என்ற சிதைக்கு நெருப்புப் பற்ற வைக்க நீ ஒரு சமித்தாக மாறுவாய் என்றால் உன்னைத் தடுக்க மாட்டேன். அந்த அஸ்திவாரத்தின் மீது தான் வானை முட்டும் மலைகள் உருவாக வேண்டும். வெளியில் நிர்மலமாக, குளிர்ந்து தென்படும் பனிமலை கொஞ்சம் உருகிவிட்டாலும் போதும். உறுதியாக நிற்கும் மலையின் சிகரம் தென்படும். கொஞ்சம் அன்புக்கும், துக்கத்திற்கும் உருகிப் போய் விடுவது பெண்களின் பலவீனம். யோசித்து முடிவு செய்.

உன் அனுராதா.

## 4

கடிதத்தைப் படித்து முடித்து விட்டு சலனமற்று உட்கார்ந்து விட்டாள் பார்கவி. மனதில் ஆயிரம் எண்ணங்கள். ஸ்கூட்டர் வீட்டிற்கு முன்னால் வந்து நின்ற சத்தத்தைக் கேட்டு விட்டு



இந்த உலகிற்கு மீண்டு வந்தாள். கடிகாரம் நாலு மணியாகி விட்டதை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. அவ்வளவு சீக்கிரமாக ஸ்ரீராம் என்றுமே வீடு திரும்பியதில்லை. கையில் ஃபைல் இல்லாமல் வந்தது அதை விட அதிசயம். வந்ததுமே படுக்கை யறையிலிருந்த கட்டிலில் சரிந்து விட்டான். பார்கவி வியப்புடன் அருகில் போய் நின்றாள். அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டவன் போல் ''உடம்பு சரியாக இல்லை'' என்றான். தொட்டுப் பார்த்தாள். ஜுரத்தால் உடம்பு அனலாக தகித்துக் கொண்டிருந்தது. உடனே அலமாரியிலிருந்து மாத்திரையை எடுத்துத் தந்தாள். கடச்சட காபியைக் கலந்து கொடுத்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஜுர வேகத்துடன் சுயநினை வில்லாமல் உறங்கிவிட்டான் ஸ்ரீராம். பார்கவி பயந்து விட்டாள். பக்கத்து வீட்டு பையனை அனுப்பி டாக்டரை அழைத்து வரச் செய்தாள்.

ஒரு வாரமாயிற்று, ஜுரம் குறைவதற்கு. ஜுரம் கொஞ்சம் குறைந்ததும் ஆபீசுக்குக் கிளம்பினான்.

''உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்'' சீரியஸான குரலில் சொன்னாள்.

அவன் நிமிர்ந்து அவளை வியப்புடன் பார்த்தான். ''என்ன பேசணும்?''

''நம்மைப் பற்றி, நம் வாழ்க்கையைப் பற்றி, நம் எதிர் காலத்தைப் பற்றி.''

''அதைப் பற்றி பேச என்ன இருக்கு?''

''நிறைய இருக்கு. பேச்சு வார்த்தை இல்லாதது தான் நம் குடித்தனத்தின் பலவீனமே. உங்களுக்கு வாழ்க்கையில் பாங்க் முக்கியமானதாக இருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் மனைவியான நானும் முக்கியம் தான்.''

ஸ்ரீராம் பதில் சொல்லவில்லை. அவனைப் பற்றி தெரிந்திருப்பதால் பார்கவி சும்மா இருக்கவில்லை.

''நமக்குத் திருமணமாகி பத்து வருடங்கள் ஆகி விட்டன. ஆனால் இன்னும் ஒருவரை ஒருவர் முழுவதுமாகப் புரிந்து கொள்ளவில்லை. உங்கள் மனதில் என்ன இருக்கிறதென்று என்னிடம் சொன்னது இல்லை. மனம் விட்டுப் பேச எனக்கும் வாய்ப்பு தரவில்லை. இந்த வாழ்க்கையில் நான் ரொம்ப சலித்துப் போய் விட்டேன். அன்றைக்கு நீங்கள் ஜுரத்துடன் வீட்டிற்கு வந்த அன்று நான் வீட்டை விட்டுப் போக வேண்டும் என்று முடிவு செய்திருந்தேன்.''

அவன் திடுக்கிட்டு ''எதுக்கு? எங்கே?'' என்று கலவரத்துடன் கேட்டான்.

''இந்த வீட்டில் என்னுடைய தேவை அவ்வளவாக இல்லை என்று தோன்றியது. இங்கே இருந்து கொண்டு உங்களுக்கு பாரமாக இருப்பதை விட என் வழியை நான் பார்த்துக் கொண்டு விட்டால் நல்லது என்று நினைத்தேன்.''

''உன் தேவை எனக்கு இல்லை என்று ஏன் நினைக்கிறாய்? உனக்கு என்ன குறை வைத்தேன்?'' அவன் குரல் பலவீனமாக ஒலித்தது.

''அந்த வார்த்தையே எடுக்காதீங்க. குறை வைக்கிறது என்றால் உங்க எண்ணத்தில் என் தந்தையைப் போல் அல்லாமல் வயிறார சாப்பாடு போடுவது, புடவைகளை வாங்கித் தருவது இது தானே? அது தான் என்றால் எனக்குத் தேவையானதை நானே சம்பாதித்துக் கொள்கிறேன்.''

''நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. வீட்டை விட்டுப் போக வேண்டும் என்று நினைக்கும் அளவுக்குக் கயவனாக நடந்து கொண்டேனா நான்?''

''அது கயமைத்தனமில்லை. அக்கறையின்மை. நான் திருமணம் செய்து கொண்டது நீங்கள் எனக்குச் சாப்பாடு போடுவீங்கன்னு எதிர்பார்த்து இல்லை. எனக்கு ஒரு ஆணின் துணை வேண்டும் என்றும், உங்களுக்கும் என் துணை தேவை என்றும் நினைத்ததால் திருமணம் செய்து கொண்டேன். பெண் பார்க்க வந்த போது நீங்கள் என்னுடன் பேசியதைப் பார்த்து விட்டு பெண்களின் கருத்துக்களை மதிக்கும் ஆண் என்று நினைத்து மயங்கி விட்டேன். தங்கையின் திருமணத்திற்காக நீங்கள் தவித்த தவிப்பைப் பார்த்து விட்டு பொறுப்புக்களைத் திறம்பட நிறைவேற்றக் கூடிய ஆள் என்றெண்ணி என் அதிர்ஷ்டத்தை நினைத்துப் பூரித்துப் போய் விட்டேன். ஆனால் நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஒரே வீட்டில் இருக்கிறோம். நீங்க பணம் சம்பாதிக்கிறீங்க. நான் வீட்டு வேலைகளைச் செய்கிறேன். அதைத் தவிர வேறு எந்த பந்தமும் நமக்கிடையே அரும்பவில்லை. ஆபீசில் நாலு பேருடன் உட்கார்ந்து வேலை செய்து கொண்டே கலகலவென்று பேச மாட்டீங்களா? ஆனால் வீட்டில் ஏன் இப்படி இருக்கீங்க?''

''சிறு வயதிலிருந்தே என் பழக்கம் அப்படித் தான் பார்கவி! யாருடனும் அதிகமாக பேச மாட்டேன். என் லட்சியம் என்னவோ அதை சீக்கிரமாக அடைய வேண்டுமென்பது தான் என்னுடைய ஆசை. அது என்னை வேறு எந்த விஷயத்தைப் பற்றியுமே யோசிக்க விடாது. இது என்னுடைய பலவீனமாகவும் இருக்கலாம்.

''திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் குடித்தனம் செய்வது சிறு வயது முதல் வந்த பழக்கமில்லை. எது எப்படி இருந்தாலும் இனி இங்கே இருக்க என்னால் முடியாது. இவ்வளவு நாட்களாக என் பொறுப்பை நான் சரியாக செய்து விட்டேன் என்ற திருப்தியோடு வாழ்ந்து வந்தேன். இனி அந்தத் தேவையில்லை.''

''அப்படி என்றால் எனக்கு டைவோர்ஸ் கொடுக்கப் போகிறாயா? வியப்புடன் கேட்டான்.

''அவ்வளவு பெரிய வார்த்தை எதுக்கு? என் வழியை நான் பார்த்துக் கொள்ளப் போகிறேன். அவ்வளவு தான்.''

ஸ்ரீராம் பதில் சொல்லவில்லை. தானும் இனி சொல்ல வேண்டியது எதுவும் இல்லை என்பது போல் பார்கவி அங்கிருந்து அகன்றாள்.

* * *

**அ**திர்ஷ்டம் நன்றாக இருந்ததால் பார்கவிக்கு விழிப்பு வந்தது. ஸ்ரீராம் தூக்க மாத்திரைகளை விழுங்க முயன்று கொண்டிருந் தான். அவள் சட்டென்று அவனை நெருங்கி அவன் கையைப் பலமாகத் தட்டி விட்டாள். இப்படிப்பட்ட விளைவை அவள் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு துக்கம் கூட வரவில்லை. திக் பிரமை! அவ்வளவு தான். ஸ்ரீராம் இப்படிச் செய்வான் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அவன் அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டு ரொம்ப நேரம் அழுது தீர்த்தான். அவளுக்கு அனுராதாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. பனி உருகினால் தவிர மலையின் சிகரம் தெரியாது. அவனுடைய தாழ்வு மனப்பான்மை கொஞ்சம் கொஞ்சமாக விலகிக் கொண்டிருந்தது.

அவள் அவனைத் தடுக்கவில்லை. ஆறுதலும் சொல்ல வில்லை. பூமாதேவி சூரியனைக் கிழக்கிலிருந்து தன் மடியில் எடுத்துக் கொள்ளும் வரையில் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

* * *

''**பா**ர்கவி! கடந்த காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தால் என் நடத்தை எனக்கே வெட்கத்தை உண்டாக்குகிறது. அன்றைக்கு ஜுரத்தோடு நான் வீட்டுக்குச் சீக்கிரமாகத் திரும்பி வந்தது நினைவிருக்கா? என்னை வியப்புடன் பார்த்தாய். ஆபீசில் எல்லோரும் என்னை எப்போதும் கேலி செய்து கொண்டே இருப்பார்கள்.

''இவர் சீக்கிரமாக வீட்டிற்குப் போனால் வீட்டில் இருப் பவர்களுக்கு இவர்தானா என்று சந்தேகம் வந்து விடும் என்று சிலர் கேலி செய்வார்கள்.''

''வீட்டிற்குள்ளேயே வர விட மாட்டாங்க முதலில் என்று சிலரும் கிண்டலடிப்பார்கள். உன் பார்வையில் கூட அதே உணர்வு தான் தென்பட்டது. அப்பாவையும் ரொம்ப அலட்சியப் படுத்தி விட்டேன் இல்லையா? என் நடத்தையினால் அவர் மனம் எப்படி குமுறியிருக்குமோ இப்போ நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது. சிறு வயது முதல் அவர் எனக்காக நிறைய கஷ்டப் பட்டதால் அவருக்கு எந்தக் கஷ்டமும் வராமல் நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேனே தவிர ஒரு இதமான சொல் அவருக்கு மேலும் திருப்தியைத் தந்திருக்கும் என்று புரிந்து கொள்ளவில்லை.

''அக்கா தங்கைகளுக்கு எல்லாவற்றையும் சரிவர செய்து வந்தால் அவர் சந்தோஷப்படுவார் என்று நினைத்தேன். ஆனால் நடுவில் உன்னைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறேன் என்றோ, உன் பொறுப்பும் என்னைச் சேர்ந்தது என்றோ உணரவில்லை. நீ இந்த அதிர்ச்சி கொடுக்கும் வரையிலும் நான் உன் மீது எவ்வளவு ஆதாரப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று தெரியாமல் போய்விட்டது. மனதளவில் நான் ரொம்ப பலவீனமானவன். இந்த தற்கொலை முயற்சியே அதற்கு எடுத்துக் காட்டு. நீ சொன்னது உண்மை தான். ஒவ்வொரு மனிதனுக்கும் சுயவிமரிசனம் மிக அவசியம். படுக்கப் போவதற்கு முன்னால் ஒருமுறை அன்றைய நாளைப் பற்றி யோசித்துப் பார்த்தால் ஒவ்வொரு மனிதனிடமும் மாறுதல் கண்டிப்பாக வரும்.''

வாழ்க்கை என்பது கதை இல்லை, ஒரே நாளில் தலை கீழாக மாறுவதற்கு.

ஸ்ரீராம் வாக்குறுதி கொடுத்துவிட்டானே தவிர அவனிடம் மாற்றம் வருவதற்கு ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. இதற்கிடையில் பார்கவி பல முறை கோபித்துக் கொள்ள வேண்டியிருந்தது. சில சமயம் கண்ணீர் மல்க வேண்டிக் கொள்வாள். சில முறை மிரட்டுவாள். மொத்தத்தில் அவனிடம் குறிப்பிடத்தக்க மாறுதல் வந்து விட்டது என்ற நம்பிக்கை வந்த பிறகு அனுராதாவுக்குக் கடிதம் எழுதினாள். இப்பொழுது அவளுடைய கவலையெல்லாம் அனுராதாவைப் பற்றித் தான்.

ஸ்ரீராமிடம் ஏற்பட்ட சிறிய மாறுதலுக்கு பார்கவி எவ்வளவு சந்தோஷப்பட்டாளோ, அதற்கு நேர்மாறாக அவன் அக்கா, தங்கைகள் ஆத்திரமடைந்தார்கள். முதலில் வந்தவள் சின்ன நாத்தனார்.

''அண்ணா! எங்க மாமனார் உன்னிடம் கேட்கச் சொன்னார்'' தலையைக் குனிந்தபடி மெதுவாகச் சொன்னாள்.

ஸ்ரீராம் புரியாதவன் போல் பார்த்தான். ''என்ன கேட்கச் சொன்னார்?''

''இந்த தடவை ஏதோ ஒன்று முடிவு செய்யாமல் வீட்டுக்கு வரவேண்டாம்னு சொல்லி விட்டார். வெறும் கையுடன் போனால் அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்க முடியாது என்னால்''

''எதைப் பற்றி பேசுகிறாய்? விஷயம் என்னவென்று முதலில் சொல்லு.''

''அப்பாவின் பணத்தைப் பற்றி. வீடு கட்டிக் கொள்ளணும். அதற்காக பிளாட் வாங்கப் பணம் கேட்கச் சொன்னார்.''

''அப்பாவின் பணம் ஏது? அவர் எனக்கு ஒரு பைசா கூட விட்டு விட்டுப் போகவில்லைன்னு உங்களுக்கெல்லாம் தெரியாதா என்ன?''

''அவர்களுக்கு நம்பிக்கையில்லை. கடைசி வரைக்கும் அவருக்கு பென்ஷன் வந்து கொண்டிருந்தது. அதெல்லாம் என்ன ஆச்சுன்னு கேட்டாங்க. எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன்.''

''அவர்கள் கேட்டது இருக்கட்டும். கடைசி காலத்தில் அவருக்காக எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருந்ததோ உனக்குத் தெரியாதா? நீயே சொல்ல வேண்டியதை விட்டு விட்டு எனக்குத் தெரியாதுன்னு ஏன் சொன்னாய்?'' ஸ்ரீராம் கொஞ்சம் கடுமையாகவே கேட்டு விட்டான்.

அவள் அப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கவில்லை. அடி வாங்கியவள் போல் பார்த்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த பார்கவிக்குக் கோபமும், துக்கமும் பொங்கி வந்தன. தனக்கு ஒன்றுமே தெரியாதது போல் டபாய்த்துக் கொண்டிருந்த நாத்தனாரைப் பார்த்தால் கோபமும், மாமனாரை நினைத்து துக்கமும் ஏற்பட்டன. கைகள் சுவாதீனத்தில் இருந்த போதே அவர் எல்லா செக்குகளிலும் கையொப்பமிட்டு வைத்து விட்டார். அவருடைய பென்ஷன் பணத்தில் மருந்துகளை வாங்கினால் தான் அவருக்குத் திருப்தி ஏற்படும். அப்படிப்பட்ட தன்மானமுள்ளவரின் மகளா இவள்?

''இதோ உங்க அப்பாவின் பாஸ் புத்தகம். அவருடைய கணக்கில் ஆயிரம் ரூபாய் கூட இல்லை.''

பாஸ்புக்கை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்தாள் பார்கவி.

அதைப் பார்த்து விட்டு யாமினி அண்ணனை நோக்கி, ''அப்படி என்றால் இப்போ என்னதான் செய்யச் சொல்கிறாய் அண்ணா? அப்பாவின் சிகிச்சைக்காக ஆன செலவெல்லாம் உங்க அண்ணாவின் வங்கியே தரும் என்று வாதாடு வாங்கனோ என்னவோ'' என்றாள்.

''நான் சொல்லட்டுமா யாமினி! அப்பாவின் பணம் கொஞ்சம் கூட மிஞ்சவில்லை. என்னை என்ன செய்யச் சொல்றீங்கன்னு உன் கணவருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விடு'' என்றாள் பார்கவி.

''அவங்க நம்ப மாட்டாங்க. உண்டு இல்லைன்னு தெரிந்து கொள்ளும் வரையிலும் இங்கே வர வேண்டாம்னு எழுதிப் போட்டுடுவாங்க.''

''ரொம்ப நல்லதாகப் போய் விடும். அப்போ நீ போகவே வேண்டாம். அவர்களே நேராக வந்து கெஞ்சும் வரையிலும் போகாதே.''

இது தானா உன் முடிவு என்பது போல் யாமினி ஸ்ரீராமை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அண்ணி சொல்வது போல் ஒரு கடிதத்தை எழுதிப் போட்டு விடு. பார்ப்போம்'' என்றான் அவனும்.

யாமினி விடவில்லை. ''பயமாக இருக்கு அண்ணா! வாழ்நாள் முழுவதும் குத்திக் காட்டிக் கொண்டே இருப்பார்கள்.''

''அதனால் தான் போக வேண்டாம்னேன். உன் திருமணத் திற்கு ஆன செலவும், அதற்குப் பிறகு இன்று வரை செய்த செலவு எல்லாவற்றுக்கும் தனியாக கணக்கு எழுதி வைத்திருக் கிறேன். இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகும் மருமகளை பிறந்த வீட்டிலிருந்து அதையும் இதையும் கொண்டு வரச் சொல்லி எதிர்பார்க்கிறவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்காமல் விடக் கூடாது'' என்றாள் பார்கவி அழுத்தமாகவே.

அதைக் கேட்டதும் யாமினியின் முகம் நிறம் மாறியது.

* * *

''ரொம்பவும் காரசாரமாக பேசி விட்டாய் போல் தோன்று கிறது பார்கவி! யாமினியின் மனம் கஷ்டப்படும்னு நினைக் கிறேன்.''



''வேணும்னு தான் சொன்னேன். அவளுடைய புகுந்த வீட்டாரின் விஷயம் என்னவோ தெரியாது. இவளுக்கே பணம் வாங்கிக் கொண்டு போகணும்னு ரொம்பத் தவிப்பாக இருக்கு. உண்மையிலேயே பணம் தேவைப்பட்டால் கொடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இப்படி அப்பாவின் பணம் என்று கேட்பது நன்றாக இல்லை. வந்த போதெல்லாம் வீட்டில் புதிதாக ஏதாவது சாமான் தென்பட்டால் எடுத்துக் கொண்டு போய் விடுவாள். ஆனால் இந்த மாதிரி எத்தனை நாட்களுக்கு நடக்கும்?''

''சிறு வயதிலிருந்து எதைக் கேட்டாலும் மறுக்காமல் வாங்கிக் கொடுத்து ரொம்ப செல்லம் கொடுத்து விட்டேன். அது என்னுடைய தவறுதான்னு இப்போ தோணுகிறது...''

பார்கவி பதில் சொல்லவில்லை.

அதற்கு மறுநாளே வந்து இறங்கினாள் பெரிய நாத்தனார். அவளுடைய சுபாவம் கொஞ்சம் வித்தியாசமானது. தன் திரு மணத்திற்கு ஆடம்பரமாகச் செலவு செய்யவில்லை என்றும் தங்கையின் திருமணத்திற்கு மட்டும் நன்றாக செலவழித்தார்கள் என்றும் எப்போதும் முணுமுணுத்துக் கொண்டே இருப்பாள். அவள் கணவர் ரொம்பவும் சாது. அங்கே அவள் வைத்தது தான் சட்டம். இருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்கு வந்து விடுவாள். அவள் கணவர் வந்து கெஞ்சிக் கூத்தாடி அழைத்துப் போவார்.

''அக்கா! அண்ணா ரொம்ப மாறிப் போய் விட்டான். அண்ணி எப்படி ஆட்டி வைக்கிறாளோ அப்படியே ஆடிக்கிட்டு இருக்கான் இப்போது.''

யாமினியின் வார்த்தைகள் பார்கவியின் காதில் விழுந்தன. அவள் சும்மா இருக்கவில்லை. அவளிடம் போய் சிரித்துக் கொண்டே சொன்னாள். ''என்ன யாமினி! ஒரு காலத்தில் எங்க

அண்ணி சீதா தேவி போன்றவள். கணவன் வார்த்தையை மீறி நடக்கமாட்டாள் என்று பாராட்டினாயே. அப்பொழுது நான் அப்படி இருந்தது உனக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. இன்றைக்கு உங்க அண்ணா என் பேச்சைக் கேட்பது தவறாகத் தோன்றுகிறது பார்த்தாயா. ஒரே இனமாக இருந்தும் பெண்கள் இன்னொரு பெண்ணைக் குறை சொல்லி பேசக் கொஞ்சமும் தயங்குவதில்லை.''

''அண்ணி நன்றாக பேசக் கற்றுக் கொண்டு விட்டாள்.''

''மாறுவது சகஜம் தானே. இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்த எண்ணங்களுக்கும் இப்போதைய யோசனைகளுக்கும் வித்தியாசம் இருக்கும். ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், அட அப்பொழுது அவ்வளவு யோசனை இல்லாமல் எப்படித்தான் நடந்து கொண்டேனோ, அவ்வளவு அர்த்தமில்லாமல் எப்படித் தான் பேசினேனோ என்று நினைக்கத் தோன்றும். இப்பவும் சில தவறுகளைச் செய்யக் கூடும். மனமுதிர்ச்சி அடைந்த பிறகு தான் அதைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்'' என்று சொல்லி விட்டு பார்கவி அங்கிருந்து போய் விட்டாள்.

★ ★ ★

**''வா**ங்க... வாங்க. எவ்வளவு நாட்களுக்குப் பிறகு வந்திருக்கீங்க'' மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் இந்துமதி.

பார்கவி முறுவலுடன் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள். கணவருடன் சேர்ந்து நான்கு நாட்கள் பிறந்த வீட்டில் இருப்பதற்காக அவளாகவே வருவது அதுதான் முதல் தடவை.

அவர்களைப் பார்த்ததும் பெற்றோரின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. ஆனால் எவ்வளவு தான் சிரித்த முகத்துடன் நடமாடினாலும் அவர்களின் முகங்களில் ஏதோ கவலை குடி கொண்டிருப்பது தென்பட்டது பார்கவிக்கு.



காலை ஏழு மணியாகி விட்டது. தம்பியும், அவன் மனைவியும் அறையை விட்டு இன்னும் வெளியே வரவில்லை. அவர்களுக்குக் குழந்தை பிறந்த விஷயம் தெரியுமே தவிர இன்னும் பார்க்கவில்லை. பார்கவி காபி குடித்துக் கொண்டிருந்த போது தம்பி எழுந்து வந்தான்.

''ஹலோ அக்கா! எப்போ வந்தீங்க?'' கேட்டபடியே சமையலறைக்குள் சென்று ''அம்மா! கொஞ்சம் தண்ணியைச் சுட வை. குழந்தைக்குப் பால் கலந்து தரணும்'' என்று சொல்லி விட்டு திரும்பி வந்தான்.

''இப்போ சொல்லுங்க. காஷ்மீருக்கு போனீங்களாமே. நாங்களும் போலாம்னு நினைச்சுகிட்டு இருக்கிறோம். ராணி ரொம்ப நாளாக ஆசைப்படுகிறாள்.''

யாரும் விவரிக்கத் தேவையில்லாமலேயே பார்கவிக்குத் தாய் தந்தையின் கவலைக்குக் காரணம் புரிந்து விட்டது. ''என் மனைவி, என் குழந்தை, நான்'' என்ற வார்த்தைகளைத் தவிர அம்மா அப்பாவைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை அவன். அம்மா பால் கலந்து கொடுத்ததும் குழந்தைக்குப் புகட்டினான். குழந்தையின் ஈர உடைகளை மாற்றினான்.

எட்டு மணிக்கு மெதுவாக வெளியே வந்தாள் தம்பியின் மனைவி. மாமியார் தந்த காபியைப் பருகிக் கொண்டே நாத்தனாரிடம் குசலம் விசாரித்தாள்.

பார்கவிக்குத் தம்பியைப் பார்த்தால் வியப்பாக இருந்தது. ஒரு காலத்தில் இவனுக்கு பெண்கள் என்றாலே எவ்வளவு தாழ்வான எண்ணம் இருந்து வந்தது? அப்படி இருந்தவன் இன்று மனைவியின் கால்களில் விழுந்து கிடக்கிறான். எல்லா வேலைகளையும் தாயைச் செய்யச் சொல்கிறான்.

மகளின் முகத்தில் தென்பட்ட மாறுதலைக் கவனித்த தாய் ''உங்க அப்பாவால் அவர்களை முகத்திற்கு நேராக எதுவும்

சொல்ல முடியவில்லை. அவர்களைக் கண்டிக்கச் சொல்லி என்னிடம் எரிந்து விழுவார். நடுவில் நான் நலிந்து போகிறேன்'' என்று வருத்தப்பட்டுக் கொண்டாள்.

'அம்மா! தவறு உன் மீதும் இருக்கு. ஆதியிலிருந்தே அப்பாவின் தவறுகளை எடுத்துக் காட்ட முடியாமல் போனது உன் பலவீனம். உன்னை பலவிதமாக துன்புறுத்திய போது உள்ளூர குமுறிக் கொண்டிருப்பாயே தவிர வெளியில் எதுவும் சொல்ல மாட்டாய். அதன் விளைவை இப்பொழுது அனுபவிக்கிறாய்!' மனதிலேயே நினைத்துக் கொண்டாள் பார்கவி.

## 5

வெளியில் மழை ஹோவென்று பெய்து கொண்டிருந்தது. ஜன்னலுக்குப் பக்கத்தில் இதழ் விரித்த நந்தியாவட்டை மலர்களின் மேல் நீர்த் துளிகள் பட்டு நிலா முத்துக்களைப் போலத் தெறித்து விழுந்து கொண்டிருந்தன. பக்கத்திலேயே வாழையிலைகளின் மேல் ஜரிகை இழைகளைப் போல் வழிந்தோடிக் கொண்டிருந்தது. ஜன்னல் அருகில் உட்கார்ந்து கொண்டு மழையை ரசித்துக் கொண்டிருந்தாள் பார்கவி. மழைச் சாரல் அவ்வப்பொழுது உள்ளே தெறித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அவள் நகரவில்லை.

பார்கவிக்கு வர்ட்ஸ்வர்த் எழுதிய 'லூஸி க்ரே' என்ற கவிதை நினைவுக்கு வந்தது. 'இன்று என் இதயத்திற்குள் புகுந்து சோதித்தால் வர்ட்ஸ்வர்த் என்னவென்று எழுதுவார்? என் வேதனையைப் புரிந்து கொள்வாரா? என் எண்ண ஓட்டத்தை அவரால் பாராட்ட முடியுமா? நினைத்துக் கொண்டாள் பார்கவி.

தொலைவிலிருந்து பாட்டு ஒலித்தது.

''தாய்மையில் தான் இருக்குதடா பெண்மையின் நிறைவு! அம்மா என்று அழைக்கப் படுவது தான் பெண் இனத்திற்கு மதிப்பு!''

ஆண் குரலில் பாட்டு டிரான்ஸிஸ்டரில் ஒலித்துக் கொண்டிருந்தது. பெண்கள் ஏன் இப்படிப்பட்ட பாட்டுகளைக் கண்டிப்பதில்லை? தடை உத்தரவு போடும்படி ஏன் போராடுவதில்லை? குழந்தைகளைப் பெறாத காரணத்தினால் அவள் பெண்ணே இல்லை என்று சொல்லும் உரிமை யாருக்கு இருக்கிறது?

ஸ்ரீராமிடம் தான் குறையிருக்கிறதென்று டாக்டர்கள் உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். இந்த சமுதாயத்தின் போக்குதான் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது? குழந்தை வேண்டும் என்பதற்காகத் தான் வேறு ஒரு ஆணின் துணையை நாடினாலோ, செயற்கை முறையில் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்தாலோ இந்தச் சமுதாயம் என்ன சொல்லும்? நெறி கெட்டுப் போனவள் என்று குற்றம் சாட்டுமா?

கணவனை வழிக்குக் கொண்டு வருவதற்கு அவள் எவ்வளவு பாடுபட்டாள்? பட்டினி கிடந்தாள். அழுதாள். கோபம் கொண்டு மிரட்டினாள். வேசி ஒருத்தி ஆண்மகனைக் கவருவதற்கு எப்படியெல்லாம் முயற்சி செய்வாளோ அதையெல்லாம் செய்தாள். கணவனை வழிக்குக் கொண்டு வந்ததற்காக எல்லோரும் அவளைப் பாராட்டக் கூடும். ஆனால் அவனுக்கு தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. இது தானா தாம்பத்தியம் என்பது? அட்ஜெஸ்ட் செய்து கொள்வது... பரஸ்பரம் பாராட்டிக் கொள்வது அல்லது சண்டை போட்டுக் கொள்வது.

ஒருவரை புரிந்து கொண்டு, ஒருவர் எண்ணத்தை மற்றவர் மதித்து குடித்தனம் நடத்துவது இந்தக் காலத்தில் சாத்தியம் தானா? சந்தோஷத்தைப் பெறுவதற்கு தனிப்பட்ட முறையில் வாய்ப்புக்கள் இருக்கும் போது எதிராளியைத் தியாகம் செய்யச் சொல்வது எவ்வளவு தூரத்திற்கு நியாயம்? அல்லது தியாகத்தில் தான் பெண்களுக்கு சந்தோஷம் இருக்கிறதோ?

எது எப்படி இருந்தாலும் நடிக்காமல், முகமூடியைப் போட்டுக் கொள்ளாமல் வாழ முடிந்தவர்கள் கொடுத்து வைத்த

வர்களின் அட்ஜெஸ்ட்மென்ட் மூலமாக நீடிக்கும் தாம்பத்திய வாழ்க்கை எப்படி ரசமயமாக இருக்க முடியும்? 'இந்த உலகமே ஒரு நாடக மேடை' என்று சொன்ன ஷேக்ஸ்பியரின் வார்த்தைகள் தான் எவ்வளவு அனுபவம் வாய்ந்தவை! என் வேஷத்தை நான் சரியாக நடித்தேன் என்ற திருப்தியைத் தவிர 'என் வாழ்க்கையை நான் ஆனந்தமாக அனுபவிக்க முடிந்தது' என்ற திருப்தி எவ்வளவு பேருக்குக் கிடைத்திருக்கும்.

பார்கவிக்கு அனுராதா நினைவுக்கு வந்தாள். 'எப்படி இருக்கிறாய் அனு? உன் கடிதத்தால் என் வாழ்க்கையை சீர் படுத்திக் கொண்டு விட்டேன். ஆனால் உனக்காக எதுவுமே செய்ய முடியாதவளாகி விட்டேன்!' வேதனையோடு நினைத்துக் கொண்டாள். உடனே அனுராதாவை பார்க்க வேண்டும் போலிருந்தது. கவிதை எழுதும் அந்த ரசனை, அந்த அப்பாவித்தனம் இன்றும் அவளிடம் இருக்குமா?

ஏப்ரல் மாதம் வந்து விட்டது. அவர்கள் முடிவு செய்திருந்த கெடுவிற்கு இன்னும் மூன்று நாட்கள் தான் இருந்தன.

★ ★ ★

ரயில் சென்ட்ரல் நிலையத்தில் நின்றது. மிகவும் பரபரப்பாக இருந்தது பார்கவிக்கு. ஆட்டோவில் பனகல் பார்க்கைத் தாண்டும் போது கடந்த காலம் நினைவுக்கு வந்தது. நான்கு சினேகிதிகளும் ஜாலியாக அங்கே வந்து சந்தித்துக் கொள்வது வழக்கம். வைஜெயந்தியின் வீடு அங்கிருந்து வெகு சமீபத்தில் தான் இருந்தது. இந்த பதினைந்து ஆண்டுகளில் வாழ்க்கையில் எத்தனையோ திருப்பங்கள், பல புதிய அறிமுகங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனாலும் அன்றைய ஹாஸ்டல் வாழ்க்கையும், சினேகிதிகளும் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத இனிய நினைவுகள்.

ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீராம் குளித்து விட்டு வங்கி தலைமை அலுவலகத்திற்குப் போய்



விட்டான். இவ்வளவு தூரம் வந்து விட்டாளே தவிர, இப்பொழுது அனுராதாவிடம் போகவே பார்கவிக்கு தயக்கமாக இருந்தது. இரண்டு நாட்கள் பொறுத்தால் எல்லோருடனும் சேர்ந்து சந்திக்கலாம். இப்பொழுதே சந்தித்து விட்டால் அந்தச் சந்திப்பில் ஆர்வமில்லாமல் போகலாம். இந்த எண்ணம் வந்ததுமே மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டாள். கீழே போய் சுற்றுப் புறத்திலிருந்த கடைகளை எல்லாம் சுற்றிப் பார்த்தாள். அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. திரும்பவும் ஹோட்டலுக்கு வந்து ஆபரேட்டரிடம் அனுராதாவின் ஆபீஸ் விலாசத்தைத் தந்து கனெக்ஷன் கொடுக்கச் சொன்னாள். அது கிடைக்கும் வரை மறுபடியும் குழப்பம். அனுராதா இல்லா விட்டால் நன்றாக இருக்கும். ஊஹும்... இருக்க வேண்டும். குறைந்த பட்சம் போனிலாவது பேச வேண்டும்.

போன் மணி ஒலித்தது. நடுங்கும் கரங்களுடன் ரிசீவரை எடுத்தாள்.

''யார் வேண்டும்?'' மறுமுனையிலிருந்து கேட்டார்கள்.

''ராதா... அனுராதா.''

''ஒரு நிமிஷம்.'

அந்த ஒரு நிமிஷம் ஒரு யுகமாகக் கழிந்தது. ''ஹலோ யாரு?'' மறுமுனையில் ராதாவின் குரல்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு கேட்கிறாள் அந்தக் குரலை. பார்கவியின் கை நடுங்கியது. ''யாருன்னு சொல்லு பார்ப்போம்'' என்றாள் மிடுக்காக.

''யாரு? சுநீதாவா?''

''சுநீதா யாரு? உன் கல்லூரி தோழியா?'' கிண்டலாகச் சிரித்தாள்.

''ஓ... பார்கவி!'' வியப்பும், மகிழ்ச்சியும் ஒன்று சேர கத்தி விட்டான் ராதா.

''அடையாளம் கண்டு பிடித்து விட்டாயே.''

''சட்டென்று கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் அந்தக் குரலில் இருந்த குறும்புத்தனம் காட்டிக் கொடுத்து விட்டது. அது சரி, எப்போ வந்தாய்? எங்கே இருக்கிறாய்?''

''ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். எனக்கு உன்னை இப்பொழுதே சந்திக்கணும். என்னை வரச் சொல்கிறாயா? அல்லது நீயே வருகிறாயா?''

அனுராதா சிரித்தாள். ''நாம் சந்தித்துக் கொள்ள இன்னும் இரண்டு நாள் இருக்கு.''

''உன்னை முதலில் சந்திக்க வேண்டும். அப்புறமாக எல்லோரும் சந்தித்துக் கொள்வோம்'' பரபரப்புடன் சொன்னாள் பார்கவி.

ஆனால் அனுராதா ஒப்புக் கொள்ளவில்லை. போனிலேயே உரையாடல் தொடர்ந்தது.

''குழந்தைகளை அழைத்துக் கொண்டு வரவில்லையா?'' அனுராதா கேட்டாள்.

''எனக்குக் குழந்தைகள் இல்லை'' பார்கவியின் குரலில் லேசான வருத்தம்.

கொஞ்ச நேரம் மௌனம்.

''இன்னும் உன் கணவர் மாறவில்லையா அனு? எனக்குப் பாடம் கற்றுத் தந்தவள் நீ. அவரை மாற்ற நீ முயற்சி செய்யவில்லையா?'' பார்கவி கேட்டாள்.

''முயற்சி செய்தேன். பலன் தான் இல்லை. தற்சமயம் அவர் எங்களுடன் வசிப்பதில்லை. இனிமேல் என்னை எதுவும்



கேட்காதே பார்கவி. என் வாயால் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. விவரமாக கடிதமே எழுதி வைத்திருக்கிறேன். நாம் சந்திக்கும் போது உன்னிடம் தருகிறேன். ஒன்று மட்டும் உண்மை. நான் கணவரோடு சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த போது இருந்ததை விட இப்போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்.'' ராதா போனை வைத்து விட்டாள்.

பார்கவி அப்படியே உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்து விட்டாள். பெண்களின் வாழ்க்கை ஏன் இவ்வளவு மோசமாக இருக்கிறது? அனுராதா கணவனை விட அதிகமாகப் படித்திருக்கிறாள். அவனை விட அதிகமாகவே சம்பாதிக்கிறாள். குழந்தைகளின் பொறுப்பைக் கூட தானே ஏற்றுக் கொண்டிருக்கிறாள். ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் தான் ஒருத்தியாகவே செய்து வருகிறாள். ஆனாலும் நாலு பேருக்கு நடுவில் அவளுக்கு ஒரு அங்கீகாரம் இல்லை. அவளை துன்புறுத்திக் கொண்டிருக்கும் கணவனைப் பிடித்து உலுக்கி நாலு கேள்வி கேட்பவர்கள் யாருமே இல்லை. மேலும் ஏதாவது குறை இருந்தாலும் பெண்ணைத் தான் குற்றவாளியாக நிற்க வைப்பார்கள்.

யோசிக்க யோசிக்க பார்கவியின் மனம் வேதனைப்பட்டது. அனுராதாவிடம் பேசாமல் இருந்திருந்தாலும் நன்றாக இருந்திருக்கும். எல்லா சினேகிதிகளுடனும் சேர்ந்து அவள் கதையைக் கேட்டிருப்பாள்.

''என் வேலை முடிந்து விட்டது. இந்த முறை பிரமோஷன் கட்டாயம் கிடைத்து விடும். நாளைய புரோகிராம் என்ன?'' சிரித்துக் கொண்டே வந்தான் ஸ்ரீராம்.

''நாளைக்கும், அதற்கு அடுத்த நாளும் நான் ரொம்ப பிஸி. நாளன்றைக்கோ மூச்சு கூட விட முடியாது''என்று பார்கவியும் சிரித்தாள்.

''நாளைக்கு என்ன விசேஷம்?

''நாளைக்கு ஒன்றுமில்லை. நாளை மறுநாள் இருபத்தைந்தாம் தேதி என்னுடைய பழைய சினேகிதிகளை மறுபடியும் சந்திக்கப் போகிறேன்'' என்றாள்.

அவள் நினைத்தாற் போல் அந்த விசேஷம் நாளை மறுநாள் வரையிலும் காத்திருக்கவில்லை. மறு நாளே நிகழ்ந்து விட்டது.

* * *

## 24 ஏப்ரல் 1988

### விசாலி

'**நா**ளைக்கு என் சினேகிதிகளைச் சந்திக்கப் போகிறேன்' விசாலி நினைத்துக் கொண்டாள். இந்த நாளுக்காக அவள் ரொம்ப நாளாக காத்திருக்கிறாள். அவர்களிடம் என்ன சொல்ல வேண்டுமென்று கூட யோசித்து விட்டாள்.

நிச்சயமாக அந்த மூவரின் குடித்தனங்களை விட தன்னுடையது மகிழ்ச்சி நிறைந்தது. அதில் சந்தேகமே இல்லை. கணவன் தான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான். தான் இல்லாமல் ஒரு நிமிஷம் கூட அவனால் இருக்க முடியாது.

தான் இந்த விஷயங்களை எல்லாம் சொல்லும் போது அவர்களின் முகம் எப்படி மாறுமோ பார்க்கவேண்டும். ஒன்றிற்கு இரண்டாக கூட்டிச் சொல்ல வேண்டும். அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து தன் கணவனைக் காட்ட வேண்டும். இப்படி எல்லாம் ஊகித்துக் கொண்டே வீட்டை ஒழுங்குபடுத்தத் தொடங்கினாள்.

சினேகிதிகள் வந்தால் முதலில் வீடு நீட்டாக தென்பட வேண்டும். விசாலிக்கு வானத்தில் மிதப்பது போல் இருந்தது. முன் அறையில் விஸ்வத்தின் அலமாரியை ஒழித்துக் கொண்டிருந்த போது கண்ணில் பட்டது அந்தக் கடிதம். முதலில் ஏதோ



பழைய கடிதம் என்று நினைத்து ஒதுக்கி வைத்து விட்டாள் சற்று நேரம் கழித்து ஏதோ சந்தேகம் வந்ததும் எடுத்துப் படித்தாள்.

அவள் முகம் சிவந்து விட்டது. கண்களில் நீர் சுழன்றது. கையிலிருந்த காகிதம் நடுங்கத் தொடங்கியது. அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தன் கணவனின் தங்கையான சுந்தாவின் வீட்டிற்குக் கிளம்பினாள் விசாலி.

* * *

## 24 ஏப்ரல் 1988

### அனுராதா

**பா**ர்கவியின் குரலை போனில் கேட்டதுமே அனுராதாவுக்கு கல்லூரி நாட்கள் நினைவுக்கு வந்தன. ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அதற்கு மேல் ஆபிசில் வேலை ஓடவில்லை. சீக்கிரமாக வீடு திரும்பி விட்டாள். அன்றிரவு நன்றாக உறக்கம் வந்தது.

இப்பொழுதெல்லாம் அவள் சந்தோஷமாகத்தான் இருந்து வந்தாள். கேட்டதுமே பணத்தைக் கொடுத்து விடுவதால் கணவன் கூட அதிகமாக தொல்லை தருவதில்லை. கணவனை 'நீங்கள்' என்று மதிப்போடு அழைப்பதை விட்டு விட்டு 'நீ' என்று சொல்லும் நிலைக்கு வந்து விட்டாள். 'இனிமேல் எதையுமே பொருட்படுத்த மாட்டேன்' என்று அடிக்கடி தனக்குத் தானே சொல்லிக் கொள்வது பழக்கமாகி விட்டது.

விஸ்வம் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். தொடக்கத்தில் இருந்தது போல் இப்பொழுது எந்தத் தயக்கங்களும் இல்லை. அவன் அவளுடைய கேர் டேக்கர். வீட்டில் கிடைக்காத சுகத்தை தான் அவனுக்கு வழங்குகிறாள். ஆனால் நாளைக்குத் தன் சினேகிதிகளுக்கு என்னவென்று சொல்லுவாள்? தன்னுடைய வாழ்க்கை எவ்வளவு திசை திரும்பி விட்டது? ஏன் திரும்பிற்று என்று சொன்னால் அவர்கள் தன்னைப் புரிந்து கொள்வார்களா?

ஒருக்கால் பார்கவி புரிந்து கொள்ளலாம்.

ஒன்று மட்டும் உண்மை. அவர்களுடைய அனுதாபம் தனக்குத் தேவையில்லை. அனுராதா இவ்விதமான யோசனையில் இருந்த போது கதவு தட்டிய சத்தம் கேட்டது. எழுந்து போய் கதவைத் திறந்தாள். எதிர்பாராத வேளையில் வந்த அந்த நபரைப் பார்த்து விட்டு ''நீயா '' என்றாள்.

★ ★ ★

## 24 ஏப்ரல் 1988

### வைஜெயந்தி

**கா**ல வெள்ளத்தில் பதினைந்து ஆண்டுகள் என்றால் மிகச் சொற்பம். ஆனால் மனித வாழ்க்கையில் பதினைந்து ஆண்டுகளில் எத்தனையோ மாறுபாடுகள் நிகழலாம். நிறைய பேருக்கு முப்பது வயது வந்ததுமே வாழ்க்கையில் மூன்றில் இரண்டு பாகம் கழிந்து போய் விட்டாற் போல் தோன்றும். அப்படிப் பட்ட யோசனை வராமல், வாழ்க்கையின் வேகம் தெரியாமல் இருப்பது இரண்டு வகைப் பட்டவர்களுக்குத் தான் சாத்தியம். எந்தக் கவலையும் இல்லாமல் ஏ.சி. காரில் சுற்றிக் கொண்டு உல்லாசமாக வாழ்க்கையைக் கழிப்பவர்கள் ஒரு விதம். ஒவ்வொரு வினாடியும் சவால்களுடன், அவ்வப்பொழுது புதுப்புது லட்சியங்களை உருவாக்கிக் கொண்டு வாழ்பவர்கள் இரண்டாவது விதம்.

சென்னை மாநகரத்து போலீஸ் சூபரின்டென்டெண்ட் வைஜெயந்தி இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவள். தன் பிறந்த நாள் எப்போது என்றும், தன் வயது என்னவென்றும் யோசித்துப் பார்க்கக் கூட நேரமிருக்காது அவளுக்கு.

அன்று மதியம் வைஜெயந்திக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. டிராயரிலிருந்து டைரியை வெளியே எடுத்தாள். ஒரு போலீஸ் ஆபீசரின் டைரி என்றால் பலவிதமான கதைகள் இருக்கும் அதில். அதிலும் ஒரு லேடி ஆபீசராக இருந்து விட்டாலோ அந்த டைரி நவரசங்களும் அடங்கிய ஒரு பொக்கிஷமாக இருக்கும்.

விபச்சாரம் செய்யும் பெண்களை ஆண் போலீசார் பிடித்துக் கொண்டு வந்த பிறகு வழக்கமாக நடக்கும் விசாரணை, ஒரு பெண் அதிகாரியின் கண்ணோட்டத்தில் இதயத்தைப் பிழிந்தெடுக்கும் ஒரு நிகழ்ச்சி. வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்றுப் போய் என்ன செய்வதென்று தெரியாமல் திருட முயன்று பிடிபட்டு கடுமையான தண்டனையை அனுபவிக்கும் பெண்களின் வேதனை நிரம்பிய கதைகள்.

அன்றைக்கு டைரியில் எழுத வேண்டியதை எழுதி முடித்து விட்டு வைஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தாள். அவளுக்குக் கணவனின் நினைவு வந்தது. சரத் தற்சமயம் நாக்பூரில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் நடத்தையில் கொஞ்சம் மாற்றம் வந்திருக்கிறது. மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் அளவுக்கு மாறிவிட்டான். அவன் சண்டை போட்டுக் கொண்டு போய் விட்டால் வருத்தப்படுவது, திரும்பி வந்தால் மகிழ்ந்து போவது... அந்த ஸ்டேஜைத் தாண்டி விட்டாள். அவனிடம் மாறுதல் வந்து விட்டது என்று நம்பி இரண்டு வருடங்கள் லீவு போட்டு விட்டு குழந்தையைப் பெற்றுக் கொள்ள நினைத்தாள். அதை அவனிடம் சொன்னபோது பூரித்துப் போய் விட்டான்.

''கரு உண்டானதும் செக்ஸ் டிடர்மினேஷன் டெஸ்ட் செய்து கொள். நமக்கு ஒரே ஒரு மகன் போதும்'' என்றான்.

அவ்வளவு தான். அந்த யோசனைக்கு குட்பை சொல்லி விட்டாள். பெண் இனத்தின் மீது அவனுக்கு இவ்வளவு தாழ்வான அபிப்பிராயம் ஏன் என்று அவளுக்கு இன்றைக்கும் புரிய வில்லை.

ஒரு விஷயம் மட்டும் அவளுக்குப் புரிந்து விட்டது. இருபது ஆண்டுகள் குடித்தனம் செய்த பிறகு கணவன் மனைவி எப்படி

யாவது அட்ஜெஸ்ட் செய்து கொண்டு விடுவார்கள். ஒருக்கால் சண்டை போட்டுக் கொள்வதற்கும், இகழ்ந்து பேசுவதற்கும் பொறுமை இல்லாததாலோ என்னவோ!

டைரியில் பக்கங்களைத் திருப்பிக் கொண்டிருந்த வைஜெயந்தியின் உதடுகளில் முறுவல் படர்ந்தது. பதினைந்து ஆண்டுகள் அதற்குள் ஓடி மறைந்து விட்டன. மற்ற மூவரும் எப்படி இருக்கிறார்களோ? இந்த நாளுக்காக எப்படி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ? டில்லிக்குப் போன புதிதில் வந்த ஓரிரண்டு கடிதங்களைத் தவிர அவர்களைப் பற்றிய விஷயங்கள் எதுவும் அவளுக்கு இது வரை தெரியாது.

சென்னைக்கு வந்த புதிதில் ஒருமுறை பெண்கள் கல்லூரியில் ஏதோ விழாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பழைய நாட்களை நினைவு கூர்ந்த படியே மரங்களையெல்லாம் கவனித்துக் கொண்டே வரும் போது பிரின்ஸிபால் காரணம் கேட்டாள். அவள் ஒரு காலத்தில் அதே கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படித்தாள் என்று சொன்னதைக் கேட்டு அந்த மாது பெருமை அடைந்தாள்.

இந்த நிலைக்கு உயர்வதற்கு அவள் எவ்வளவு கஷ்டப் பட்டாள் என்றும், எப்படிப்பட்ட பிரச்னைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது என்றும் விவரித்துச் சொன்ன போது ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தத்துடன் மாணவிகள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சொற்பொழிவு முடிந்த பிறகு கைத்தட்டல் ஓசை யானை எட்டியது.

'காலம் மாறிக் கொண்டிருக்கிறது. பெண்களிடம் தைரியம் பரவி வருகிறது. புது யுகத்திற்கு அஸ்திவாரமாக அது இருக்கப் போகிறது' வைஜெயந்தி நினைத்துக் கொண்டாள்.

நாளைக்கு இன்னொரு முறை அதே கல்லூரிக்குப் போகப் போகிறாள். ஆனால் இந்த முறை அதிகார தோரணையில் அல்ல.



சிறு வயது சினேகிதிகளைச் சந்திப்பதற்காக. மற்றொரு முறை பாலியத்தை நோக்கிப் பயணிப்பதற்காக. இவ்வளவு நல்ல திட்டத்தைப் போட்டதற்கு அனுராதாவை முதலில் பாராட்ட வேண்டும். வைஜெயந்தி பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தாள்.

அதற்குள் "மேடம்!" என்று அழைத்துக் கொண்டே செகரெட்ரி உள்ளே வந்தான். டைப் செய்த காகிதங்கள் மீது அவள் கையொப்பமிட்டுக் கொண்டே "நாளைக்கு என்னால் ட்யூட்டிக்கு வரமுடியாது. ஒருக்கால் மறுநாளும் வர முடியாமல் போகலாம். அப்பாயின்ட்மெண்ட் எதுவும் தரவேண்டாம்" என்று சொன்னாள்.

"ஓ.கே. மேடம். சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் சர்கிள் உங்களைச் சந்திக்க விரும்புகிறார், ஏதோ கேஸ் விஷயமாக."

"வரச் சொல்" வைஜெயந்தி டைரியை உள்ளே வைத்துக் கொண்டே சொன்னாள். சாதாரணமாக சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கேஸ் விஷயமாக பேசுவதற்கு நேரடியாக வரமாட்டார். வரதட்சணைக் கொடுமையினால் கொலையோ, தற்கொலையோ நிகழ்ந்தால் சுயமாக வந்து ரிப்போர்ட் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தாள்.

சர்க்கிள் உள்ளே வந்து சல்யூட் செய்து விட்டு நின்றார்.

"என்ன கேசு?" என்று கேட்டாள்.

அவர் சங்கடத்துடன் நெளிந்தார். "கொலை கேசு மேடம். சாதாரண கொலை தான். ஆனால்...." என்று நிறுத்தி விட்டார்.

"தயங்காதீங்க. சொல்லுங்க."

"இன்று காலையில் ஒரு கொலை நடந்தது. அதை விபத்தாக காட்ட முயற்சி செய்திருக்காங்க. ஆனால் அது கொலைதான்னு நிரூபிக்க பல ஆதாரங்கள் இருக்கு."

"யார் மீதாவது சந்தேகம் இருக்கா?"

"ஆமாம். அவள் கணவன் மீது"

"பின்னே என்னிடம் எதற்காக வந்தீங்க?" அவள் புருவம் உயர்ந்தது.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தாழ்ந்த குரலில் "கொலை நடந்த இடத்தில் ஒரு கடிதம் கிடைத்தது. அதில் உங்களைப் பற்றிய பிரஸ்தாபனை இருந்தது மேடம்" என்றார்.

வைஜெயந்தி பரபரப்புடன் "என்னைப் பற்றியா? கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர்?" என்று கேட்டாள், நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டே.

"அனுராதா."

* * *

## 24 ஏப்ரல் 1988

### அனுராதா

அவள் உடல் உறங்குவது போல் படுக்க வைக்கப்பட்டிருந்தது. நெற்றிக் காயத்திலிருந்து வழிந்த ரத்தம் காய்ந்து விட்டிருந்தது. அறையிலிருந்த பொருட்கள் எல்லாம் நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

குழந்தைகள் இருவரும் மிரண்டு போனாற் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். போலீஸாரைப் பார்த்ததும் வாய் விட்டு அழக் கூட பயந்து போய் நின்று கொண்டிருந்தார்கள்.

வைஜெயந்தி அங்கே போன போது தென்பட்ட காட்சி அது தான்.

"நீங்க அனுராதாவின் உறவினரா?" அங்கே இருந்த மாதுவிடம் கேட்டாள்.

"நான் அவளுடைய மாமியார்" என்றாள் அவள்.

"குழந்தைகளை அழைத்துப் போய் பக்கத்து அறையில் உட்கார்ந்திருங்க. அப்புறமாகக் கூப்பிடுகிறேன்" என்று அனுப்பி விட்டாள். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அருகில் வந்தார்.

"கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் கிடைத்ததா?" என்று கேட்டாள்.

"இல்லை மேடம். எல்லா இடத்திலேயும் தேடி விட்டோம். ஒருக்கால் எடுத்துக் கொண்டு போய் எங்கேயாவது போட்டிருப்பாங்க. விரைவிலேயே கண்டு பிடித்து விடுவோம்."

"வீட்டில் யாருமே இல்லையா?"

"அவளும் குழந்தைகள் மட்டும் தான் இருந்துவந்தார்களாம். கணவனை விட்டுத் தனியாக வந்து விட்டாளாம். அவன் இந்த ஊரிலேயே தான் இருக்கானாம். அடிக்கடி வந்து ஹிம்சித்து பணம் வாங்கிக் கொண்டு போவானாம். இன்று காலையில் கூட அவன் வந்ததைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் பார்த்தார்களாம். காலையில் குழந்தைகளை வழக்கம் போலவே பள்ளிக்கு அனுப்பி வைத்திருக்கிறாள். தினமும் ஆபீசுக்குப் போகும் போது சாவியை அடுத்த வீட்டுக்காரங்களிடம் கொடுத்து விட்டுப் போவாளாம். இன்றைக்கு இவ்வளவு நேரமாகியும் வராமல் போகவே ஆபீசுக்குப் போகவில்லையோ என்னவோ, பார்த்து விட்டுப் போவோம்னு பக்கத்து வீட்டுக்காரி வந்தாளாம். அதற்குள் இந்தக் கொலை நடந்திருக்கிறது. உடனே போலீசுக்குப் போன் செய்திருக்கிறாள்."

"கடிதம் எங்கே?" வைஜெயந்தி கேட்டாள். இன்ஸ்பெக்டர் ஜேபியிலிருந்து கனமான கவர் ஒன்றை எடுத்துக் கொடுத்தார். அங்கே படிக்க விரும்பாதவளாக எடுத்து ஜேபியில் வைத்துக் கொண்டாள்.

"இவள் கணவன் எங்கே இருக்கிறான்?"

''நாங்க போன போது தன் வீட்டில் தான் இருந்தாள். குடித்து விட்டு தனக்கு ஒன்றுமே தெரியாது என்று டபாய்த்தான். தற்சமயம் ஸ்டேஷனில் தான் இருக்கிறான். ''

''பிணத்தை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பி வைத்து விட்டு அங்கேயே நேராக வந்து விடுங்கள். நான் அவனிடம் பேச வேண்டும்.''

''யெஸ் மேடம்'' அவர் வேகமாக வெளியேறினார்.

குழந்தைகள் இருவரும போலீஸ் ஆபீசரைப் பார்த்துக் கொஞ்சம் பீதி அடைந்தார்கள். வேறு சமயமாக இருந்தால் சிவில் உடையில் அவர்களை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டிருப்பாள். அவர்களை இந்த நிலையில் பார்க்க வேண்டி யிருக்கும் என்று அவள் கனவில் கூட நினைக்கவில்லை. அனு ராதாவைச் சந்திக்கத் தான் என்றுமே முயற்சி செய்யாமல் இருந்தது பெரிய தவறோ?

''நான் உங்களுடைய ஆன்ட்டீ. நீங்கள் இங்கே இருக்கீங் கன்னு தெரியாது. தெரிந்திருந்தால் முன்பே வந்திருப்பேன்'' என்று சின்னவளை அருகே இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''வைஜெயந்தி ஆண்ட்டி நீங்க தானா? அம்மா எப்போதும் உங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள்.'' மல்லிகா சொன்னாள்.

* * *

**வை**ஜெயந்தி போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு முதல் காரியமாக கடிதத்தைப் பிரித்தாள். மிகப் பெரிய கடிதம் தான். அனுராதா பார்கவிக்கு எழுதிய கடிதம். அப்படி என்றால் அவ்விருவருக்குமிடையே கடிதப் போக்குவரத்து இருந்து வந்தது போலும். வைஜெயந்தி கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.



பார்கவி,

கெலிடியோஸ்கோப்பை அசைக்க அசைக்க உருவங்கள் மாறிக் கொண்டே இருக்கும். ஆராய்ந்து பார்த்தால் பெண்களின் வாழ்க்கை அப்படித் தான் போலும். மனிதர்களை கடவுள் பொம்மைகளாக ஆட்டிப் படைத்தால் பெண்ணின் வாழ்க்கையை ஆண்கள் தீர்மானிக்கிறார்கள்.

உனக்கு இதற்கு முன்னாடியே ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பிறகு என்னுடைய வாழ்க்கை நிறைய திசை திரும்பி விட்டது. கணவனை விட்டுத் தனியாக வந்து விட்டேன்.

நாமெல்லோரும் சந்தித்துக் கொள்ள வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வைஜெயந்தி, விசாலியுடன் நீயும் அந்த நாளுக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருப் பாய். ஆனால் என் மனதில் தான் குழப்பம். மனம் விட்டுப் பேச முடியாது என்ற பயம். குறைந்த பட்சம் உனக்காவது என்னைப் பற்றித் தெரிந்தால் அந்தச் சமயத்தில் என்னை அரவணைப்பாய் என்ற நம்பிக்கை.

உண்மையில் தற்போதைய நிலைமையை அறிந்தால் வியப் படைவதைக் காட்டிலும் எல்லோரையும் போல் அருவருத்துக் கொள்வாயோ என்னவோ. இவ்வளவு நீண்ட முன்னுரை எதற்காக என்று விவரிக்கிறேன். உண்மையை உன்னிடம் மனம் விட்டுச் சொன்னேன் என்ற திருப்தியாவது கிடைக்கும் எனக்கு.

காதலித்துத் திருமணம் செய்து கொண்ட கணவனின் ஆதரவும், அன்பும் கிடைக்காமல் ஒடுங்கிப் போனபோது மனதில் எப்படி குமுறினேன் என்று உனக்கு முன்பே எழுதியிருக்கிறேன்.

ஒரு பக்கம் எதையோ சாதிக்க வேண்டும் என்ற தவிப்பு. இன்னொரு பக்கம் எதுவுமே செய்ய முடியாத இயலாமை. என் வாழ்க்கை வளம் பெறுவதற்கு வேறு வழியே கிடையாது என்று

தெரிந்த பிறகு உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டேன். எழுதிய எல்லா பரீட்சைகளிலும் பாஸாகி விட்டேன். ஆசைகளுக்கும் ஏமாற்றங்களுக்கும் நடுவில் தத்தளித்துக் கொண்டிருந்த போது தான் சுபாஷ் எனக்கு அறிமுகமானான். கலகலவென்று பாயும் நதிக்கு ஒப்பானவன் சுபாஷ். அவன் மீதிருந்த அன்பு காதல் வரையிலும் போய்விட்டதென்று சொல்லிக் கொள்ள நான் வெட்கப்படவில்லை. என் வாழ்க்கையில் சந்தோஷத்தை நிரப்ப அவன் தயாராக இருந்தான். என் குழந்தைகளுக்குத் தந்தையாக இருப்பதாகச் சத்தியம் செய்தான். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை இருந்தாலும், ஒளிமயமான அவன் எதிர்காலம் என்னால் நாசமாகி விடுமோ என்ற பயத்தால் விலகிக் கொண்டேன்.

புகுந்த வீட்டுப் பாரத்தையும், பொறுப்யையும் தன்னந்தனியாகச் சுமக்க முடியாமல் துணிந்து வெளியே வந்து விட்டேன். தினதினமும் அனுபவித்து வந்த அட்டூழியங்கள் குறைந்தன. சில சமயம் கடுமையாக வந்து தாக்குவதும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த வீட்டிற்கு வந்த பிறகு தான் விஸ்வம் எனக்கு அறிமுகமானான். இலக்கிய ஆர்வம் எங்களுடைய அறிமுகத்தை மேலும் வளர்த்தது. இப்போ புதுவிதமான பிரச்சனை ஒன்று முளைத்திருக்கிறது. அவனுக்கு என் மீது கண்மூடித்தனமான காதல் ஏற்பட்டு விட்டது. அவனுக்குத் திருமணமாகி விட்டது. குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் சாரமில்லாத தன் வாழ்க்கையில் தென்றலாக நான் நுழைந்து விட்டதாகச் சொல்லி வந்தான்.

சில நாட்கள் போனால் இந்த போக்கு மாறிவிடும் என்று நினைத்தேன். ஆனால் நாளுக்கு நாள் அதன் தீவிரம் அதிகரித்து வந்ததே தவிர குறையவில்லை. அவனுடன் உடல் ரீதியான நெருக்கமும் வைத்துக் கொண்டேன். அதற்குப் பிறகாவது அவனுடைய காதல் தீவிரம் குறைந்து விடும் என்று நினைத்தேன். ஆனால் பல ஆண்டுகள் கழிந்தும் அவனிடமிருந்த அன்பும், காதலும் குறையவேயில்லை. இந்த உன்மத்த நிலையிலிருந்து அவனால் வெளியேற முடியவில்லை. அது தான் என் வருத்தம். எனக்கும் அவன் மீது அன்பு தான். உயிர் நண்பனாக அன்பு செலுத்தினேனே தவிர சுபாஷைப் போல் விஸ்வம் என் மனதை வசப்படுத்தவில்லை. சுயநலக்காரி என்று நீ என்னை நினைத்தாலும் சரி, விஸ்வத்தின் ஆதரவு இல்லாவிட்டால் என் நிலைமை என்னவாகுமோ என்று பயந்தேன். அந்தத் தேவை தான் அவனை விட்டு என்னை விலகமுடியாமல் செய்து விட்டது.

நீ என் சினேகிதி என்பதால் ''நீ ஒன்றும் தவறு செய்யவில்லை. உன் நிலைமை அப்படிப்பட்டது'' என்று என்னை சப்போர்ட் செய்யக்கூடும்.

ஆனால் விஸ்வம் யார் என்று தெரிந்தால் அப்படிச் சொல்ல முடியுமா உன்னால்? எல்லாவற்றையும் சொல்லி விட்டு இந்த உண்மையை மட்டும் மறைக்க என்னால் முடியவில்லை. விஸ்வம் வேறு யாரோ இல்லை. நம் விசாலியின் கணவன். இப்பொழுது என்னைப் பற்றி நினைக்கும் போது வெறுப்பாக இருக்கிறது இல்லையா. எல்லாவற்றிற்கும் ஒரே பதில் தான் ''மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொள்வது.''

இன்னும் சில நாட்கள் கழித்து நாம் நால்வரும் சந்தித்துக் கொள்ளும் பொழுது இந்த உண்மையை வெளியே சொல்லிக் கொள்ள என்னால் முடியுமா? விசாலியின் முன்னால் நான் வெட்கப்படுவேன் என்றோ, பயப்படுவேன் என்றோ நீ நினைத்துக் கொண்டால் அது தவறு. அவளோடு வாதாடி தவறு என்னுடையது இல்லை என்று நிரூபிக்க என்னால் முடியும். ஆனால் 'இதையெல்லாம் நாலு பேருக்கு நடுவில் சொல்லி என்னை அவமானப் படுத்த வேண்டுமா?' என்று விசாலி கேட்டு விட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது.

என் கணவரின் நடத்தை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. உனக்கு 'பிக்சர் ஆஃப் டோரியன் க்ரே' நினைவிருக்கிறதா? மோகன் பார்க்க நன்றாகத் தான் இருப்பார். ஆனால் ஆத்மா நாளுக்கு நாள் அரக்கனாக மாறிக் கொண்டிருக்கிறது.

நம் சந்திப்புக்கு நான் வராமல் போனால் வைஜெயந்தியிடம் இந்தக் கடிதத்தைக் காட்டு. என் வாழ்க்கையிலிருந்து நீங்கள் எல்லோரும் என்ன கற்றுக் கொள்வீர்களோ எனக்குத் தெரியாது. உங்களுடைய அனுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் என் வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோணத்தில் தென்படலாம்.

உன்

அனுராதா

# நிறைவுப் பகுதி

கடிதத்தைப் படித்து முடித்து விட்டு அதன் மேலே இருந்த தேதியைப் பார்த்தாள் வைஜெயந்தி. ஒரு மாதத்திற்கு முன்னால் எழுதியிருந்த கடிதம் அது. போஸ்ட் பண்ணும் எண்ணத்தை மாற்றிக் கொண்டு இருப்பாள் போலும். உறையை எடுத்துப் பார்த்தாள். ஒட்டியபிறகு மறுபடியும் பிரித்திருப்பது போல் தோன்றியது. மோகன் இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு ஆவேசமடைந்து கொலை செய்திருப்பானோ?

அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். அதனால் தான் கடிதம் மேஜையின் மீது இருந்திருக்கிறது. தபாலில் சேர்க்கப்படவில்லை.

வைஜெயந்தி லாக்கப்புக்குள் நுழைந்தாள். மோகன் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். ஆள் அழகாகத்தான் இருந்தான். குடிப்பழக்கம் அதிகமாக இருப்பது பார்க்கும் போதே தெரிந்து விட்டது. இளமையில் ரொம்ப கவர்ச்சியாக இருந்திருப்பான். அதனால் தான் அனுராதா அவ்வளவு கண்மூடித் தனமாகக் காதலித்திருக்கிறாள்.

''உன் மனைவி தனியாக ஏன் போய் விட்டாள்?'' வைஜெயந்தி கேட்டாள்.

''எங்க வீட்டாருடன் ஒத்துப் போகவில்லை என்பதால்''

''உங்க வீட்டாரோடு மட்டும் தானா? உன்னோடு கூட வா?''

அவன் பதில் சொல்லவில்லை.

''பதில் சொல்லு'' கத்தினார் இன்ஸ்பெக்டர்.

''அவளுக்கு ரொம்பத் திமிர், பணம் சம்பாதிக்கிறோம்னு.''

''பின்னே குடும்பம் எப்படி நடக்கிறது?''

''என் தம்பியோடு சேர்ந்து இருக்கேன். ராதாவைக் கேட்டால் பணம் கொடுப்பாள்.''

''அவளை எதுக்காகக் கொலை செய்தாய்?''

''நான் கொலை செய்யவில்லை. இவங்க வந்து சொல்ற வரையில் எனக்குத் தெரியாது. காலையில் அங்கே போனது உண்மை தான். பணத்துக்காகக் கொஞ்சம் சண்டை போட்டுக் கொண்டோம். ஆனால் கடைசியில் பணம் கொடுத்து விட்டாள். உடனே வந்து விட்டேன்.''

''பிறகு எங்கே போனாய்?''

''பிராந்தி ஷாப்பில் பாட்டிலை வாங்கிக் கொண்டு எங்க வீட்டிற்குப் போனேன். அங்கே தான் இருந்தேன்.

''நீ திட்டமிட்டு கொலை செய்யவில்லை. இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு ஆவேசமடைந்து கொன்று விட்டாய் அப்படித் தானே?''

அவன் நிமிர்ந்து பார்த்தான். ''கடிதமா? என்ன கடிதம்?''

வைஜெயந்தியின் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்த பிறகு கூட அவனிடம் எந்த மாறுதலும் தென்படவில்லை.

''நான் எந்தக் கடிதத்தையும் படிக்கவில்லை. எனக்கு எதுவும் தெரியாது. அதோடு அவளை நான் எதுக்காகக் கொலை செய்யணும்? எனக்குத் தேவையான பணத்தை எப்போ கேட்டாலும் தந்து விடுவாள்'' என்றான்.

வைஜெயந்தி யோசனையில் ஆழ்ந்தாள். மல்லிகாவும் அதையே தான் சொன்னாள்.

''நீ கிளம்பிப் போகும் போது ராதா என்ன செய்து கொண்டிருந்தாள்?'' வைஜெயந்தி கேட்டாள்.

''ஃபிளவர் வாஸில் பூக்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.''

வைஜெயந்திக்கு சட்டென்று ஏதோ மின்னலாக பளிச்சிட்டது. அவள் பார்த்த போது ஃபிளவர் வாஸ் ஷோ கேஸில் இருந்தது. ஆனால் அதில் பூக்கள் இருக்கவில்லை.

''அந்த வீட்டிற்கு ஒரு முறை போகணும். கிளம்புங்க'' வெளியே நடந்தாள் வைஜெயந்தி.

ஷோகேஸில் ஃபிளவர் வாஸ் அப்படியே இருந்தது. அதன் மீது இருந்த பெயரைப் பார்த்து விட்டு கைக்குட்டையால் எடுத்துக் கொண்டே ''இன்ஸ்பெக்டர்! இந்த வாஸை லாபிற்கு அனுப்புங்க. விரல் அடையாளங்களை பரிசோதிக்கணும்'' என்றாள்.

''யெஸ் மேடம்.''

அவர் போனதும் சர்க்கிள் இன்ஸ்பெக்டரை நோக்கித் திரும்பி, ''மோகனை விட்டு விடுங்கள். அவன் கொலைகாரன் இல்லை'' என்றாள்.

★ ★ ★

## 25 ஏப்ரல் 1988

பெண்கள் கல்லூரியிலிருந்த மகிழம்பூ மரம் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கப் போகும் அந்தச் சந்திப்பை வரவேற்பதுபோல் தரைமுழுவதும் பூக்களை உதிர்த்திருந்தது. கோடை காலமாக இருந்தாலும் முதல் நாள் பெய்த மழையினால் தரை ஈரமாக இருந்தது. சூழ்நிலை ரம்மியமாக இருந்தது. எல்லோரையும் விட முன்னாடி ஒன்பதரை மணிக்கே வந்து விட்டாள் பார்கவி. வந்ததுமே அனுராதாவுக்காகத் தேடினாள். எப்போதும் முதலில் வந்து மகிழம்பூக்களை எல்லாம் பொறுக்கி எடுத்து வைத்திருப்

பான் அனுராதா. அவற்றை மாலையாகக் கோர்ப்பது பார்கவியின் வேலை. அந்த நாட்களை நினைத்துக் கொண்டே பூக்களைப் பொறுக்கினாள் பார்கவி.

சரியாகப் பத்து மணிக்கு வந்தாள் வைஜெயந்தி. தொலைவிலிருந்தே பார்கவியைக் கவனித்தாள். அவள் பூக்களைப் பொறுக்குவதைப் பார்த்துக் கொண்டே அப்படியே நின்று விட்டாள். சந்தோஷமும், வேதனையும் ஒன்றாகச் சேர அவள் கண்கள் குளமாகிவிட்டன.

''பார்கவி!''

அவளுடைய அழைப்புக்குத் திரும்பிப் பார்த்தாள் பார்கவி. ஒரே எட்டில் ஓடி வந்து ''வைஜு'' என்று அன்புடன் அணைத்துக் கொண்டாள். ''எவ்வளவு நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம்? அவர்கள் இரண்டு பேரும் இன்னும் வரவில்லை பார்த்தாயா? அனுராதா முதலில் வந்துவிடுவாள்னு நினைத்தேன்'' என்றாள் ஆதங்கத்துடன்.

வைஜெயந்தி பதில் சொல்லவில்லை. அவள் பார்வை பக்கத்திலிருந்த செயற்கை மலர் கொத்துக்களின்மீது பட்டது. பேச்சை மாற்றியபடி ''இந்த பூக்களை நீ வாங்கிக் கொண்டு வந்தாயா?'' என்று கேட்டாள்.

''நான் தான் வாங்கி வந்தேன். நாம்ப பிரிந்து போன அன்றைக்கு நம் எல்லோருக்கும் அனுராதா ஒரே மாதிரியான ஃபிளவர்வாஸ் பிரசென்ட் செய்தாளே, நினைவு இருக்கிறதா? அதில் வைப்பதற்கு எல்லோருக்கும் ஒரே மாதிரியான பூக்களை வாங்கிண்டு வந்தேன்.''

வைஜெயந்தியின் முகம் களையிழந்ததைக் கவனித்தாள் பார்கவி. 'ஒருக்கால் அந்த ஃபிளவர்வாஸைத் தொலைத்துவிட்டிருப்பாள். அனாவசியமாக பேச்சை எடுத்தேன்' என்று நினைத்தாள். ''விசாலி உண்மையிலேயே மறந்துவிட்டாளோ என்னவோ.



ஆனால் அனுராதா கட்டாயம் வருவாள்'' என்றாள் பேச்சை மாற்றியபடி.

''அவர்கள் தாமதமாக வருவாங்கன்னு நினைக்கிறேன். அது சரி, உன் விஷயத்தைச் சொல்லு. வந்ததுமே 'டாக்டர் பார்கவி!' என்று கூப்பிட நினைத்தேன்.''

'இல்லை வைஜு. டிக்ரியுடன் படிப்பை நிறுத்தி விட்டேன். அதற்குப் பிறகு பெரியவங்களாகப் பார்த்துப் பண்ணி வைத்த கல்யாணத்தைச் செய்து கொண்டேன். என் கணவர் வங்கியில் அதிகாரி. குழந்தைகள் இல்லை. கவலைகளும் இல்லை. ஏதோ காலம் கழிந்து போய்க் கொண்டிருக்கிறது.''

''உன் புத்தகங்கள்..... பேனா நண்பர்கள்?''

''இன்னும் அதையெல்லாம் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாயா? மதுரைக்குப்போனதுமே பேனா நண்பர்களை எல்லாம் விட்டு விட்டேனே. புத்தகப் பைத்தியம் மட்டும் சாகும் வரை என்னை விடாது. வீட்டில் எனக்குப் பிடித்த புத்தகங்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன். அது தான் என்னுடைய முக்கியமான பொழுது போக்கு.''

''கேட்கிறேன்னு தவறாக நினைக்காதே. குழந்தைகள் இல்லையேன்னு உனக்கு என்றுமே வருத்தம் ஏற்படவில்லையா?''

'தவறாக நினைக்க என்ன இருக்கு? முதலில் கொஞ்சம் வருத்தப்பட்டது உண்மை தான். இப்பொழுதெல்லாம் பாலபவன் குழந்தைகளுடன் பொழுது போக்குவது திருப்தியாக இருக்கு. என்னைப் பற்றிச் சொல்ல வேறு எதுவும் இல்லை. இனி உன்னைப் பற்றிச் சொல்லு. இன்னமும் 'டிமிட் ஜீனியஸ்' ஆகத் தான் இருக்கிறாயா?''

''இல்லை. என் கோழைத்தனமெல்லாம் டில்லிக்குப் போனதுமே குறைந்து போய் விட்டது. அவந்தி என்ற சினேகிதி

என்னை மாற்றி விட்டாள். கோழையாக இருந்த நான், இன்றைக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்தைச் சந்திக்கும் போலீஸ் ஆபீசராக இருக்கிறேன் என்றால் அது அவளால் தான், தற்சமயம் இங்கே நான் எஸ்.பி.யாக இருக்கிறேன்.''

திக்பிரமை நிரம்பிய குரலில் ''நீ... நீ... போலீஸ் ஆபீசரா| உண்மையாகவா?'' வியப்புடன் கேட்டாள் பார்கவி.

''ஆமாம். நம்பமுடியவில்லை இல்லையா? ''

''எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கு வைஜு''. நம் கூட்டத்தில் ஒருத்தி தேசிய அளவில் இவ்வளவு பெரிய ஆபீசரானது உண்மையிலேயே க்ரேட்! '' சந்தோஷத்தில் அவள் குரல் தடுமாறியது. ''இந்த விஷயம் மற்ற இரண்டு பேருக்கும் தெரிந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாங்க தெரியுமா. அது சரி. இவர்களை இன்னும் காணவில்லையே. மணி பதினொன்று ஆகிவிட்டது. சம்சார பந்தத்தில் சிக்கிக் கொண்டு இந்த நாளைப் பற்றியே மறந்து போய் விட்டார்களோ?'' என்றாள்.

வைஜெயந்தி உடனே பதில் சொல்லவில்லை. ஒரு நிமிடத்திற்குப் பிறகு ''அவர்கள் வரமாட்டார்கள். அவர்களால் வர முடியாது பார்கவி'' என்றாள். அப்படிச் சொல்லும் போது அவள் குரல் நடுங்கியது.

''ஏன்? என்ன ஆச்சு?''

''அனுராதா இந்த உலகத்திலேயே இல்லை. அவளைக் கொலை செய்த குற்றத்திற்காக விசாலி லாக்கப்பில் இருக்கிறாள்.''

குளிர்ந்த காற்று பார்கவியின் முதுகுத் தண்டை சிலிர்க்கச் செய்தது. அதிர்ச்சியில் அவள் உடல் நடுங்கியது. வைஜெயந்தி அவளிடம் கடிதத்தைத் தந்து விட்டு ''இதைப் படி. ராதா உனக்கு எழுதியிருக்கிறாள். இந்தக் கடிதம் தான் அவளுடைய உயிரையே எடுத்து விட்டது'' என்றாள்.



நடுங்கும் கன்களுடன் கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள் பார்கவி. படித்துக் கொண்டிருந்த போதே கண்களிலிருந்து நீர் தாரையாக வழியத் தொடங்கியது.

''எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்திருக்கிறாள்? இதெல்லாம் எப்படி நடந்தது வைஜு''? விசாலியால் அவ்வளவு கொடூரமாக எப்படி கொலை செய்ய முடிந்தது?''

''நாங்கள் முதலில் ராதாவின் கணவனைத் தான் சந்தேகப்பட்டோம். ஆனால் அவனுக்குக் கொலை செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. அவன் இல்லை என்றால் வேறு யார் செய்திருக்கக் கூடும் என்று யோசித்தேன். ராதாவின் வீட்டில் ஒரு க்ளூ கிடைத்தது. நீ சற்று முன்னால் ஃபிளவர் வாஸைப் பற்றிப் பேசிய போது என் முகம் மாறியதற்குக் காரணம் அது தான். ராதா வீட்டிலிருந்த ஃபிளவர் வாஸைப் பார்த்தேன். அதில் விசாலி என்ற பெயர் தென்பட்டது. நமக்குப் பரிசளிக்கும் போது ராதா தனித்தனியாக நம் பெயர்களை அதில் செதுக்கித் தந்திருந்தாள் நினைவு இருக்கிறதா? பின்னே ராதாவின் வீட்டில் 'From Radha to Vishali' என்ற ஃப்ளவர் வாஸ் இருக்க வேண்டிய காரணம் என்ன? சந்தேகத்துடன் விசாலியைச் சந்தித்தேன். என்னைப் பார்த்ததும் விசாலி திடுக்கிட்டாள். அவள் முகத்தைப் பார்த்ததும் புரிந்து விட்டது. முதலில் ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு எல்லா விஷயமும் வெளி வந்து விட்டது. அவள் உடனே வந்து விட்டிருந்தால் யாருக்கும் சந்தேகம் வந்திருக்காது. ஆனால் துப்பறியும் நாவல்களைப் படித்திருந்த அரைகுறை ஞானத்தால் ஜாக்கிரதையை மேற்கொள்வதாக நினைத்துக் கொண்டே அவள் அசட்டுத்தனமாக காரியங்களைச் செய்திருக்கிறாள்.

''ராதா கடிதத்தை எழுதி விட்டு, போஸ்ட் பண்ணச் சொல்லி விஸ்வத்திடம் தந்திருக்கிறாள். அவன் மறந்துபோய் வீட்டில் வைத்து விட்டு ஊருக்குப் போய் விட்டான். அதற்குப் பிறகு அதைப் பற்றியே மறந்து போய் விட்டான். சில நாட்களுக்குப்

பிறகு அது விசாலியின் கையில் அகப்பட்டது. விஸ்வத்தின் தங்கை சுந்தா ராதா என்ற பெண்ணின் வீட்டில் குடியிருப்பதாக கேள்விப் பட்டிருக்கிறாளே தவிர என்றுமே அங்கே போனதில்லை. அதனால் அந்த ராதாவும் நம் அனுராதாவும் ஒன்று தான் என்று அவளுக்குத் தெரியாது. விஸ்வம் யாருடனோ பழகுவதாக சந்தேகப்பட்டாளே தவிர விவகாரம் இவ்வளவு தூரத்திற்கு முற்றி விட்டிருப்பது அவளுக்குத் தெரியாது. விஸ்வம் மனைவிக்குத் தெரியாமல் கவனமாக இருந்தான். ஏற்கனவே முன்னாடி இருந்து வந்த விவகாரங்களின் மூலமாக அனுபவப்பட்டு விட்டதாலோ என்னவோ தப்பித் தவறிப் போய் கூட அவன் மூச்சு விடவில்லை. கடிதத்தைப் படித்த விசாலி ஆவேசத்தில் கொந்தளித்தாள்.

''அதே ஆவேசத்துடன் ராதாவின் வீட்டிற்குப் போனாள். அங்கே அனுராதாவைப் பார்த்ததுமே அவளுக்கு பி.பி. ஏறிவிட்டது. வாய்க்கு வந்தபடி ஏசினாள். ராதா பயந்து போய் அழுவாள் என்றும், இனி ஒரு போதும் இது போல் நடந்து கொள்ள மாட்டேன் என்று வேண்டிக் கொள்வதுடன் விஸ்வத்தை விட்டு விலகிப் போய் விடுவதாக சத்தியம் செய்து தருவாள் என்றும் எதிர்பார்த்தாள். ஆனால் ராதா அது போல் பேசவில்லை.

''என்னை எதுக்குக் கேட்கிறாய் விஸ்வத்தை கேட்காமல்?'' என்றாள்.

''கணவனைக் கேட்கும் பழக்கும் விசாலிக்கு என்றுமே இருந்தது இல்லை. அவள் கண்ணோட்டத்தில் கணவன் ஸ்ரீராமச் சந்திரன். பெண்கள் தான் சூர்பணகைகள்.

''உன் கணவனின் பார்வையில் எப்போதுமே நல்லவளாக தென்பட வேண்டும் என்ற சுயநலம் தான் உனக்கு முக்கியம். எல்லா விதத்திலேயும் வஞ்சிக்கப்பட்டு விட்ட எனக்கு ஒரு ஊன்றுகோல் வேண்டும். அதை விஸ்வம் தருகிறான். நான் எதுக்கு மறுக்க வேண்டும்? உன்னால் முடிந்தால் அவனை என்னிடம் வராமல் தடுத்துக் கொள். நானாகத் தேடிப் போய் அவனை அழைக்க மாட்டேன்'' என்றாள் ராதா.

''வார்த்தைகள் தடித்தன. ராதா தன் பிடிவாதத்தை விடாமல் போனதும் பலவிதமாக சாபமிட்டுக் கொண்டே பக்கத்திலிருந்த ஃபிளவர் வாஸை எடுத்துத் தலையில் ஓங்கி அடித்து விட்டாள். அது படக் கூடாத இடத்தில் பட்டு விடும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. ரத்தம் தாரையாக ஒழுக ராதா சரிந்து விழுந்ததும் விசாலி பயந்து விட்டாள். கொஞ்சம் சமாளித்துக் கொண்டு பார்த்த போது அவளிடம் சலனம் இல்லை. முதலில் கொஞ்சம் பயந்து போனாலும் பிறகு என்ன செய்ய வேண்டுமோ யோசித்து முடிவு செய்து விட்டாள்.

''உடைந்த துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு தன் வீட்டிலிருந்த ஃபிளவர் வாஸை யாருக்கும் தெரியாமல் அங்கே கொண்டு வந்து வைத்து விட்டாள். இந்த அளவுக்கு மீறிய சாமர்த்தியம் தான் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது.

''இந்த கேஸை இன்வெஸ்டிகேட் செய்யும் ஆபீசர் தன் சிறு வயது தோழி தான் என்றும், அவளிடம் கூட இதே போன்ற ஒரு ஃபிளவர் வாஸ் இருக்கும் என்றும், பெயர்களைக் கொண்டு அது யாருடையது என்று கண்டு பிடித்து விடுவாள் என்றும் விசாலி கனவில் கூட ஊகித்திருக்க மாட்டாள். அந்த ஃபிளவர் வாஸின் மேல் விசாலியின் விரல் ரேகைகள் தெளிவாக பதிந்திருந்தன. விசாலி குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டாள். கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் கிடைக்கவில்லை என்றால் கேஸ் இருக்காதுன்னு எங்கேயோ படித்தாளாம்'' வைஜெயந்தி சொல்லி முடித்தாள்.

பார்கவி இன்னும் திக்பிரமையிலிருந்து மீளவில்லை. ''எவ்வளவு கொடுமை நடந்து விட்டது? நான்கு சிநேகிதிகளுக்குள் ஒருத்தரை மற்றொருத்தி கொலை செய்தது. அதுவும் அவள்

கொடுத்த நினைவுப் பரிசாலேயே'' என்று முணுமுணுத்தவள், உயிரற்ற சிரிப்பை உதிர்த்து விட்டு ''எது எப்படி திசை திரும்பி னாலும் கடைசியில் கஷ்டப்பட வேண்டியது பெண் தான். அனு ராதா இறந்து விட்டாள். விசாலி ஜெயிலுக்குப் போய் விடுவாள். இடையில் அவர்களின் கணவன்மார்களுக்கு மட்டும் எந்தத் தண்டனையும் இருக்காது. சந்தோஷமாக வாழ்ந்து வருவார்கள்'' என்றாள்.

''எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்து விட மாட்டார்கள் பார்கவி! நல்லதும் கெட்டதும் எப்போதும் இரண்டு பேரிடமும் இருக்கும். விசாலி, அனுராதா இருவரும் தவறே செய்யவில்லை என்று உன்னால் சொல்ல முடியுமா? பெண்களின் கஷ்டங்களைக் கேட்கும் போது நாம் சட்டென்று ரியாக்ட் ஆகி விடுவோம். விஸ்வம், மோகன் இவர்களைப் போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கு இடையே சுபாஷ் போன்ற உத்தமர்கள் கூட இந்த சமுதாயத்தில் இருக்கிறார்கள்.''

''சுபாஷ் என்றால் அனுராதா....''

''அவனே தான். ராதா விஷயத்தைப் பேப்பரில் படித்து விட்டு மனைவி குழந்தைகளுடன் வந்து விட்டான். கணவன் மனைவி இருவரும் ராதாவின் குழந்தைகளை தங்களோடு அழைத்துக் கொண்டு போகனும் என்று தீவிரமாக இருக்கிறார்கள்.''

''முதலில் விசாலியைச் சந்திப்போம். அவளைப் பார்க்க வேண்டும் போலிருக்கு'' பார்கவி எழுந்து கொண்டாள்.

★ ★ ★

''**விசாலி!** நீ இப்படி வேதனைப் பட்டால் எங்களுக்கு எப்படி இருக்கும் சொல்லு. உன்னைப் பார்க்கனும்னு தானே நான் வந்திருக்கிறேன்.'' முகத்தைப் பொத்திக் கொண்டு அழுத படி இருந்த விசாலியை வலுக்கட்டாயமாக தன் பக்கம் திருப்பினாள் பார்கவி.



''நீயாவது என்னைத் திட்டு பார்கவி! செய்யக் கூடாத தவறை செய்து விட்டேன். ஒரு உயிரை பலி வாங்கி விட்டேன். இத்தனை பேருக்கு மனக்கஷ்டத்தைத் தருகிறேன்.''

''நடந்து முடிந்ததைப் பற்றி திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டு வருத்தப் படுவதை விடு. இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசி.''

''எதைப் பற்றி யோசிப்பேன்? கணவனே கண் கண்ட தெய்வம் என்று நினைத்து எத்தனை தவறுகளைச் செய்த போதும் மனதிலேயே புதைத்து வைத்தேன். இன்றைக்கு நான் இப்படி ஆனதற்குக் காரணம் என்ன? என் கணவனின் நடத்தை தானே? இப்பொழுது எனக்கு ஆறுதல் தேவையான சமயத்தில் அவர் குறைந்த பட்சம் என் முகத்தைக் கூட பார்க்க விரும்பவில்லை.'' நடந்த சம்பவத்தைக் காட்டிலும் விஸ்வத்தின் தற்போதைய நடவடிக்கை தான் அவளை அதிகமாக பாதித்தது.

''அவனை அந்த மாதிரி பழக்கப்படுத்தியது நீ தானே விசாலி! எவ்வளவு நெருங்கியவர்களாக இருந்தாலும் தவறு செய்தால் அதை எடுத்துச் சொல்லத் தயங்கக் கூடாது. போனது போகட்டும். இப்பொழுது அதைப் பற்றி எல்லாம் யோசிக்காதே. குற்றவாளிகள் எல்லோருமே கெட்டவர்கள் என்று அர்த்தமில்லை. உனக்குக் கிடைக்கக் கூடிய தண்டனையும் குறைவு தான். கண் மூடித் திறப் பதற்குள் கழிந்து விடும்'' என்றாள் வைஜெயந்தி.

''அது தான் என் பயம். அதற்குப் பிறகு என் தேவை யாருக்கு இருக்கு? கணவனுக்குக் கூட நான் வேண்டாதவளாகி விட்டேன். அதை விட ஜெயிலிலேயே இருப்பது நல்லது.''

''காலத்தை நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கு விசாலி! ஆனால் அதைப் பற்றி இப்போ யோசிப்பானேன்? நீ என்னிடம் வா. உனக்கு ஒரு நல்ல எதிர்காலம் ஏற்படுத்தித் தரும் பொறுப்பு என்னுடையது. உன்

கணவருக்குத் தேவையில்லாவிட்டாலும் உன் குழந்தைகளுக்கு உன் தேவை இருக்கு'' என்றாள் வைஜெயந்தி.

★ ★ ★

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ரயில் புறப்படத் தயாராக இருந்தது. பார்கவி வைஜெயந்தி உள்ளே உட்கார்ந்திருந்தார்கள். ஸ்ரீராம், சரத் இருவரும் தொலைவில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நான் இவ்வளவு நாளாகப் பெண்களைப் பற்றிக் குறைவாக எடை போட்டிருந்தேன். ஆனால், உங்க மனைவியைப் பார்த்த பிறகு தோன்றுகிறது. ஆண்களுக்குச் சற்றும் சளைக்காத பெண்கள் கூட உண்டு என்று'' ஸ்ரீராம் சொல்லிக் கொண்டிருந்தான்.

''அவர்களிடம் திறமை இருப்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இல்லை. ஆனால் அதை ஏற்றுக் கொள்ள நம் ஆணவம் ஒப்புக் கொள்வதில்லை. நானும் இது நாள் வரையிலும் அந்த வகையைச் சேர்ந்தவனாகத் தான் இருந்தேன். ஆனால் அந்த ஆணவம் நம் வாழ்க்கையையே நாசம் செய்து வருகிறதென்று இப்பொழுது தான் புரிந்து கொண்டு விட்டேன். இனிமேல் ஒரு போதும் அப்படிப்பட்ட தவறை செய்ய மாட்டேன்'' என்றான் சரத்.

உள்ளே வைஜெயந்தி பார்கவியிடம் ''பார்கவி! ராதா நம்மிடையே இல்லை. விசாலியின் வாழ்க்கை இப்படி ஆகி விட்டது. நம் தலை முறையில் நமக்கு நேர்ந்த அநியாயங்களையும், சமுதாயத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் இருக்கும் குறைகளையும் நிறைய அனுபவித்து விட்டோம். நமக்கு அடுத்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்களாவது இது போன்ற கஷ்டங்களை அனுபவிக்காமல், பிரச்சனைகளைச் சரியான முறையில் எதிர்த்து நிற்கக் கூடிய தைரியத்தையும் பயிற்சியையும் பெற வேண்டும்.





''அவர்களுடையது புதிய யுகமாக இருக்க வேண்டும். பெண்ணுக்குப் பெண்ணே சத்ருவாக இருக்கக் கூடாது. சிறு வயது முதல் குழந்தைகளுக்கு ஒழுக்கத்தை, நேர்மையை கற்றுத் தரவேண்டும்'' என்றாள்.

''கட்டாயம் வைஜூ! மிருகங்களைப் போல் இல்லாமல் பகுத்தறிவோடு யோசிக்கக் கூடிய பிராணி மனிதன். தலைமுறைகள் மாறினாலும் பத்தாம்பசலித்தனம், மூட நம்பிக்கைகள் இன்னும் மறையவில்லை. என்னைச் சுற்றிலும் உள்ளவர்களின் கஷ்டங்களைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகு என் கஷ்டங்கள் எவ்வளவு சிறியவை என்று புரிந்து கொண்டேன். இனிமேல் சோம்பேறியாக இருக்காமல் நேரத்தை நல்ல முறையில் பயன் படுத்துவேன். என் சந்தோஷத்திற்கு ஆதாரம் என் கணவராக இருக்கலாம். ஆனால் என் குடும்பமோ அல்லது தனிப்பட்ட பிரச்னையோ என் வேதனைக்குக் காரணமாக இருக்கக் கூடாது என்று உணர்ந்து கொண்டு விட்டேன்.''

ரயில் கிளம்புவதற்கு அறிகுறியாக விசில் ஊதியது. வைஜெயந்தி கீழே இறங்கினாள். ஜன்னல் வழியாக கையை ஆட்டிக் கொண்டிருந்தாள் பார்கவி.

ரயில் புறப்பட்டது. தண்டவாளங்கள் இரண்டாகப் பிரிந்து நான்காக மாறி லட்சியத்தை அடைவதற்காக வழியைத் தேடிக் கொண்டே போய்க் கொண்டிருந்தன.

ரயில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது, வாழ்க்கையைப் போலவே.

முற்றும்